# செங்கதிர் 2007

## கல்வி அபிவிருத்தி ஆண்டு சிறப்பு மலர்



### சது/செந்நெல் சாஹிறா கல்லூரி
சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

165

080

# CENGATHIR

## Education Development Year - 2007

(Special Magazine)

AMIRALI PUBLIC LIBRARY
Pradeshiya Sabha
Sammanthurai

01 FEB 2008

அமீர் அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை.

நொ. 97

Hijri - 1428

EDITOR

**M.A.NOORUL INAFA**

SENNEL ZAHIRA COLLEGE, SAMMANTHURI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை
# செந்நெல் சாஹிறா கல்லூரியின்
# நோக்கக்கூற்று

சம்மாந்துறை
சது / செந்நெல் சாஹிறா கல்லூரி
சிறார்கள், தம்மகத்தே அடங்கியுள்ள அறிவு,
திறன், உளப்பாங்கு, சமூகத்திறன், தொழிற்திறன்,
ஆளுமைப் பண்புகள் ஆகியவற்றை உன்னத நிலையில்
விருத்தியாக்கக் கூடியவாறு, வழங்கப்பட்டுள்ளதும்,
சூழலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதுமான சகல
பௌதீக கல்வி சார், கல்வி சாரா, மனித வளங்களினது
அடிப்படையில் அவ்வளங்களை வினைத்திறனுடனும்,
பயனுறுதி வாய்ந்த வகையிலும், நன்முறைச்
செயற்பாட்டுடனும் ஒருங்கமைத்து, திட்டமிட்டு வழிகாட்டிச்
செயற்படுத்தலும் மற்றும் கற்றல், கற்பித்தல்
முதலியவற்றுடன் கற்றலுக்காகக் கற்கவும், ஆய்வுச்
சிந்தனையைத் தூண்டக்கூடிய வகையிலே
கற்பித்தலுக்காகக் கற்கவும் கூடிய ஒழுக்க நெறியுள்ள
முழுமையான மாணவச் சமுதாயத்தை முக்கிய
நோக்கமாகக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வல்லவனே நீ உதவி செய்வாய்
எங்கள் கல்வி உயர்வதற்கு
செந்நெல் விளை பூமியிலே
எங்கள் சிந்தனை நிறைவே சாஹிறா
அன்பு நிறைந்த ஆசிரியர்
ஆதரிக்கும் ஊரவர்கள்
இன்பமுற வழிவகுப்பாய்
நீ எங்களுக்கும் அருள் அளிப்பாய்.
(வல்லவனே).

செய் பிழைகள் போக்கிடுவாய்
எங்கள் தேசத்தையும் காத்திடுவாய்
அன்பு நிறை பெற்றோருக்கும்
ஆக்கம் தரும் மற்றோருக்கும்
இன்பமளித்திடர் களைவாய்
பெரும் இன்னல்களை அகற்றிடுவாய்.
(வல்லவனே).

தொண்டு செய்யும் மனம் தருவாய்
உம்மைத் தொழுபவராய் ஆக்கிடுவாய்
எந்த நிலை வந்தபோதும்
உந்தனன்பு மாறிடாத
சிந்தனையை எமக்களிப்பாய்
தூய சிந்தனைக்கு வழிவகுப்பாய்.
(வல்லவனே).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## School Song 4/4 BEAT

**Rus**

Ⓒ Ⓒ Ⓕ Ⓒ Ⓒ
/ S - GG / G - G- / MD PP / P - - - /

Ⓒ Bp Ⓕ
/ D SS - / NS DN / D - - - / - - - - /

Ⓖ Ⓖ Ⓕ Ⓕ
/ MGR - / RRR - / GMMM / M - DD /

Ⓖ Ⓖ Ⓕ Ⓒ
/ DNNN / DDP - / M/M/PM / G - - - /

Ⓕ Ⓒ Ⓕ Ⓕ
/ G MMM / GMRG / MDDP / D - - - /

Ⓖ Ⓖ Ⓒ Ⓒ
/ N - NN / N - - - / GRSN / S - - - /

Ⓒ Ⓒ Ⓕ Ⓖ
/ PSSN / SNDD / M - - / - - R - /

Ⓒ Ⓖ Ⓕ Ⓒ
/ PDDD / MGR - / MGR N / S - - - /

**RSE**

Ⓒ Ⓒ Ⓕ Ⓕ
/ S - SN / S - - - / D - DR / D - MM/

Ⓒ Ⓒ Ⓖ Ⓕ Ⓒ
/ G - GM / PDNS / N - DD / P - - - /

Ⓒ Ⓒ Ⓖ Ⓖ
/ S G G R / G - - - / S RRS / R - - -/

/ GGMM / PPN - / SGRN / S - - - /

Ⓒ Ⓒ Ⓖ Ⓒ
/ S - S - / SNDP / MGR - / - - MP

Ⓒ Ⓖ Ⓕ Ⓒ
/ PDDP / MGR - / MGRN / S - - - /

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - லங்கை
முற்றத்தில் சிந்திய ரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே

(முத்து முத்தான)

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாம்
அவன் தன்னந்தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் நாம் ஊட்டுவோம்.

(முத்து முத்தான)

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்.

(முத்து முத்தான)

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணியேற்றே - ஞாலம்
போற்றிடும் சமூகத்தை நாம் படைப்போம்.

(முத்து முத்தான)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CENGATHIR

**Education Development Year - 2007**
(Special Magazine)

## EDITORIAL BOARD

**Patron**
**Al - Haj S.Aboobucker [Principal]**

**Chairman**
**Mr.Y.B.Mohamed Ismail**

**Magazine Committee**

| | | |
|---|---|---|
| Editor | : | **M.A.Noorul Inafa** |
| President | : | **A.L.Anver Ali** |
| Secretary | : | **M.Y.Habeeba** |
| Treasurer | : | **M.I.Mahir** |
| Members | : | **A.B.Kosu Mohideen** |
| | | **A.Abdul Jabbar** |

**SENNEL ZAHIRA COLLEGE**
SAMMANTHURAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரின் கல்விக்காய்
# காலமெலாம் உழைப்பவராம்.....

மாணவரின் கல்விக்காய் உழைப்பவராம்
மாட்சிகள் பெறத் துடிப்பவராம்
கற்க இடமின்றி தவிர்த்தோர்க்கும்
தொலைவில் கற்க விரும்பாதோர்க்கும்
வழி வகுத்த எம்மதிபர் – என்றும்
குறைவின்றி அதிபர் சேவை செய்பவராம்.

முகவரியே இல்லா வித்தியாலயத்துக்கு
இடத்தையே தேடித் தந்தவராம்
நற் பெயர் இல்லாத வேளையிலே
செந்நெல் சாஹிறா வித்தியாலயம்
என்ற பெயரையே வைத்தவராம் – இன்று
பார் போற்றும் செங்கதிராய் ஆனவராம்.

கடமை கண்ணியத்துக்கு கட்டுப்பட்டவராம்
நேர்மை தவறாத புண்ணியவராம்
பல்வேறு தடைகளைக் கண்டவராம்
படிக்கல்லாய் மாற்றி படியேறியவராம்
கடலிலும் பெரிதாய் பொறுமை-கொண்டே
பணியினிலே துணிவே துணை கொண்டவராம்.

பொறுத்தாரே அரசாள்வார் போன்றானார்
மனமே சலிக்காத சேவகனானார்
நீண்ட காலம் வாழ வேண்டும்
இறைவா நீ அருள வேண்டும்
பார் போற்றும் உத்தமராய் – நீர்
பாரினிலே திகழ வேண்டும்.

வை.பி.எம்.இஸ்மாயில்
தவிசாளர்
மலராக்கக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Our Principal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்றஹீம்.

## வித்தியாலய அதிபரின் விந்தைமிகு சிந்தையிலிருந்து சில ஆசியுரைத் துளிகள்...

எல்லா சமயங்களுக்கும் பொதுவான ஆதி முதற்பொருளாம்
பரம் பொருளைப் போற்றிப் புகழ்கின்றேன்.

முப்பத்தேழு வருடங்கள் வயதான எமது சது / செந்நெல் சாஹிறா வித்தியாலயம் அவ்வப்போது "செங்கதிர்" என்ற பெயரில் சஞ்சிகைகளை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் இவ்வாண்டு சரித்திரம் காணாத மாபெரும் கண்காட்சியோடு செங்கதிர் ஒரு சிறப்பு மலராக வெளிவருவதிலும் அதற்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதிலும் நான் மட்டில்லா மகழ்ச்சியை அடைகிறேன்.

இது ஒரு அதிகஷ்டப் பாடசாலையாக இருந்தும் பல சவால்களுக்கு மத்தியில் வருடாவருடம் அரும்பெரும் சாதனைகளைப் புரிந்து வருவது கல்வி உலகம் கண்ட கண்கூடேயாகும். இந்த 2007 ஆம் ஆண்டை கல்வி அபிவிருத்தி ஆண்டாக சம்மாந்துறை வலயக் கல்வித் திணைக்களம் பிரகடனப்படுத்தியுள்ளது. இதைக் கருப் பொருளாகக் கொண்டு நான் இப்பாடசாலையில் பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன். இதற்கு இவ்வித்தியாலய ஆசிரியர் குழாமும், மாணவர் சமூகமும் சிறந்த ஒத்துழைப்புக்களை தந்து கொண்டிருப்பது எனக்கு மிகவும் அக மகிழ்வைத் தருகின்றது.

இவ்வளவு காலமும் க.பொ.த சாதாரண தரம் வரைக் கற்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் இப்பிரதேச மக்களினதும், மாணவ சமூகத்தினதும் கல்வி நலன் கருதி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வாண்டில் கா.பொ.த உயர்தர வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். இவ்வுயர்ச்சிக்கு எனக்குப் பெரிதும் உதவிய சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், தொலைத் தொடர்புகள் அமைச்சருமான கௌரவ றௌப்(f) ஹக்கீம் அவர்களையும், கௌரவ பிரதி அமைச்சர் எம்.ரி.ஹசன் அலி அவர்களையும் நான் நன்றியுடன் நினைவு கூர்ந்து கொள்கின்றேன். இன்ஸா அல்லாஹ் எதிர்காலத்தில் இப்பாடசாலையை சம்மாந்துறை வலயத்தில் ஒரு எடுத்துக்காட்டான கல்விக் களமாக மாற்றியமைப்பதே எனது சிந்தையாகும்.

செங்கதிர் என்ற இச்சஞ்சிகை அனுபவமும் திறனும்மிக்க ஆசான்களினதும் கல்வித் தாகமும், கீழ்ப்பணிவும் மிக்க மாணவர்களினதும் நல்ல பல ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. அவ்வாக்கங்களை அழகுற அமைத்துத்தந்த ஆசிரியர்களுக்கு என் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போல் திறமை மிக்க மாணவர்களும் தரமான ஆக்கங்களை செங்கதிருக்கு வழங்கியுள்ளார்கள். இவர்களுக்கும் என் ஆக்கபூர்வமான ஊக்கங்களைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் இச்செங்கதிர்ச் சிறப்பு மலர் செம்மையுறச் செப்பனிட்ட மலர்க் குழுவினருக்கும் பயன் மிகு பொக்கிசமாக மலர எனது ஆசீர்வாதங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
குறிப்பாக இவ்வாண்டில் கல்வி மேம்பாட்டுச் செயற்திட்டமான மாபெரும் கண்காட்சிக்கு, ஆதர் சி கிளாக் நிலையத்திலிருந்து கோள்மண்டலக் காட்சிக் கூடத்தைப் பெற்றுத்தந்த விஞ்ஞான தொழிநுட்பக் கைத்தொழில் பிரதி அமைச்சரான கௌரவ பைஸால் காசிம் அவர்களையும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினையும், சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரியினையும், மேலும் எமது கண்காட்சிக்குத் தேவையான உதவி ஒத்தாசைகளை வழங்கிய சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் அல்-ஹாஜ் எம்.ரி.ஏ.தௌபீக் அவர்களையும், ஏனைய உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுணர்வுடன் நினைவு கூர்ந்து கொள்கின்றேன்.

**அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர்**
**அதிபர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR DEPUTY PRINCIPAL



KALAIKKURAL A.AMEER
SLPS. 2 - II

Sectional Head
(Secondery)



U.IBRALEBBE
B.com, PGDE, SLTS - 1

Sectional Head
( Primary)



A.B.KOSUMOHIDEEN
Dip in sp [Ed], SLTS 2 - I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் நன்றிக்குரிய அதிமேதகு ஜனாதிபதி அவர்களும், எமது பிரதேச அமைச்சர்களும்



அதிமேதகு ஜனாதிபதி
**மஹிந்த ராஜபக்ஷ**



அல்ஹாஜ்
**எம்.ஏ.அப்துல் மஜீட் M.P.**



மர்ஹூம் அல்ஹாஜ
**எம்.எச்.எம்.அஷ்ரப் M.P**



அல்ஹாஜ்
**றவூப் ஹக்கீம் M.P**



மர்ஹூம்
**யு.எல்.எம்.முகையுதீன் M.P**



மர்ஹூம் அல்ஹாஜ்
**எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் M.P**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் அல்-ஹாஜ் றவூப் ஹக்கீம் LLB, M.P அவர்களின் ஆசிச்செய்தி.

சது / செந்நெல் சாஹிறா மகா வித்தியாலயத்தின் வெளியீடான "செங்கதிர்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். செந்நெல் வளங்கொளிக்கும் கிழக்கிலங்கையில், செந்நெல் விளைவில் பிரதான இடம் வகிக்கும் சம்மாந்துறை பகுதியில், செவ்விய தடம் பதிக்கும் சாஹிறா மகா வித்தியாலயத்திலிருந்து ஒளிபரப்பப் புறப்பட்ட "செங்கதிர்" அறிந்து அறிவுச் செந்நெல் வாசம் என அகநாசியில் இன்மனம் வீசியது.

இம்மகா வித்தியாலயம் கல்வியில் மட்டுமன்றி கலைகளிலும் சிறந்து விளங்குகிறதென்பதற்கு இம்மலரும், இதன் பின்னணியான பொருட்காட்சியும் சான்று என்றால் மிகையல்ல. மாணவச் செல்வங்கள் வெறும் நூற்கல்வியோடு நின்று விடாமல் தமது தனித்துவ ஆற்றல்களையும், ஆளுமைகளையும் புடம் போட்டுக் கொள்ளும் போதுதான் சவால் மிக்க எதிர்காலத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முடியும்.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து வழிகாட்டுவார்களேயானால் ஒவ்வொரு மாலைச் செங்கதிர்களும், பல்லாயிரம் ஒளித்தினகரன்களாக உருவாவதில் சந்தேகமேயில்லை. இப்பணியை முன்னெடுக்கும் செங்கதிர் சஞ்சிகை விசேடமாக அதிபரையும் மலர்க்குழுவினரையும், இப்பாடசாலைச் சமூகத்தையும் பாராட்டி நல்லாசி வழங்குவதோடு இவைகளின் வெற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**அல்-ஹாஜ் றவூப் ஹக்கீம் M.P,**
**தேசிய தலைவர் SLMC,**
**தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ விஞ்ஞான அலுவல்கள் பிரதியமைச்சர் பைசால் காசிம் M.P அவர்களின் வாழ்த்துச் செய்தி.

சம்மாந்துறைத் தாயின் விடிவெள்ளியாக விளங்கும் செந்நெல் கிராமத்தின் அரும் பெரும் சொத்தான சது / செந்நெல் சாஹிறா வித்தியாலயத்தின் கல்வி அபிவிருத்தி ஆண்டு 2007 இன் கண்காட்சியை முன்னிட்டு வெளிவரும் "செங்கதிர்" எனும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

ஒரு நாட்டின் பெருமை அந்நாடு கொண்டுள்ள கல்விமான்களின் எண்ணிக்கையைக் கொண்டு கணிக்கப்படுகிறது. அந்த எதிர்கால கல்விமான்களை உருவாக்கின்ற பாடசாலைகளின் பணி மிக உன்னதமான ஒன்றாகும்.

அதிபர் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்களின் அயராத முயற்சியாலும், ஆசிரியர் குழாத்தின் ஒத்துழைப்பாலும் இப்பாடசாலை சிறந்த முறையில் இயங்குவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். கடந்த 2000 ஆம் ஆண்டில் ஒரு பாடமேம்பாட்டுக் கண்காட்சியை நடாத்தி முடித்து அகிலமெல்லாம் புகழ் பூத்த இப்பாடசாலையின் இவ்வருட கல்வி அபிவிருத்திக் கண்காட்சியும் இச்சிறப்பு மலரும் சிறப்பாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பைசால் காசிம்** M.P,
**விஞ்ஞான அலுவல்கள் பிரதி அமைச்சர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்மாந்துறை பிரதேச சபை கௌரவ தவிசாளர் ஜனாப்.எம்.ஐ.எம்.மன்சூர் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி.

*பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.*

இப்பாடசாலையின் தோற்றம், வரலாறு பற்றிய தகவல்களையும், மாணாக்கரின் திறமைகளையும் வெளிப்படுத்தும் நோக்கில் படைக்கப்படும் "செங்கதிர்" மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சம்மாந்துறைக் கல்வி வலயத்தின் மிகப்பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றான சம்மாந்துறை செந்நெல் சாஹிறா வித்தியாலயத்தில் இவ்வாறான சஞ்சிகை ஒன்றை வெளிப்படுத்துவது அசாத்தியமானதும் பாராட்டுதற்குரியதுமாகும். அன்றாட ஜீவனோபாயத்திற்கே கஸ்டப்படும் கூலித் தொழிலாளர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணாக்கர்களை செப்பனிடும் பணியில் அதிபரும், ஆசிரியர்களும் கடினமாக உழைக்க வேண்டியது அவசியமாகும்.

எதிர்காலங்களில் வெளிவரவிருக்கும் இவ்வாறான சஞ்சிகைகளில் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலையின் அபிவிருத்திற்கும் அதிபர், ஆசிரியர் குழாமின் பங்களிப்புகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும் என்பதே எனது அவா. மேலும் இப்பணியில் வெற்றி காண வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

வஸ்ஸலாம்.

**எம்.ஐ.எம்.மன்சூர்**
**தவிசாளர்,**
**பிரதேச சபை,**
**சம்மாந்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆர்.விசாகலிங்கம் அவர்களின் ஆசிச் செய்தி.

சம்மாந்துறை வலயத்தில் 2007 ஆம் ஆண்டினை "கல்வி அபிவிருத்தி ஆண்டு" என பிரகடனப்படுத்தியதனை முன்னிட்டு சது/செந்நெல் சாஹிறா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் கண்காட்சியினை ஒட்டி வெளியிடப்படும் "செங்கதிர்" விஷேட படைப்பிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது நாட்டின் சிறந்த நற்பிரஜைகளையும், கல்விமான்களையும், புத்தி ஜீவிகளையும் இப்பாடசாலை உருவாக்கும் என்பதினை இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்கு தெளிவுறுத்துகிறது. கல்வி ஒரு மனிதனுக்கு கண்போன்றது. எனில் அதைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியன் அதை விட மேலானவன் அல்லவா? இதனால்தான் எமது முன்னோர் மாதா, பிதா, குரு, தெய்வம் என ஆசிரியனை தெய்வ நிலையில் வைத்துப் போற்றினர். இத்தகைய ஆசிரியப் பெருமக்களை இப்பாடசாலை வைத்திருப்பதையிட்டு நான் உளங்கனிந்து பாராட்டுகிறேன்.

செந்நெல் கிராமத்தின் கல்விச் சொத்தாக விளங்கும் இப்பாடசாலை சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் மட்டுமல்ல அகில இலங்கை ரீதியிலும் மேலும் வளர்ச்சி கண்டு பல்லாண்டுகாலம் கல்விப் பணி புரிய எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனின் ஆசி வேண்டிப் பிரார்ததிக்கின்றேன்.

வாழ்க சது/செந்நெல் சாஹிறா வித்தியாலயம்!
வளர்க அதன் கல்விப் பணி.

**ஆர்.விசாகலிங்கம்**
**கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் அல்-ஹாஜ் எம்.ரீ.ஏ.தௌபீக் அவர்களின் ஆசிச் செய்தி.

செந்நெல் விளையும் சம்மாந்துறையின் "சம்புமடு" எனும் பெயரினை மெருகூட்டி "செந்நெல்புரம்" எனும் கிராமத்தின் கண்ணாக விளங்கும் பாடசாலையே சது / செந்நெல் சாஹிறா வித்தியாலயம் ஆகும். 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை முப்பத்தேழு வருட வளர்ச்சியில் வீறு நடை போட்டிருப்பதைக் காணும் போது மனதிற்கு நிறைவைத் தருகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் இப்பாடசாலையின் பாடமேம்பாட்டுக் கண்காட்சியில் நான் பிரதம அதிதியாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இக்கண்காட்சியின் மூலம் அகில இலங்கை ரீதியில் சம்மாந்துறை வலயத்தின் பாராட்டுப்பெற்ற பாடசாலையாக இப்பாடசாலை திகழ்ந்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

2007 ஆம் ஆண்டின் சம்மாந்துறை கல்வி வலயத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட கல்வி அபிவிருத்தி ஆண்டினை முன்னிட்டு இப்பாடசாலையின் கண்காட்சியின் சிறப்பு மலராக செங்கதிர் வெளிவருவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன். இப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கும் சிறந்த நற்பிரஜைகளை உருவாக்குவதற்கும் இப்பாடசாலை நற்பணி செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மேலும் பின்தங்கிய கிராமத்தில் விளங்கும் அதிகஷ்டப் பாடசாலையான இப்பாடசாலையின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் எனவும், சிறந்த கல்விமான்களை உருவாக்க வேண்டும் எனவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி
வஸ்ஸலாம்.

**எம்.ரீ.ஏ.தௌபீக்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**சம்மாந்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்மாந்துறை கோட்டக் கல்வி அதிகாரி அல்-ஹாஜ் ஏ.எம்.இஸ்மாயில் அவர்களின் ஆசிச் செய்தி.

கிழக்கிலங்கையின் புகழ் மணக்கும் சம்மாந்துறையின் செந்நெல் கிராமம் பகுதியின் ஒளி விளக்காய் விளங்கும் சது / செந்நெல் சாஹிறா வித்தியாலயத்தின் 2007 ஆம் ஆண்டின் கல்வி அபிவிருத்தி ஆண்டை முன்னிட்டு நடைபெறவிருக்கும் கண்காட்சியினை ஒட்டி வெளிவரவிருக்கும் சிறப்பு மலரான "செங்கதிருக்கு" ஆசியுரை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

பின்தங்கிய கிராமமான இக்கிராமத்தின் முத்தான இப்பாடசாலையில் கடந்த 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாபெரும் கண்காட்சியையும் இவ்விடத்தில் நினைவு கூருகின்றேன். இக்கண்காட்சியினை வழிநடாத்திய அதிபரான அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்கள் ஒரு சகல கலா வல்லவன்தான் என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இவர் மீண்டும் 2006 இன் பிற்பகுதியில் இப்பாடசாலைக்கு அதிபராக வந்து 2007 ஆம் ஆண்டை பிரயோசனப்படுத்தி மீண்டும கல்வி அபிவிருத்திக் கண்காட்சியை நடாத்த திட்டமிட்டிருப்பதை எண்ணி என்னால் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பல சவால்களுக்கு முகங்கொடுத்து இப்பாடசாலையில் வெற்றி பெற்ற இவ்வதிபரின் கீழ் கற்கும் மாணவர்களும், கற்பிக்கும் ஆசிரியர்களும் சிறப்பானவர்களாக இருப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. க.பொ.த.(சா/ த) பாடசாலையாக இருந்த இப்பாடசாலை 2007 இன் க.பொ.த.(உ /த) கொண்ட பாடசாலையாக இப்பொழுது திகழ்கிறது என்றால் இப்பாடசாலையின் வளர்ச்சியின் வேகத்தை தெட்டத் தெளிவாக விளங்க முடிகின்றது.

இப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு நற்பணி செய்யும் இப்பாடசாலை தனது கல்விப் பணியில் வீறு நடைபோட மனங்கனிந்து வாழ்த்துகிறேன்.

நன்றி.

**ஏ.எம்.இஸ்மாயில்**
**கோட்டக் கல்வி அதிகாரி,**
**கோட்டக் கல்வி அலுவலகம்,**
**சம்மாந்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SENNEL ZAHIRA COLLEGE
## SAMMANTHURAI

## OUR ACADEMIC STAFF - 2007

| | | | |
|---|---|---|---|
| 01. | Mr.S.Aboobucker | SLPS 2-I | 0779114493 |
| 02. | Mr.A.Hameer (Kalaikkural) | SLPS 2 -II | 0672260328 |
| 03. | Mr.U.Ibralebbe | B.Com, PGDE, SLTS-1 | 0672260760 |
| 04. | Mr.S.M.Asvar | BA, PGDE, SLTS-1 | 0672260749 |
| 05. | Mr.K.I.M.Aliyar | GCE O/L, Trained, SLTS-1 | 0672260041 |
| 06. | Mr.M.I.Thowfeek | B.Com, SLTS 2-I | |
| 07. | Mr.A.Abdul Raheem | MA,B.Ed (Hons), SLTS 2-I | 0602675955 |
| 08. | Mr.A.B.Kosu Mohideen | GCE A/L, Dip in Sp Ed, SLTS 2-I | 0672261011 |
| 09. | Mr.S.L.Mohamed Ismail | GCE A/L, Trained, SLTS 2-I | 0779917828 |
| 10. | Mr.S.A.C.Mohamed Thamby | BA, PGDE, SLTS 2-II | 0602677410 |
| 11. | Mr.M.S.Abdul Raseed | BA, PGDE, SLTS 2-II | 0674900408 |
| 12. | Mr.M.I.Abdul Mannan | GCE A/L, Trained, SLTS 2-I | |
| 13. | Mr.A.L.M.Niyas | GCE A/L, Trained, SLTS 2-II | |
| 14. | Mr.M.T.Sulaimalebbe | GCE A/L,NDT(Ag), SLTS 2-II | 0672260495 |
| 15. | Mr.Y.B.Habeebullah | GCE A/L, Trained, SLTS 2-II | 0674900738 |
| 16. | Mr.M.M.A.Raheem | GCE A/L, Trained, SLTS 2-II | 0602670972 |
| 17. | Mr.K.L.M.Sulfikar | GCE O/L, Trained, SLTS 2-II | 0674920150 |
| 18. | Mrs.S.U.M.Sulfikar | GCE O/L, Trained, SLTS 2-II | 0674920150 |
| 19. | Mr.Y.B.Mohamed Ismail | BA, Trained, NCT Civil, SLTS 2-II | 0776327938 |
| 20. | Mr.A.L.Anver Ali | BA, PGDE, SLTS 2-II | 0672260066 |
| 21. | As-sheik U.L.M.Salahudeen | BA, PGDE, SLTS 2-II | 0602670767 |
| 22. | Mr.J.M.M.Niyas | B Sc, PGDE, SLTS 2-II | 0602677132 |
| 23. | Mr.M.R.M.Nabeel | B Com, PGDE, SLTS 2-II | 0672261129 |
| 24. | Mr.M.I.Mahir | BBA (Hons), PGDE, SLTS 2-II | 0775153501 |
| 25. | Mr.A.S.Mohamed Mubeen | B Sc, SLTS 3-I | 0675680085 |
| 26. | Ms.M.T.Habsa | BA, SLTS 3-I | 0776148529 |
| 27. | Mr.A.Meera Sahib | GCE A/L, Trained, SLTS 3-I | 0672261200 |
| 28. | Ms.M.A.Noorul Inafa | GEC A/L,Dip in Teaching, SLTS 3-I | 0602678838 |
| 29. | Ms.M.Y.Habeeba | GAQ, Dip in Teaching, SLTS 3-I | 0672260164 |
| 30. | Mr.A.Abdul Jabbar | BA Ss, Dip in Eng, PDC, SLTS 3-II | 0602670451 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sennel Zahira College, Sammanthurai

## Our Academic Staff - 2007



**SEATING L - R :** M.R.M.Nabeel, K.I.M.Aliyar, A.L.M.Niyas, A.A.Jabbar, S.M.Asver, S.Aboobucker (Pri), A.Ameer (D.P), A.B.Kosu Mohideen, M.A.Noorul Inafa, M.Y.Habeeba, Mrs.S.U.M.Sulpikar.

**STANDING L - R:** Y.B.M.Ismail, M.I.Mahir, K.L.M.Sulpikar, U.L.M.Salahudeen, M.I.A.Mannan, S.A.C.Mohamed Thamby, M.I.Towfeek, U.Ibralebbe, M.S.A.Raseed, S.L.M.Ismail, M.M.A.Raheem, M.T.Sulaima Lebbe, A.S.M.Mubeen, Y.B.Habeebullah, J.M.M.Niyas, A.L.Anver Ali.

**ABSENT :** A.A.Raheem, A.Meera Sahib, M.T.Habza.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PART TIME TEACHERS



M.T.M.Muzammil
B.A, (Dip in Tr) PGDE, M.A.
(0775158983)



T.L.Raisudeen
Dip in Tr. Sc
(0779054787)



A.Mustaque Ali
Dip in Tr. Ma
(0672260553)



M.I.Nawas
Dip in Tr

Oo.jpg

# VOLUNTEERS



S.M.Irshad
SEUS - 2nd Year
Arts and Culture
(0672260684)



I.Abdul Latheef
Watcher
(0775292034)



K.Kalithasan
Labourer

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sennel Zahira College

## Sammanthurai

## PRIMARY STAFF



L - R : Y.B.Habeebullah, A.B.Kosu Mohideen, M.I.A.mannan, M.M.A.Raheem, S.Aboobucker (Pr), A.Ameer (D.P), K.L.M.Sulpikar, Mrs.S.U.M.Sulpikar, M.A.Noorul Inafa, M.Y.Habeeba.

ABSENT : M.T.Habza

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sennel Zahira College
## Sammanthurai

## SECONDARY STAFF



SEATING L - R : S.A.C.Mohamed Thamby, A.L.M.Niyas, Y.B.M.Ismail, U.L.M.Salahudeen, S.Aboobucker (Pr) A.Ameer (D.P), S.M.Asver, M.T.Sulaima Lebbe, A.A.Jabbar.

STANDING L - R : K.I.M.Aliyar, S.L.M.Ismail, U.Ibralebbe, M.S.A.Raseed, M.I.Mahir, A.L.Anver Ali.

ABSENT : A.A.Raheem, A.Meerasahib, M.R.M.Nabeel, M.I.Thowfeek, J.M.M.Niyas, A.S.M.Mubeen.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sennel Zahira College
## Sammanthurai

## DISPILINE COMMITTEE WITH PREFECT



SEATING L - R : M.I.Mahir, Y.B.M.Ismail, M.A.Noorul Inafa, A.Ameer (D.P), S.Aboobucker (Pr), A.L.Anver Ali

STANDING L - R : **Prefects**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sennel Zahira College
## Sammanthurai

**SCOUT TEACHER AND PRINCIPAL WITH SCOUTS GROUP**



SEATING L - R : Y.B.M.Ismail (Scout Teacher), S.Aboobucker (Principal)

STANDING L - R : Scouts Group

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sennel Zahira College

Sammanthurai

## PRINCIPAL WITH O/L STUDENTS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sennel Zahira College
Sammanthurai

### PRINCIPAL WITH A/L STUDENTS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2006 ஆம் ஆண்டில் வர்த்தக விஞ்ஞானப் போட்டியில் மாகாண மட்டம் - 1ம் இடம் அகில இலங்கை மட்டம் - 3ம் இடம் பெற்றுக் கொண்ட மாணவியுடன் அதிபர்**



**ஐ.எல்.பஸ்மிறா**
க.பொ.த.(உ/த) - கலை பிரிவு
1ம் ஆண்டு

**2006ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்ற மாணவியுடன் அதிபர்**



**ஜே.எப். மர்ழியா**
தரம் -06

**2007ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்ற மாணவி**



**ரீ.பர்சியா பேகம்**
தரம் -05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sennel Zahira College
**Sammanthurai**

## MAGAZINE EDITORIAL BOARD



L - R : M.Y.Habeeba (Secretary), M.A.Noorul Inafa (Editor), S.Aboobucker (Pr, Patron), Kalaikkurai A.Ameer (D.P), M.I.Mahir (Treasurer), A.A.Jabbar (Member), A.L.Anver Ali (President), Y.B.M.Ismail (Chairman)

ABSENT : A.B.Kosu Mohideen (Member)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து.......

*பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.*

காலத்தின் மாற்றத்திற்கேற்ப கால நீரோட்டத்தில் கரைந்து விடாமல் பயணிக்கும் வித்தை தெரிந்த நவீன சமூகத்தை உருவாக்கும் பணி பாடசாலைகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இம்மகத்தான பணியில் முப்பத்தேழு வருடங்களாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பாடசாலையே சது/செந்நெல் சாஹிறா கல்லூரி ஆகும். இது சம்மாந்துறை மண்ணின் "செந்நெல் புரம்" எனும் பிரதேசத்தின் தனிச் சொத்தாகும்.

அகிலமெல்லாம் புகழ்பூத்த எமது பாடசாலை சம்மாந்துறை கல்வி வலயத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட கல்வி அபிவிருத்தி ஆண்டு-2007 ஐ முன்னிட்டு நடாத்தவிருக்கும் சிறப்பு மலரே "செங்கதிர்" ஆகும். இது இப்பாடசாலையின் மூன்றாவது தடவையாக வெளிவருவதையிட்டு மட்டற்ற மகழ்ச்சியடைகின்றேன். இது ஆங்காங்கே மறைந்திருக்கும் ஆற்றல்களையும் திரையில் வீழ்த்திக் காட்டுகின்றதென்றால் அதன் பெருமை மிகையாகாது. பல அறிவுரைகளையும், படிப்பினைகளையும் இது மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் அள்ளி வழங்கும் என்பதில் ஐயமில்லை.

இம்மலர் வெளியீட்டின் வெற்றிக்கு வித்திட்ட பெருமை இப்பாடசாலை அதிபரையே சாரும். என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன். அவரிடம் இதற்காக ஆலோசனை கேட்ட போதெல்லாம் சிரமம்பாராது நேரத்தை ஒதுக்கி நல்ல கருத்துக்களை வழங்கினார். இந்த மேதாவிக்கு முதற்கண் என் நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் இம்மலரை வெளியிட அயராது பாடுபட்ட மலர்க்குழுவினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் பல சிரமங்களுக்கு மத்தியில் இம்மலரை வெளியிட பல ஆக்கபூர்வமான ஆக்கங்களைத் தந்துதவிய எமது பாடசாலையின் ஆசிரிய குழாத்திற்கும் ஆங்காங்கே மறைந்திருக்கும் தமது ஆற்றல்களை வெளிக்கொணரும் கண்ணாடியாக இம்மலர் உதவும் என நினைத்து ஆக்கங்கள் தந்த மாணவச் செல்வங்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இம்மலரை கணணியில் தட்டச்சுசெய்த செல்வி.ஏ.ஹசீனா அவர்களுக்கும், மற்றும் இம்மலரை அச்சிட்டு வெளிவர உதவிய " றோஸ் பிரின்டர்ஸ் " அச்சகத்திற்கும், புகைப்பட உதவி புரிந்த ஹில்டன் ஸ்டுடியோவிற்கும், பிரதான அனுசரனையாளர் "சிங்கர் சோ ரூம் " மற்றும் ஏனைய அனுசரனையாளர்களுக்கும் எனது நன்றிகள் என்றென்றும் உரித்தாகட்டும்.

மேலும் இம்மலரின் வெற்றிக்கு உறுதுணையாக பல ஆசியுரைகளை வழங்கிய பெருமகான்களுக்கு என்றென்றும் எனது நன்றிகள்.

மேலும் பல தடைக்கற்களைத் தாண்டி செங்கதிர் புதுப்பொலிவோடு உங்கள் கரங்களை வந்தடையவும் இம்மலரின் குணம் நாடி, குறை நீக்கி வளர்ச்சிக்குத் துணை நல்குமாறு வேண்டி நிற்கும் இச்செங்கதிர் தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென்ற எதிர்பார்ப்போடு இறைவனைப் பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

*வாழ்க – செங்கதிர்*
*வளர்க – இச் சமுதாயம்...*
*-அல்ஹம்துலில்லாஹ்-*

**திருமதி : எம்.ஏ.நூருல் இனாபா**
இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் உள்ளங்களுடன் இணைந்தவனாக......

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்ரஹீம்

இலங்கைத் தீவின் கிழக்கு மண்ணில் கல்முனை கல்வி மாவட்டத்தில் சம்மாந்துறை கல்வி வலயத்திலே மங்காப் புகழோடு மகுடம் சூடி செந்நெல் சாஹிறா கல்லூரியின் 'செங்கதிர் 2007' கல்வி அபிவிருத்தி ஆண்டு சிறப்பு மலர் உதயமாவதை பொன்னெழுத்துக்களால் பொறிக்கும் நிகழ்ச்சியாக நினைத்து பேருவகை அடைகின்றேன். (அல்ஹம்துலில்லாஹ்)

'செங்கதிர்' எனும் உதயத்திலிருந்துதான் இந்த நாட்டில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் நாட்டின் நற்பிரஜை கொண்ட மாணவர் சமுதாயம் மறையாமல் உதித்துக் கொண்டிருப்பதற்காகத்தான் செங்கதிராக உதிக்கின்றது.

நாம் மிலேனியம் ஆண்டிற்கான ஒரு புதிய பூகோள கிராமத்தின் பிரஜைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாழ்கையில் புதிய புதிய பிரச்சினைகளைத் தீர்த்து சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் படிக்கற்களாக வெற்றிப்படியாக மாற்றும் சக்தியை ஆசான் மாணாக்கருக்கு வழங்குகிறான்.

இலங்கைத் தாய் நாட்டின் அரசாங்கத்தின் அங்கத்தவர்களதும் கல்வி அதிகாரிகளதும் ஆசிர்வாதங்களைப் பெற்று ஆசிரியர்களதும் மாணவர்களதும் கலையாக்கங்களை சுமந்த வண்ணமாக உதிக்கும் இம்மலர் செந்நெல் சாஹிறா கல்லூரி கல்வி அபிவிருத்தி ஆண்டு 2007 ல் பல நாட்கள் கருவுற்று செங்கதிர் எனும் குழந்தையாக பெற்றெடுத்ததாகும்.

ஓர் ஆசிரியனின் பேனா ஓராயிரம் பேனாக்களை தோற்றுவித்தே தீரும். அந்தப் பேனாக்களும் ஓய்வதில்லை. அவை சிந்தும் ஒவ்வெரு துளி மையும் எடுத்துக்காட்டாகவே அமையும். (இன்ஷா அல்லாஹ்) ஆசிரியர் தொழில் ஒரு தொழிலல்ல. அது ஒரு ஒய்வில்லாத பணியாகும். மாதச் சம்பளமோ வயோதிப ஓய்வூதியமோ கூலியாகாது. இறைவனின் அருளும் நபி (ஸல்)அவர்களின் கிருபையும் தன்னால் உருவான மாணவன் நன்னிலையில் அமரும்போது பெறும் பாராட்டுமே ஆசிரியர் பணிக்கு கிடைக்கும் கூலியாகும். இதுவே மரணத்தின் பின்னும் ஆசிரியனை நினைவூட்டும் நினைவுச் சின்னமாகும்.

செங்கதிர் மலராக உருவாக்க தோளோடு தோள் நின்று அவ்வப்போது இடரும்போதெல்லாம் ஆலோசனை தந்துதவிய அதிபருக்கும் ஆக்கங்களை யாத்து தொகுத்து நூலுருப்பெ உதவிய மலராசிரியருக்கும் பலமுறை சரிபார்த்து நூலைப் புதுமைப் படுத்திய மலர்க்குழு தலைவருக்கும் நூலைப்படைக்க தேவையான போதெல்லாம் போதுமான பணவுதவியை நல்கிய மலர்க்குழு பொருளாளருக்கும் தவிசாளர் என்றவகையில் நன்றி மலர்களால் மாலை சூடுகின்றேன்.

நன்றி

வஸ்ஸலாம்

**வை.பி.முஹமட் இஸ்மாயில்**
தவிசாளர்
"செங்கதிர்" மலராக்கக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செங்கதிர் மலர்க்குழுத் தலைவர் ஜனாப் ஏ.எல். அன்வர் அலி Tr அவர்களின் ஆசிச் செய்தி

கல்வி அபிவிருத்தி ஆண்டு 2007 னை முன்னிட்டு சது/ செந்நெல் ஸாஹிறா கல்லூரியின் விடியலாக மலரும் செங்கதிர் நூலின் தலைவர் என்ற வகையில் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியானது சம்மாந்துறை கல்வி வலயத்தில் செந்நெல் கிராமம் எனும் மிகவும் பின்தங்கிய வறுமையான சூழலில் அமைந்துள்ளதுடன் இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் அடிப்படை ஜீவனோபாயத்திற்கும் வசதியின்றி கடுமையான போராட்டம் செய்ய வேண்டிய நிலையில் தமது கல்வியை கைவிடாமல் நம்பிக்கையோடு முன்னெடுத்துச் செல்வது மிகவும் போற்றப்பட வேண்டியதாகும். இம்மாணவர்களினது விடிவுக்கு உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டு வரும் அல்ஹாஜ் எஸ்.அபூபக்கர் அதிபர் அவர்கள் போற்றப்பட வேண்டியவரே. இப்பணியின் ஓர் அங்கமாக இவ்வருட நடுப்பகுதியில் மாபெரும் கல்வி அபிவிருத்திக் கண்காட்சி வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டிருந்ததை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். இவைகளை உற்று நோக்கும் போது இவ்வித்தியாலயத்தின் கல்வி எழுச்சி மிக வேகமாக வளர்ந்துவருவதை யாரும் மறுக்கமுடியாது.

எனவே இவைகள் அனைத்தையும் ஒன்றித்து நோக்கும் போது இக்கிராமமும் மக்களும் மாணவர்களும் இக்கல்லூரியின் கல்வி எழுச்சி காரணமாக கல்வியிலும் பொருளாதாரத்திலும் வளம் செழிக்க வேண்டுமென்று வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ்

**ஏ.எல்.அன்வர் அலி Tr**
செங்கதிர் மலர்க்குழுத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயத்தடாகத்தில் உதிர்ந்த துளிகள்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மாணிர்ரஹிம்

செந்நெல் சாஹிரா கல்லூரியினால் வெளியிடப்படும் செங்கதிர் நூலுக்கு ஆசிச்செய்தி எழுதுவதில் அளவற்ற மகிழ்சிசியடைகின்றேன்.

2007.01.17ம் திகதி இப்பாடசாலைக்கு கடமையேற்றதிலிருந்து அதிபரின் செயற்பாடுகளின் தூண்டல்களினால் கண்காட்சிஇ நூல் வெளியீடு ஆகிய இரண்டும் கல்வியாண்டை பிரகாசிக்கச் செய்தது. வசதியுள்ள நகர்ப்புர பாடசாலையில் செய்ய வேண்டிய இந்நிகழ்வுகள் அதிகஸ்டப் பிரதேசப் பாடசாலையான செந்நெல் சாஹிரா கல்லூரியினால் இந்நிகழ்வுகள் ஆரம்பித்துவைத்தமை ஒரு முக்கிய நிகழ்வாகும். மாணவ சமூகத்திற்கும் இக்கிராம மக்களுக்கும் இப்பாடசாலை ஆசிரியர் சமூகத்திற்கும் செங்கதிர் நன்மை பயிர்ப்பிப்பதோடு எதிர்காலத்தில் கல்விச் செயற்பாடுகள்இ புறக்கீர்த்தி நடவடிக்கைகள் வளர்ச்சி பெற இறைவனை நான் பிரார்த்திக்கின்றேன்.

வஸ்ஸலாம்

**எம்.ஐ.மாஹிர்**
பொருளாளர்
செங்கதிர் மலர்க்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கதிர் ~ 2007


| | | |
|---|---|---|
| 01. மலர் ஆசிரியர் | : | திருமதி. எம். ஏ. நூருல் இனாபா |
| 02. வெளியீடு | : | செங்கதிர் மலர்க்குழு - 2007<br>செந்நெல் சாஹிறா கல்லூரி, சம்மாந்துறை |
| 03. கணணி தட்டச்சு | : | செல்வி. ஏ. ஹசீனா<br>அலிவன்னியார் வீதி, சம்மாந்துறை.<br>ஹலோ : 0602671236 |
| 04. அச்சுப்பதிப்பு | : | ஜனாப். எம். ரீ. ஏ. றசூல் (ஆசிரியர்)<br>றோஸ் பிறின்டஸ், சம்மாந்துறை.<br>ஹலோ : 0672260997,0776160710 |
| 05. அட்டை வடிவமைப்பு | : | ஜனாப். வை. பி. எம். இஸ்மாயில் (ஆசிரியர்)<br>செந்நெல் சாஹிறா கல்லூரி, சம்மாந்துறை. |
| 06. புகைப்படம் | : | ஹில்டன் ஸ்ருடியோ<br>சம்மாந்துறை. |
| 07. எண்ணிக்கை | : | 500 பிரதிகள் |
| 08. பதிப்புரிமை | : | செந்நெல் சாஹிறா கல்லூரி<br>சம்மாந்துறை. |
| 09. மலர்ந்த நாள் | : | 2007 ஒக்டேபர் 30 |


## செந்நெல் சாஹிறா கல்லூரி,
### சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலரினுள் மலர்பவை.......

ஆசிரியர்களதும், மாணவர்களதும்
அறிவியல் ஆக்கங்களாகும். பாடசாலை
வரலாறு, அறிவுரைகள், ஆங்கில மொழி
ஆக்கங்கள், ஆலோசனை வழிகாட்டல்கள்,
வாசிப்பு மேம்பாடுகள், நல்லாசிரியரின்
பண்புகள், நல்லுபதேசங்கள்,
சுனாமித்தகவல்கள்,
விஞ்ஞான தகவல்கள், சூழல் பற்றிய
தகவல், இஸ்லாமியத் தத்துவங்கள்,
வர்த்தகத் தகவல்கள், ஆரம்பக் கல்வித்
தத்துவங்கள், கல்வித் தத்துவங்கள்,
கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள்,
வித்தியாலய சாரணிய வரலாறு,
பாடரீதியான தகவல், பாடசாலை தொடர்பான
பத்திரிக்கைத் துணுக்குகள்,
கல்வி அபிவிருத்தி கண்காட்சி துளிகள்,
தேசிய விருது பெற்ற மாணவி,
புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தி பெற்ற மாணவி
போன்ற இன்னும் பல.

**இம்மலரில் இடம்பெற்றுள்ள
ஆக்கங்கள் அனைத்திற்கும்
அவற்றை எழுதியவர்களே
பொறுப்பாளியாவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே.......


- சது/செந்நெல் சாஹிறாக் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும். 1 - 6
- செந்நெல் சாஹிறாக் கல்லூரியில் தோற்றம் முதல் இன்றுவரை கடமையாற்றிய அதிபர்கள். 7
- சம்மாந்துறை செந்நெல் சாஹிறா கல்லூரியில் அவசியம் ஆற்றப்பட வேண்டிய பணிகள். 8
- ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் தமது மகன் படித்த பாடசாலை அதிபருக்கு அனுப்பிய கடிதம். 9 - 10
- மாணவருக்கு பாடசாலைக் கல்வி அபிவிருத்தியில் நிர்மாணத் தொழில் நுட்பத்தின் பங்களிப்பு. 11 - 13
- ஆசான். 14
- முஸ்லிம் பெண்களின் பணிகள். 15 - 16
- Child Abuse. 17
- பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியும் பெற்றோரின் பங்கும். கல்வி 18 - 19
- உலகப் புகழ் பெற்ற கட்டிடங்கள். 20
- இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவுகள். 21 - 24
- தியாகங்கள் உதிர்வதில்லை. 25
- துயர் களைவோம். 26
- இஸ்லாத்தின் பார்வையில் கல்வி. 27 - 28
- சுற்றாடல் சார் செயற்பாடுகளும், மாணவர்களும். 29 - 30
- மனநிம்மதிக்கு சிறந்த மருந்து. 31
- உலகின் முதற் பெண்மணிகள் - விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள். 32
- வாசிப்புத் திறனை மேம்படுத்தல். 33 - 36
- செந்நெல் சாஹிறாக் கல்லூரியில் சாரணியம். 37 - 38
- நீ இல்லாத நாட்கள். 39
- வறுமையைத் தாண்டி - துயர் களைவோம் 40 - 41
- அல்லாஹ்வின் குரலும் அழியாத உடலும். 42 - 43
- இருளின் வெளிச்சம் எம் அதிபரே. 44 - 45
- இயற்கை எழிலே, சிந்தனைத்துளிகள். 46
- புகைத்தால் புகைவீர்கள். 47 - 48
- துணையின் அவசியம். 49 - 50
- பாடசாலையில் ஆசிரியர் பணி 51 - 52
- Primary Education 53
- தினங்கள் - ரோஜா 54
- நல்லாசானின் சிறப்பம்சங்கள் 55 - 57




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அண்ணல் நபியின் அமுத மொழிகள் சில...... 58
- ஐந்து பெரிதா ஆறு பெரிதா 59
- விழாக்கள், நினைவில் வைத்திருக்க. 60
- வாழ்வில் முன்னேற நேர அட்டவணை உதவும். - வாழ்க்கை 61 - 62
- அல்பிரெட் நோபல். 63
- இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். - சுத்தம் சுகம் தரும் 64 - 65
- சீதனமா அது ஒரு சிறை ஒழிக. 66
- தெரியுமா? 67 - 69
- வானம் வசமாகும். 70
- உடல் இயக்கக் குறைபாடுகள் உள்ள பிள்ளைகள். 71 - 74
- Groeth of Aids in Sri Lanka. 75 - 76
- இலங்கை. - பிடித்திருக்கிறது உன்னிடத்திலிருந்து. 77 - 78
- செந்நெல் சாஹிறா கல்லூரி மாணவர்கள் கற்றலில் எதிர் நோக்கும் பிரச்சினைகள். 79 - 80
- லுக்மான் (அலை) அவர்கள் அவரது மகனுக்கு செய்த உபதேசங்கள். 81
- போதையை மற, School 82
- பாடசாலை நூலகம். 83 - 84
- தாய் - மனச்சாட்சி. 85 - 86
- தமிழ் மாதா சரித நோக்கு. 87 - 91
- சுனாமி. 92
- How I can contribute to peace and harmony 93
- புகழ்ச்சியா? மயங்காதே! 94
- இலங்கையின் பிரதான குளங்களும் அதனை அமைத்த மன்னர்களும். 94
- நாட்டார் பாடலுக்கும் மக்களுடைய வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பு. 95 - 103
- காற்றலைகளின் நாயகன் மார்க்கோனி. 104
- எதிர்பார்ப்புகள். 105 - 106
- வாசிப்புத் திறன்களை வளர்த்தல். 107 - 108
- க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றி க.பொ.த.(உ/த)க்கு தகுதியானோர். 109 - 110
- பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழு. 111
- கல்வி அபிவிருத்திக் கண்காட்சிக்காக அதிபரால் நினைவுபடுத்தப்பட்டவர்கள் விபரம். - சமூகசேவை நிறுவனங்கள் 112 - 114
- இவர்கள் என்றென்றும் எமது நன்றிக்குரியவர்கள். 115
- கண்காட்சிகளில் சில......
- பாடசாலையின் நினைவுத்துளிகள் (பத்திரிகைச் செய்தித் தொகுப்பு)
- விளம்பரங்கள்.........




noolaham.org | aavanaham.org



# சது / செந்நெல் சாஹிறா கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும்.

திருமதி.எம்.ஏ.நூருல் இனாயா
மலர் ஆசிரியர்.

இந்து சமுத்திரத்தின் நித்திலமாம் எம் இலங்கை மாதா ஈன்றெடுத்த கிழக்கு மாகாணத்தின் விடிவெள்ளியாம் சம்மாந்துறைத் தாயின் "செந்நெல் கிராமம்" எனும் பிரதேசத்தின் கண்ணாக விளங்கும் பாடசாலையே சது / செந்நெல் சாஹிறா வித்தியாலயம் ஆகும். இப்பாடசாலையின் ஆரம்பகால தோற்றத்தையும் இப்போதைய வளர்ச்சியையும் இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொள்வோம்.

ஆரம்ப காலத்தில், இப்பிரதேசத்தில் உள்ள மக்கள் கல்வியைக் கற்பதற்காக எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு இப்பிரதேச மக்களின் நன்மைக்காக இப்பிரதேசத்திலேயே ஒரு பாடசாலையை அமைக்க வேண்டும் என்ற துணிவோடு, நல்லெண்ணம் கொண்ட கோஸ் முகம்மது வாத்தியார் அவர்களினது தலைமையில் கிராம அபிவிருத்திச் சங்கமும் சம்மாந்துறையின் சில ஆசிரிய சங்கமும் ஒன்று சேர்ந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதாம் ஆண்டு மாசி மாதம் இருபத்து இரண்டாம் திகதி ஓலைக் குடிசையாகவே இப்பாடசாலை பிரசவித்தது. அதிபராக ஜனாப்.எஸ்.உதுமாலெப்பை அவர்களே நியமிக்கப்பட்டார். இவர் இடமாற்றம் பெற்றுச் செல்ல மர்ஹூம் ஏ.எம்.இஸ்மாயில் அவர்கள் அடுத்த அதிபராக கடமையேற்றார்கள். இவருக்கு உதவி ஆசிரியராக மர்ஹூம் திரு.எம்.ஏ.எம்.அலியார் அவர்கள் இருந்தார்கள். மாணவர்களின் தொகை எழுபத்து ஐந்தாக இருந்தது.

அடுத்து பாடசாலையின் மூன்றாவது அதிபராக எம்.எம்.எம்.நிஜாமுடீன் அவர்கள் கடமையேற்றார்கள். மீண்டும் அதிபராக ஏ.எல்.முகைதீன் பாவா நியமிக்கப்பட்டார். இவ்வதிபரின் காலத்திலே கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம்.ஏ.அப்துல் மஜீட்(பி.ஏ) அவர்களால் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. 1980 இல் இப்பிரதேசம் செந்நெல் கிராமம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வேளையில் இப்பாடசாலையின் பெயர் கமு/உடங்கா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையாகும்.

1984.03.15 ஆம் திகதி பி.பி.கிதிர் முஹம்மட் அவர்கள் அதிபராக நியமனம் பெற்று வந்தார். இந்தவேளை பாடசாலை வரவு இடாப்பில் மாணவர் தொகை 172 ஆகும். மேலும் இதுவரையும் பாடசாலை தரம் - 05 வரையான பாடசாலையாகவே காணப்பட்டது. 172 மாணவர்கள் பதியப்பட்டு இருந்தாலும் தொடர்ந்து பாடசாலைக்கு வரும் மாணவர்கள் மிகவும் அரிதாகவே காணப்பட்டார்கள். இதற்கு காரணம் இப்பிரதேசத்தின் கல்வி அறிவு போதாமையே ஆகும். கல்வி அறிவு மட்டுமல்ல. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவே இம்மக்கள் காணப்பட்டார்கள். விவசாய அறுவடை நேரங்களில் மாணவர்கள் வயல் வேலைகளுக்குச் செல்வதால் மிகவும் குறைவான மாணவர்களே பாடசாலைக்கு சமுகமளிப்பார்கள்.

1988 ஆம் ஆண்டில் இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியின் ஒரு படி முன்னேறியமையைக் காணலாம். அதாவது அப்போதிருந்த கல்வி அதிகாரி எம்.ஏ.எம். சாபிடீன் அவர்களின் அனுமதியுடன் தரம்-6 வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வேளையில் 4 ஆசிரியர்களே பாடசாலையில் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 1989 ஆம் ஆண்டில் தரம் - 11 வரைக்குமான அனுமதி பாடசாலைக்குக் கிடைத்தது. இதிலிருந்து இப்பாடசாலை Tipe - 2 பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. அப்போது 12 ஆசிரியர்கள் மட்டும் கடமையிலிருந்தனர். இதன் விளைவாக 1990 இல் (சா/த) பரீட்சைக்கு முதல் அறுவடையாக எட்டு மாணவர்கள் தோற்றினார்கள்.

இவ்வேளையில் பி.பி.கிதிர்முகம்மட் அதிபரின் விடா முயற்சியின் காரணமாக பிரதி அதிபராக 15.03.1990 இல் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்கள் பாடசாலைக்கு நியமனம் பெற்று வந்தார்கள். இவர் இப்பாடசாலைக்கு சமூகம் கொடுத்ததும் பாடசாலையின் நிலையையும், மாணவர்களின் வரவையும் அறிந்து பாடசாலை வளர்ச்சியில் அதிபரின் உதவியோடு முழுமூச்சாக இயங்கத் தொடங்கினார். முதலில் பாடசாலையின் பெயரை பல சிரமங்களுக்கு மத்தியில் கமு / செந்நெல் கிராமம் சாஹிறா வித்தியாலயம் என மாற்றம் செய்யப்பட்டது. இதன் பின் மாணவர்களை பாடசாலையின்பால் கவர வைப்பதற்காகவும், ஆர்வத்தை ஊட்டுவதற்காகவும் விளையாட்டுக்களை பழக்கினர். இதன் மூலம் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான முயற்சிகளை செய்தார். அவரின் முயற்சியின் விளைவாக மாணவர்கள் மாத்தறையில் நடைபெற்ற உடற்பயிற்சியில் பங்கு பற்றி வெற்றியீட்டியமையை எவராலும் மறக்க முடியாது.

இவ்வாறு மாணவர்களை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்று ஊக்கம், ஆர்வங்களை காட்டியபோது மேலும் மாணவர் தொகை அதிகரித்து 250 ஐ தாண்டியது. இதுமட்டுமல்ல, இப்பிரதேசத்தின் ஆசிரியரான எஸ்.எல்.உசனார், ஆசிரியர் கே.எம்.றியால் ஆகியோருடன் அதிபர் இப்பிரதேசத்தின் வீடு வீடாகச் சென்று மாணவர்களை உற்சாகப்படுத்தி பாடசாலைக்கு வரவழைத்தார்கள் இந்த வேளையில் தான் 1992 ஆம் ஆண்டில் பிரதி அதிபரான எஸ்.அபூபக்கர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றமை இப்பாடசாலைக்கு பேரிழப்பாக இருந்தது.

மீண்டும் இவரின் தேவை பாடசாலைக்கு இருந்ததால் அதிபராக 1995.01.01 இல் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்கள் நியமனம் பெற்று வந்தார்கள். பிரதி அதிபராக எம்.ஐ.முஹம்மட் தம்பி அவர்கள் கடமையேற்று வந்தார்கள். பாடசாலையின் வளர்ச்சியின் இருபத்து ஐந்து வருடங்களை நிறைவு செய்யும் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. இதற்கு பிரதம அதிதியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.முகைதீன் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

மேலும் இவ்வாண்டில் சாரணர் இயக்கம், கடெட் என்பன உருவாக்கப்பட்டது. பாடசாலைக் கீதம் ஏ.சி.எம்.இஸ்மாலெப்பை அதிபரால் இயற்றப்பட்டது. பாடசாலைச் சின்னம் பாடசாலைக் கொடி என்பன அதிபரால் உருவாக்கப்பட்டது. செந்நெல் கிராமம் - 2 இல் அமைந்துள்ள இப்பாடசாலை இவ்வேளையில் 3 கட்டிடங்களை கொண்டிருந்தது. ஒன்று முன்னாள் கௌரவ நெசவுக் கைத்தொழில் அமைச்சர் அல்ஹாஜ் எம்.ஏ.அப்துல் மஜீட்(பி.ஏ)M.P அவர்களாலும் மற்றையது வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜபெருமாளின் உதவியுடன் - கல்வி அமைச்சும் மற்றையதை அவுஸ்திரேலிய அரசும் கட்டித்தந்தது.

மேலும் கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையாக இப்பாடசாலை திகழ்ந்ததால் இவ்வாண்டில் புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் மேலதிக கற்கைக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலையாக காணப்பட்டது. சித்தியடைந்த குறிப்பிட்ட மாணவர்களின் விபரங்கள் கல்வி அமைச்சால் அனுப்பப்பட்டும் பாடசாலையின் விடுதி வசதியின்மை. நீர் வசதியின்மை போன்ற பல்வேறு காரணங்களால் பாடசாலை அதிபரால் இதனை அங்கீகரிக்க முடியாமல் போய்விட்டது.

1996 இல் பாடசாலையின் இடநெருக்கடி காரணமாக புதிய செந்நெல் கிராமம் - 1 பகுதியில் அப்போதிருந்த பாலர் பாடசாலைக் கட்டிடத்துக்கும், சனசமூக நிலைய கட்டிடத்திற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. மேலும் மாணவர் தொகை 500 ஐத் தாண்டியதால் ஏழரை ஏக்கர் அரச நிலம் பாடசாலைக்கென பெறப்பட்டது.

மாணவர்கள் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் சிரமதானம் செய்து பாடசாலை மைதானம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. இவ்வாண்டில் செல்வி. எஸ். நைலூபா (132 புள்ளிகள்) செல்வி. பாத்திமா ஹனூஸா (142 புள்ளிகள்) ஆகிய இருமாணவிகளும் புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை வரலாற்றில் முதலாவது தடவையாக சித்தியடைந்தமை வரவேற்கத்தக்க விடயமாக காணப்பட்டது. இவர்களுக்கான பாராட்டு விழாவில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.முகையதீன் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டமை மனதில் மறக்காத நிகழ்வாக இருந்தது.

1998 இல் இப்பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி முதன் முறையாக நடைபெற்றது. அதற்கு பிரதம அதிதியாக மறைந்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.முகைதீன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இப்பாடசாலைக்கென தனியான பாண்டு வாத்தியக் கருவிகளையும், ரோணியோ மிசின், மலசல கூடங்கள் இரண்டும் அன்பளிப்பாக இவரால் வழங்கப்பட்டது. மேலும் செந்நெல் கிராமம் 2 இன் இடத்தில் புதிய கட்டிடம் ஒன்றையும் வழங்கினார்.

மேலும் சம்மாந்துறை மத்திய கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞான ஆய்வு கூட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இப்பாடசாலை மாணவர்களில் ஒருவரான செல்வி.ஏ.எச்.ஆயிசா பர்வின் என்பவரால் உருக்கமான உரை ஒன்று உரைக்கப்பட்டதால் அதனைப் பாராட்டுமுகமாக கல்வி அமைச்சு இப்பாடசாலைக்கு 7 இலட்சத்து 13 ஆயிரத்து 300 ரூபா பெறுமதி கொண்ட விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றை பரிசாக வழங்கியது.

1999 இல் இதே செந்நெல் கிராமம் - 1 இன் இப்பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இதற்கும் பிரதம அதிதியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.முகைதீன் அவர்களே கலந்து கொண்டார்கள்.

2000 ஆம் ஆண்டு இதே கௌரவ பாராளுமன்ற உறுப்பினரால் உலக வங்கி நிதி உதவியுடன் 90 x 25 சதுரஅங்குல இரு மாடிக் கட்டிடம் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. இவ்வாண்டில் பிரதி அதிபராக ஜனாப்.எம்.எச்.எம்.பாறூக் நியமனம் பெற்று வந்தார். இவ்வேளையில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்கள் செந்நெல் கிராமம் - 2 இல் உள்ள பழைய பாடசாலையிலும் தரம் 6 இலிருந்து தரம் 11 வரையான மாணவர்கள் புதிய பாடசாலையிலும் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார்கள். பழைய இடத்தில் பிரதி அதிபர் அவர்களும் புதிய இடத்தில் அதிபர் அவர்களும் பாடசாலைக் கடமைகளைப் பொறுப்பேற்று வந்தார்கள்.

இவ்வாண்டில் இப்பாடசாலையில் கல்வி அபிவிருத்தியில் முக்கிய நிகழ்வாக பாடமேம்பாட்டின் கண்காட்சி ஒன்றை அதிபரின் வழிகாட்டலின் பேரில் ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றிணைந்து நடாத்தினார்கள். இதற்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அனுசரணை வழங்கியது. இதற்கு பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பிடாதிபதி வினோதினி சந்தாணம் அவர்களும் கலந்து கொண்டனர். இவர் இதன் விளைவாக விஞ்ஞான ஆய்வு கூடத்தின் பொருட்களை தந்துதவியமை மறக்க முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சமாக இருந்தது. இக்கண்காட்சியைப் பார்வையிட்ட கல்வி அதிகாரிகள் அனைவரும் பாடசாலையைப் பாராட்டியமை வரவேற்கத்தக்க விடயமாக இருந்தது.

இப்பாடமேம்பாட்டுக் கண்காட்சிக்கு 300 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் சமூகமளித்திருந்தன. இதன் பின் பழைய இடத்தில் இருந்த மாணவர்களும் புதிய செந்நெல் கிராமம் - 2 இன் புதிய பாடசாலைக்கே இடமாற்றி முழுமையாக ஒரு இடத்திலே பாடசாலை நடைபெற்றது. இதன் பின் இப்பாடசாலை அகிலமெல்லாம் புகழ்பூத்துக் குலுங்கிக் காணப்பட்டதில் எவ்வித ஐயமுமில்லை. மேலும் பாடமேம்பாட்டில் விடா முயற்சியுடன் தன்னை அர்ப்பணித்த இப்பாடசாலை ஆசிரியர்களுக்கு அதிபரின் அனுசரணையுடன் வலயக் கல்வி அதிகாரிகளினால் பாராட்டு வழங்கி கௌரவிக்கப்பட்டமை நினைவில் மறக்காத விடயமாக உள்ளது. இப்பாடசாலை பின்தங்கிய கல்வி அறிவு குறைந்த பிரதேசத்தில் இருந்தாலும் கல்வி உட்பட அனைத்து இணைப்பாடவிதான செயற்பாடுகள், சமூக நலன்புரிச் சங்கங்கள் என்ற பல்வேறு வழிகளிலும் தன்னுடைய வெற்றியில் வீறுநடை போட்டுத் திகழ்ந்தது என்றால் அம்மம்மா....... சொல்லுந்தரமன்று.

2001 இல் பாடசாலை கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டும் இருந்தமையால் ஆசிரியர்களும் மாணவர்களும் கட்டிட நெருக்கடிக்குள்ளானார்கள். மணலிலும், மரநிழலிலும் தங்களுடைய கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இவ்வேளையில் வடக்கு கிழக்கு மாகாண சமுதாய அபிவிருத்தி மீளமைப்புத் திட்டத்தின் (Necord) நிறுவன உதவியுடன் 110 x 125 சதுரஅடி கொண்ட இருமாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. பாடசாலையைச் சுற்றி கம்பிவேலியும் பார்வையாளர் அரங்கும் புணர்வாழ்வு அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வேளையில் ஆசிரியர் தொகை இருபத்து இரண்டாகவும் மாணவர் தொகை நாநூற்று ஐம்பத்து இரண்டு ஆகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2002 இல் பாடசாலையில் எல்லா மாணவர்களுக்குமான அன்னதானம் வழங்கும் வைபவம் நடைபெற்றது. இவ்வேளையில் துஆப் பிரார்த்தனையுடன் கிணறு ஒன்றை கட்டுவதற்கான அடித்தளமும் இடப்பட்டது. இதற்கு பெற்றார்களும், ஆசிரியர்களும் ஒத்துழைப்பு நல்கினர். மேலும் யுனிசெப் நிறுவனமும் சேர்ந்து கிணற்றை முற்றாகக் கட்டி முடிக்க உதவி செய்தது.

2003 இல் சம்மாந்துறை தெற்கு மட்ட உபகோட்ட விளையாட்டுப் போட்டி இப்பாடசாலையில் நடைபெற்றது. இதற்கு 14 பாடசாலைகள் கலந்து கொண்டன. இதே ஆண்டில் பாடசாலையின் அதிபர் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்களின் முன்னேற்றத்தின் விளைவாக 1 மாதகால பாடசாலை முகாமைத்துவப் பயிற்சிக்காக புலமைப்பரிசில் கிடைத்து மலேசியா பயனமானார்.

2004 இல் அக்கரைப்பற்று பெண்கள் அபிவிருத்தி திட்டத்தால் (Save the children) அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க சிறுவர் பூங்கா ஒன்றும் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்டது. இவர்கள் இதனுடன் மாணவர்களுக்கான சுற்றுலா ஒன்றை ஒழுங்கு செய்ததுடன் பெற்றாருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றையும் நடாத்தினார்கள். இவ்வேளையில் அதிபர் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றது பாடசாலைக்கு பேரிழப்பாகவே இருந்தது எனலாம். இதன்பின் பிரதி அதிபராக கடமையேற்ற எஸ்.பாறூக் அவர்கள் பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்று பாடசாலையை நடாத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005 இல் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட இரு மாடிக்கட்டிடங்கள் இரண்டும் கௌரவ கிழக்கு உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. இப்பிரதேசம் பின்னடைவான குறைந்த கல்வி அறிவுள்ள பிரதேசமாக உள்ளபடியால் மாணவர்களுக்கு கல்வி அறிவை புகட்டுவதில் ஆசிரியர்கள் அதிக கவனத்தை எடுத்து விடா முயற்சியுடன் செயற்பட்டனர். மேலும் சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் 400m கொண்ட மைதானம் இப்பாடசாலையில் மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது. என்றாலும் அதனைப் பாவனைக்குட்படுத்தமுடியாமல் இருப்பது மனவருத்தத்துக்குரிய விடயமாகவும் உள்ளது.

மேலும் இவ்வாண்டில் கோள் நிறுவனத்தின் உதவியால் ஐந்து மலசல கூடங்கள் நிறுவப்பட்டன. எப்படி இருந்தாலும் நீர் வசதி இல்லாமல் இம்மலசல கூடங்கள் பாவனைக்கு உட்படுத்த முடியாமலே இருக்கின்றன. 2006 இல் அதிபர் எம்.எச்.எம்.பாறூக் அவர்களின் வேண்டுதலினால் இப்பாடசாலைக்கு மட்டுமல்ல இப்பிரதேசத்தின் முக்கிய பிரச்சினையான நீர்த்தேவையை முன்னிட்டு கோள் நிறுவனம் குழாய்க்கிணறு ஒன்றை நிர்மாணித்துத் தந்தது.

மேலும் இவ்வாண்டில் புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டாவது தடவையாக செல்வி.ஜே.பாத்திமா மர்ழியா என்ற மாணவி சித்தியடைந்தார். இது இப்பாடசாலையில் கற்றல் - கற்பித்தலின் வெற்றி என்றே கூறலாம். ஏனைய மாணவர்களின் புள்ளிகள் கூட வெட்டுப்புள்ளியைக் கிட்டியதாகவே இருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாக இருந்தது. மீண்டும் 2006 இன் இறுதிப்பகுதியில் இப்பாடசாலையின் பழைய அதிபர் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்கள் பல சவால்களை முறியடித்து வெற்றி பெற்று பாடசாலைக்கு நியமனம் பெற்று வந்தார். அவரின் பணி மீண்டும் பாடசாலைக்குக் கிடைத்தது. பாடசாலைக்கு கிடைத்த வெற்றி என்றே கூறுலாம்.

2007 இல் கோள் நிறுவனத்தின் உதவியுடன் 10 கணணிகள், ஒலிபெருக்கி கருவிகளும் கிடைத்தன. மேலும் நூலகத்துக்கான புத்தகங்களையும், விஞ்ஞான கூடப் பொருட்களையும் அதே நிறவனம் வழங்கியது. இதன் மூலம் மாணவர்கள் பெரும் பயனைப் பெற்று வருகின்றனர். மேலும் மல்டிமீடியா யுனிட்டும் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் ஆசிரியர்கள் நவீன கற்பித்தல் முறையில் மாணவர்களுக்கு கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது வரவேற்கத்தக்க விடயமாக உள்ளது.

பேடன் பவள்தின நிகழ்விற்காக கல்முனை சாஹிராக் கல்லூரிக்கு சாரணிய பொறுப்பாசிரியர் பாடசாலையின் சாரணியக் குழுவை அழைத்துச் சென்றார். அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணச்சங்கம் மூன்று நாள் பயிற்சிப் பாசறை சாரணிய பெறுப்பாசிரியர் வை.பி.எம்.இஸ்மாயில், அதிபர் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் தலைமையில் இப்பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு கல்முனை மாவட்டத்திலிருந்து 19 பாடசாலைகளினது சுமர் 5000 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். பிரதேசசபை தவிசாளர்-மற்றும் உறுப்பினர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர் கல்வி அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் பிரதம அதிதிகளாகவும், விசேடஅதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இன்னும் இப்பாடசாலையில் க.பொ.த (சா/த) சித்தியடைந்த மாணவர்கள் மேலும் கல்வியைத் தொடர முடியாத நிலை இப்பிரதேசத்தில் காணப்பட்டது. அதாவது உயர் தரத்தை கற்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டத்தட்ட 3,4 km தூரம் சென்று கற்பதன் காரணமாக கல்வியை இடைநிறுத்தி கற்றதன் விளைவை அறியாமல் கல்வெட்டுதல், விவசாயம் போன்ற தொழில்களில் மாணவர்களின் திசைகள் திருப்பப்பட்டன.

இக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக அதிபரின் விடாமுயற்சியின் காரணமாகவும் இவ்வருடம் இப்பாடசாலையில் உயர்தரத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதி வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களினால் கிடைத்தது. என்றாலும் இவர்களுக்கான வகுப்பறை, கல்வி கற்பதற்கான வளங்கள் இல்லாமை வருந்தத்தக்க விடயமாகவே உள்ளது. இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியில் இப்பாடசாலையில் நாற்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் சம்மாந்துறைக் கல்வி வலயத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட "கல்வி அபிவிருத்தி ஆண்டு -2007" எனும் பிரகடணத்திற்கினங்க பாடசாலை அதிபரின் வழிகாட்டலில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றினைந்து மாபெரும் கல்வி அபிவிருத்தி கண்காட்சியையும், செங்கதிர் சிறப்பு மலரையும் வெளியிட ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு தனது முப்பத்தேழு வருட வளர்ச்சியில் காலடி எடுத்துவைத்திருக்கும் இப்பாடசாலையானது கல்வி வளர்ச்சியோடு ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்த பெறுபேறுகளையும் அமைந்து கொண்டிருக்கின்றமையை எம் கண்கூடாக காணமுடிகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் பல வசதியீனங்களை வென்று திறம்பட இயங்கி சிறந்ததொரு சமூகத்தை உருவாக்குவதில் வெற்றி கண்டு நிற்கும் என்பதே இப்பாடசாலையின் பிரதான குறிக்கோளாகும்.....

**ஒரு ஆசிரியர் நீண்ட லீவுக்குப் பின் தனது முதல் நாள் பாடசாலை அனுபவத்தைப் பற்றிக் கூறுகையில், "35 தக்கை மூடிகளை ஒரே முறையில் நீரின் கீழ் அமிழ்த்துவது போலிருந்தது" என்றார்.**

Describing her first day back in school after a long absence, a teacher said "It was like trying to soak 35 corks under water at the same time".

*-Mark Tawin.*

**இன்று கல்வியானது கற்பிப்பதுடன் நிற்காமல் தனி நபர்களை ஊக்குவித்து வித்தியாசமானவர்களாக்க வேண்டும்.**

Today, education must do something more than teaching and it must inspire indivival to make a difference.

*-William G.Donaldson*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்நெல் சாஹிறாக் கல்லூரியில் தோற்றம் முதல் இன்றுவரை கடமையாற்றிய அதிபர்கள்.

| பெயர் | கடமையேற்ற திகதி |
|---|---|
| 01. அல்-ஹாஜ் எஸ்.உ_துமாலெப்பை | 22.07.1970 |
| 02. மர்ஹூம் ஏ.எம்.இஸ்மாயில் | 15.09.1970 |
| 03. எம்.எம்.எம்.நிஜாமுடீன் | 16.06.1975 |
| 04. ஏ.எல்.முகைதீன் பாவா | 13.01.1976 |
| 05. ஜனாப் எஸ்.சம்சுதீன் | 27.08.1979 |
| 06. மர்ஹூம் எம்.எல்.அலியார் | 10.03.1980 |
| 07. அல்-ஹாஜ் பி.பி.கிடீர் முகம்மட் | 15.03.1984 |
| 08. அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் | 01.01.1995 |
| 09. எம்.எச்.எம்.பாறூக் | 01.09.2004 |
| 10. அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் | 12.10.2006 இன்றுவரை |

*மலராசிரியர்.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை செந்நெல் சாஹிறா வித்தியாலயத்தில் அவசியம் ஆற்றப்பட வேண்டிய பணிகள்.

01. வகுப்பறைக் கட்டிடங்கள் நிறுவுதல். மாணவர்களின் தொகை அதிகரிப்புக்கேற்ப வகுப்புக்கள் விரிவடைந்து சென்றமையால் கட்டிட நெருக்கடி காணப்படுகிறது. மேலும் க.பொ.த (உ/த) வகுப்பும் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டமையால் இவர்களுக்கென்ற வகுப்பறை இல்லாமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

02. பாடசாலையைச் சுற்றிவர மதில் அமைத்தல்.

03. விளையாட்டு மைதானத்தை செப்பமிடல். 400m கொண்ட மைதானம் பாடசாலையில் பாவனைக்குதவாமல் காணப்படுகின்றது. அதனை விளையாடக்கூடிய மைதானமாக மாற்றுதல்.

04. Activity Room - செயற்பாட்டு அறை ஒன்றை நிறுவுதல். மாணவர்கள் வாழ்க்கைத் தேர்ச்சி, மனையியல் பாடங்கைள கற்பதற்கான உபகரணங்கள் காணப்பட்டும் அதைப் பயன்படுத்துவதற்கு அறை ஒன்று இல்லாமல் உள்ளது.

05. பாடசாலைக்கு ஆராதனைக் கூடம் ஒன்றை நிறுவுதல்.

06. அதிபர் காரியாலயம் ஒன்றை நிறுவுதல்.

07. தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்தல். அதனோடு இன்டநெற் தொலைத் தொடர்புகளையும் பாடசாலையில் ஏற்படுத்தல்.

08. பல்லூடக நிலையம் ஒன்றை நிறுவுதலுடன் அதற்கான உபகரணங்களையும் பெறுதல்.

09. க.பொ.த.(உ/த) வகுப்பு மாணவர்களின் தொகை அதிகமாக உள்ளதால் கணணி வசதி அதிகரிக்கப்படல் வேண்டும்.

10. வருடம் முழுதும் கிடைக்கக் கூடிய நீர் வசதியைச் செய்து கொடுத்தல்.

**மலர் ஆசிரியர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் தமது மகன் படித்த பாடசாலை அதிபருக்கு அனுப்பிய கடிதம்.

தகவல்: ஏ.எல் அன்வர் அலி
(ஆசிரியர்-BA, PGDE)

அதிபர் அவர்களே, மனிதர்கள் யாவரும் கூறுபவர்களாகவும் நீதி நியாயம் உள்ளவர்களாகவும் நடந்து கொள்ளமாட்டார்கள் என்பதை எனது புதல்வருக்கு சொல்லிக் கொடுங்கள். இதனை எனது புதல்வருக்கு படிப்பிக்கவும். ஒவ்வொரு போக்கிரி பயலுள்ள இடத்திலும் சான்றோர் ஒருவர் இருக்கின்றார் என்பதையும் ஒவ்வொரு சுயநலவாதி, அரசியல்வாதி இருக்கும் இடத்திலும் அர்ப்பணிப்புடைய தலைவர் ஒருவர் இருக்கிறார் என்பதையும் எனது புதல்வருக்கு எடுத்துக்கூறுங்கள்.

பகைவர்கள் இருக்கின்ற இடங்களில் நண்பரொருவர் இருக்கிறார் என்பதையும் அவருக்கு எடுத்துக் கூறுங்கள். அதேபோன்று இலவசமாக யாரிடமிருந்தோ, எவ்விடத்திலிருந்தோ கிடைக்கின்ற ஐந்து டொலர்களைக் காட்டிலும் தமது வியர்வை சிந்தி உழைக்கும் டொலர் ஒன்று பெறுமதி வாய்ந்தது என்பதையும் எனது புதல்வருக்கு எடுத்துக் கூறுங்கள். இந்த உண்மையினை அவருக்கு புகட்டுவதற்கு சிலகாலம் செல்லும் என்பதை நான் அறிவேன். ஆயினும் அந்த உண்மையினை அவருக்கு உபதேசியுங்கள்.

தோல்வியினைத் தாங்கிக் கொள்வதற்கும் வெற்றியினை பணிவடக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும் ஏற்றுக் கொள்வதற்கும் எனது புதல்வருக்கு சொல்லிக் கொடுங்கள். பொறாமையாளர்கள் சிலர் அவரை அடக்கவும், அவரை அப்புறப்படுத்தவும் முயலும் பொழுது அது பற்றி மனக்கிலேசம் கொள்ளாது அமைதியாக இருந்து உள்ளூர கிரகிக்கக் கூடிய ஆண்மீகச் சக்தியின் இரகசியத்தை அவருக்கு எடுத்துக் கூறுங்கள். தனது உடல் வலிமையினைக் காட்டி மனிதர்களை அச்சுறுத்துபவர்களை எளிதில் தோற்கடிக்க முடியும் என்பதை அவருக்கு அறிவுறுத்தவும்.

அதிபர் அவர்களே, இயலுமான நூல்களிலுள்ள இலக்கியச் சுவையினைப் பற்றி எனது புதல்வருக்கு எடுத்துக் கூறுங்கள். அதுமட்டுமல்ல வானத்தில் பறக்கின்ற குருவிகளும் கதிரவனின் ஒளிக்கிரணங்களில் பறக்கின்ற தேனீக்களும், பச்சைப் பசேல் என்ற மலையடி வாரத்தில் பூத்துக் குலுங்குகின்ற சாதன வனத்தினைப் பற்றி தனிமையில் சிந்திக்கும் படி அவரைத் தூண்டுங்கள். காட்டு மலர்களும் எடுத்து இயம்புகின்றன.

வஞ்சனை செய்வதைக் காட்டிலும் கள்ள வேலைகள் செய்வதைக் காட்டிலும் தோல்வியை ஏற்றுக் கொள்வது கௌரவமிக்க செயல் என்பதையும் பிறர் எதனைக் கூறிலும் தமது நேரிய கருத்துக்களை நம்பி செயல்படுவது சிறந்தது என்பதையும் எனது புதல்வருக்கு எடுத்துக் கூறுங்கள். அதிபர் அவர்களே, இனிய சுபாவமுள்ளவர்களிடம் இனிய முறையில் நடந்துகொள்வதற்கும் கொடிய இயல்புள்ளவர்களிடம் கடுமையாக நடந்து கொள்வதற்கும் தம்மைச் சுற்றி உள்ளவர்கள் செய்வனவற்றை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளமாமல் தமது அறிவினைப் பயன்படுத்தி செய்யக்கூடியனவற்றையும், செய்யக்கூடாதவற்றையும் புரிந்து கொண்டு செயல்படுவல்லமையினை அவருக்கு வழங்குங்கள். அனைவரினதும் பேச்சுக்களை செவிமடுக்க வேண்டுமென்பதை அவருக்கு புகட்டுங்கள். ஆயினும் தாம் கேட்டவற்றில் உண்மையினை அலசி ஆராய்ந்து நல்லவற்றை மாத்திரம் ஏற்றுக் கொள்ளும் வல்லமையினை அவருக்கு வழங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகைய இடர்கள் ஏற்பட்டாலும் துன்பப்படாமல் சிரிக்கும் விதத்தினை அவருக்கு காட்டுங்கள். கண்ணீர் விடுதல், நாணத்திற்கு ஏதுவானதொன்றல்ல என்பதையும் அவருக்குச் சொல்லிக் கொடுங்கள். எல்லாவற்றிலும் பிழை காண்பவர்களை அசட்டை செய்யவும், இனிய பசப்பு வார்த்தைகளை கேட்டு ஏமாற்றமடையாமல் இருப்பதற்கும் அவருக்கு வழிகாட்டுங்கள். தமது உடல் சக்தியினையும், சிந்தனைச் சக்தியினையும் அதிக விலை கூறுபவர்களுக்கு விற்பதாயினும் தமது இதயத்தை எப்பொழுதும் விலைக்கு விற்க வேண்டாம் என அவருக்கு கற்பியுங்கள். பகட்டுக் கோசங்களை எழுப்புகின்ற சனங்கள் மத்தியில் காதினை மூடிக்கொண்டு இருக்கும் தைரியத்தை அவருக்கு வழங்குங்கள். தான் சத்தியம் என ஒப்புக் கொள்வனவற்றுக்காக தைரியத்தோடு போராட அவருக்கு கற்பியுங்கள்.

அதிபர் அவர்களே, அவரிடம் மெதுவாக நடந்து கொள்ளுங்கள். ஆனால் அவரிடம் செல்லமாக நடந்துகொள்ள வேண்டாம். நெருப்பில் புடம் போட்டால்தான் உருக்கினை நன்றாக வார்க்க முடியும் என்பதை அவருக்குத் தெளிவுபடுத்துங்கள். எனவே வாழ்க்கைப் பயணத்தின் போது தமக்கு அதிக பேரிடர்கள் ஏற்பட்டால் அதனை தாங்கிக் கொண்டு இரும்பு மனிதராக முன்னேறுவதற்கு அற்ப அனுபவம் அவருக்கு உதவும் என்பதை எடுத்துக் கூறுங்கள்.

தமக்கு ஏற்படும் அமைதியின்மையினை அவர் நெஞ்சுறுதியோடு தாங்கிக் கொள்ளுதல் வேண்டும். அஞ்சா நெஞ்சமுடையோருக்கு தேவையான பொறுமை அவருக்கு இருத்தல் வேண்டும். எப்பொழுதும் தம்மைப் பற்றி உயர்ந்த விசுவாசத்தினை ஏற்படுத்த அவருக்கு கற்பியுங்கள். தம்மீது அத்தகைய விசுவாசமுள்ள பொழுதுதான் மனிதர்கள் அனைவரின் மீதும் அவர் மனிதர்கள் மீதும் விசுவாசமாக இருக்க முடியும். அவருக்கு அறிவினைப் புகட்டுவது பாரதூரமான காரியம் என்பது எனக்குத் தெரியும். அதிபர் அவர்களே, உங்களால் இயன்றவற்றை எனது புதல்வரின் நன்மைக்காகச் செய்யுங்கள். எனது புதல்வர் அதற்கேற்ப மன உறுதியும், உடல் உறுதியும் பெறுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**இவ்வண்ணம்**
**ஆப்ரஹாம் லிங்கன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவருக்கு பாடசாலைக் கல்விஅபிவிருத்தியில் நிர்மாணத் தொழில் நுட்பத்தின் பங்களிப்பு.

**வை.பி.முஹமட் இஸ்மாயில்**
**ஆசிரியர் - நிர்மாணத் தொழில் நுட்பம்.**

கருவறை தொடக்கம் கல்லறை வரையான கல்வியால் ஆதி மனிதன் தொட்டு நவீன கால மனிதன் வரை அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை தன்னகத்தே குடி கொண்டவனாக மனிதன் காணப்படுகின்றான். இவை அறநெறி விளக்கத்திற்கும், ஆன்மீக உபதேசத்திற்கும் வீரம் பயிற்றுவதற்கும், தொழில் திறனுக்கும், அனுஷ்டானங்களுக்கும் சக்தி படைத்துள்ளன. கைத்தொழில் புரட்சியின் ஆரம்பத்தோடு திறன் மட்டும் ஆதிக்கம் செலுத்தியதால் கல்வி அபிவிருத்தியில் திறனின் மகிமை பரவிடலாயிற்று. அதனால் விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் கவர்ச்சி மிக்க துறைகளாக வளர்ந்து வருகின்றன.

தொழில் நுட்பவியலானது பரந்து விரிந்து வருவதால் இயந்திரங்களை உருவாக்கி இயக்குவதற்கும், கட்டங்களை உருவாக்கி வசிப்பதற்கும், சந்தைப்படுத்துவதற்கும், நிறுவனங்களை நிருவகிப்பதற்கும், ஆராய்ச்சிகளை மேற்கொண்டு மானிடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், எண்ணக்கருக்களை உருவாக்குவதற்கும், புதுமைகளை புகுத்துவதற்கும், சிறந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் தொழில் நுட்பவியலே அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

எந்தவோர் மூலப் பொருளையும் முடிவுப் பொருளாக மாற்றும் செயற்பாடு உற்பத்தியாக கருதினாலும் மூலப் பொருளில் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான தொழில் நுட்பம் பயன்படுத்த வேண்டும். தொழில் நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி பயன்தரும் தன்மையுடைய முடிவுப் பொருள் கிடைக்கப்பெறுகின்றன.

அதிமேதகு ஜனாதிபதியிடம் 1995 டிசம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட "தேசிய கல்விக் கொள்கையை நோக்கிய நடைமுறைச் சாத்தியமான செயற்திட்டம்" (Towards a National Education Policy - A working methodolgy) என்பதில் 5 தலைப்புக்களின் கீழ் கொள்கை விதிப்புரை தரப்பட்டிருந்தன. அவற்றில் "தொழில்நுட்ப செயற்திறன் கல்வி" என்பவை பிரதான இடம் பெறுகின்றது.

மேலும் பிள்ளை வளர்ந்து ஒரு தொழிலைத் திருப்தியாகச் செய்வதற்கு உதவுமுகமாகவே தேசிய ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள தேசிய இலக்குகளும், அடிப்படைத் தேர்ச்சிகளும், கல்விக் கொள்கைப் புலங்களும், அதிலுள்ள "தொழில் நுட்பமும் செய்முறைக் கல்வியும்" விளங்குகின்றது.

தொழில் நுட்பக் கல்வியில் நிர்மாணத் தொழில் நுட்பம் - தொழில் நுட்பத் திறன்கள் தரம் 10, தரம் 11 எனும் பாடநூல் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்படும் புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய குறிக்கோள்களையும் அடிப்படைத் தகைமைகளையும் இலக்காகக் கொண்டு தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாட நூலில் தச்சு வேலைப்பிரிவின் கீழான அலகுகளும் கட்டிட நிர்மாணப் பிரிவின் கீழான அலகுகளும் பிரதானமாக இடம்பெருகின்றன. மாணவரது விருப்புக்களையும், பிரச்சினைகளையும் இனங்கண்டு அவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திச் சுயமாகக் கற்கவும் செயற்படவும் வழி நடாத்துவதன் மூலம் வாழ்நாட் கல்வி செயன்முறையில் ஊக்கம் பெறக்கூடியவராக இப்பாடம் அமைவதுடன் பெற்றோரும் மூத்தோரும் தமது பிள்ளைகளின் அன்றாட கல்விக் கருமச் செயற்பாட்டை கவனம் செலுத்தி உதவி ஒத்தாசை புரிவதால் எல்லோரும் பயனடைகின்றனர். மேலும் அதன் பயனானது பாடசாலைக் கல்வி தொடக்கம் உயர்கல்வி மற்றும் பொருளாதார தொழில் வரைக்கும் பரந்து செல்கின்றது.

பாடசாலை வாழ்க்கையில் இது சிறந்த பாடக் கல்வியாகவும் பாடசாலை விட்டு வெளியேறியதும் வாழ்க்கைத் தொழில் கல்வியாகவும் இது விளங்குகின்றது. தற்போதய புதிய கல்விச் சீர்திருத்தப்படி நோக்குகளையும் இலக்குகளையும் அடையும் வழிமுறையான சூழல் கல்வியாக அமைகின்றது. மாணவர் தாம் வாழும் சூழலுக்கேற்ற கல்வியாக பாடத்தைக் கற்பதால் வாழ்நாள் முழுவதும் பயனடைகின்றனர். அதாவது செந்நெல் கிராமச் சூழல் கட்டிட நிர்மாணப் பொருட்களான செங்கல், முண்டுக்கல் பல்வேறு அளவிலான கொங்கிரிட் கட்களை உற்பத்தி செய்கின்ற தளமாகவும், மரவேலை செய்வோர், மேசன் வேலை செய்வோர் வாழும் சூழலாகவும் உள்ளது. இவ்வாறான பிரதேசத்தில் வாழும் மாணவர்களுக்கு இப்பாடம் பெரிதும் உதவுவதை உதாரணமாகக் கூறலாம்.

தமது பெற்றோர், உறவினர்கள் செய்யும் தொழிலையே 'நிர்மாணத் தொழில் நுட்பம்' பாடத்தில் கற்பதால் அவர்களை நவீன தொழில் நுட்பமயப்படுத்தவும் இப்பாடம் உதவுகின்றது. மேலும் தற்காலத்தில் நிர்மாணப் பொருட்களின் விலை வீக்கமும் செலவீனமும் அதிகரித்துச் செல்வது போன்று நிர்மாணிப்புக் கூலியும் அதிகரித்துச் செல்வதால் பொருளாதார வருமானத்தைப் பெற்றுக்கொள்ளவும் நிர்மாணப் பொருட்களின் வீண் விரயத்தை தவிர்க்கவும் இப்பாடம் உதவுகின்றது.

சூழலுக்குப் பொருத்தமான கல்வியாகவும் செயற்பாட்டுடனான கல்வியாகவும் நிர்மாணத் தொழில் நுட்பம் அமைவதால் அறிவு, திறன் மனப்பாங்குடனான கல்வியும் அதனோடு இணைந்த அனுபவமும் பெறப்படுவதால் பாடப் பரீட்சையில் மிகவும் திறமையாக சித்தியடையவும் வழிவகுக்கின்றது.

தமது நிர்மாண வேலைகளை நாமே சுயமாக மேற்கொள்வதுடன் தரமான நிர்மாணப் பொருட்களை நுகரவும், தெரிவு செய்து கொள்ளவும் வீண் விரயத்தைத் தவிர்த்து தேவை மற்றும் அளவுக்கேற்ப பொருட்களை கொள்வனவு செய்து வேலைகளை திறமையாக முடிப்பதற்கும் உதவுகின்றது. மேலும் இப்பாட நூலானது மரவேலை தொடர்பாக உள்ளதால் சிறந்த பொருத்தமான மரங்களை தேர்ந்தெடுக்கவும் மேசன் வேலை, நீர்க்குழாய் பொருத்துதல், வீடமைப்புக் கடன் பெறும் வழிமுறைகள் பற்றிய விடயதானங்களை சுமந்துள்ளதால் ஒரு பூரணத்துவமான வீட்டை அமைக்க வழிவகுக்கின்றது.

மேலும் தொழில் திறனை வளர்க்க பாடசாலைக் கல்விக்கு மேலாக தொழில் நுட்பக் கல்லூரிகளில் மேசன் வேலைப் பயிற்சி, தேசிய சான்றிதழ், தொழில்நுட்ப சிவில் பொறியில் (National Certificate in Technology (civil) Engineering) பயிற்சிகளை மேற்கொள்வதற்கு அடிப்படைப்பாடமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றது. இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதால் எதிர்காலத்தில் தனியார்த் துறையில் கைநிறைந்த வருமானத்தைப் பெறுவதுடன் பதவி உயர்வும் பெறலாம்.

மேலும் அரச துறைகளில் கூட வேலை மேற்பார்வையாளர் (W.S), தொழில் நுட்ப உத்தியோகத்தர் (T.O) என பதவி வளர்ந்து ஒரு பொறியியலாளராக (Engineer) மாறும் வரை இப்பாடம் வழிவகுப்பது என்பது மாணவருக்கு கிடைத்த நன்மையாகக் கொண்டாலும் கல்வி அமைச்சு இப்பாடத்தை திட்டமிட்டு பாடசாலையில் பாடமாக வடிவமைத்து தந்தது மாணவருக்கு கிடைத்த வரப்பிரசாதமென்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

தொழில்வாய்ப்புக் கல்வியாக கல்விக் கல்லூரியில் நிர்மாணத் தொழில்நுட்ப பயிற்சி நெறி காணப்படுவதால் மாணவர் கல்விக் கல்லூரிக்கு இலகுவாக தெரிவு செய்யப்படவும் இப்பயிற்சியைப் பெற்று ஒரு வருட ஆசிரியர் கற்பித்தல் பயிற்சியும் பெற்றதன் பின்னர் தலை சிறந்த நிர்மாணத் தொழில் நுட்ப ஆசிரியராக வெளியாகுவதற்கும் நிர்மாணத் தொழில்நுட்பப் பாடம் அடித்தளமாக அமைகின்றது.

இத்தனை நன்மைகளையும் கொண்டு வாழ்நாள் முழுவதுமான கல்வியாகவும் பாடசாலை தொடக்கம் தொழிற் பயிற்சி அதிகாரசபை, தொழில் நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக் கழகம், பல்கலைக் கழகம், கல்விக் கல்லூரி வரை அமைந்து காணப்படும் நிர்மாணத் தொழில் நுட்பப் பாடத்தை மாணவர் கற்பதால் பாடசாலைக் கல்வி வாழ்கையில் மட்டுமல்லாது வெளிக்கல்வி வாழ்க்கையிலும் உதவி செய்கின்றதென்பதைக் காணலாம். எனவே மாணவர் பல்தேர்வுப் பாடங்களில் தொழில் நுட்பப் பாடங்களில் ஒன்றான "நிர்மாணத் தொழில் நுட்பம்" பாடத்தை தேர்ந்தெடுப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும் என நான் நம்புகின்றேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்

கல்விக்கு உரம் கொடுக்கும்
கண்ணியவானே - ஆசான்
உன்
கருணையினால் என்றும்
உருகும் மெழுகுவர்த்தியாய்
எங்களை
காக்கின்றாய்.

சாட்டைகளை
எங்கள் மீது
வேட்டைகளாக நீ தீர்த்தாலும்
நாங்கள் உன்னை
எங்கள் கரங்களால்
புனிதமாக்குகின்றோம்.

ஓ....
ஆசானே
உன்னிடம் ஒப்படைக்கப்பட்ட
பச்சை மாறாத பண்படுத்தப்படாத
களிமண் உருண்டைகள்
நீயோ
எங்களை
சிற்பிகளாய் வடிக்கின்றாய்
சிற்பங்கள் செதுக்கின்றாய்

அறிவைப் பரப்பி
அன்பைப் பாசத்தால் கட்டியணைத்து
அத்தனை பண்புகளையும்
அரவணைத்துக் காட்டும்
அன்பின் ஆசானே
உன் மொழிகள் அத்தனையும்
எமக்கு
பொன் மொழிகளாய் அமையட்டும்



வாழ்க எம் ஆசான்கள்
வளர்க எம் கல்வியறிவு
ஓங்குக எம் நெஞ்சங்கள்
ஒன்றாகவே நாம் சேருவோம்.



ஆக்கம் : ஏ.றியாஸ்.
(உ/த) கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் பெண்களின் பணிகள்.

**ஏ.எல்.அன்வர் அலி (Tr)**
**B.A - PGDE**

இஸ்லாமிய சமூகக் கடமைகளுள் பெண் அரைப்பங்கையும் ஆண் அரைப்பங்கையும் வகிக்கின்றனர். ஆணும், பெண்ணும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல சமூகத்தின் பிரிக்க முடியாத இரு கூறுகள் என்று கூற முடியும்.

இஸ்லாத்தின் பார்வையில் பெண்ணின் பங்களிப்பும், முக்கியத்துவமும், சமூக அந்தஸ்த்தும் ஆணைவிட எவ்வகையிலும் குறைந்ததல்ல. ஆனால் ஒவ்வொரு பாலாருக்கும் இயல்பு வித்தியாசம் இருப்பதனால் அவரவர் மீதான பொறுப்புக்கள் பெரும்பாலும் வேறுபடுகின்றன. அதே போல் இருபாலாருக்கும் பொதுவான கடமைகளும், பொறுப்புகளும் அநேகம் உள்ளன.

ஆனாலும் இன்றைய நவீனகால முஸ்லிம் பெண் இஸ்லாம் எதிர்பார்க்கும் முஸ்லிம் பெண்ணாக இல்லை. இப்படிக் கூறும் போது முஸ்லிம் பெண்கள் அனைவருமே இப்படித்தான் இருக்கிறார்கள் என்று அர்த்தமல்ல. அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு ஊரிலும் ஸாலிஹான, இஸ்லாமிய நெறிமுறைகளைப் பேணி வரும் உத்தமமான பெண்களும் இருக்கிறார்கள். ஆனால் கணிசமான பெண்களது நிலை மோசமானதாகவே இருக்கிறது.

இன்றைய முஸ்லிம் பெண்களை இரண்டு வகையாக நோக்கலாம். ஒரு வகையினர் அளவுக்கு மீறிய கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு எந்த விதமான முன்னேற்றகரமான முயற்சிகளிலும் ஈடுபடாதிருக்கும் முஸ்லிம் பெண்கள். இரண்டாவது வகையினர் எந்தக் கட்டுப்பாடுகளுமின்றி தான்தோன்றித்தனமாக வாழும் பெண்கள். அவர்கள் தாம் விரும்பும் அனைத்தையும் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் முற்று முழுதாக மேற்குலகப் பாணியில் தமது வாழ்க்கையை அமைத்திருக்கிறார்கள். மேற்குலகத்துப் பெண்களின் வாழ்க்கையை இவர்களின் வாழ்க்கையின் முன்மாதிரிகளாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை முஸ்லிம் பெண்களிடமிருந்து மாற வேண்டும்.

இந்த நவீன நூற்றாண்டில் மக்களை பரவலாக ஒரு நோய் பீடித்திருக்கிறது. கடமைகளைச் செய்வதற்கு முன் உரிமைகளுக்கு குரல் எழுப்புவதே அந்நோயாகும். ஒவ்வொருவரும், என் மீதுள்ள கடமை என்ன? என்று கேட்க முன்னர், எனக்கு வந்து சேரவேண்டிய உரிமை என்ன? என்றுதான் கேட்கிறார்கள். இக்காலத்துப் பெண்கள் கல்வி கற்பதற்கும், தொழில் செய்வதற்கும், தேர்தலில் ஈடுபடுவதற்கும் பதவிகளை வகிப்பதற்குமான உரிமைகளைக் கோருகிறார்கள். ஆனால் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் எவை என்று அவர்கள் கேட்பதில்லை.

முஸ்லிம் பெண்கள் தமது முன்னோரின் வரலாற்றைப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த முன்மாதிரியான பெண்கள் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமையை பரிபூரணமாக நிறைவேற்றி அவனை நன்கு அறிந்து அவனுக்கு வழிபட வேண்டிய விதத்தில் வழிபட்டார்கள். நோன்பு நோற்றார்கள், தொழுதார்கள், கணவனுக்கு கட்டுப்பட்டார்கள். கற்பைப் பேணிக் காத்துக் கொண்டார்கள். அதேபோல மார்க்கக் கல்வி பெறுவதில் பின் நிற்கவுமில்லை. ஹதீஸ்களை அறிவிப்பதில் கவிதைகளைப் பாடுவதில் வல்லமை பெற்ற ஸஹாபிப் பெண்மணிகள் றஸூலுல்லாஹ்வின் சமூகத்தில் இருக்கவே செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர்களது முதல் பணியாக இருந்தது தமது விடயத்தில் இறைவன் முதலில் எதனை எதிர்பார்க்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு செயற்பட்டமைதான். எனவேதான் இரட்சகனின் சுவர்க்கத்தில் நுழையும் அருகதையுடையவர்களாக அவர்கள் மாறினார்கள். எனவே முஸ்லிம் பெண்கள் தங்களது தனித்துவத்தை உணர வேண்டும். தங்களது பாரம்பரிய மார்க்கம் பற்றிய ஆழிய நம்பிக்கையை அவர்கள் தமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

“நான் அமெரிக்க அல்லது ஐரோப்பிய அல்லது ரஷ்யப் பெண்ணல்ல. நான் ஒரு முஸ்லிம் பெண். அதன் பொருள் மனிதவர்க்கத்திற்கு தெரிவு செய்து அனுப்பப்பட்ட சிறந்த சமூகமான முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கம். நான் அல்லாஹ்வை றப்பாகவும் இஸ்லாத்தை தீனாகவும் குர்ஆனை வேதமாகவும் முஹம்மது (ஸல்) அவர்களை நபியாகவும் ஏற்றிருப்பவள். நான் எனது இஸ்லாத்தையும் எனது இஸ்லாமிய பெறுமானங்களையும் எனது இஸ்லாமிய ஆளுமையையும் பாரம்பரியங்களையும் பாதுகாக்க வேண்டும்” என்ற உணர்வை ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணும் உள்ளத்தில் ஆழமாக பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

**இன்றைய நவீன உலகத்தில் எல்லாமே குழம்பி விட்டது. தலைகீழாக மாறிவிட்டது. பெண், ஆணாகப் பார்க்கிறாள். ஆண் பெண்ணாக பார்க்கிறான். பெண் பெண்ணாகவே இருக்க வேண்டும். பெண்மையும், அடக்கமும், சாந்தமும், கனிவும் அவளது சிறப்புப் பண்புகள் என்பதை நமது முஸ்லிம் பெண்கள் மறந்து விடக்கூடாது. ஆண் கடுமையை இழந்தால் பெண் அடக்கத்தையும் கனிவையும் இழந்தால் வாழ்வும் அர்த்தத்தை இழந்து விடும். இதில் விஷேடமாக தொழிலுக்காக வீட்டை விட்டு வெளிச்செல்லும் பெண்கள் சிந்தித்து செயற்பட வேண்டியவர்களாகும்.**

ஆண்களுக்குரிய ஆடையை பெண் அணியலாகாது என்று நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளமைக்கு நியாயமான காரணங்கள் உள்ளன. பெண்களைப் போல் வேஷம் போடும் ஆண்களையும் அவர்கள் சபித்துள்ளார்கள். எனவே நாளைய முஸ்லிம் பெண் தனது பெண்மையைப் பேணிக் கொள்வாள் என எதிர்பார்க்கிறோம். ஆண்மையுடன் போராடுவதிலிருந்து விடுபட்டு அவள் தனது இயல்புக்கு இசைவான செயற்பாடுகளில் ஈடபட வேண்டும். அவள் ஆசிரியையாக, வைத்தியராக, பெண்களுக்கான தாதியாக பணிபுரிய வேண்டும் என இஸ்லாம் வேண்டி நிற்கிறது. ஒரு பெண் நோயாளி ஒருவரை ஓர் ஆண் வைத்தியர் பரிசோதிப்பதை விட ஒரு பெண் வைத்தியர் பரிசோதிப்பது இஸ்லாமிய ஷரீஆ வரம்புகளைப் பேணுவதாக அமையுமல்லவா? எனவே முஸ்லிம் பெண்கள் வைத்தியத்துறைக் கல்வியைப் பயின்று வைத்தியராக மாற வேண்டும். அதுபோலவே இஸ்லாம் வேண்டி நிற்கும் ஏனைய துறைகளும் அவை இஸ்லாத்தின் இன்றைய தேவைகளாகும்.

எனவே முஸ்லிம் சகோதரிகளே! நாளைய முஸ்லிம் பெண் எப்படியிருக்க வேண்டும் என்று புரிந்து செயல்பட்டு தமது வாழ்க்கையை தீனின்பால் மீளமையுங்கள். எமது இரட்சகனுக்கும், கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை சரிவர நிறைவேற்றுங்கள். இதன் மூலம் உண்மையான இஸ்லாமிய பெண்ணாக மாற முடியும். பெண்களுக்கு இஸ்லாமிய போதனைகளைச் செய்து மேற்கத்தேய பெண்ணின் முன்மாதிரியை விட்டு எம்முன்னோரின் வாழ்வினையும், அந்த ஸஹாபிப் பெண்மணிகளைப் போல பிறருக்கு பயனுள்ள ஸாலிஹான பெண்களாக இன்ஷா அல்லாஹ் மாற வேண்டும் என இறைவனிடம் தினமும் பிரார்த்தியுங்கள். “வெற்றி நிச்சயம்”.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Child Abuse

***A. Abdul Jabbar***
***Teacher of English***

Children are the most valuable creatures in the world. They are the indispensable asset of human beings. This concept consciously explains us the utmost value of this precious asset. Since improper realization of this perspective has been increasingly growing in Sri Lanka and all over the world in recent times, it tends to create a notion that leads to child abuse which is in other words equivalent to the deterioration of the whole universe.

Child abuse has many forms such as physical, sexual, educational and emotional. Physical abuse is a corporal punishment which ranges from minor bruises to severe fractures or death. Punching, beating, kicking, biting, shaking, throwing, stabbing, choking, hitting with the fist, hand, stick or any other object, burning or otherwise harming a child would amount to the category of physical abuse. Such bodily injuries are often considered to be a serious one regardless of whether the caretaker or any other person intended to hurt the child or not.

Sexual abuse comprises of activities of parents, caretakers or any other person as involvement in the form of fondling a child's genitals, incest penetration, rape, sodomy, homosexuality, indecent exposure and exploitation through prostitution or showing of pornographic materials to the child. This abuse creates the total deterioration of a child's moral and cultural values in general making a child's life darker at the moment and in the course of revolving sun.

According to scholars, education is considered to be the engine of human life through which mankind acquires knowledge to fulfill their life requirements. Education thus must be provided to children in particular from their childhood. Refusal of education to a child at an early age, especially below 14 years of age in Sri Lanka adds up to educational abuse. It becomes a punishable offence in the country with the amendments of compulsory education of new legislation of Sri Lanka.

The other abuse in which a child is dragged is emotional. Emotional abuse is a pattern of behaviour that impairs a child's emotional development or motivation of sense. This may include constant criticisms, threats or rejection of love, support or guidance. Emotional abuse is often difficult to prove and thus the CPA (Child Protection Agency of Sri Lanka) may not be able to intervene without evidence of harm to the child. Emotional abuse is almost always present together with other forms of abuses identified as physical, sexual and educational.

Above all, children are employed as child labour in many parts of Sri Lanka and around the world. Because of child labour has become an international issue, a large number of local and international organizations have been making serious measures to protect the child in each and every corner of the world.

In the context of Sri Lanka, the rate of child abuse has tremendously increased for the last two decades. Therefore, proper low and order is very essential to eliminate this intolerable situation. Introduction of inflexible penalty methods in the system, inclusion of child abuse discipline in general education, extension of knowledge with regards to child abuse, establishment of child protection team in every nook and corner, conducting awareness programmes for parents, relatives and adults, implementation of long term projects for cognitive behavioural change through counselling and other measures may help us to prevent this maltreatment. Otherwise, it is very difficult to see a healthy society and environment in relation to child in future Sri Lanka and thus child abuse cannot be rooted out in our mother land for ever.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியும் பெற்றோரின் பங்கும்.

இன்று பெற்றோர் எச்சமூகத்தைச் சேர்ந்தவராயினும் தமது பிள்ளைகளின் கல்வி விருத்தியில் அக்கறை காட்டி வருகின்றனர். மத்திய வகுப்புப் பெற்றோரே இதில் கூடிய கவனம் செலுத்துகின்றனர். தாம் கொள்ளும் அக்கறையால் நல்ல பலனையும் பெறுகின்றனர். ஆனால் இன்று பொதுவாக எழுத்தறிவற்ற பெற்றோரில் பெரும்பாலானவர்களும் அக்கறை காட்டுவது பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு நல்ல அறிகுறி எனலாம். மனித வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு இன்று வாழ்வு சிக்கல் மிக்கதாயிருக்கிறது. இச்சிக்கல் தொடர்ந்து கொண்டே இருக்குமானால் பல பிரச்சினைகளும், கஷ்டங்களும் ஏற்பட இடமுண்டு. எனவே சிறந்த சமூகப் பொருத்தப்பாடுள்ள வாழ்வுக்கு வேண்டிய திறமையினைக் கல்வியினாலே பெறமுடியும் என்பதால் பிள்ளைகளின் கல்வியில் இன்றைய பெற்றோர் அதிக அக்கறை கொள்ள வேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

பெற்றோரும் பிள்ளைகளின் கல்வியில் ஆர்வத்தோடு செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவதே பெற்றோரின் தலையாய கடப்பாடு, தற்காலக் கல்வித் தத்துவத்தின் தந்தை எனப்போற்றப்பட்டும் பிரேஞ்சு நாட்டுப் பேரறிஞர் ரூசோ "எவனொருவன் தனது பிள்ளைகளின் கல்விக்கு ஆவன செய்ய முடியாதவனோ அவனுக்குத் தந்தையாகும் உரிமை இல்லை என்றும், உலகத்தில் தலை சிறந்த ஆசிரியனை விட எழுத்தறிவுள்ள தந்தையே மிகச் சிறந்த ஆசிரியன்" என்றும் கூறிய ஆழ்ந்த கருத்தினை உணரின் இக்கல்விப் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு கிடைக்கும், மனித வாழ்வின் ஆரம்ப நிலையில் சிக்கலற்ற சமூகச் சூழலில் பெற்றோரே ஆசிரியராக இருந்தனர்.

பிள்ளைகளின் கல்வி அனுபவ ரீதியில் இலகுவாய் அமைந்தது. இன்னும் ஒரு பிள்ளைக்கு வீடுதானே முதற்கல்வி நிலையமாகிறது. உளவிருத்தியினை ஏற்படுத்த ஆரம்பமான கல்வி நிலையங்கள் இன்று உள. உடல் மனவெழுச்சி, சமூக, ஆத்மீக, உணர்வு ஆகிய சகல விருத்திகளையும் ஏற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே இன்று பாடசாலைகளிலும் சமூகம் எதிர்பார்ப்பது சம வளர்ச்சி பெற்ற ஆளுமை உடைய குடிமக்களை உருவாக்கும் பெரும் பணியென்பது தெளிவாகும்.

இப்பெரும் பயனைத் திறம்படத்தனித்து ஆசிரியன் ஒருவனே நிறைவேற்ற வேண்டும் என பலரும் கருதுவதுதான் வேதனைக்குரியது. ஆசிரியர்களும் மனிதர்கள் அவர்களின் ஆற்றலுக்கும் எல்லை உண்டு. அவர்கள் திறம்படப் பணிபுரிய யாவரும் உதவ வேண்டும். ஆனால் சமூகம் அவ்வாறு தனது பங்கினைச் செய்யாது ஆசிரியர் பணிக்குப் பாதகமான சூழலை உருவாக்கி வரும் நிலையை எண்ணும் போது நிதான சிந்தனையுள்ள எவரும் வேதனைப்படாது இருக்க முடியாது.

கல்விச் செயற்பாட்டின் மையம் மாணவனே. இம்மாணவனது விருத்தியே கலைத்திட்ட இலக்கு. இவ்விலக்கினை மகிழ்ச்சியாகவும், விரைவாகவும் அடைய உதவுதலே ஆசிரியர். மாணவர் பெறும் முறை சார்ந்த கல்விச் சூழலாகிய பாடசாலைச் சூழல் போதிய தாக்கத்தினை ஏற்படுத்த முடியாதவாறு இன்று சமூகச் சூழல் அமைந்து காணப்படுகிறது. மாணவரின் வாழ்வில் பெரும் பொழுது முறைசாராச் சூழலாகிய சமூகத்தில் கழிகின்றது.

சமூகத்தின் வருங்காலச் சிற்பிகளான மாணவர்கள் கல்வி, ஒழுக்கம், பண்பாடு என்பன நிரம்பியவர்களாக்கும் முதல் பொறுப்பு குடும்பத்தில் (வீட்டில்) தங்கியுள்ளதால் அக்குடும்பத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிச் சிறிது சிந்தித்தல் அவசியம். இன்றைய கல்வியின் போக்கு மாணவனைச் சமூகச் சூழலில் வைத்தே விருத்தி செய்யும் கருத்துள்ளதால் ஆசிரியர் பாடசாலைச் சமூகத்தோடு ஒன்றிச் செயற்பட பெற்றோரே ஆக்கமும், ஊக்கமும் தரவேண்டியது அவசியம்.

ஆகையால் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பொறுப்புள்ள பங்கு தமக்கு உண்டென்றும் தாம் உதாசீனமாக நடந்து கொள்வதால் ஆசிரியர் தனது பணியினைச் செவ்வனே செய்ய முடியாத அவல நிலைக்கு உள்ளாகிறார் எனும் உணர்வு பெற்றோரிடம் ஏற்பட வேண்டும். அத்தகைய உணர்வு ஏற்படின் பெற்றோர் தம் கடமையை உணர்ந்து பிள்ளைகளின் கல்வி விருத்திக்கு ஆசிரியர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கெல்லாம் உதவ முடியும். அதன் மூலம் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் தொண்டாற்றிய பெருமையும், மகிழ்ச்சியும் பெற்றோர் பெற முடியும்.

நன்றியுடன்
**ஐ.எல்.பஸ்மிறா**
(A/L) கலைப்பிரிவு.

# கல்வி



அழியாச் செல்வமே
அணையா ஒளி விளக்கே
பகைவரால்
கள்வரால்
அபகரிக்க முடியாத
பயன் மிக்க ஞானவிளக்கே – கல்வி

அழகாலும் அழகு
அத்தனை நிரம்பப் பெற்ற
செல்வந்தனையும் இல்லாதோனையும்
இணையவைக்கும் இனிய
தேனிலவே – கல்வி

அள்ளியிறைக்க
வற்றாத ஊற்றாய்
வளம் பெறும் ஞானச்சுடரே
என்றும் கரைசேராத நதியே – கல்வி
கல்வி இலார்
கண் இலாக் குருடர் ஆவார்
கல்வி உள்ளார் கண் உள்ளார்.

கற்றோர் மத்தியில் என்றும்
நித்தியம் பெற்றோர்
கற்க
கசடற என்னும்
கற்றதன் பின் நிற்க
அதற்கு தக என்பர்
கற்றதை
மற்றோர் மத்தியில்
நிற்க வைப்பதே – கல்வி

கல்வியே
என்றென்றும்
எங்கள் நெஞ்சங்களில்
நித்திய ஜீவனாய்
நிலையாய் நாளும்
பின் தொடர்கிறேன்
என்றென்றும்.

ஆக்கம் : **வி.ரி.எம்.நௌபீஸ்**
(A/L) கலைப்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ்பெற்ற கட்டிடங்கள்



**01. தாஜ்மஹால்.**

வெள்ளை நிற பளிங்குக் கற்களால் 1632 - 1650 ஆண்டுகளில் இந்தியாவின் அக்ராவின் ஷாஜஹான் மன்னனால் தன் மனைவி மும்தாஜுக்காக கட்டிய நினைவுக் கல்லறையே தாஜ்மஹால்.

**02. பாந்தியன்.**

உரோமபுரியில் அமைந்துள்ள பந்தியன் கி.மு. 27 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இது 20 ஆம் நூற்றாண்டு காலமாக வணக்கஸ்தலமாக இருந்து வருகின்றது.

**03. லண்டன் கோபுரம்.**

இது லண்டன் நகரில் 13 ஏக்கரில் கட்டப்பட்ட கட்டிடத் தொகுதியாகும். 1978 ஆம் ஆண்டில் இதன் மத்திய வெள்ளை நிறக் கோபுரம் கட்டப்பட்டது. முன்பு அரச குடும்பத்தினரின் மாளிகையாக இருந்தது.

**04. வேர்செயில்ஸ் மாளிகை.**

17 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டையாண்ட 14 ஆம் லூயி மன்னன் காலத்தில் வேர் செயில்ஸ் மாளிகை கட்டப்பட்டது. 1793 ஆம் ஆண்டு வரை அரச மாளிகையாக இருந்து வந்தது.

**05. ஈபிள் கோபுரம்.**

1889 ஆம் ஆண்டு பிரான்சின் தலைநகர் பாரிஸில் கட்டப்பட்டது. இது 1059 அடி உயரமானது. இது தொலைத் தொடர்புக் கோபுரமாகப் பயன்படுகின்றது.

**06. வத்திக்கான்.**

உரோமிலுள்ள பாப்பாண்டவரின் வசிப்பிடமாகும். இக்கட்டிடங்கள் குழுமங்களாகக் கட்டப்பட்டுள்ளன. கிறிஸ்த்தவர்களின் மிகமுக்கிய மற்றும் மிகப் பெரிய ஆலயமாகக் கருதப்படுகின்றது. புனித பேதுருவின் பஸிலிக்கா தேவாலயம் இக்கட்டடத் தொகுதியிலே அமைந்துள்ளது. இது 1450 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. வத்திக்கான் சுதந்திரமாக இயங்கும் உலகின் மிகச் சிறிய இராச்சியமாகும்.

**07. பெருஞ்சுவர்.**

சீனாவின் பெருஞ்சுவர் கி.மு. 228 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. நாடோடிகள் மற்றும் வெளிநாட்டவர்களிடமிருந்து சீனா நாட்டைப் பாதுகாப்பதற்காக மிக உயரமாகவும் மற்றும் நீளமானதாகவும் சீன எல்லைக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

**தொகுத்தவர் :எஸ்.எம்.ஏ.பஹ்ராம் பாஹிம்**
*தரம் - 8A*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவுகள்.

**எம்.ஏ.நூருல் இனாபா,**
**(ஆசிரியை)**

1. கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும்.
2. குடும்பம் சம்பந்தமான வழிகாட்டலும் ஆலோசனையும்.
3. உளவியல் சம்பந்தமான வழிகாட்டலும் ஆலோசனையும்.
4. தொழில் சம்பந்தமான வழிகாட்டலும் ஆலோசனையும்.

## கல்வி சம்பந்தமான வழிகாட்டலும் ஆலோசனையும்.

கற்றலும், கற்பித்தலும் சம்பந்தமான ஆசிரியர், மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் நிவாரண முறைகளும் இச்சேவையினால் வழங்கப்பபடுகின்றன. கற்கும் விடயங்களை விரைவில் மறத்தல். கற்கும் வேளையில் அவதானம் செலுத்துவதில் உள்ள இடர் கற்பதற்கு எவ்வித ஆர்வமும் ஏற்படாதிருத்தல். கற்பதற்கு பெற்றோர் செய்யும் வற்புறுத்தலுக்கு எதிராகச் செயற்படல். பாடங்களில் பிரச்சினைகள் ஏற்படல்.

தனியார் வகுப்புக்களுக்குச் செல்லும் போதும் பாடசாலைக்குச் செல்லும் போதும் அதிக வேலைப்பழு காரணமாக தோன்றும் பிரச்சினைகள், கல்வியிலும் பாடசாலையிலும் வெறுப்படைதல், கற்கும் முறைகளில் பிரச்சினைகள் இருத்தல், முதலானவை இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுட் சிலவாகும். இவற்றைத் தீர்ப்பதற்கு வழிவகை செய்வதே கல்வி ஆலோசனைச் சேவையின் பிரதான நோக்கமாகும்.

சாதாராணமாக வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளாக மாணவர் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடாதிருப்பதன் காரணமாக வகுப்பறைக் கற்பித்தலில் சிரமம் உண்டாதல், ஞாபகசக்தி குன்றுதல், எதிர்பார்க்கும் புள்ளியை விட குறைவாகப் பெறுதல் போன்றனவுள. இவற்றைத் தீர்க்க ஆலோசனைகள் வழங்க வேண்டியுள்ளன. ஆகவே ஆசிரியர் மாணவர் ஆகிய இரு பகுதியினருக்கும் ஆலோசனையில் சேவை அவசியம் என்பது நன்கு.

## 02. குடும்பம் சம்பந்தமான வழிகாட்டலும் ஆலோசனையும்.

வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்களிலும் எல்லாப் பருவங்களிலும் சூழலுடன் இயைபாக்கம் காணவும், சுயதிறன்களை விருத்தி செய்யவும், பொருத்தமான தெரிவுகள் செய்யவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும் உளவியல் அணுகுமுறை அடிப்படையில் பயிற்சி பெற்றவர்களால் வழங்கப்படும் உதவி வழிகாட்டல் எனப்படும்.

ஆலோசனை எனப்படுவது ஆலோசனை நாடி தனது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு ஆலோசகரை நேர்முகமாக சந்தித்து பேட்டி காணும் நுட்ப முறையின் அடிப்படையில் கலந்துரையாடி அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறைகளைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வழிகாட்டல் ஆலோசனை எனும் போது ஒரு குடுத்பத்தில் எழுகின்ற பிரச்சினைகளின் மூலமாக குடும்ப அங்கத்தவர்களது எதிர்காலத்தில் பாதிப்புகள் ஏற்பட்டு விடாமல் பாதுகாக்குமுகமாகவும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்குமுகமாகவும் மேற்கொள்ளப்படும் வழிகாட்டலையும் ஆலோசனையையும் குறிக்கின்றது.

பெற்றோருக்கிடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் ஒரு குடும்பத்தில் முக்கியமானது. இப்போது கணவன் - மனைவியின் பிரச்சினைகள் பெரும்பாலும் குடும்பத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன. இதனால் வீட்டில் அமைதியின்மையும், துன்ப நிலையும் தோன்றுகின்றது. இந்நிலமைகளை மாற்றி கணவன் - மனைவிக்கிடையிலான அன்புப் பிணைப்பை உருவாக்க குடும்பம் வழிகாட்டல் ஆலோசனை அவசியமாகின்றது.

குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் குறிப்பாக தந்தையிடம் அல்லது தாயிடம் காணப்படுகின்ற நெறிபிறழ்வான நடத்தைகள் பிள்ளைகளைப் பெரிதும் பாதிக்க வல்லது. உதாரணமாக தந்தை பாலியல் ரீதியாக கெட்ட நடத்தைகளைக் கொண்டவராக காணப்பட்டால் அது பிள்ளைகளின் வாழ்விலும் தாழ்வு நிலையைத் தோற்றுவித்து அவர்களை நெறிபிறழ்வான வாழ்வின் பக்கம் இட்டுச் செல்ல சந்தர்ப்பம் உருவாவதால் சமூகச் சீர்கேட்டிற்கு வழிவகுக்கிறது. இதனாலும் குடும்ப வழிகாட்டல் ஆலோசனை அவசியமாகின்றது.

தாய், தந்தை இருவருமே வேலைபார்க்கும் இடங்களில் அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்குவதுடன் அவர்களின் வேலையாட்களால் பராமரிக்கப்படுவதால் தவறான நடவடிக்கைகளின் பக்கம் பயிற்றுவிக்கப்பட வாய்ப்பேறுகிறது. மேலும் பிள்ளைகள் மனோரீதியான தாக்கத்திற்குட்பட்டு விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு சீரழிவுக்குள்ளாவதால் குடும்பம் பாதிப்படைய நேருகிறது. இந்நிலைகளைத் தவிர்த்து குடும்பத்தை சீர்படுத்த குடும்ப வழிகாட்டலும் ஆலோசனையும் அவசியமாகிறது.

மது பாவனைக்கு அடிமையான பெற்றோரைக் கொண்ட குடும்பத்திலும் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. தந்தை மதுவிற்கு அடிமைப்பட்ட நிலையில் பேசும் பேச்சுக்கள், துன்புறுத்தல்கள் என்பன பிள்ளைகளைப் பெரிதும் தாக்கத்திற்கு உட்படுத்துகின்றன. மேலும் பிள்ளைகளும் மதுப்பாவனைக்குள்ளாகக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. இதனால் குடும்ப வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இன்று வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்ததன் காரணமாக குடும்பத்தில் பொருளாதார நெருக்கடிகள் தலை தூக்கியுள்ளன. இப்பொருளாதார நெருக்கடிகளினால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகி குடும்பப் பிளவுகள் உறவு விரிசல்கள் ஏற்படுகின்றன. இவ்விரிசல்களினால் பிள்ளைகள் பெற்றோர் மனோரீதியாக தாக்கப்படாமல் இருப்பதற்கு குடும்ப வழிகாட்டலும் ஆலோசனைகளையும் இன்றியமையாததாகும்.

உளத்தாக்கமுற்ற உடல் அங்கவீனமுற்ற உறுப்பினர்கள் உள்ளடக்கிய குடும்பங்களிலும் பிரச்சினைகள் உருவாகின்றன. இப்பிரச்சினைகளைத் தவிர்க்கவும் அங்கவீனர்களை சிறப்பாக கவனித்துக் கொள்வதற்கும் குடும்ப வழிகாட்டல் ஆலோசனை அவசியமானதொன்றாக விளங்குகிறது. மேலும் குடும்ப உறுப்பினர்களை சமூக இயைபாக்கம் கொண்டவர்களாகவும், சவால்களை வெற்றி கொள்ளத் தக்கவர்களாகவும் மாறுவதற்கான பூரண ஒத்துழைப்பை ஒரு குடும்பம் வழங்க அவர்களுக்கு வழங்கப்படும் வழிகாட்டலும் ஆலோசனையும் பெரும் துணைபுரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. உளவியல் சம்பந்தமான வழிகாட்டலும் ஆலோசனையும்.

ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லத் தயக்கம் காட்டல், வகுப்பறையில் எப்போதும் சோகமே உருவாக அமர்ந்திருத்தல், நட்பைத் தேடிக் கொள்ளாதிருத்தல், தாய், தந்தை எப்போதும் அருகிலிருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தல், வகுப்பறையில் சிறுநீர் கழித்தல், மலங்கழித்தல் போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமை, பாடசாலை நாட்களில் உணவில் நாட்டமின்மை, பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வேளைகளில் சுகவீன நிலை தோன்றல், போன்ற நடத்தைகள் என்பன ஆரம்ப வகுப்பு மாணவர் இடையே காணப்படும் பாலியல் சார்ந்த பிரச்சினையாகும்.

## 04. தொழில் சம்பந்தமான ஆலோசனையும் வழிகாட்டலும்.

மாணவர்களுக்கு எதிர்கால வேலையுலகம் பற்றி அறிமுகம் செய்வதும் அது தொடர்பாக மக்கள் மத்தியில் எழும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவி வழங்குவதும் தொழிலுக்கான ஆலோசனை எனப்படும்.

பாடசாலையை விட்டு விலக நினைக்கும் மாணவர்களுக்கு எதிர்கால வேலையுலகம் பற்றிய விபரத்தையும், தொழிலைப் பற்றிய விபரத்தையும், தொழிலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய துறைகளையும், அதற்குத் தேவையான தகைமைகள், திறமைகள், ஆளுமைகள், தொழிலுக்காக சேர்த்துக் கொள்ளும் வரையறை விண்ணப்பிக்கும் முறை, தொழிலுக்குரிய விஷேட பயிற்சிகள் தேவைப்படுமிடத்து அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான விபரம் முதலானவற்றை வழங்கி வைத்தல் அவசியமாகும். பாடசாலைச் சேவைகள் ஆலோசனைச் சேவைகள் மூலம் தொழிலுக்கான ஆலோசனைகள் இவ்வகையிலும் வழங்கப்படுகின்றன.

மாணவர்கள் தமது நாட்டத்தையும் தம்முள் இருக்கும் திறனையும் தாமே உணர்ந்து கொள்ளவும் வேறு திறமைகளை பரீட்சித்துப் பார்க்கவும் ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.
விஷேடமாக பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் நிலையிலுள்ள மாணவர்க்கே இத்தகைய சேவை மிகவும் பயன்பாடுடையது. கற்றலில் வெறுப்படைதல், தொடர்ந்து பாடசாலைக்கு வர முடியாதவர்களாதல், பரீட்சைகளில் தோல்வியுற்று வீட்டிலிருத்தல் முதலான பல காரணங்களால் மாணவர் மனமுடைந்த நிலையில் இருக்கலாம். இவர்களுக்கு தொழிலுக்கான பயிற்சிகளையும், அதற்குரிய வேறு உதவிகளையும் செய்தல் நல்லது. இதற்கு வேண்டிய நிவாரண அம்சங்களை ஆலோசனைச் சேவைப்பிரிவு வழங்கும்.

பாடசாலை ஆலோசனைச் சேவை கடமையில் ஈடுபடும் பொழுது ஒருவருடைய பிரச்சினைகளை அந்தரங்கமாகப் பேண வேண்டியது அவசியமாகும். ஆலோசனை பெறவரும் மாணவர்களின் பிரச்சினையை வேறு எவர்க்கும் கூறக் கூடாது.

ஆலோசனை பெற வரும் மாணவர்கள் சம்மதம் தெரிவிப்பார்களானால் அவர்களுடைய பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடல் நடத்தலாம். ஆலோசனை பெறும் ஒவ்வொரு மாணவர்க்கும் தனித்தனியான பதிவேடுகள் பேணப்பட வேண்டும். முதலில் மாணவர் தமது பிரச்சினைகளை விரிவாக எடுத்துரைக்கச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அவர் கூறும் அனைத்து விடயங்களையும் கவனமாக கேட்பது ஆலோசனை இயல்பாக இருக்க வேண்டும். தமது பிரச்சினையை இரகசியமாக இன்னொருவருக்கு கூற வாய்ப்பளிக்குமிடத்து ஆரம்பத்திலேயே அவர் மனதில் ஓர் அமைதி நிலை தோன்ற இடமளிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மாணவர்களுடன் பல கலந்துரையாடல்களை நிகழ்த்திய பின் ஆலோசனைகளைக் கூறுவதற்கும் பரிகாரம் வழங்குவதற்கும் ஆலோசகர் ஏற்பாடு செய்வார். இச்செயன்முறை "பரிகார வேலைத்திட்டம்" Treatment Programme என அழைக்கப்படும். பரிகார வேலைத்திட்டத்தை மதிப்பீடு செய்வதற்குப்புள்ளி விபரவியல் நுட்பமுறை பயன்படுத்தப்படும். இவற்றைப் பயன்படுத்துவதனால் ஓர் ஆலோசகர் தனது ஆலோசனைச் சேவையை அன்றாடம் செவ்வனே செய்யக் கூடியதாக இருக்கும்.

ஆலோசனை பெறவரும் மாணவர்களில் ஒரு சிலர் உளப்பிரச்சினையுடன் கூடியவர்களாக இருக்கலாம். அச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட மாணவர்களின் சம்மதத்துடன் ஆலோசகர் பாடசாலை உளவியளாலரின் உதவியை நாடலாம்.

மாணவரின் இல்லத்தில் குடும்ப சமூக அறிவுகளில் உதவி தேவைப்படுமானால் பாடசாலை ஆலோசனைச் சேவையுடன் தொடர்புள்ள சமூக சேவையாளருடாக அத்தகைய உதவிகளைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யலாம்.

ஆலோசனை பெற வரும் பாடசாலை மாணவருக்கு அவர்கள் மீண்டும் வருவதற்கான நாள், நேரம் என்பன பற்றித் தெரிவிக்கப்படும். மாணவருடைய பிரச்சினை தீரும் வரை எத்தனை தடவைகளும் ஆலோசகரை நாடலாம். அதற்கான சூழ்நிலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இவ்வாறு ஆலோசகரை சந்திப்பதற்கு மீண்டும் சந்திப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமாயின் அவர்கள் எவ்வித தயக்கமுமின்றி ஆலோசகரை அணுகுவார்.

முற்றும்.

**எவனொருவன் ஒரு பாடசாலையை ஆரம்பிக்கிறானோ அவன் ஒரு சிறைச்சாலையை மூடிவிடுகிறான்.**

He who opens a school door, close a preson.

-Victor Hugo

## ஆசிரியர் பணி

**ஆசிரியப்பணி ஓர் உயர்திறன் வாய்ந்த தொழிலாகும். ஆசிரியர் ஆட்சேர்ப்பு முக்கியமானது. கையாலாகாதவர்களுக்கான குப்பைமடுவமல்ல.**

## கற்றல்

**அனுபவத்தினால் உருவாகி, நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும் நடத்தை மாற்றங்களே கற்றலாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகங்கள் உதிர்வதில்லை.

உண்டு உறங்கிக்
காலத்தைக் கடத்திவிடும்
கனவான்கள் பற்றி நாம் ஏன்
கவலைப்பட வேண்டும்?
கட்டிளம் காளையர்கள் தம்
கனவுகளில் கற்பழிந்தால்
கடமை வீரர்கள் ஏன்
கவலை கொள்ள வேண்டும்.
கடமையில் கண்ணாயிருந்து
கற்பினையும் காத்துக் கொண்டு
இறைவனின் இடம் சேர
காலத்தைக் கணித்துக் கொண்டு
வாழ்பவர்கள் கவலையெல்லாம்
வெற்றியின் விடிவுக்கேயன்றோ!

எத்தனை இரவுகளை
எத்தனை பகல்கள் உண்டு
ஏப்பம் விட்டுவிட்டன.
இலட்சியத்தின் வேட்கையில்
இரவுபகல் பாராமல்
உழைத்துத் தேய்ந்த உத்தமர்கள்
சோக கீதம் கேட்டுச்
சோம்பி விடுவாரோ?
இல்லை இல்லை.
நிச்சயம் இல்லை.
கடமைகளைக் கவனமாய்
நிறைவேற்றிவிட்ட நிறைவுகளில்
ஆன்மாவின் நரம்பு கொண்டு
நாதமிசைத்து நிம்மதி கண்டு
பெருமூச்செறியும் நம் தியாக
உள்ளங்கள் எவ்வாறு உதிர முடியும்?
நிறைவுகளின் நேசத்தில்
நிம்மதிப் பெருமூச்சோடு
படைத்தவனைப் பற்றிக் கொள்ளப்
படபடக்கும் கண் இமைகள்
பனித்திருப்பது பரவசத்தின்
பாசத்திலல்லவா!

இழிந்த இப்பவனியில்
இதுகாறும் கண்டுவிட்ட
சிறைச்சாலையின் சிறுமைதனை
சீச்சீ என உதறிவிட்டுச்
சிறகடிக்கக் காத்திருக்கும்
தியாகிகளின் வரிசையிலே
நான் முந்தி நீ முந்தி யெனப்
படும் அவசரம் காண
பாமரரின் உளக் கண்கள்
உறக்கத்திலல்லவா இருக்கின்றன!
உண்மை இது வென்று
உணர்ந்து கொள்ளாத அளவுக்கு
உலகம் அவர்களை
உறிஞ்சிவிட்டதுவே!

நாளை மறுமையிலே
நம் இறைவன் முன்னிலையில்
நாண மின்றி நேசத்துடன்
நோக்கும் பார்வை பெற்றிடவே
அவனியிலே அனைத்தையும்
துறந்து வாழும் தூயவர்கள்
வரிசையிலே வந்திடவே
வாழ்ந்து விட்டோம், வாழ்கின்றோம்
இவ்வுலக இச்சைகள்
இம்மியளவும் இதயத்தில்
பதிந்து விடாமல் பாதுகாப்புடன்
கழிந்துவிட்ட காலத்தைக்
கனவுபோல் நோக்குகின்றோம்
எம் தியாகம் என்றும்
உதிர்ந்துவிடப் போவதில்லை.
மாறாக
மலர்ந்து மணம் பரப்பி
மங்காப் புகழ்பெற்று
மனிதர்க்கு என்றென்றும்
மணிவிளக்காயமைந்து விடும்.

நன்றியுடன்
அன்வர் அலி ஹஸ்மத் நுஸைறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர்களைவோம்!



இப்பூமி துயர் கொண்டால்
அதன் சுற்றல்கள் நின்றுவிடும்
சுற்றல்கள் நின்றுவிட்டால்
உயிர்கள் சிதறிவிடும்
இவ்வுலகம் - மூர்ச்சையாகிவிடும்

இப்பூமியே உனக்காய்
இன்பதவம் - புரியும் போது
நீ மட்டும் ஏன் - இன்னும்
சோகதவத்தின்பால்
இன்பங்கள் தொலைத்த
மனித ஜடமாய்

நீ மாய்த்துவிட்ட மனத்தினாலா
இத்தனை துயர்களும்
நீ மனிதப்புத்தகத்தை - முழுதாய்
வாசித்துப்பார் - உன்வாழ்வில்
தினமும்
விண்மீன்கள்
மின்மினிக் கூச்சலிடும்
உன்பக்கங்களில் - சந்தோஷம்
நிறைந்திருக்கும்
உன் வாழ்வின் - சோகவரிகள்
காணாமற் போய்விடும்

வரும் சோகம் ஒரு - மேகம்
அது சொல்லாமலே போகும்
அந்த சந்தோஷந்தான் வானம்
அது எப்போதுமே
வாழும்

வானம் அழுகிறதென்றா
நீயும் - அழுகிறாய்
வானம் நீ - அழுவதைப் பார்த்து
தான் அழுகிறது.
உனக்கான - உன் வாழ்வை
ஏன் நீயே அழித்துக் கொள்கிறாய்
வாழ்வின் யதார்த்தம் புரியாது.

உன் காலம் உன்னுடையது - அதை
உயிருள்ளதாய் சிருஷ்டி
உன் வாழ்க்கை - உனக்கானது -அதை
மகிழ்வுள்ளதாய் செய்
இனியாவது துயர் களைந்து
புறப்படு - புதுப் பூர்வீகம்
படைப்பதற்காய்.

மண்புழுவுக்கும் கூட சோகம்தான்
எப்போதாவது - அதன் துயரை
நீ பார்த்திருப்பாய்?
அதுமட்டும் - உனக்காய்
குருட்டு தவம் செய்யவில்லையா
பூமிக்குள்ளேயே அதன் துயரை அடக்கி

**ஆக்கம் :- ஏ.எல்.இர்பான்**
**(உ/த) கலைப்பிரிவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்லாத்தின் பார்வையில் கல்வி

அஷ்ஷேஹ் –
யு.எல்.எம்.சலாஹுத்தீன். (B.A).

**வி**ஞ்ஞானத்தின் விந்தை விண்ணைத் தொடும் இன்றைய நவீன காலகட்டத்தில் மனிதனது தோற்றத்தோடு கல்வி எனும் அழியாச் செல்வம் தோற்றம் பெற்றமையை நாம் வரலாறுகள் மூலம் கண்டு கொள்ள முடியும். கல்வி முறைமையினதும் அதனை கற்றுக் கொள்வதினதும் அதனை கற்பிப்பதினதும் சிறப்புக்களைப் பற்றி இஸ்லாம் மிக விரிவாகவும், தெளிவாகவும் விபரிக்கின்றது. மனித சமூகத்திற்கு நேர்வழிகாட்டியாக வந்த திருமறை அல்-குர்ஆனை எடுத்து நோக்கும் போது இஸ்லாம் அறிவுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விரிவாக அறிந்து கொள்ள முடியும்.

உலகில் தோற்றம் பெற்ற முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்களைப் படைத்த அல்லாஹ் அவர்களுக்கு முதலில் வழங்கிய அருட்கொடை அறிவாகும் என்பதை அல்-குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. "மேலும் ஆதமுக்கு அவன் (பொருட்களின்) பெயர்கள் அனைத்தையும் கற்றுக் கொடுத்தான். "," மேலும் நாம் மலக்குகளிடம் ஆதமுக்கு நீங்கள் ஸுஜுது செய்யுங்கள் எனக் கூறிய போது இப்லீஸைத் தவிர அவர்கள் அனைவரும் ஸுஜுது செய்தார்கள். ஆதம் (அலை) அவர்கள் மலக்குகளை விட அறிவில் உயர்ந்தவராக விளங்கினார்கள்.

இவை அனைத்துக்கும் மேலாக முதன் முறையாக இறங்கிய அல்-குர்ஆன் வசனங்களே அறிவைப் பற்றியும், அறிவின் அடிப்படை அம்சமாகத் திகழும் எழுத்து, வாசிப்பு, எழுதுகருவி பற்றியும் பேசுவதைப் பார்க்கலாம். "(நபியே) படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். நீர் ஓதும். உமது இறைவன் மாபெரும் கொடையாளி. அவன்தான் எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான். (96 : 5)" "நூன்" எழுது கோலின் மீதும் அதனைக் கொண்டு அவர்கள் எழுதுபவை மீதும் சத்தியமாக. (68 : 1)".

இவ்வாறாக அறிவின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் பற்றி அல்-குர்ஆனில் பல இடங்களில் காணப்படுகின்றன. இதனால்தான் "மனிதனே நீ கற்பவனாய் இரு அல்லது கற்றுக் கொடுப்பவனாய் இரு அல்லது கற்பவனுக்கு உதவுபவனாக இரு. நான்காம் நபராய் இருந்து விடாதே" என உலக முடிவு வரைக்கும் நிலைத்து நிற்கும் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. எனவேதான் எங்கு அறிவு குறைந்து ஆக்கிரமும் அறியாமை எனும் இருள் சூழ்ந்து கொள்கின்றதோ அது உலக முடிவிற்கான அடையாளமாக அடைந்துவிடுகின்றது.

இதனை "அறிவு உயர்த்தப்படுவதும் அறியாமை நிலை பெறுவதும், யுகமுடிவின் அடையாளங்களில் ஒன்றாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி) இதிலிருந்து உலக முடிவு அறிவிலேயே தங்கியுள்ளது என்று இப்பொன்மொழி மிகவும் தெளிவாகக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வின் அனைத்து செயற்பாடுகளையும் வணக்கமாகக் கருதும் இஸ்லாம், இவ்வனைத்து செயற்பாடுகளுக்கும் ஆணிவேராக அமைவது அறிவு என்றே வலியுறுத்துகின்றது. இதுபற்றி நாயகம் (ஸல்) அவர்களது பொன்மொழியும் முக்கியத்துவம் பெறுகின்றது. "ஒருவர் அறிவைத் தேடி ஒரு பாதையில் சென்றால் அல்லாஹ் அதனைக் கொண்டு அவருக்கு சுவனம் செல்லும் ஒரு பாதையை இலகுபடுத்திக் கொடுக்கின்றான். (முஸ்லிம்)". கடமையான பர்ளுகளை அடுத்து புண்ணியமான அறிவைத்தேடுவதைவிடச் சிறந்ததோர் அமல் இல்லை. தொழுகையைப் போன்று அறிவைப் பெறுவதும் அவசியம்.

(இமாம் அஷ்ஷாபின்).

இஸ்லாம் எவ்வாறு கல்விக்கு சிறப்பையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கின்தோ அதே போன்று கல்வியை கற்பிக்கின்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளையும் கூறுகின்றது. அன்பு காட்டல், தவறு செய்தவனுக்கு அனுதாபம் காட்டல், திறமைகளை பாராட்டுதல், படிமுறை அமைப்பைப் பேணல், தனிநபர் வித்தியாசங்களைக் கவனத்திற் கொள்ளல், நடு நிலைமையைக் கைக் கொள்ளல், நடைமுறைச் சம்பவங்களை போதனைக்கும் பயன்படுத்தல் போன்ற பலதரப்பட்ட போதனைகளை முன்வைக்கின்றது.

எந்த ஒரு மார்க்கமும், மதமும் கொடுக்காத முக்கியத்துவத்தை இஸ்லாம் கல்விக்குக் கொடுப்பதை நாம் அவதானிக்க முடியும். எனவே நாம் அனைவரும் கல்வியையும் அதைத் தொடர்ந்து வருகின்ற அனைத்து செயற்பாடுகளையும் வணக்கமாகக் கருதி இவ்வுலகில் அல்லாஹ்வின் அன்பைப் பெற்று மறுமையில் சுவனத்தை அடைந்து கொள்வதற்கு மாபெரும் புகழுக்குரியவனான அல்லாஹ் அருள் புரிவானாக.



**ஒரு நல்ல ஆசிரியரானவன் தன் மாணாக்கரின் இயற்கையான திறமைகளைக் கண்டுபிடித்து, ஊக்குவித்து அவற்றுக்கு ஒரு வடிகால் அமைத்து வெளிக்கொனர வைப்பான். உண்மையான தலைவனானவன் தன் அடியார்களின் திறமைகளை இரட்டிப்பாக்குவான்.**

A good teacher discovers the natural gift of his pupils and liberates them by stimulating influnce of the inspiration that he can impart. The true leader makes his followers twice the men they were before.

*-Stepben Neill.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றாடல் சார் செயற்பாடுகளும் மாணவர்களும்

எம். வை. ஹபீபா,
(ஆசிரியை).

மனிதன் மீதும் மனித சமுதாயத்தின் மீதும் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்திய செலுத்துகின்ற பௌதீக, சமூக, உயிரியல் தொகுதிகள் தொடர்பாகவும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழ வேண்டிய கற்றல் செயலொழுங்கு தொடர்பாகவும் வழிப்படுத்துகிற ஒரு கூறுதான் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகும்.

மனிதன் பிறந்தது தொடக்கம் இயற்கையாகவே தனது சுற்றுப்புறத்தின் பால் ஆர்வங்கொண்டு படிப்படியாக அச்சுற்றாடலுடன் வெற்றிகரமாக இடைத்தாக்கம் புரிவதற்கு அவசியமான தேர்ச்சிகளை அடைய முயற்சிக்கின்றான். இச்செயன்முறையின் போது தனது புலனுறுப்புக்களைப் பயன்படுத்தி அறிவுசார் திறன்களை வெளிப்படுத்தி விருத்தி செய்து கொள்கின்றான். அவற்றின் மூலமே தனது சொற்களஞ்சியத்தையும், தொடர்பாடல் திறனையும் விருத்தி செய்து கொள்கின்றான்.

எந்தவோர் உயிரியில் கூட தான் வாழும் சுற்றாடல் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல், சேகரித்தல், மீள வெளிப்படுத்தல் என்பன நிகழக்கூடிய ஒன்றாகும். இதுவே பிள்ளையின் வாழ்க்கைச் செயன்முறையிலும் நிகழும் ஓர் அங்கமாகக் காணப்படுகின்றது. ஆரம்பகாலங்களைப் போலன்று தற்போதைய கலைத்திட்டத்தின் படி சுற்றாடல் சார் செயற்பாடுகள் ஆனது சகல (கணித, சமய, மொழி, ஆக்க, அழகிய, உடற்கல்வி, விஞ்ஞான) தேர்ச்சிகளையும் அடைவதற்கான சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளது.

அதனடிப்படையில் முதன்மை நிலையை எடுத்து நோக்குவோமானால் 16 கருப்பொருள்களை மையமாகக் கொண்டு சுற்றாடல் சார் செயற்பாடுகள் எனும் பாடத்தின் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் வாய்மொழி, ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிகளையும் செயற்பாடுகளினூடாக வெளிக்கொண்டு வரமுடியும். எனவே சுற்றாடல் சார் செயற்பாடுகள் எனும் பாடமானது பிள்ளைகளுக்கு தத்தமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள உதவும் ஒரு முழுமையான நிறைவான பாடமாகப் பயன்படுகிறது. இதன் மூலமே பிள்ளைகளின் ஆற்றல்கள் வெளிப்படுத்தப்படுவதனால் அவர்களின் திறமைகள் வெளியாகும்.

இப்பாடத்திட்டத்திலுள்ள 16 கருப்பொருள்களை ஆசிரியர்கள் நடைமுறைப்படுத்துவதில் சிரமம் என்று கூற முடியாது. ஏனெனில் இது நெகிழ் தன்மையுள்ள பாடமாகும். அதாவது மாணவர்களின் சுற்று சூழலிற்கு / சூழல் வளங்களுக்கு ஏற்ப இப்பாடச் செயற்பாடுகளை ஆசிரியர்களாகிய எம்மால் மாற்றியமைத்துக் கொள்ள முடியும். இதற்கான சுதந்திரத்தை அரசாங்கம் எமக்கு அளித்துள்ளது. இப்பாடத்திற்காக அமைக்கப்பட்ட தேர்ச்சிகள் எப்பொருத்தமான செயற்பாடுகளினூடாகவும் மாணவர்கள் அடையப் பெறுதல் வேண்டும் என்பதுதான் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் பொதுவாக இப்பாடத்தை விரும்பும் ஒரு பாடமாக மாற்றியமைப்பது ஆசிரியர்களின் கைகளில்தான் உள்ளது. சாதாரணமாகவே மாணவர்கள் எப்போதும் தனது சூழலில் நடைபெறுபவை பற்றி நன்கு அவதானித்திருப்பார்கள். அவ்வவதானத்துடனேயே பாடசாலையிலும் இச்சுற்றாடல் சார் செயற்பாடுகள் எனும் பாடத்திலுள்ள தேர்ச்சிகளை நிறைவேற்றுவது மிகவும் சுலபமாகும்.

தனது அழகு, சுத்தம், தனது சுற்றுப் புறச் சூழலின் அழகு, மற்றும் தனது எதிர்கால வாழ்க்கையில் சூழலுடன் தாக்கம் புரிந்து அதனை வெற்றி கொண்டு வாழ்வதற்கான தெளிவான விளக்கத்தையும் இப்பாடம் தெளிவுபடுத்துகின்றது. இப்பாடமானது கற்பித்தலை விட கற்றலுக்கே முதலிடம் வழங்குகின்ற ஒரு கற்றல் - கற்பித்தல் செயற்முறையென்பதால் இதில் மிகவும் சுவாரஷ்யமாக மாணவர்களை தனித்தனியாகவும் குழுக்களாகவும் செயற்பாடுகளில் ஈடுபட வைக்க முடியும். ஆனாலும் இதற்கான ஆயத்தங்கள் ஆசிரியர்களால் முன்கூட்டியே செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களிடத்தே கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது முறைசார் மதிப்பீட்டு முறைகளுக்கு அப்பாற்பட்ட முறைகளையே கையாள வேண்டி ஏற்படும். மேலும் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகள், பழக்கங்கள் ஆகியவற்றோடு சமூகத் திறன்களையும் விஷேடமாக கவனத்திற் கொள்ள வேண்டும்.

மாணவர்களின் சகல வேலைகளையும், முயற்சிகளையும் மதித்து பாராட்டும் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் தத்தமது ஆற்றல்களையும் திறமைகளையும் மென்மேலும் வெளிப்படுத்துவதில் ஆர்வங்கொள்வார்கள். சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாடத்திலுள்ள கருப்பொருள்கள் ஒவ்வொன்றையும் அவ்வக் காலநிலை சந்தர்ப்ப சூழ் நிலைகளுக்கு ஏற்ப, கற்றலுக்கு உட்படுத்துவதால், அவை அனுபவத்துடன் கூடிய அறிவாக மாறி மாணவர்களின் மனநிலையிலும், வாழ்க்கை நடைமுறையிலும் விரைவாக தாக்கம் செலுத்தக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.

முதன்மை நிலை 1 இலும் கூட மாணவர்கள் தமது கற்றலை இப்பாட ரீதியாக கடினமாகவன்று மிகவும் விருப்புடன் ஒவ்வொருவரும் தத்தமது அனுபவங்களைக் கூற முன்வருவதையும் அவதானிக்க முடியும். எனவே ஆரம்பக் கல்விப் பருவ மாணவர்களிடமிருந்தே இப்பாட ரீதியாக பல அனுபவங்களையும் ஆக்கபூர்வமான எண்ணங்களையும், செயற்பாடுகளையும் உருவாக்க வேண்டும். அவ்வாறே இப்பாடத்திற்கான முழுத்தேர்ச்சிகளையும் பூரணமாகப் பெற்ற மாணவச் சமுதாயத்தினரால்தான் சிறந்த சூழலுக்குப் பொருத்தமாக இடைத்தாக்கம் புரியக் கூடிய எதிர்கால சந்ததிகளை உருவாக்க முடியும்.

எனவே மாணவர்களாகிய இவர்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தமது எதிர்கால சந்ததிகளுக்கும் சிறந்த ஆரோக்கியமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க அடித்தளமாக அமைவது இச்சுற்றாடல் சார் செயற்பாடுகள் எனும் பாடம் ஆகும் என்பது வெள்ளிடைமலை என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநிம்மதிக்கு சிறந்த மருந்து.

அன்புச் சகோதரனே, சகோதரியே! ஒவ்வொரு நாள் காலை வேளையிலும் உனது உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்திக் கொள். அப்போதுதான் அன்றைய நாள் முழுவதும் உனது உள்ளம் பரிசுத்தமானதாக இருக்கும். ஆரம்பத்திலேயே உனது உள்ளம் அவசியமற்ற சிந்தனைகளையும், பிரச்சினைகளையும் கிரகித்துக் கொள்ள இடம்கொடுத்தால் அன்றைய நாள் முழுவதும் உனது உள்ளம் அவசியமற்ற விஷயங்களையே கிரகித்துக் கொள்ளும்.

ஆகவே, அந்நேரத்தில் உனது உள்ளம் பயனுள்ள சிறந்த விஷயங்களை கிரகித்துக் கொள்வதற்கு நீ உதவி செய்து கொள் . இதற்கு சிறந்த வழியும் சிறந்த சாதமுமாகிறது. இறைவனின் பேச்சாகும். 'கலாமுல்லாஹ்' எனப்போற்றிப் புகழப்படும் அல்லாஹ்வின் கலாமாகிய அல்-குர்ஆனை ஓதி உள்ளத்தில் கிரகித்துக் கொள்வதனால் உள்ளம் பரிசுத்தமாவதோடு வேறு அநேக நன்மைகளும் கிடைக்கின்றன.

அல்-குர்ஆனிலிருந்து ஓர் அட்சரத்தை, அதாவது ஓர் எழுத்தை ஓதுவதாலும் பத்து நன்மைகள் கிடைக்கின்றன. ஓர் எழுத்து எனக் கூறும் போது 'அலிப் லாம் மீம்' என்பது மூன்று எழுத்துக்களாகக் கணிக்கப்பட்டு முப்பது நன்மைகள் அளிக்கப்படுகிறது. மேலும் அல்-குர்ஆனை அதிகமாக ஓதுவதால் உள்ளம் பரிசுத்தமடைகிறது. இவை குர்ஆனை ஓதுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளிற் சிலவாகும். இவை தவிர இன்னும் அனேகப் பயன்கள் கிடைக்கப் பெறலாம் என்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மணிமொழிகளிலிருந்து அறிய முடிகிறது.

ஒரு மனிதனுக்கு பணம், பொருள் எவ்வளவுதான் இருந்தாலும் மன நிம்மதி மட்டும் இல்லையெனில் அம்மனிதனால் வாழ முடியாது. ஒவ்வொரு மனிதனும் உழைப்பதும், உத்தியோகம் பார்ப்பதும் மனநிம்மதியாய் வாழ வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே மனநிம்மதிக்கு பணம், பொருள் தேடுவதற்குப் பதிலாக வேறு வழியிருந்தால் அதைத்தானே முதலில் தேடிக்கொள்ள வேண்டும்? அதுவும் பொழுது புலர்ந்து ஒவ்வொரு காலை வேளையிலும், தேடிக் கிடைக்காத மன நிம்மதியான மாத்திரை கிடைக்கிறதென்றால் யார்தான் அதை வெறுத்து ஒதுக்குவார்கள்!

அல்-குர்ஆனை அதிகமாக ஓதுவதன் மூலம் மனநிம்மதியும், மனநிறைவும் கிடைக்கின்றதென கூறினால் இது தவிர வேறு என்னதான் உனக்குத் தேவை? இதற்காகத்தானே நீ பணமும் பொருளும் தேடிக் கொண்டிருக்கிறாய்? நபிகள் நாயம் (ஸல்) அவர்களின் போதனையை ஏற்று அதிகாலையிலே அல்லாஹ்வின் கலாமாகிய அல்-குர்ஆனை ஓதி மனநிம்மதியும், மனநிறைவும் பெற்றுக் கொள்.

அதன் பின் உன் தொழிலுக்குச் செல். அப்போது உள்ளம் பரிசுத்தம் அடைவதன் காரணமாக பரிசுத்தமான உன் தொழில் மாசுபடியாமல் உன்னால் கருமமாற்ற முடியும். முன்னோர்கள் மனநிம்மதி, மனநிறைவின் மூலமாக தம் வாழ்க்கையின் இலட்சியங்களை இடையூறின்றி நிறை வேற்றியுள்ளார்கள். இவ்வழி முறையை நாமும் கடைப்பிடிப்பதனால் ஈருலகிலும் எமக்கு வெற்றி நிச்சயம் என்பதில் சந்தேகமே இல்லை.

நன்றியுடன்

**அப்துல் ஜப்பார் பாத்திமா சுமையா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதற்பெண்மணிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| எலிசபெத் பிளேக் வெல் | - | மருத்துவர் | - | அமெரிக்கா |
| ஹூலி ஹொப்ஸ் | - | பல்வைத்தியர் | - | அமெரிக்கா |
| அரபெல்லர் டென்ஸ்பீல்ட் | - | வழக்கறிஞர் | - | அமெரிக்கா |
| எஸ்தர் மோரிஸ் | - | நீதிபதி | - | அமெரிக்கா |
| அமலி எலிஸி | - | விமானி | - | பிரான்ஸ் |
| சிறீமாவோ பண்டாரநாயக்க | - | பிரதமர் | - | இலங்கை |
| வலன்டினா டொஸ்கோவா | - | விண்வெளியாளர் | - | ரஷ்யா |
| மரியே ஸ்டலோ லரோன் | - | ஜனாதிபதி | - | அர்ஜன்டீனா |
| அன்டோ வின்டர் | - | புகையிரத ஓட்டுனர் | - | இங்கிலாந்து |

**ஐ. அகீலா பானு**
*தரம்* - **7B**

# விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்.

| | | |
|---|---|---|
| டைனமோ | - | மைக்கல்பரடே |
| மைக்கிரஸ்கோப் | - | ஜே.ஜோன்சன் |
| கல்குலேட்டர் | - | பாஸ்கல் |
| பலூன் | - | மாரன்ட் கோல்பியர் சகோ. |
| வெப்பமாணி | - | கலிலியோ |
| சைக்கிள் | - | கே.மாக்மிலன் |
| கம்யூட்டர் | - | எம்.டுரிங் |
| பீரங்கி | - | சானர்னெஸ்ட்கவிங்கி |
| ரொக்கெட் | - | கோதர்ட் |
| ஆகாய விமானம் | - | வில்பர் ரைட், ஓவில் ரைட் |
| மின் விளக்கு | - | தோமஸ் அல்வா எடிசன். |
| வானொலிப் பெட்டி | - | மார்க்கோனி |
| சைக்கிள் டயர் | - | ஜே.பி.டன்லப் |
| குளிர்சாதனப் பெட்டி | - | ஜேம்ஸ் ஹரிசன்ஸ் |
| மின்சார பட்டரி | - | வோல்டா |
| மூக்குக் கண்ணாடி | - | பெஞ்சமின் பிராங்லின் |
| தீப்பெட்டி | - | லன்ஸ்டாம் |
| தையல் இயந்திரம் | - | பாத்லேமி திம்மோனியர் |



**எம்.ரி. பஸ்மினா**
(தரம் - **4A**)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்புத் திறனை மேம்படுத்தல்

திருமதி.எஸ்.யு.எம்.சுல்பிகார் (ஆசிரியை).

**வீ**ட்டுச் சூழலில் இருந்து தரம் 1 க்காக பாடசாலைக்கு வரும் மாணவர்கள் தாயின் அரவணைப்பிலிருந்தும், வீட்டுச் சூழலலிருந்தும் பிரிந்து பாடசாலைச் சூழலுக்கு தன்னை உட்படுத்த வேண்டிய சவாலை எதிர்கொள்கின்றனர். இச்சவாலை மாணவர்கள் சமாளித்துக் கொள்வதற்கு ஆசிரியர்கள் பெரும் தியாகத்தைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதற்காக தாயின் அன்பு போன்றும், தனது வீட்டுச் சூழல் போன்றும் பாடசாலையை ஆக்கிக் கொள்வது ஆசிரியரின் கடமையாகும்.

வாசிப்பு என்பது

* கேட்டல்.
* பேசுதல்.
* வாசித்தல்.

ஆகிய 3 படித்தரங்களினூடாக வாசிப்பு நடைபெறுகின்றது. ஆசிரியரானவர் மாணவர்களின் தனிஆள் வேறுபாட்டிற்கினங்க மாணவர்களின் காதுகளில் சொல்லுகின்ற விடயங்களாக அமைதல் அவசியம். அப்போதுதான் அங்கு ஆசிரியருக்கும் + மாணவருக்கும் இடையில் கேட்டல் நடைபெறுகின்றது. எந்தவொரு மாணவர் கேட்பானோ அவன் பேசுவான்.

இதே போன்று கவர்ச்சிகரமான படங்களைக் காட்சிப்படுத்துவதன் மூலமும் அதாவது - கண், - மரம்,  - குடை போன்ற படங்களையும் இதே போன்று வேறு படங்களையும், காட்சிப்படுத்துவதன் மூலமும் இவற்றின் பெயரைக் கூறுவதால் வாசிக்கும் திறனை மேம்படுத்தலாம். இதே போன்று படம்பார்த்து கதைகூறுதல் போன்ற படங்களைக் காட்டுவதன் மூலம் அப்படத்தில் காட்டப்படும் செயற்பாடுகளை படத்தைப் பார்த்தவுடனே உற்சாகத்துடன் எல்லோரும் எழும்பி நின்று கூறுவதற்கு எத்தனிப்பார்கள். இவ்வாறு கூறுவதால் மாணவர்களுக்கு சொற்களஞ்சிய விருத்தி ஏற்படுகிறது.

இதன் பிறகு உயிர் எழுத்தை அறிமுகம் செய்தல்.

| | | |
|---|---|---|
| அ - அம்மா | ஊ - ஊசி | ஓ - ஓலை |
| ஆ - ஆடு | எ - எலி | ஔ - ஔவை |
| இ - இலை | ஏ - ஏணி | |
| ஈ - ஈட்டி | ஐ - ஐந்து | |
| உ - உரல் | ஒ - ஒன்று | |

போன்ற அ - ஔ வரையுள்ள எழுத்துக்களின் வடிவம் அவற்றின் படத்துடன் பெயரையும், அவற்றின் உச்சரிப்பையும் வாசித்துக் காட்டுவதன் மூலம் வாசிப்பில் மாணவர்களை ஈடுபடுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக மெய்யெழுத்துக்களை அறிமுகம் செய்தல். குத்துள்ள எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் என்று அறிமுகப்படுத்தல்.

| | | |
|---|---|---|
| க் - மக்கு | த் - கத்தி | ந் - பந்து |
| ச் - மச்சி | ட் - கட்டு | ள் - வள்ளி |
| ம் - அம்மி | ப் - கப்பி | ழ் - வாழ்வு |
| ண் - அண்ணி | ல் - கல்லு | ஞ் - கஞ்சி |

போன்ற எழுத்துக்களின் வடிவத்தை அறிமுகம் செய்து அவற்றின் உச்சரிப்பையும், எழுத்தொலியையும் வாசித்துக் காட்டி வழிப்படுத்தல்.

அடுத்ததாக உயிர் மெய் எழுத்துக்களை அறிமுகம் செய்தல். வேறிசையில்

| | | |
|---|---|---|
| க - (க் + அ) | கு - (க் + உ) | கை - (க் + ஐ) |
| கா - (க் + ஆ) | கூ - (க் + ஊ) | கொ - (க் + ஒ) |
| கி - (க் + கி) | கெ - (க் + எ) | கோ - (க் + ஓ) |
| கீ - (க் + ஈ) | கே - (க் + ஏ) | கௌ - (க் + ஔ) |

போன்ற உயிர் மெய்யெழுத்துக்கள் உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்து வரும் என்பதையும் உணர்த்தி உயிர் மெய்யெழுத்துக்களின் சொற்களை அறிமுகம் செய்தல்.

| | | |
|---|---|---|
| க - கல் | கி - கிளி | கு - குதிரை |
| கா - காடு | கீ - கீரை | கூ - கூடு |

இப்படியான சொற்களின் கருத்துக்களையும், உச்சரிப்பையும் விரிவாக உணர்த்துவதால் வாசிப்பை மேம்படுத்தலாம். இதே போன்று "ச, ப, ம, ல, வ, ண, ல, ள, ழ, ன, ந, ஞ" போன்ற எழுத்துக்களின் உயிர் மெய்யெழுத்து வரும் விதத்தையும் அவற்றில் உருவாகும் சொற்களையும், சொற்களின் பொருளடக்கத்தையும், எழுத்தொலியையும் உணரவைத்தல்.

எழுத்துக்களை குழப்பிக்கொடுத்து அவற்றை சீராக எழுதுவதன் மூலம் அவற்றை வாசித்து கிரகிப்பதன் மூலம் சொற்களை இனங்கானுவார்.

| | |
|---|---|
| ட், ப, ட, ம் | - பட்டம் |
| கா, ம், க | - காகம் |
| ணி, ஆ | - ஆணி |

இடைவெளிகளை நிரப்புவதன் மூலமும் சொற்களை வாசிக்கவும் சொற்களின் கருத்தையும், எழுத்தொலியையும் உணர்த்தி வாசிக்க வழிப்படுத்தல்.

கா......



அ.......பம்



புத்....... கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறில், நெடில் சொற்களை அறிமுகம் செய்தல்.

அடி - ஆடி

மடு - மாடு

கல் - கால்

படங்களை சொற்களுடனும், சொற்களை படங்களுடன் தொடுப்பதன் மூலம் வாசித்து தொடுக்கும் திறனை ஏற்படுத்துதல்.



பந்து ஈட்டி

மரம் சூரியன்

கதிரை சேவல்



படங்களைக் கொடுத்து அப்படத்தின் பெயரை எழுதுவதன் மூலம் சொற்களஞ்சிய விருத்தியையும் வாசிப்பின் திறனையும் வெளிப்படுத்துவார்.

 ________  ________

 ________  ________

எழுத்துக்கள், சொற்கள் என்பவற்றை உறுப்பமைய எழுதக் கொடுப்பதன் மூலமும் வாசிப்பில் ஈடுபடுத்த முடியும்.

அ ஆ இ ஈ

பந்து பாவை

போன்ற எழுத்துக்களை மாணவர்கள் உச்சரித்து எழுதும் போது அவை நாளடைவில் வாசிக்கும் திறனை ஏற்படுத்தும்.

சொல்வதெழுதுதலை அறிமுகப்படுத்தல். ஆசிரியர் சொல்வதை மாணவர் கிரகித்து எழுதுவதால் எழுத்தை உச்சரித்து எழுதுவதால் வாசிப்பில் ஈடுபடுத்த முடியும்.

ஈரெழுத்து, மூவெழுத்து என்ற சொல்லின் அடிப்படையில் அச்சொற்களை அறிமுகம் செய்தல். அதாவது

ப, க, ம, ந, இ → டி

படி

கடி

மடி

நடி

இடி

இவையாவும் ஈரெழுத்துக்கள் என்றும் இவற்றின் எழுத்தொலியையும் உணர்த்துதல்.

பா → க்கு → பாக்கு

பா → ம்பு → பாம்பு

பா → ட்டி → பாட்டி

பா → ரம் → பாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையாவும் மூன்றெழுத்துக்கள் என்றும் இவற்றின் கருத்துக்களையும், எழுத்தொலிகளையும் அறிவிப்பால்தான் வாசிப்பில் ஈடுபடுத்தலாம். காட்சிப் படங்களை காட்டுவதன் மூலமும் அவற்றின் சொற்களைக் கூறவைத்து அவற்றை கரும்பலகையில் எழுதி ஈரெழுத்து, மூவெழுத்து எது? என்ற வினாவைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

அடுத்ததாக சொற்களை அறிமுகம் செய்தல் ஈரெழுத்து மூவெழுத்துச் சொற்களை அறிமுகம் செய்தல்.

| | |
|---|---|
| ஆடு | அம்மா |
| பாடு | அப்பா |
| வீடு | அக்கா |

ஒரு சொல்லுக்கும் இன்னொரு சொல்லுக்கும் உள்ள இடைவெளியை உணரவைத்து இரு சொற்களை இனங்காண வழிப்படுத்தல். இச்சொற்களின் எழுத்தொலியையும், கருத்தையும் புலப்படுத்துவதால் வாசிப்பில் ஈடுபாடு காட்ட முடியும்.

மழை பெய்தது
காகம் பறந்தது
சேவல் கூவியது

என்ற சொற்களை அறிமுகம் செய்தல். இதன் பின் வாக்கியங்களை அறிமுகம் செய்தல். அதாவது இரண்டு, மூன்று சொற்கள் கொண்டவைகளை வைத்து வாக்கியங்களை அறிமுகம் செய்து அவற்றை உச்சரித்து வாசிக்க வழிப்படுத்தல்.

பூ மாலை கட்டுவோம்
மழை பெய்தது
காலையில் முகம் கழுவு

இவை போன்று வேறு வாக்கியங்களைக் கொடுத்து வாசிக்க வழி செய்தல்

இதன் பிறகு இலகுவான சிறு பந்தியைக் கொடுத்து பந்தியை அறிமுகம் செய்து அவற்றை வாசிக்க வைத்து அதன் பொருளை உணர்ந்து அவற்றை கிரகித்து ஆசிரியரால் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகூற வழிப்படுத்துதல்.
"சாந்தியும் எனது அண்ணாவும் பாலாவும் விளையாடிக் கொண்டிருக்கும் வேளையில் சாந்தி விழுந்து விட்டாள்".

01. சாந்தியுடன் விளையாடியவர் யார்?
02. சாந்தியின் அண்ணனின் பெயர் என்ன?

இவ்வாறு அ - ஔ வரையுள்ள எழுத்துக்களையும்

| | |
|---|---|
| க் - கௌ | ப் - பௌ |
| ங் - ஙௌ | ம் - மௌ |
| ச் - சௌ | ய் - யௌ |
| ஞ் - ஞௌ | ர் - ரௌ |
| ட் - டௌ | ல் - லௌ |
| ண் - ணௌ | ழ் - ழௌ |
| த் - தௌ | வ - வௌ |
| ந் - நௌ | ன் - னௌ |

போன்ற அரிச்சுவட்டின் ஒழுங்கான முறையில் மாணவர்கள் எழுத்தையும், உச்சரிப்பையும் வாசிக்கப்பழகினால் சிறந்த வாசிப்பை பெற முடியும் என்பதில் ஐயம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செந்நெல் சாஹிறாக் கல்லூரியில் சாரணியம்

ஜனாப். வை.பி.முஹமட் இஸ்மாயில்
(சாரணிய ஆசிரியர்)

Join Scouting for better Understanding.
நல்ல புரிந்துணர்வுக்கு சாரணியத்தில் சேர்ந்துகொள்.

"என்னால் கூடுமான வரை எனது சமயத்திற்கும், எனது தேசத்திற்கும் என் கடமைகளைச் செய்வேன் என்றும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி செய்வேன் என்றும் எனது கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கிறேன்" என்ற சத்தியப் பிரமாணத்துடன் ஆரம்பித்து சாரணியத்தில் இணைந்து கொள்ளும் சாரணியன் தனக்கும், பிறருக்கும், தாய் நாட்டுக்கும் தலை சிறந்து விளங்குகின்றான்.

பாடசாலைக் கல்வியுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான சாரணியத்துறையானது மாணவருக்கு பல்வேறு மனவெழுச்சிகளைப் பயிற்றுவிக்கின்றது. உண்மை பேசுதல், விட்டுக்கொடுத்தல், தன்னைப்போல பிறரை மதித்தல், பொறுமை, தனிமையில் இருத்தல், திறன்களை வளர்த்தல், சிரமதானம், மரம் நடுதல், மதவழிபாடு, பிறருக்கு உதவுதல், சமூகப் பணிகள் செய்தல் போன்ற இன்னோரன்ன பண்புகளை போதித்து நன்மை பகிக்கின்ற சாரணியம் சிறுவர்களை நல்ல பண்புள்ளவர்களாக நாட்டுக்கு உதவக்கூடிய சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதில் சாரணியம் பெரிதும் பங்கு வகிக்கின்றது.

சாரணியத்தின் ஸ்தாபகர் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி இலண்டனில் பிறந்த பேடன் பவல் என்பவர் (Lord Baden Powell) ஆவார். இளம் வயதிலே பாடவிதான செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு கொண்ட இவர் கல்வியைத் தொடர்ந்து இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். இராணுவத்தில் பெற்ற அனுபவம் சாரணியத் தோற்றத்திற்கு பெரிதும் உதவியது. 1907 இல் பிரவுன்சித் தீவின் முதலாவது சாரணியப் பாசறையை நடத்தி வெற்றி கண்டார். சாரணியம் அன்றே உதயமாகியது. அன்று முதல் உலகம் முழுவதும் பரவ தீவிரமாக செயற்பட்டார். 1941 இல் மண்ணறை அடைந்தார். மரணிக்கும் போது நல்ல மனித நேயமுடையவர்களாக பிறருக்கு உதவுவோராக, நாட்டுப்பற்றுடையோராக திகழ்ந்து சென்றார்.

அன்று உதயமான சாரணியம் உலகளாவிய ரீதியில் பரந்து செந்நெல் சாஹிறா கல்லூரியிலும் மிளிர்ந்தது. 1991.06.26 ஆம் திகதி சாரணிய இயக்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. கல்லூரியின் சாரணிய அங்குரார்ப்பண வைபவத்திலே தலைவராக அதிபர், பி.பி.கிதிர் முகம்மட் அவர்களும் பிரதம அதிதியாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.அலியார் அவர்களும் அதிதிகளாக கல்வி அதிகாரி எஸ்.எல்.ஆதம்பாவா, சாரண உதவி மாவட்ட ஆணையாளர் (பயிற்சி) எம்.ஐ.எம்.முஸ்தபா, சம்மாந்துறை சாரணர் குழுக்களின் தலைவர் ஐ.ஏ.றகுல் ஆகியோரும் சாரணியப் பொறுப்பாசிரியர் கே.எம்.முகம்மட் றியால் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991 முதல் உதயமான சாரணியத்தில் இணைந்து கொண்ட எமது கல்லூரி மாணவர்கள் வெளிப்பாடசாலைகளிலும், எமது கல்லூரியிலும் இடம்பெற்ற மாவட்ட சாரணர் ஒன்று கூடல், ஒரு நாள் பயிற்சிப்பாசறை, மூன்று நாள் பயிற்சி பாசறை, திரிசாரணர் பாசறை, குருளைச் சாரணர் ஒன்று கூடல் போன்ற நிகழ்வுகளில் கலந்து சாரணர் பயிற்சிகளைப் பெற்றனர்.

கல்வி அபிவிருத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டிலே சாரணியம் எமது கல்லூரியின் மிகவும் சிறப்பாக ஆரம்பித்தது. ஆண்டின் ஆரம்பத்திலே சாரணியப் பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்ட நான் நாற்பது சாரணர்களைத் தோற்றுவித்தேன். இந்த சாரணர்கள் மிகவும் சுறுசுறுப்பான ஆக்கபூர்வமானவர்களாக திகழ்ந்தார்கள். சாரணர் வைக்குறுதிக்கமைந்த எமது சாரணர்கள் சாரணியப் பண்புகளுக்கேற்ப செயற்படுகின்றனர். பொதுவாக சிறந்த சாரணராக செயற்படும் இவர்களே பாடசாலை வாழ்க்கையை விட்டுப்பிரிந்தாலும் சாரணராகவே வாழ்வார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

சாரணிய ஸ்தாபகர் பேடன் பவல் பிறந்த தினமான பெப்ரவரி 22 ஆம் திகதியான இத்தினத்தை வருடாந்தம் பேடன் பவல் தினமாக (B.P.Day) சர்வதேச ரீதியாக உலகிலுள்ள கோடிக்கணக்கான சாரணர்கள் மிகச் சிறப்பாக கொண்டாடுகின்றனர். இவ்வருடம் இத்தினத்தை சிறப்பிக்குமுகமாக எமது சாரணர்களை, கல்முனைச் சாஹிறாக் கல்லூரியில் நிகழ்ந்த பேடன் பவல் தின நிகழ்விலே கலந்து கொள்ள அழைத்துச் சென்றேன்.

அக்கரைப்பற்று - கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த மூன்று நாள் சாரணர்ப் பயிற்சிப் பாசறை எமது கல்லூரியில் மார்ச் 09,10,11.2007 களில் நிகழ்ந்தது. இப்பயிற்சிப்பாசறைக்கு அதிபர் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்கள் தலைமை தாங்க நான் பொறுப்பாசிரியராகவும் இருந்தேன். இப்பாசறைக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அவரகள் அல்-ஹாஜ் எம்.ரி.ஏ.தௌபீக், பிரதேச சபை தவிசாளர் கௌரவ எம்.ஐ.எம்.மன்சூர் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், சிறப்பு அதிதிகளாக கல்விப் பணிப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். இப்பயிற்சிப் பாசறைக்கு கல்முனை கல்வி மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 500 சாரணியர்கள் இணைந்து செயற்பட்டார்கள்.

இக்கல்லூரியில் மிகவும் சிறப்பாக சிறந்து விளங்கும் சாரணிய சாரணர்கள் வாழ்நாள் தோறும் சாரணர்களாக வாழ்ந்து பிரதேசத்தில், நாட்டில், உலகில் சிறந்து பிரகாசிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் "சாரணர் ஜனாதிபதி விருது" பெற வேண்டுமென எமது சாரணரை இதன் மூலம்வாழ்த்துகின்றேன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீ இல்லாத நாட்கள்

எம்.ஏ.நூருல் இனாபா

நிமிடத்திற்கு நிமிடம் – உன்
சிரித்த முகம் காண ஏங்குவேன் – பின்
சிந்தனையில் நானே
செதுக்கியும் பார்ப்பேன்.

நித்தமும் – உன்நினைவால்
நிந்தியலைவேன் – பின் என்
நெஞ்சில் கலையா ஓவியமாய் – உனை
வரைந்தும் பார்ப்பேன்.

நமது இதயத்துடிப்புக்கள் பரிமாறிய
இன்பச் செய்திகள்
சுவாசக் காற்றைப் போல
முட்டி மோதும் கருத்துக்கள்
என்மேல்.

மிஞ்சிய அன்பினால் – நீ
கெஞ்சிக் கூறும் நல்லுரைகள்
இவற்றையெல்லாம்
என் அலைவரிசையில்
உன் குரலில்
இரகசியமாய் ஒலிக்கச் செய்வேன்.

என் கண்மணியே – உன்
"கனிர்" குரலில்
கத்தினாலும், கதைத்தாலும்
என்மேல் கடிந்து விழுந்தாலும்
அவையாவும் என் காதில
காவியமாய்க் கேட்பதை
வியந்து இரசிப்பேன்.

காரணமே இன்றி – உனை நான்
கவர்ந்து விட்ட பாக்கியத்தை –
என்
உள்ளம் உருகும் பொழுதுகளில்
உன் மடியில் விழும் போது
உணர்ந்து கொண்டதை
நுகர்ந்து கொள்வேன்.

என் மனதில்
அகண்ட வலைக்குள் – நீ
அகப்பட்ட நாளை
எண்ணிப் பார்ப்பேன்
எனக்குள் சிரிப்பேன்.

உண்மையாகச் சொன்னால்
உன்னோடு என் மனசை
போகச் சொல்லி விட்டு – ஒரு
போக்கிரியின் பொழுது போல
போகுமடி எந் நாட்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையைத் தாண்டி.......

| | | |
|---|---|---|
| **ஆபிரகாம் லிங்கன்** | : | இவர் ஓர் ஏழை விறகு வெட்டியின் மகன் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானார். |
| **ஹென்றி / போர்ட்** | : | உலகம் போற்றும் விஞ்ஞானியாக மாறிய இவர் ஒரு பண்ணைத் தொழிலாளியின் மகன் |
| **டாக்டர் சாமுவேல் ஜோன்சன்** | : | வறுமையில் வாழ்ந்த ஒரு புத்தக வியாபாரியின் மகன் உலகம் போற்றும் இலக்கிய மேதையாகவும், ஆங்கில அகராதியின் ஆசிரியருமாக ஆனவர். |
| **ஜோசப் ஸ்டாலின்** | : | சோவியத் நாட்டின் தலைவரான இவர் செருப்புத்தைக்கும் ஏழைத் தொழிலாளியின் மகன். |
| **தோமஸ் அல்வா எடிசன்** | : | வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த படகு செய்பவரின் மகன் விஞ்ஞானியா வளர்ந்து அளப்பெரிய சாதனைகளைப் புரிந்தவர். |
| **ஜோன்டி ரொக் / வெல்லர்** | : | சாதாரணக் குமாஸ்தாவின் மகனாகப் பிறந்து ஒரு மாபெரும் பொருளாதார சாம்ராஜ்யத்தையே உருவாக்கியவர். |
| **சர்ந்தார் வல்லபாய் படேல்** | : | ஏழை விவசாயியின் மகனாகப் பிறந்து வலிமை மிக்க மைய அமைச்சராக உயர்ந்து இரும்பு மனிதர் எனப் பெயர் பெற்றார். |
| **பாலகங்காதர திலகர்** | : | தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் மகனாகப் பிறந்தாலும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வழிகாட்டியாக ஆகி சமத்துவம் பெற்றவர். |
| **கரிபால்டி** | : | இத்தாலியில் ஒரு மீனவரின் மகனாகப் பிறந்து பெரும் புரட்சியை ஏற்படுத்தி அந்த நாட்டையே வழிநடத்தியவர். |
| **வில்லியம் சேஷக்ஸ்பியர்** | : | குதிரைலாய மேற்பார்வையாளரின் மகனாகப் பிறந்து அமர காவியங்களைப் படைத்த இங்கிலாந்தின் இணையற்ற நாடக ஆசிரியர். |
| **பெஞ்சமின் பிராங்ளின்** | : | உலகம் போற்றும் உன்னத விஞ்ஞானியாகமாறிய இவர் ஒரு மெழுகுவர்த்தி வியாபாரியின் மகன். |

இந்தப்பட்டியல் இன்னும் முடியவில்லை நாளை இப்பட்டியலில் நீங்களும் இடம்பெறலாம். இன்று செயல்படுங்கள். இன்று சேமியுங்கள். இன்று நல்லது செய்யுங்கள். நாளை நன்கு ஓய்வெடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்துப் பழமொழி. இவ்வாறு மிகவும் கஷ்டப்பட்டு உயர்ந்த மனிதர்களைப்பற்றி நெப்போலியன் ஹில் கூறுகையில் வெற்றி பெற்றுள்ள சாதனையாளர்கள் அனைவரும் இரண்டு விஷயங்களில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். ஒன்று தன்னம்பிக்கை இரண்டு நேர்மையான பாதை ஆகும்.

மேலும் அவர் கூறுகையில் உற்சாகத்துடன் எப்போதும் நம் கடமையைச் செய்ய வேண்டும் 58 சதவீதத்தினருக்கு அவர்கள் விரும்பாத வேலைகள் தான் கிடைத்துள்ளன. உற்சாகம் ஒன்றினால்தான் நான் தாங்கள் விரும்பாத தொழிலில் கூட சாதனை படைத்திருக்கிறார்கள். ஊக்கமான குணம்தான் மற்ற எல்லாக் குறைகளையும் விரட்டியடிக்கிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் வெற்றி பெறக்கூடிய மனிதர்களே.

தொகுத்தவர். ஜே. எப். மர்ழியா
(தரம் – 6A)

# துயர் களைவோம்.

துன்பச் சுமைகளை தோழில் சுமந்து
பூ மியில் கிடந்து
புழுவாய்த் துடிக்க – நாம்
புற்பூச்சிகளல்ல.

நேற்றையும் நாளையும்
கனவாய் நினைத்து
இன்றைக்கு மாத்திரம்
இனிமையைச் சேர்ப்போம்
நன்றை மட்டும் இன்றே செய்வோம்.

புயலுக்கு அஞ்சி
பூ வுக்குள் ஒழியாமல்
எதிர்த்து நின்று ஏனென்று கேட்டால்
எல்லாமே எம் முன்னே
நிராயுத பாணிகள் தான்.

கண்ணுக்கே தெரியாத
கறையான்களுக்கும்
உயிர் கொடுக்க இறைவன்
எம் உணர்வுகளுக்கும்
உயிர் தரும் வரை
வாழ்வினைப் பொறுமையால்
அலங்கரிப்போம்.

வெற்றி தோல்வியினை
விருப்போடு ஏற்று
அனுபவங்களை எல்லாம்
எம் அழகிய வாழ்வுக்கு
அடிக்கல்லாய் நாட்டுவோம்!

நிமிடத்தில் அழியும்
நிலையில்லா வாழ்வில்
இருப்பதைத் தொலைத்து
இன்பத்தைத் தேடாமல்
நம்பிக்கையோடு நன்மை கோர்த்து
நலமாய் வாழ நன்றாய் உழைப்போம்!

சகோதரியே!
தோள் கொடுப்போம்!
துயர் காப்போம்!
ஆழிக்கடல் போல் வாழ்வுதனை!
அழகாய் நீந்திக் கடப்போம்!

ஆக்கம் : ஏ.எல். இர்பான்
( உ/த – கலைப்பிரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ்வின் குரலும் அழியாத உடலும்

சுமார் 3250 ஆண்டுகளுக்கு முன் எகிப்து நாட்டில் பிர்அவ்ன் - (இரண்டாம் நம்ஈஸஸ்) என்னும் ஒரு கொடுங்கோலன் ஆட்சிபுரிந்து தன்னையே எல்லோரும் கடவுள் எனக்கருதி வணங்கிவர வேண்டும் என்பதாகப் பிரகடனம் செய்து வந்தான்.

அவனது ஆக்கிரமத்தை அழித்து அநியாயத்தை ஒழித்து நிலையான நியாய ஆட்சியை நிலைநாட்ட இறைவன் மூஸா (மோஸஸ்) என்ற ஒரு நபியை நியமித்து அந்த பிர் அவ்னுக்கும் அவனைச்சார்ந்த மக்களுக்கும் பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்தான்.

மூஸா நபி பிரச்சாரம் செய்து வந்தார். கடைசி நேரத்தில் பிர்அவ்னும் அவரது சீடர்களும் செங்கடலில் மூழ்கி மாளவேண்டியதாயிற்று. இது பற்றிய குர்ஆனின் வாக்கு மூலம் மிகப் பிரபலமானதாக இருந்து கொண்டிருக்கின்றது.

"நாம் பனீ இஸ்ராயீல்கள் கடலைக் கடக்கச் செய்தோம். பின்னர் பிர்அவ்னும் அவனது கூட்டத்தாரும் பனீ இஸ்ராயீல்களைத் துன்புறுத்தவும், கொடுமைப்படுத்தவும் பின்தொடர்ந்து சென்றனர். அப்போது அக்கடல் அவனைப்பற்றி மூழ்க வைத்தது. அப்போது அப்பிர்அவ்ன், "பனீ இஸ்ராயீல்கள் ஈமான் கொள்ளும் இறைவன் ஒருவனையன்றி வேறு தெய்வம் இல்லை என்று நான் ஈமான் கொள்ளுகிறேன்." (என்று கூறினான்)

ஆனால் இன்று (இறைவனாகிய) நாம் (பிர்அவ்ன் ஆகிய) உனக்குப் பின்வரும் ஜனங்களுக்கு நீர் ஓர் அடையாளமாக இருக்கும் பொருட்டு உன் சரீரத்துடனே உன்னைப் பாதுகாத்து வைப்போம். மேலும் நிச்சயமாக ஜனங்களில் பெரும்பான்மையினர் நம்முடைய அறிவிப்புக்களை அலட்சியம் செய்தே வருகிறார்கள்" (என்று இறைவன் கூறினான்).
என்ற இந்த குர்ஆனின் (10 : 90 - 92) வசனங்களின் மூலம் இறைவன், பிர்அவ்ன் என்னும் அந்தக் கொடுங்கோல் அரசனை இன்னும் பத்திரப்படுத்தி வைத்திருப்பதாக அறிகிறோம்.

3250 ஆண்டுகளுக்கு முன் செங்கடலில் மூழ்கி இறந்த எத்தனையோ பேர்களுக்கு மத்தியில் பிர்அவ்ன் மூழ்கி இறந்தான். அவனது உடலை எதிர்கால மக்களுக்கு அத்தாட்சியாக இன்னும் இறைவன் பாதுகாத்து வைத்திருப்பதாக கூறுகின்றான் என்றால் அதை நாம் நம்பவேண்டுமா? நம்பத்தான் வேண்டியிருக்கின்றது. இன்றைய உலகம் கண்டிருக்கும். அது பற்றிய கூற்றுக்களைக் காணும் போது! மூஸா நபியை துன்புறுத்தி துரத்திச் சென்ற பிர்அவ்னும் அவனது சகாக்களும் செங்கடலில் மூழ்கி மாண்டனர்.

அதன் பின் பிர்அவ்னின் சடலம் கரைசேர்ந்தது. அதனை அவனைச் சார்ந்தவர்கள் எடுத்து அக்கால முறைப்படி தயாரிக்கப்பட்டிருந்த தைலங்களை இட்டுப் பதப்படுத்தி புடமிட்டு மம்மி (Mummy) என்று சொல்லக் கூடியதாகச் செய்து பிரமிட் என்று சொல்லக்கூடிய மிகப் பெரிய அரசர்களை அடக்கும் படியான பள்ளத்தாக்குக் கோபுரத்தில் அடக்கம் செய்து விட்டனர்.

எகிப்து தேசத்தில் மன்னர்கள் இறந்துவிட்டால் அவர்களது சமாதிகளில் மிகப் பெரிய கோபுரங்களை எழுப்புவது வழக்கம் அவற்றிற்கு பிரமிட் (Pyramid) என்று பெயர் முக்கோண பட்டக வடிவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். அப்படிப்பட்ட கோபுரங்கள் உலக அதிசயங்களில் ஒன்றாக இன்றும் இருக்கின்றன எகிப்தில்! அவற்றில் மிகப்பெரியது. சியோப்ஸ் என்ற மன்னரின் சமாதிக் கோபுரமாகும். அதை அம்மன்னர் தனக்காகத் தான் வாழும் காலத்திலேயே கட்டி வைத்துக் கொண்டான். அக்கோபுரத்தின் பரப்பளவு பதிமூன்று ஏக்கர் நிலமாகும்!.

இந்த மாதிரிக் கோபுரம் ஒன்றில் தான் பிர்அவ்னின் புடமிடப்பட்ட உடலும் அடக்கம் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட 3250 ஆண்டுகளுக்கு முன் அடக்கப்பட்ட பிரேதத்தை பல தடவைகள் வெளியில் எடுத்துப் பார்த்து அதை வெவ்வேறு இடங்களுக்கு மாறி மாறிக் கொண்டு சென்று புதைத்தார்கள்.

கடைசியில் கி.பி 1886 ஜூன் மாதத்தில் அதாவது சுமார் 120 ஆண்டுகளுக்கு முன் அதை திறந்து பார்த்தார்கள். அந்தப் பிரேதம் எமனுடைய உருவில் மரப்பெட்டியொன்றில் வைக்கப்பட்டிருந்தது. கண்களிலும் புருவம் முதலியவற்றிலும் கறுப்பு மை தீட்டப்பட்டிருந்தது. கைகள் ஒன்றில் செங்கோல் ஒன்றினை செருகி வைத்திருந்தார்கள்.

இத்தகைய அடையாளங்களுடன் கூடிய பிர்அவ்னின் அழியாத அந்த உடல் இன்றைக்கும் பார்க்கும் படியான முறையில் கெய்ரோ நகரின் காட்சிச் சாலையில் கண்ணாடிப் பெட்டிக்குள்ளே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.

1400 ஆண்டுகளுக்கு முன்பு குர்ஆனின் மூலம் கூறப்பட்ட 3250 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒருவனது பிரேதத்தை இன்றைக்கும் நாம் குர்ஆனின் கூற்றுப்படி அத்தாட்சியாக காணலாமென்றால் அதன் அற்புதத்தை என்னவென்று வரைவது?

இந்த அற்புதம் நிகழக் காரணம் என்ன என்று ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்களில் சிலர், அந்நாட்டுச் சீதோஷ்னமும் அந்நாட்டு மண்ணில் இறந்த உடலை அழிக்கக்கூடிய பக்றீரியா என்னும் கிருமிகள் இல்லாததும்தான் அப்பிரதேசம் அழியாமால் இருக்கக் காரணங்களாகும் என்பதாகக் கூறுகின்றனர்.

எந்த முறையிலோ ஒரு முறையைப் பயன்படுத்தி இறைவன் தன் வாக்கை மெய்ப்பித்துக் காட்டிவிட்டிருப்பது விந்தையிலும் விந்தையேயாகும்! இதுவரை இறைவன் திருமறையில் உலகப் படைப்பைப் பற்றியது முதல் அழியா உடல்பற்றியது வரை கூறிய விவரங்கள் இன்றைய விஞ்ஞான உலகுக்கு எந்த அளவுக்குப்பொருத்தமுடையதாய் உள்ளன என்று கண்டோம்.

"இறைவன் எல்லாச் சக்தியும் கொண்டவன். அவன் கூறுவது எக்காலத்துக்கும் பொருந்துவது வியப்பில்லை. அவனது திருத்தூதராம் நபி (ஸல்) அவர்களின் பேச்சுக்கள் இன்றைய நிலைக்குப் பொருந்துகின்றனவா? விஞ்ஞானக் கருத்துக்களுக்கு ஒத்துவருகின்றனவா" என்ற ஐயப்பாடு எழுமாதலால் அந்த நபி (ஸல்) அவர்களின் உரைகள் சிலவற்றை எடுத்து விஞ்ஞானக் கருத்தெனும் உரைக்கல்லில் உரைத்துப் பார்த்தால் விளக்கம் பெறலாம்.



**பி.எம்.எப்.பஸ்றின்**
**(தரம் - 10B)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் வெளிச்சம் எம் அதிபரே!

கிழக்கின் சூரிய உதயமாய்
இலங்கையின் நல்லதொரு பிரஜையாய்
வீட்டிற்குத் தலைவனாய்
பாடசாலையில் அதிபராய்
எம் கண் முன்னால்
அவதரித்திட்ட எஸ். அபூ பக்கர்
எம் அன்பின் அதிபர் அவர்களே!

அகிலத்திற்கோர் அருட்கொடையாய்
அவனிற்கோர் உத்தமராய் எமது
நேசத்தின் ஒளி விளக்காய்
நெஞ்சத்தில் சிறு மலராய்
தர்மத்தின் தர உயர்வாய்
தரமுயர்ந்து எம் வீட்டில்
மணம் வீசிப் பூத்துக் குலுங்கும்
பூந்தோட்டமாய் இருக்கிறீர்களே!

உடங்கா பு.ஆ.ஸ். என்று
பழம் பெயரைக் கொண்டிருந்த
பாடசாலையை செந்நெல்
சாஹிறாவென பூத்துக் குலுங்கும்
புதிய பெயராய் மாற்றியமைத்தீரே!

இரவென்று பகலென்று பார்க்காமல்
இரண்டும் இனிமை என நினைத்து
நெஞ்சத்தினால் உள்ளம் மகிழ்ந்து
கல்விச் செல்வங்களின் நலன் கருதி
இரு மாடிக் கட்டிடம் இரண்டு
நிறுத்துவதற்காக இரண்டாயிரம்
படிகள் ஏறி இறங்கி வருகிறீர்களே!

இரண்டு மாடிக் கட்டிடங்களை
கற்பனையில் கட்டிப் பார்த்த
கல்விச் செல்வங்களுக்கு நிஜமாக
நிறுத்தி அதில் ஏறி எட்டிப்
பார்க்கும் அளவிற்கு வைத்து
விட்ட எம் அதிபர்
எஸ். அபூ பக்கர் அவர்களே!

அன்பின் பாச மலராய்
இருளின் ஒளி விளக்காய்
நிழல் தந்திடும் மரத்தின் கனியாய்
உள்ளிருக்கும் தேனிற்கு வெளியில்
பாதுகாப்பாக இருக்கும் பூவாய்
எமது கல்லூரியில் நிலைத்திருக்கும்
சேவைகளைச் செய்கிறீர்களே!

சம்மாந்துறை வளாகத்தின்
செந்நெல் கிராமத்தில்
சிறுவர் கழகத்திற்கு
அன்பின் ஆதரவாய்
அரவணைக்கும் தந்தையாய்
உதவிகளைச் செய்கிறீர்களே!

பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தில்
பெரும் உதவியைப் பெற்று
கல்விச் செல்வங்களுக்காக
கல்லூரி முற்றத்தின் முன்னால்
சிரமப்பட்டு சிறியதாக அல்ல
சிறகடித்துப் பறக்கும் படி
சிறுவர் பூங்காவை அமைத்தீரே!

அன்னைக்கு அன்னையாய்
தந்தைக்கு தந்தையாய்
எமக்கு உதவியாகவும்
உறுதியான அதிபராகவும்
இருந்தீரே! ஆனால் நீங்கள்
எம்மை விட்டு பிரியக் கூடாது
ஒரு துன்பமல்ல பல துன்பமல்ல
ஓராயிரம் துன்பங்களை எமக்காக
பல வருடம் நெஞ்சில்
தாங்கிச் சுமக்கின்றீரே!

குறுஞ் சிரிப்புடன் குறைந்த நாளல்ல
நீண்ட நாள் குளிராக இருக்கும் படி
எம்மைக் குளிராக்கி
சிரித்துப் பறக்க வைக்கின்றீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நெல்லிலே நெல் விதைப்பது
போல் எம் கல்லூரியில்
சேவைகளை விதைக்கிறீர்களே!
செந்நெலிலே நெல்வளர
கல்லூரியிலே மாணவர்களை
வளர வைக்கிறீர்களே! கரும்பு இனிப்பது போல்
உங்கள் பேச்சும் இனிக்கிறதே! கசக்கும்
மருந்து இருந்தாலும் உங்களைக் கண்டவுடன்
அருந்தினால் இனிமையாக இனிக்கிறதுவே!

கல்லூரியில் செய்த சேவையினை
எங்கள் கற்பனையில் நினைத்து
வளர்ந்தாலும் உங்கள் சேவைக்கு ஈடாகாது.

சில இமையுடன் சில விழியும்
சேர்ந்து பாராட்டினால்
பல்லாயிரம் பாராட்டுக்கள்
உங்களுக்குச் சொந்தமாகட்டும்

உங்கள் சேவை காற்றோடு
கலந்து எமது சுவாசத்தில் இணைந்து
உதவியில் படிந்து உயிரில்
உள்ளம் இருக்கும் வரை
பிரியமாகட்டும்.

எம்.எல்.ஏ.பாத்திமா மிஸ்றியா (தரம் - 9B)

## நற்பழக்கம்

எது இருக்க வேண்டும் - பாசம்
எது இருக்கக்கூடாது - பொறாமை
எதை அடுத்தவர் மீது காட்ட வேண்டும் - கருணை
பெரியோருக்கு கொடுக்க வேண்டியது - மரியாதை
குழந்தைகள் மீது வைக்க வேண்டியது - அன்பு
நண்பர் மீது வைக்க வேண்டியது - நட்பு
இறுதிவரை இருக்க கூடியது - கல்வி

தொகுப்பு : ஏ.ஆர். நுஸ்ரத் பானு
(தரம் - 6A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை எழிலே!



இயற்கை எழிலே - என்
மனதை கைது கொண்டாய்.
கைது கொள்ளும் அளவிற்கு
உன்னில் இருப்பது என்ன?

என் மனதைக் கைது கொண்டதேன்?
உன் அழகை ரசிப்பதற்கா? - இல்லை
உன் மணத்தை நுகர்வதற்கா?
என் உள்ளத்தை பறித்தாய்!

இயற்கை எழிலே நீ இளம் பெண்
போலத் தோன்றுகின்றாயே! - உனக்கு
வயதே கிடையாதா? - என் மனதைக்
கைது கொண்ட இயற்கையே!

உன் இயற்கையின் ஓசை
இன்னிசைபோல் என் காதுகளில் ஒலிக்கின்றது.
இன்னிசையை நான் கேட்பதா
இல்லை கேட்காமல் இருப்பதா - நீ
சொல்ல வேண்டும். என் இயற்கை எழிலே!

ஆக்கம் :- எப்.அனூஸா
(தரம் :- 9B)

## சிந்தனைத் துளிகள்.

- ❖ நம்பிக்கையை கைவிடாதே அது தான் வெற்றியின் முதல் படி.
- ❖ அமைதியாய் இரு விரும்பியதை அடைவாய்.
- ❖ துன்பம் வரும் போது எதிரியையும் நன்பனாக நினை.
- ❖ பக்தியாய்த்தனாய் இருப்பதை விட நல்லவனாய் வாழ்வதே மேல்.
- ❖ கேள்வி கேட்க அஞ்சுபவன் எதையும் எக்காலத்திலும் கற்கமாட்டான்.
- ❖ அதிக சந்தோசமாக இருக்கும் போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே.
- ❖ அதிக கவலையாக இருக்கும் போது கடிதங்களை எழுதாதே.
- ❖ எவர் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள். ஆனால் நீ சரியென்று நினைப்பதையே செய்.

**எம். என்.ஹஸ்மியா**
(தரம் - **6A**)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகைத்தால் புகைவீரகள்.

**எம்.ஐ.மாஹிர்** B.B.A(Hons)
**(ஆசிரியர்)**



**அன்பார்ந்த ஆசிரியர்களே, அதிகாரிகளே, இளைஞர்களே, சிறுவர்களே...... புகைக்காதீர்......... புகைக்காதீர்.**

எமது கல்வி கற்ற சமூகத்தில் புகைப்பாவனை சிலரை ஆட்டிப்படைத்து வரும் பாரிய தீங்கான செலவாகிவிட்டது. புகைத்தலால் சமூகத்திற்கும், புகைப்பவர்களுக்கும், மாணவர் சமூகத்திற்கும் அழிவினைக் கொண்டுவருவதுடன் மற்றவரின் வெறுப்பையும் சம்பாதிக்கின்றனர்.

புகைப்பதன் மூலம் தனிமனிதரிடத்திலும், குடும்பத்திலும் கணவன், மனைவி இருவருக்கிடையிலும் பிரச்சினையை ஏற்படுத்துகின்றது. பணம் வீண் விரயமாகிறது. நற்பழக்கங்கள் இல்லாமல் போகின்றது. நெறிபுறழ்வான நடத்தைக்கு இட்டுச் செல்கின்றது. நரம்புத் தளர்ச்சி, சுவாச நோய்கள், புற்றுநோய், உயிரைக் கொல்லும் நோயாக புகைத்தல் காணப்படுகின்றது.

## புகைத்தல் பற்றிய அதிர்ச்சி சில.........

- ஓர் ஆண் வருடமொன்றுக்கு 1900 சிகரட் / கோல்லிப் புகைக்கின்றார்.
- சிகரட் புகை சாதாரனமாக எமது கண்ணுக்கு புலப்பட்டாலும் அதில் 450 வகையான நச்சு மூலகங்கள் உள்ளன.
- புகைப்பதன் மூலம் ஒவ்வொரு 8 நிமிடமும் ஒருவர் மரனமடைகின்றனர்.
- புகைத்தல் மதுவைவிட, ஹிரோயினை விட அதிகம் அடிமைப்படுத்தக் கூடியது.
- சர்வதேச மட்டத்தில் 20000 கோடி அமெரிக்க டொலர் மக்கள் வாயில் சிகரட்டாக எரிக்கப்படுகின்றது.
- புகைத்தல் நச்சுப் பொருளுடன் வேறு 700 வகையான இரசாயன கூட்டுப் பொருட்கள் சேர்ந்துள்ளன என அறிக்கைகள் கூறுகின்றது.
- புகைத்தல் மூலம் நேரடியாக, நுரையீரல், வாய்க்குழி, சிறுநீர்ப்பை, குரல்வளை, இரப்பை போன்ற இடங்களில் புற்று நோயை ஏற்படுத்துகின்றது.
- வருடம் 30 இலட்சம் பேர் புகைத்தலால் மரணிக்கின்றனர்.
- ஆயுட்காலம் 8 - 10 வருடங்களால் குறைவடைகின்றது.
- வருடாந்தம் 600 கோடி சிகரட் புகைக்கப்படுகின்றது.
- புகைப்பவர் இளமையிலேயே முதுமையடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புகைப்பது ஆரம்பம். அது ஏனைய போதையை நாடுகின்றது.
- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஆண்கள் 41% புகைக்கின்றனர்.

***"புகைப்பழக்கத்தினால் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் புகைப்பவர்களை விட பக்கத்தில் இருப்பவர்களே''***

புகைப்பதனால் தமக்கு கௌரவத்தை தருவதாகவும் கருதுகின்றனர். நல்ல நன்பர்கள் கிடைக்கின்றனர் என கருதுகின்றனர். போலியான கவர்ச்சி விளம்பரங்கள் மூலம் ஆளுமை கிடைக்கின்றது. உடலுக்கு சக்தியைக் கொடுக்கின்றது. பெண்கள் தம்மை விரும்புவதாகவும் ஏனையோர் மதிக்கின்றது என கருதி புகைக்கின்றனர்.

**புகைப்பதற்கான செலவு :-**
**காலம் : 50 வருடம்**

| | |
|---|---|
| ஒரு புகைத்தல் | 12.50 |
| ஒரு மாதம் | 387.00 |
| ஒரு வருடம் | 4562.50 |
| ஐம்பது வருடம் | 228,125.00 |

**ஒரு நாளைக்கு 10 சிகரட் பாவிப்பவருக்குச் செலவு :-**
**காலம் : 50 வருடம்**

12.50 x 10 = 125
125 x 365
45625.00
2281250.00

## புகைப்பது பற்றி இஸ்லாம்

- "வீண்விரயம் செய்பவர்களை அல்லாஹ் வெறுக்கின்றான்"
- "உங்களுக்கு தீங்கு இழைப்பதிலிருந்து நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள்" (அல்குர்ஆன்)
- யார் வீண்விரயம் செய்கிறாரோ அவர் சைத்தானின் சகோதரர்களாவர். (அல்குர்ஆன்)
- போதையை ஏற்படுத்தி அறிவை மழுங்கடிக்கக் கூடிய அனைத்தும் தடுக்கப்பட்டவையாகும். (ஹதீஸ்)

## புகைத்தலை மறக்க..........



- புகைபிடிக்கும் நன்பர்களை விட்டு ஒதுங்கியிருத்தல்.
- புகைப்பிடித்தலை எதிர்த்து விழிப்புனர்வு ஏற்படுத்தல்.
- உடற்பயிற்ச்சி செய்தல்.
- புகைப்பவர்கள் அருகில் நில்லாமல் விலகிச் செல்லல்.
- சீராண உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தல்.
- புகைத்தல் உணர்வு வரும்போது வேறு இனிப்பு, புளிப்பு உணவுகளை உண்ணல்.
- இறை நம்பிக்கை, பிரார்த்தனை, அறிவுகளைப் பெற ஈடுபடல்.
- நான் புகைப்பதில்லை என மனதில் உறுதி கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணையின் அவசியம்.

**ஏ.அப்துல் ஜப்பார்.**
(ஆசிரியர்)

உலகம் தோன்றி இன்றுவரை மனிதகுல வரலாற்றில் மனிதன் பல்வேறுபட்ட அனர்த்தங்களையும் சுமார் பதின்நான்காயிரத்திற்கு மேற்பட்ட யுத்தங்களையும் சந்தித்துள்ளான். போர்ச்சூழலும் அதனால் ஏற்பட்ட கலவரம், இனமோதல், வன்முறை, தடுப்புக்காவல், சித்திரவதை, கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, கற்பழிப்பு, பயங்கரவாதம், தீவிரவாதம் போன்ற மனிதர்களாலேயே மனித குலத்திற்கு ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்களும், வீதி விபத்து, தீ விபத்து, கட்டிட இடிபாட்டு விபத்து, சத்திர சிகிச்சை விபத்து, போன்ற மாறுபட்ட விபத்துக்களையும், சூறாவளி, சுழற்காற்று, வெள்ளப்பெருக்கு, கடற்கோள், பூமியதிர்ச்சி, எரிமலை, காட்டுத்தீ, வறட்சி போன்ற பல்வகையான இயற்கை அனர்த்தங்களும் அவனது வாழ்வை சின்னாபின்னப்படுத்தி மாறா மனவடுக்களையும் ஏற்படுத்திச் சென்றுள்ளன.

இதற்கு அப்பால் மனிதர்கள் தமது அன்றாட வாழ்வில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் மனதில் சஞ்சலத்தைத் தரக்கூடிய நிகழ்வுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. பொருளாதாரக் கஷ்டம், வறுமை, போர்ச்சூழல், வேலைவாய்ப்பின்மை, உறவுச் சிக்கல் என்பன தனிமனித வாழ்வில் பாரியளவு தாக்கத்தை உண்டு பண்ணிவிடுவதோடு குடும்ப வாழ்விலும் நிம்மதியற்ற சூழலை ஏற்படுத்தி விடுகின்றன.

இவ்வாறு அனர்த்தங்களும், அழுத்தங்களும் மனித வாழ்வில் சர்வசாதாரணமாக நிகழக்கூடியதாக இருந்த போதிலும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களும், தாக்கங்களும் மிகவும் பாரதூரமானதாகும். அனர்த்தங்களின் போது ஏற்படும் உடற்காயங்கள் வெளித் தெரிவதனால் அவற்றிற்கு மருந்திடல் அல்லது சத்திர சிகிச்சை மேற்கொள்ளல் மிகவும் இலகுவான காரியமாகிவிடுகின்றது. ஆனால் அழுத்தங்களின் மூலமாக ஏற்படுத்தப்படும் நெருக்கீடுகளும், அனர்த்தங்களினால் காவி வரப்படும் மனவடுக்கள் அல்லது மனக்காயங்களும் கண்டு கொள்ளப்படாமல் அப்படியே விட்டுவிடப்படுவதனால் அவை நீறுபூத்த நெருப்பாக உள்மனதில் கிடந்து மேலும் மேலும் உக்கிரமடைந்து ஈற்றில் மனநலக்குறைபாடாக அல்லது உள நோயாக வெளிக்காட்டப்படுகின்றன. குறிப்பாக எமது கீழைத்தேய சமுதாயத்தில் இது மெய்ப்பாட்டு நோயாகவே தோற்றம் பெறுகின்றன.

எனவே குடும்ப, சமூக, பொருளாதாரக் காரணிகளால் ஏற்படுத்தப்படுகின்ற நெருக்கீடுகளும், அனர்த்தங்களினால் அல்லது வேறு இழப்புக்களினால் கொண்டு வரப்படும் மனவடுக்கள் அல்லது மனக்காயங்களும் கால தாமதமின்றி கண்டறியப்பட்டு சிகிச்சை அல்லது உளவளத்துணை வழங்குவது மிகவும் அவசியமாகிவிடுகின்றது.

மனிதன் பொதுவாக தனக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தானே தீர்வைத் தேடிக் கொள்ளும் தன்மை கொண்டவன். ஆனால் அத்தீர்வை எவ்வாறு அடைந்து கொள்வது என்பதே அவனுக்குள்ள பிரச்சினையாகும். உதாரணமாக மதுபோதைக்கு அடிமையான ஒருவர் அக்கொடிய பழக்கத்திலிருந்து விடுபட விருப்பங் கொண்டு அதற்காக முயற்சி செய்தபோதிலும் அதிலிருந்து மீண்டு கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை அல்லது வழிமுறை அவருக்குத் தெரியாமல் அல்லது ஒழுங்குபடுத்திச் செயற்படுத்த முடியாமல் இருக்கலாம். இதனால் அப்பழக்கத்திலிருந்து மீண்டுகொள்ள அக்குறிப்பிட்ட நபருக்கு முடிவதில்லை.

இதேபோல் பாரிய மனச்சோர்வு நோயினால் பாதிப்படைந்து தற்கொலை முயற்சிவரை சென்ற ஒருவர் அச்செயற்பாடு பிழையானதாகத் தென்பட்ட போதிலும் அதிலிருந்து மீண்டு கொள்ளும் உபாயம் விளங்காதவராக அல்லது அதில் அக்கறையின்மை கொண்டவராக இருக்கலாம். எனவேதான் இங்கு துணையின் அவசியம் முக்கியத்துவம் பெறுகின்றது.

உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்து, இயக்கப்பாட்டில் ஸ்தம்பிதம் எய்தி, முடிவெடுக்கும் தன்மை முடக்கப்பட்ட நிலையுடன், வாழ்வில் வெறுப்புற்று, சோர்வடைந்து துவண்டு கிடப்பவர்களைத் தட்டியெழுப்பி, தோள்கொடுத்து, தூக்கி நிறுத்தி, ஒத்துணர்வு காட்டி, அவருடாகவே அவரது பிரச்சினையை அடையாளங்காணச் செய்து, அவருள் மறைந்து கிடக்கும் திறன்களை வெளிப்படுத்தி, அவருடைய பிரச்சினைகளை அவராக உணரச் செய்து, அவருடாகவே அவரது பிரச்சினைக்குரிய தீர்வைக் கொண்டுவரச் செய்வதில் துணை நிற்பதே உளவளத்துணையின் நோக்கமாகும். இப்பாரிய பணியில் தம்மை இணைத்துக் கொள்பவர்கள் துணையாளர்கள் அல்லது உளவத்துணையாளர்கள் என அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். எனவே துணை மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும்.

முற்றும்.



**குழந்தைகளுடன் நீர் ஐக்கியமாவதை உணர்ந்துள்ளேன். ஆசிரியத் தொழிலுக்கு இறை அனுமதி உண்டானால் உமக்கு அதனை விடத்திறமையான அழைப்பு இல்லை எனலாம்.**

I have always felt you capture the moment with kids. If you feel blessed to teaching profession, it is one of the greatest calls you will ever have.

*Tho*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலையில் ஆசிரியர் பணி.

**ஏ.பி.கோசுமுகையதீன்.**
(ஆசிரியர்)

ஒரு நாட்டின் நிருவாகத்தில் பங்கு கொள்ளும் சகல அமைப்புக்களின் வளர்ச்சியிலும், மேன்மையிலும் கல்வி முக்கிய இடம் பெறுகிறது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். கல்வியமைப்பு சரியான முறையில் இருந்தால்தான் எல்லா அமைப்புக்களும் முறையான வளர்ச்சியை அடைய முடியும். எனவே அமைப்புக்களின் வளர்ச்சி ஆசிரியர்களில்தான் தங்கியுள்ளது.

ஒருவரின் நல்வாழ்வும், நாட்டின் நல்வாழ்வும் மக்களின் கல்வியறிவைப் பொறுத்திருக்கிறது என்ற உண்மையைக் கருத்திற் கொண்டு பாடசாலையில் நுழையும் குழந்தையை முழு மனிதனாக்கி அனுப்புவதே கல்வியின் அடிப்படை நோக்கமாகும். பாடசாலைகள் சமூகத்திலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாக அமைந்துள்ளது. சமூகத்தில் அங்கத்தவனாக வருவதற்கு வேண்டிய பயிற்சியை மாணவர்களுக்கு வழங்குவதே ஆசிரியரின் முக்கியமான பணியாக உள்ளது. இது மட்டுமல்ல அறிவைக் கூர்மைப்படுத்தித் தொழில்நுட்ப வல்லுனர்களை உண்டாக்குவதுடன் நல்லுணர்ச்சியோடு நாகரீகமான பழக்கங்களை மேற்கொண்ட தன்னடக்கமுள்ள பண்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்குவதும் ஆசிரியரின் பணிகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

வீட்டிலிருந்து முதற்கண் பாடசாலைக்கு வரும் குழந்தை மாறுபட்ட சூழலை எதிர்நோக்குகிறான். இச்சூழலை கூடிய வரையில் குழந்தையின் விருப்பத்திற்கு ஏற்றதாக அமைக்கும் பொறுப்பு ஆசிரியரிடம் தங்கியுள்ளது. ஆரம்பத்திலேயே பாடசாலை மீது விருப்பத்தை குழந்தையிடம் உண்டாக்க வேண்டியது ஆசிரியர்களின் மிகப்பெரிய கடமையாக அமைகிறது. உதவிக்கும், ஆலோசனைக்கும் எப்பொழுதும் போகக்கூடிய பெற்றோர்களைப் போன்று ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆசிரியர்கள் தங்களது பொறுமையை இளத்தல் கூடாது.

பாடத்தை மையமாகக் கொண்டு கற்பித்தல் நிலை மாறி இப்பொழுது நாட்டில் பிள்ளையை மையமாகக் கொண்டு கல்வி போதிக்கப்படுகின்றது. ஆகவே பிள்ளைகள் அனுபவத்தின் மூலம் அறிவைப்பெற வாய்ப்பளிக்க வேண்டியது. ஆசிரியரின் பணியாகும். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு துறையில் கூடிய ஆற்றல் உடையவராக இருப்பார்கள். உற்பொதிந்திருக்கும் இவ்வாற்றலை வெளிக்கொணர்வதும், பயிற்சி அளிப்பதுமே கல்வியின் நோக்கம் என்பதை ஆசிரியர்கள் கருத்திற் கொண்டு ஒவ்வொருவரின் திறமைக்கும் ஏற்ப தொழிற்பட வேண்டும்.

மாணவன் சமூகத்தில் இருந்து வந்தவன். திரும்பவும் சமூகத்திற்குள் அடக்கமாவதால் அவனை யசமூகத்திலிருந்து வேறுபடுத்த முடியாது. மாணவனின் வளர்ச்சியில் நாட்டங்கொண்டுள்ள ஆசிரியர்கள் மாணவனுக்கும், சமூகத்திற்குமுள்ள இந்நெருங்கிய தொடர்பைத் தெளிவுபடுத்திப் பொறுப்புள்ள குடிமகனாக வளரச் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்ற பிள்ளைகளை ஒரு நாட்டின் சிறப்பான வளங்கள் என்பதற்கிணங்க நாட்டிலுள்ள பிள்ளைகளின் ஆற்றலை பெருந்தொகையாகப் பெறுவதுடன் அதன் மூலம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான மனித வளத்தைப் பெறும் நோக்கத்துடன் இலவசக் கல்வியை அரசாங்கம் வழங்கி வருகின்றது. இருப்பினும் கல்விக்கான மூலவளங்கள் நாட்டிலுள்ள பாடசாலைக்குப் பகிர்ந்து அளிக்கப்படுவதில்லை.

எனவே பாடசாலையின் நிலையறிந்து எதிர்காலத்தைத் திட்டமிடல் செய்ய வேண்டியது அதிபரின் கடமையாகும். இவ்வதிபர் சிரமம் இன்றி திட்டமிட்டு பணியைச் செய்வதற்கு ஆசிரியர் தம் பங்களிப்புக்களைச் செய்ய வேண்டும். ஆசிரியர், அதிபருடன் தங்கள் கருத்துப் பரிமாறல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். இதனால் அவர்களும் பாடசாலையும் கூடிய நன்மை பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

கற்றல், கற்பித்தல் சூழலுடன் தொடர்புடைய பாடசாலைக் கட்டிடங்கள், ஆய்வுகூடங்கள், விளையாட்டு மைதானம், தளபாடங்கள், உபகரணங்கள் ஆகியனவும் பாடசாலை பரிபாலனத்தில் அடங்குகின்றன. இவற்றைப் பாதுகாப்பதும் அபிவிருத்தியடையச் செய்வதும் ஆசிரியரதும், அதிபரினதும் கடமையாகும். மாணவர்களுக்கு அறிவு, ஆற்றல், பிறருக்கு உதவும் மனப்பான்மை, வெற்றி தோல்விகளை சமமாகக் கொள்ளும் தன்மை, நம்மைச் சூழ்ந்துள்ள சமூகத்தின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டல் ஆகிய துறைகளில் முன்னேற்றம் அடையச் செய்வது ஆசிரியரின் பணியாகும். மாணவர்களை விளையாட்டுப் போட்டி, பரிசழிப்பு, தமிழ் மொழித்தினம், சுற்றுலா, சிரமதான இயக்கம், கல்விக் கண்காட்சி ஆகியவற்றில் பங்குபெறச்செய்வது ஆசிரியரின் பணியாகும்.

கடமைகளையும், சேவைகளையும் ஆசிரியர்கள், அதிபர், மாணவர், பெற்றோர் போன்றோரின் அனுசரணையுடன் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். பாடசாலையில் ஆசிரியர் சிறந்த பணியினை மேற்கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் ஒரு இலட்சிய ஆசிரியராக வரமுடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Primary Education

M.I.Mahir B.B.A, (Hons)

The primary Education is expected that the school should not only bring about personal development but it should also contribute to social development. It gives him cultural heritage on the young one and helps to build up life patterns according to the prevailing social values, norms and traditions.

The formal school has been demarcated into three levels namely;
01. The primary. 02. Secondary and Tertiary.

The primary level is the first stage of formal Education in a child's life. The duration of this period varies from country to country generally. It could be described as period running from 5 - 6 to 10 - 11 years.

Two distinct factors should be kept in mind regarding primary education. First, the formative years of a child's school life are spent in primary section of the Primary education has been made compulsory. Almost in every country for the secondary education.

Research evidence prooves that this period is a critical for all education that followed if the child is unsuccessful in learning during this period. Further he is likely to be unsuccessful in later learning too.

**There are seven objectives in primary education.**

01. Learning to learn
02. Communication.
03. Values of society.
04. Personality.
05. Participation in a variety of activity.
06. Health and hygiene.
07. Preparation for later learning.

The economics contest of education is not encouraging as poverty level increases. Therefore child labour becomes for able for household survival. As a result the primary education in not provided for children in a proper way.

Sri Lankan primary Education has been facilitated by the free education field and it is within the reach of even poorest of the poor through free school book free uniform material, etc.

It has been made available to all school children, yet the parents of the disadvantage child find the schooling of the child as an expensive items mainly due to the low social - economics condition and their negative attitude towards education.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினங்கள்

- ❖ சிங்கள மொழித் தினம் : மார்ச் 02 ஆம் திகதி
- ❖ உலக சுகாதார தினம் : ஏப்ரல் 07 ஆம் திகதி
- ❖ உலக தொழிலாளர் தினம் : மே 01 ஆம் திகதி
- ❖ தேசிய வீரர் தினம் : மே 22 ஆம் திகதி
- ❖ உலக சுற்றாடல் தினம் : ஜூன் 05 ஆம் திகதி
- ❖ உலக சிறுவர் தினம் : ஒக்டோபர் 01 ஆம் திகதி
- ❖ உலக ஆசிரியர் தினம் : ஒக்டோபர் 06 ஆம் திகதி
- ❖ ஐக்கிய நாட்டின் தினம் : ஒக்டோபர் 24 ஆம் திகதி

ஏ.ஆர்.பஸ்மிலா பானு
(தரம் : 5A)

# ரோஜா



*ரோஜாவே நீ சுதந்திரமாய்
மலர்கின்றாய் எல்லோருடைய
மனதையும் இலகுவாக
கவருகின்றாய் உனக்கேது
அந்த சக்தி நான் உன்
எழிலில் மயங்கிய
பெண்ணொருத்தி.*

*நீ உன் எழிலை
வைத்துக் கொண்டு எவ்வளவு
பாடுபடுத்துகிறாய் ஏய்
ரோஜாவே! நீ விடியற் காலையில்
ஆரம்பித்தாய் உன் விளையாட்டை
மாலையில் துடிதுடித்து வாடி
விழுகின்றாயே*

*நீ ஏன் மயங்கிய
என்னை உன் வாசனையில்
எழுப்பினாய் நான் வரும்
வழியிலெல்லாம் என் கண்
எதிரில் வந்து நின்றாய்
காலையில் வீட்டு முற்றத்தில் சிரிக்கிறாய்
சிறு பிள்ளையின் கையில் துடிக்கின்றாய்.*

*மண் மீது அந்நேரம்
உன் பக்கத்தில் இருந்த
மொட்டு சிரிக்கின்றதே
உன்னைப்பார்த்து காலையில்
ஆரம்பித்தாய் உன் விளையாட்டை
மாலையில் மண்ணோடு மண்ணாகி
விட்டாயே ரோஜா*

ஏ.சித்தி றுசானா
(தரம் – 9B)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாசானின் சிறப்பம்சங்கள்

ஏ.எல்.அன்வர் அலி Tr (B.A - PGDE)

சகல சமூகத்தினராலும் மதிக்கப்படுகின்ற ஒருவராக ஆசிரியர் காணப்படுகின்றார். சமூகத்தின் மீதுள்ள அவரது பொறுப்பின் கனமே இதனை அவருக்குப் பெற்றுக் கொடுக்கின்றது. சமூகத்தின் எழுச்சிக்கு வித்திடுபவர் ஆசிரியரே. எந்தவொரு சமூகமும் கல்வியைக் கொண்டே எடைபோடப்படுகின்றது. எந்த சமூகம் கல்வியைப் பெற்றிருக்கின்றதோ அதுவே இவ்வுலகில் முன்னணியில் நிற்பதைக் காணலாம். எனவே சமூகத்தின் நாடியாக கல்வியைக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

இந்த வகையில் பார்க்கின்ற போது சமூக நாடிக்கான அத்திவாரத்தை இடும் ஆசிரியர்கள் எத்தகையவர்கள் என்பது சொல்லாமலேயே புரிந்து விடும். இவர்கள் தமது காரியத்தில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட வேண்டியவர்கள். தமது உத்தியோகத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகாரிகளுக்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் அல்லர். இவ்வுலகில் சமூகத்திற்குப் பதில் கூற வேண்டிய அதேவேளை மறுமையில் இறை சன்னிதானத்தில் இறைவன் முன்னால் இவர்கள் பதில் கூற வேண்டியவர்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள். "உங்களில் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். மேலும் நீங்கள் அனைவரும் உங்களுடைய மேய்புக்களைப் பற்றி வினவப்படுவீர்கள்" ஒவ்வொரு ஆசிரியரும் தனக்குக் கீழ் உள்ள மாணவர்களைப் பற்றி வினவப்படுவார். அவர்களின் திறமைகளுக்கு இந்த ஆசிரியர்கள் போட்ட தீனி போதுமாக இருப்பின் தனது பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள்.

"ஆசிரியர்கள் சமூகத்தில் மதிக்கப்படுபவர்கள் என்பது போலவே தங்களது பொறுப்பை உணர்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். கற்பித்தலை வெறுமனே ஏனைய தொழில்களைப் போன்றதொரு தொழிலாக மட்டும் கருதுபவர்கள் ஆசிரிய சமூகத்திலிருந்து ஒதுங்கிக் கொள்வது நல்லது. ஏனெனில் இத்தகையவர்களினால் நல்ல சமூக உருவாகத்திற்கு வித்திட முடியாது. மாத முடிவில் சம்பளத்தை எதிர்பார்த்து இருப்பவர்களாகவே இவர்கள் காணப்படுவர். இத்தகையவர்களுக்கு மாணவர் சமூகம் தனது உழைப்புக்கான கருவியாகவே இருக்கும்".

நவீனகால மாற்றத்திற்கேற்ப அனைத்துமே மாற்றம் பெற்று வருகின்றன. இதற்கு கல்வி விதிவிலக்கல்ல. ஆரம்பத்தில் கற்பித்தல் செயற்பாடு ஆசிரியர் மையமானதாகவே இருந்தது. வகுப்பறையில் ஆசிரியர் ஒரு கதாநாயகன் என்ற நிலை இருந்தது. ஆசிரியர் சொல்கின்ற விடயங்களை கிளிப்பிள்ளை போல் ஒப்புவிக்கின்ற மாணவர்கள் அன்று இருந்தார்கள். ஆனால் தற்பொழுது ஆசிரியர் ஒரு வழிகாட்டியாக வகுப்பறையில் செயற்படுகின்றார். இங்கு வழிகாட்டுதல் மூலமே கற்பித்தல் பணி இடம்பெறுகின்றது. இதன்போது கதாநாயகர்கள் மாணவர்களாவர். இதனையே மாணவர் மையக்கல்வி என்று அழைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறையில் ஓர் ஆசிரியரின் வகிபங்கை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். ஓர் ஆசிரியர் வழிகாட்டியாக செயற்பட வேண்டிய அதே நேரம் ஒரு முகாமையாளராகவும் செயற்படுகின்றார். ஓர் அவதானியாக இருக்கின்றார். மாணவர்களின் எல்லா நடவடிக்கைகளும் அவரிடம் இருக்கும். அடுத்தது அவர் ஒரு சீர்திருத்தவாதியாக காணப்படுவார். இவரிடம் தான் சொல்லும் விடயம் செயலிலும் வெளிப்படும்.

மாணவர்களின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியைக் காண்பதற்கு ஆசையுடன் உழைப்பவராக இருப்பார். ஒரு ஒழுங்கமைப்பாளராக ஆசிரியர் மிளிர்வார். மாணவர்களின் எல்லாச் செயற்பாடுகளும் திட்டமிட்டு ஒழுங்குற அமைய வழிசெய்வார். பாடசாலையில் மாணவர்களின் நல்ல விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பவராக இருப்பார். இதனால் மாணவர்கள் தவறாக வழி நடத்தப்படுவதிலிருந்தும் வழி தவறிச் செல்வதிலிருந்தும், பாதுகாக்கப்படுவார்கள். ஓர் ஆலோசகராக செயற்படுவார்.

மாணவர்களிடம் எழுகின்ற உடலியல் ரீதியான, உளவியல் ரீதியான பிரச்சினைகளை விசாரித்து ஆலோசனை வழங்குவார். இதனால் எல்லா மாணவர்களும் கல்வியில் உற்சாகத்துடன் ஈடுபட வாய்ப்பு உண்டாகின்றது. அத்துடன் ஓர் ஆசிரியர் மதிப்பீட்டாளராக செயற்படுவார். இதனால் மாணவர்களின் தேவைகள், குறைகள் என்பவற்றை இனங்காணலாம். அவர்களின் வளர்ச்சிக்காக தன்னில் என்னவிதமான மாற்றத்தை, திறமையை வளர்க்க வேண்டும் என அனுமானிக்கலாம்.

இதே போன்று ஓர் ஊக்குவிப்பாளராக, நூலகராக, சமூக விஞ்ஞானியாக ஆசிரியர் வகுப்பறையில் செறப்படுவார். ஓர் ஆசிரியர் இந்த அனைத்துப் பாத்திரங்களையும் குறித்த அந்தப் பாடசாலையில் ஏற்கத் திறமையுள்ள ஒருவராக இருக்க வேண்டும். மேற்படி திறன்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஆசிரியர் முயற்சிக்க முடியும். அதற்கு பின்வரும் வழிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

01. ஆசிரியர் தன்னைப் பற்றிய தெளிவைப் பெற்றவராக இருத்தல் வேண்டும். தனது பலம், பலவீனம் என்பவற்றை விளங்கியிருத்தல். தன்னைப் பற்றி மிகையான நம்பிக்கையோ, அல்லது குறைவான மதிப்பீட்டையோ கொண்டிருக்கக் கூடாது

02. திறந்த மனப்பான்மையுள்ளவராக இருத்தல். சரியான கருத்தை அங்கீகரிக்கும் தன்மை இதிலிருந்துதான் ஏற்படும். அனைத்து மாணவர்களையும் சமூகத்தின் அங்கத்தவர் என்று கருதுவதற்கும் இது இன்றியமையாதது.

03. திறன் உடையவராக இருத்தல். எழுத்து, பேச்சு, மற்றும் கலைத் திறன்களை தன்னிடம் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்தல். மாணவர்களிடம் திறனை வளர்ப்பதற்கு தன்னிடம் அது முதலில் இடம்பிடித்தல் அவசியமாகும்.

04. சிறந்த அறிவுத் தொகுதி, கற்க வேண்டிய விடயங்கள் கடல் போன்றுள்ளன என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். நாளுக்கு நாள் எம்மைச்சூழ ஏற்படும் மாற்றங்கள் உட்பட துறைசார்ந்த தேர்ச்சியையும் பெற்றுக் கொள்ளவேண்டும். நடைமுறை அறிவு இன்றியமையாதது. பாடப்புத்தகத்துக்குள் மாத்திரம் தன்னைச் சுருக்கிக்கொள்ளும் ஆசிரியர்கள் மாணவர்களிடம் முகவரியற்ற வர்களாக மாறிவிடுவார்கள். எனவே கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் ஒரு திறமைசாலியாக இருக்க வேண்டும் என்பது மேற்சொன்ன விடயங்களிலிருந்து புலனாகின்றது.

பெற்றார், தன்னுடைய பிள்ளை கற்றலில் பின்னிற்கின்றான் என பிள்ளையை மாத்திரம் குறை சொல்வது பிழையானது. ஏனெனில் ஒவ்வொரு பெற்றாரும் தனது பிள்ளைக்குப் பொறுப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருடன் தொடர்பை வைத்திருத்தல் வேண்டும். தனது பிள்ளையின் பலம், பலவீனங்களை நன்கறிந்தவர் ஆசிரியரே. இயல்பில் எந்தவொரு பிள்ளையும் திறமையால் குறைந்தது அல்ல. அவர்களை வழி நடத்தும் ஆசிரியர்கள்தான் பிள்ளைகளின் திறமைக்குப் பொறுப்புச்சொல்ல வேண்டும்.

இதற்குச் சிறந்த உதாரணமாக ஒரு பொருளைப் பற்றிய அறிவில்லாமல் அதனைக் கையாண்டால் விரைவாக அது பழுதடைவதனைக் குறிப்பிடலாம். கற்பித்தல் பற்றிய எந்தவிதமான பின்னணி அறிவும் இல்லாது மாணவர்களைக் கையாள முன் வந்தால் அவர்கள் வெகுவிரைவில் உடைந்து செல்வார்கள். இங்கு பின்னணியறிவு என்பது பாடவிதான அறிவு அல்ல என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். அடுத்து கல்வியை வழங்குகின்ற இடம் முக்கியமானது. இது விடயத்தில் ஆசிரியருக்கு பெரிய பங்குள்ளது.
பாடசாலையின் சீரான செயற்பாட்டில்தான் சிறந்த கல்வி அமைந்திருக்கின்றது. இந்த வகையில் பாடசாலையின் நிருவாகத்தைக்கொண்டு செல்வதற்கு ஆசிரியரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. ஒவ்வொருவரும் தனக்கென சில வரட்டுத்தனமான கொள்கைகளை வகுத்துக் கொண்டு அதற்கு அணிதிரட்டி, ஒவ்வொரு அணியும் வெவ்வேறு திசையில் செல்வது ஆரோக்கியமானதல்ல. இந்நிலைமை பொதுவாக எல்லாப் பாடசாலைகளிலும் காணப்படுகின்றது. இதனால் ஓர் ஆசிரியர் மற்றவரால் விமர்சிக்கப்படுவார். இது மாணவர்களிடத்திலும் அரங்கேறும் பின்னர் ஆசிரியர்களை மதிக்காத மாணவர்களை ஆசிரியர்களே உருவாக்குகின்ற நிலைமை தோன்றும்.

எனவே ஆசிரியராக இருக்கின்ற ஒருவரிடம் சமூக சிந்தனை தேவை. தன்னுடைய சமூகத்தை நான் எங்கு வழி நடத்திச் செல்லப் போகின்றேன் என்ற தெளிவு அவரிடம் இருத்தல் வேண்டும். அதற்காக உழைப்பதற்கு தியாக சிந்தை தேவை. நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்ப முனைந்த ஒருவர் பல்வேறு விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய வேண்டி வரும். அர்ப்பணம் இந்தத் தொழிலுக்கு அத்தியவசியமாகும். கல்விக்காக தன்னை முழுதாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் மாணவர்களின் பிரச்சினை இவரது பிரச்சினையாக மாற வேண்டும்.

பகுதிநேர வியாபாரம் செய்வதில் ஈடுபட்டு ஆசிரியத் தொழிலின் பொறுப்பை சரிவர நிறைவேற்றாமலிருப்பதை விட்டும் முற்றாக விட்டு விட வேண்டும். அரசாங்கம் ஆசிரியர்களுக்கு அதிக நேரம் ஓய்வு தருவது தன்னை கற்பித்தலில் தயார்படுத்திக் கொள்வதற்காகும். இது அமானிதம். அரசாங்கத்தின் சொத்து என்பதனால் அது கருப்பட்டியாகாது. அதற்கும் பதில் சொல்ல வேண்டி ஏற்படும். எனவே ஆசிரியர்கள் அனைவரும் தனது பொறுப்பை உணர்ந்து அதில் கண்ணுங்கருத்துமாக செயற்பட்டு, ஈருலகிலும் வெற்றி பெற்றவர்களாக மாறுவதற்கு பிரார்த்திப்போம்!

நன்றி -அல்.ஹஸனாத்

What I hear I forget
What I see I remember
What I do I understand
What I explow I enjoy

**என்னை நானாக இருக்க விடுங்கள்.**
**உங்களை என்மீது திணிக்காதீர்கள்.**
**அப்படி செய்வதானால் என்னையே**
**நான் இழந்து விடுவேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணல் நபியின் அமுத மொழிகள் சில....

திருமதி.எஸ்.யு.எம்.சுல்பிகார்.
(ஆசிரியை)

- சுவர்க்கம் உயர்ந்த கோட்டை மதில்களால் சூழப்பட்டுள்ளது. அதனுட் செல்ல பயன்படுத்தப்பட வேண்டிய திறவு வணக்கம் ஒன்றே"
- "சுவர்க்கம் தாயின் பாதங்களுக்குக் கீழ் இருக்கிறது"
- "நல்லவன் என்று நாடு மதிக்க வேண்டுமாயின் உனது நாவைப் பேணிக்கொள்"
- "தீய நண்பனை விட தனித்திருப்பது நன்று. தனித்திருப்பதை விட நல்ல நண்பன் நன்று"
- "ஒருவர் ஒரு நற்காரியம் புரிய எண்ணி அதை செய்யாவிட்டாலும் அவருக்கு ஒரு நன்மை உண்டு"
- "தர்மவான் அல்லாஹ்வுக்கு நெருங்கியவன், சுவர்க்கத்துக்கும் நெருங்கியவன்"
- "தர்மம் செய்துவிட்டு அதைப்புகழாகச் சொல்லிக்காட்டுவோன் சுவர்க்கம் புகமாட்டான்"
- "கல்வியறிவற்றவனுக்கு கல்வி போதிப்பது சிறந்ததொரு தர்மமாகும்"
- "மிக அன்புடனும், பன்புடனும் உங்கள் குழந்தைகளுக்குக் கல்விப் பால் ஊட்டுங்கள்"
- "தீமைகளில் மிகக் கொடியது கற்றறிந்த அறிஞர்களின் தீமையாகும்"
- மரணம் எனும் இழப்புக்கு முன் வாழ்க்கை எனும் நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்"
- "உடலிலிருந்து உயிர் நீங்கினும் அல்லது எரிந்து சாம்பலாவதாயினும் இறைவனுக்கு இணைவையாதீர்"
- "பொறுமை நற்குணங்களுக்கெல்லாம் வித்தாகும்"
- "உலக செல்வங்களுக்கு மிகச் சிறந்த செல்வம் ஒருவனுக்கு கிடைக்கும் நற்குணம் நிறைந்த மனைவியாவாழ்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிரித்துச் சிந்திக்க......

# ஐந்து பெரிதா ஆறு பெரிதா

**வை.பி.ஹபீபுள்ளா** (ஆசிரியர்).

### மனிதசாதி

01. ஒரு மாணவனுக்கு ஒரு விடயத்தை குறிப்பிட்ட அளவு சொல்லிக் கொடுத்தாலும் அவன் நூறு வீதம் விளக்கத்தைப் பெறமாட்டான்.
02. ஒருவனுக்கு செல்வம் ஏற்பட்டால் அதை மறைத்து மற்றவர்களுக்கு இல்லை என்றும், தான் மட்டும் அனுபவிப்பான்.
03. மனிதவாழ்வில் சாதிபேதம், தலைமைத்துவ தலை வீக்கம், மலிந்து காணப்படும்.
04. பிறருக்கு நிகழும் துன்பத்தைக் கண்டு மனிதன் மகிழ்ச்சி அடைகின்றான். (தெருச்சண்டை கண்ணுக்கு குளிர்ச்சி).
05. நிரந்தரமற்ற இப்பூமியில் நிரந்தரமாக போராட்டம் நடத்துகின்றான்.
06. அதிகாலையில் எழுந்திடாமல் மனிதன் பொழுது விடிந்த பின்பும் தூங்குகின்றான்.
07. உழைக்காமல் சோம்பேறியாய் இருந்து பிறர் உழைப்புக்கு தப்புக்கணக்குப் போட்டு பிறர் உழைப்பை பட்டப்பகலில் சுரண்டுவதற்கு விரும்புகின்றான். அடிமை தொடக்கம் அரசன் வரை (தற்காலத்தில் இவ்விடயம் நடைமுறையில் உண்டு)
08. வயது முதிர்ந்த பெற்றோரை ஒதுக்கி வாழ்கின்றான்.

### மிருக சாதி.

01. கிளி ஒன்றிற்குச் சொல்லிக் கொடுத்தவற்றை போன்று கூறும். அவ்வாறே குரங்கு ஒன்றக்கு கற்றுக் கொடுக்கும் விளையாட்டை அது அப்படியே செய்யும்.
02. ஒரு காகத்திற்கு உணவு கிடைத்தால் எல்லா காகங்களையும் அழைத்து அதன் ஒற்றுமையை நேரடியாகக் காட்டும் ( இவ்விடயத்தை இன்று கானலாம்.)
03. காட்டு விலங்குகளுக்கு ஒரே தலைவன். அவற்றிற்க்கு சாதிமத பேதம் இல்லை.
04. ஒரு காகம் ஆபத்தில் சிக்கினால் ஏனைய காகங்களும் அனுதாபப்படுவதைக் காணலாம்.
05. ஒரே தரத்திலுள்ள பல நூறு வௌவால்கள் ஒற்றுமையுடனும் சந்தோசத்துடனும் தூங்குவதை இன்று கணலாம்.
06. நாய் ஒன்று தனக்கு உணவளிப்போரை நன்றியுணர்வோடு பழகுவதைக்காணலாம்.
07. எறும்புகள் சுறுசுறுப்புடன் இயங்கி ஒற்றுமையாய் உணவு சேர்ப்பதைக் காணலாம்.
08. தேனீக்கள் ஒரே தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு இயங்குவதைக் காணலாம்.
09. சேவல் அதிகாலையில் துயில் எழுந்து தனது உணவுகளை வெளிப்படுத்தி (எவ்வித கைமாறுகளையும் எதிர்பாராது) தூங்கும் மனிதர்களுக்கு விழிப்பூட்டுகின்றது.
10. வீட்டின் வளர்ப்புப் பிராணிகள் தன் எஜமானுக்கு கட்டுப்படுவதைக் காணலாம்.

**குறிப்பு :-** மிருகங்களின், பறவைகளின் வாழ்வினிலும் மனித சமுகங்களுக்கு படிப்பினைகள் உள்ளன என்பதை உணர முடிகின்றதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்கள்

| | | |
|---|---|---|
| ❖ முதலாவது ஆண்டு நிறைவு விழா | - | கடதாசி விழா |
| ❖ இரண்டாவது ஆண்டு நிறைவு விழா | - | பருத்தி விழா / பஞ்சு விழா |
| ❖ ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா | - | இரும்பு விழா |
| ❖ பத்தாவது ஆண்டு நிறைவு விழா | - | நகர விழா |
| ❖ இருபதாவது ஆண்டு நிறைவு விழா | - | சீனக் களிமண் விழா |
| ❖ இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா | - | வெள்ளி விழா |
| ❖ ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா | - | பொன் விழா |
| ❖ அறுபதாவது ஆண்டு நிறைவு விழா | - | மணிவிழா / வைர விழா |
| ❖ எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா | - | பவள விழா |
| ❖ எண்பதாவது ஆண்டு நிறைவு விழா | - | அமுத விழா |
| ❖ நூறாவது ஆண்டு நிறைவு விழா | - | நூற்றாண்டு விழா / சகாப்த விழா |

***தொகுத்தவர் : அப்துல் ஜப்பார் பர்ஹான் நாஸிர்***

# நினைவில் வைத்திருக்க

- மிக மிக நல்ல நாள் - இன்று
- மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
- மிகவும் வேண்டியது - பணிவு
- மிகப் பெரிய தேவை - நம்பிக்கை
- மிகக் கொடிய நோய் - பேராசை
- மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
- கீழ்த்தரமான விடயம் - பொறாமை
- நம்பக் கூடாதது - வதந்தி
- ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
- செய்யக் கூடாதது - நம்பிக்கைத் துரோகம்
- செய்யக்கூடியது - உதவி
- விலக்க வேண்டியது - சோம்பேறித்தனம்
- உயர்வுக்கு வழி - உழைப்பு
- நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு
- பிரியக் கூடாதது - நட்பு
- மறக்கக் கூடாதது - நன்றி

தொகுத்தவர்
**எஸ். எப். சப்சானா**
(தரம் 6A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் முன்னேற நேர அட்டவணை உதவும்.

தற்கால அவசரயுகத்தில் மனிதன் அனேக விடயங்களில் திருப்தியடைந்து கொண்டாலும் ஒரேயொரு விடயத்தில் மிகவும் நப்பாசை கொண்டவனாகவும், பேராசை பிடித்தவனாகவும் இருக்கின்றோம். அதுதான் "நேரம்" இவ்விடயம் இன்று பெரியோர் முதல் சிறியோர் வரை சொல்லும் ஒரேயொரு கூற்று "நேரமில்லை" என்பதுதான். அவர்கள் இவ்வாறு கூறுவதற்கு முக்கிய காரணம் தம் வேலைகளை நேரத்திற்கேற்றவாறு பாகுபடுத்திக் கொள்ளாததும் அதன் படி இயங்காமையுமே! நான் செலவழிக்கின்ற ஒவ்வொரு கனமும், செக்கனும், நிமிடமும் பயனுள்ளதாகக் கழிய வேண்டும் என்பதை ஒவ்வொரு தனிமனிதனும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

மேலும் இறைவன் ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு விதத்திலும் வெவ்வேறு இயல்புடையவனாகப் படைத்துள்ளான். எனவே, நாம் எம்மை யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்காமலிருப்பது நல்லது. காரணம் ஒருவனுக்குச் செய்யக்கூடியது. இன்னொருவனுக்குச் செய்ய முடியாமலிருக்கும் இவனால் செய்யமுடிந்தது மற்றவனுக்குச் செய்ய முடியாமலிருக்கும் இதனை இன்னும் தெளிவுபடுத்தினால் ஒரு வகுப்பில் நாற்பது மாணவர்கள் படிக்கின்றார்கள். ஒரு ஆசிரியர்தான் அனைவருக்கும் பாடம் கற்பிக்கின்றார். அவ்வாறு இருக்க அந்த வகுப்பில்தான் முதலாவதாக வரும் மாணவனும் இருக்கிறார். வகுப்பில் கடைசியாக வரும் மாணவனும் இருக்கிறார். இதிலிருந்து மனிதர்களின் வெவ்வேறான தன்மை மேலும் தெளிவாகின்றதல்லாவா?

பல பெற்றோர் இன்றும் தம்பிள்ளைகளை அடிக்கிறார்கள் மனம் புண்படும் வகையில் திட்டுகிறார்கள் காரணம் பாடங்களில் புள்ளிக் குறவை வகுப்பில் கடைசி என்பதனால். அப்பெற்றோர்கள் ஒரு கனம் சிந்தித்துப்பார்த்தார்களா? ஏன் என் பிள்ளை குறைவான புள்ளிகளைப் பெற்றார். அவருக்கு ஏதாவது மனக்குழப்பமா? அல்லது அவருக்கு ஆசிரியர் கற்பிப்பது விளங்கவில்லையா? மேலதிக வகுப்புக்கள் போதாதா என்று பல அனுபவமிக்க வளர்ந்த பெற்றோர்களே பிள்ளையின் புள்ளிகளை பார்த்து மனம் உடைந்து போகும் போது மென்மையான உள்ளம் கொண்ட பிஞ்சுக் குழந்தைகள் எப்படி துகள்களாகிப் போவார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.

மேலும் பெற்றோர்களே பிள்ளைகளுக்கு கல்வியில் வழிகாட்டுவதோடு அவர்களுக்கு காலையிலோ, பகலிலோ, மாலையிலோ என எந்தப் பொழுதில் படிக்கும் பாடங்கள் மனதில் பதிவாகின்றன? என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். அதன்படி நேரத்திற்குப் புத்தகங்களை எடுத்துப்படிப்பதற்காகச் சூழலை ஒழுங்குபடுத்தி வழிகாட்டுங்கள். பாடங்களைப் படிக்க குழந்தைகளை வற்புறுத்தாதீர்கள். அவர்களாகப் புத்தகத்தினை எடுத்துப் படிக்கும் அளவிற்கு கல்வியின் மாண்பினைப் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.

மனிதனது வாழ்க்கைப் பருவங்களில் படிப்பதற்கானதும், கிரகித்து வைக்கக் கூடியதுமான பருவம் இளமைப் பருவம்தான் அதிலும் பள்ளிப்பருவம் என்பது மிகவும் விசேடமானது. குறித்த காலத்தினுள் நெல்லினை அறுவடை செய்தால்தான் நல்ல அரிசியினைச் சுவைத்து நலமாய் வாழ முடியும். நேரமும் காலமும் கடந்து விட்டால், அந்நெல்லில் அரிசியே இருக்காது. காலம் குறுகியது, எனவே அதனை உணர்ந்து செயற்பட்டால் வெற்றியின் உச்சிக்குச் செல்ல முடியாவிட்டாலும், இயன்றளவு வெற்றி அடைந்து வாழ்வில் ஜொலிக்கலாம்.

பலருக்கு நேர அட்டவணையொன்றை எவ்வாறு தயாரிப்பது? என்பது பெரும் தலையிடியாய் இருக்கும். அதிக சோம்பல் காரணமாக நண்பன் ஒருவனுடைய நேர அட்டவணையின்படி செயற்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிப்பார்கள். இலங்கையரில் அதாவது எம்மில் உள்ள பெரிய பலவீனம் நேரம் உதாரணமாக இலங்கையில் நடைபெறுகின்ற பொதுக்கூட்டங்களோ, போக்குவரத்து நடவடிக்கைகளோ ஏதாவது கலை விழாக்களோ சரியான நேரத்தில் நடைபெற்ற அதிசயத்தை யாருமே கண்டிருக்க மாட்டார்கள். ஓரிரு நிமிடங்களாவது தாமதித்துத் தான் இலங்கையில் கருமங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

ஆனால் நேரம்தான் யப்பானியர்களின் மிகப்பெரிய பலமாகும். இலங்கையர்கள் நேரத்துக்கு இயங்குவதில்லை. நேர முகாமைத்துவத்தின் கீழ் செயற்படுவதில்லை என்பதுதான் எம்மிலும் பெரும் குறை என்றாலும் அதுவே யப்பானியர்களின் நிறை எனலாம். அதாவது அவர்களிடம் காணப்படுகின்ற தன்மையும் நேரத்துக்கு ஏற்ப இயங்கும் திறமையும் தான் அவர்களை இன்று கப்பலில் விவசாயம் செய்யுமளவிற்கு உயர்த்தியுள்ளது. மேலும் யப்பான் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் சிதையுண்ட நாடு என்பதையும் மறந்துவிடலாகாது.

எனவே இதிலிருந்து நேரத்தின் மாண்பு புரிகின்றது மட்டுமல்லாது ஒருவரின் தலை எழுத்தையும் மாற்றக் கூடிய வல்லமையும் நேரத்துக்கு உண்டு என்பதையும் அறிந்து கொள்ளலாம். மாணவ மணிகளே ஒரேயொரு வாக்கியத்தினை உங்கள் வாழ்வினில் எப்போதுமே மறவாதீர்கள். அதனை நினைக்க நினைக்க சாதிக்க வேண்டும் என்ற வெறி உங்களுக்கு அதிகரித்துக் கொண்டே செல்லும். அதனை ஒவ்வொரு மாணவர்களும் மனிதில் நிறுத்திச் செயற்பட வேண்டும். அவ்வாக்கியம். “நான் செலவழிக்கின்ற ஒவ்வொரு செக்கனும் என் பெற்றோரின் இரத்தத்துளிகள்” என்பதுதான். எனவே இன்றே நீங்களும் படிக்கும் பொழுதினை இனம் கண்டு கொண்டு இன்றே நேர அட்டவணையை தயார் செய்யுங்கள். அதன்படி படியுங்கள். பரீட்சையில் மட்டுமன்றி வாழ்விலும் வெற்றியடையலாம். அதற்கு என் உள்ளங்கனிந்த நல்லாசிகள்.

நன்றியுடன்
**ஏ.எஸ்.றுக்ஸானா பானு**
**(தரம் – 8B).**

# வாழ்க்கை

- வாழ்க்கை ஒரு சந்தரப்பம் எனவே அதை நழுவ விடாதீர்கள்.
- வாழ்க்கை ஒரு வெகுமதி அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.
- வாழ்க்கை ஒரு சவால் அதை எதிர்நோக்குங்கள்.
- வாழ்க்கை ஒரு விடுகதை அதற்கு விடை காணுங்கள்.
- வாழ்க்கை ஒரு போட்டி அதை வெற்றி கொள்ளுங்கள்.
- வாழ்க்கை ஒரு கலை அதை அழகுபடுத்துங்கள்.
- வாழ்க்கை ஒரு வரம் அதை சிறப்புற நடத்துங்கள்.

தொகுத்தவர் :
**எம்.ஏ.எம்.சப்னாஸ்**
**(தரம் – 7A)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்பிரெட் நோபல்

இப்பரந்த உலகின் மிக கௌரவமிக்க உயர்ந்த பரிசு எது என்பது உங்களுக்குத் தெரியும். அது நோபல் பரிசு என்பதாகும். நோபல் பரிசுகள் என்பது, மருத்துவம், விஞ்ஞானம், சமாதானம், இலக்கியம், பௌதீகம் இவற்றில் மகத்தான சாதனைகள் புரிந்தவர்களைக் கௌரவித்து ஆண்டு தோறும் வழங்கப்படும் மிகப் பெரும் தொகையாகும். பல ஆயிரம் பவுன்கள் நோபல் பரிசாக வழங்கப்பட்டு வருகின்றன. இது உருவான ஏற்பாடு விதம் மிகச் சுவாரசியமான ஒன்று ஆகும்.

நினைத்துப் பார்க்க முடியாத பேரழிவை உண்டாக்கும் பொருளை ஒரு விஞ்ஞானி மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்காகத்தான் கண்டுபிடித்தார். காடு மேடுகளை அழித்து நிலத்தைப் பண்படுத்தி, தொழிற்சாலைகள் உருவாக்கவும் ஏற்றதாகச் சமப்படுத்தவும் பழைய கட்டிடங்களைப் பல நாட்கள் பல நூறு ஆட்களை வைத்து பாடுபட்டு இடிக்கும் சிரமத்தைக் குறைத்து ஒரு சில விநாடிகளில் அதைத் தகர்த்து தரை மட்டமாக்கவும், மலைகளைத் தகர்த்துக் குடைந்து பாதைகளை அமைக்கவும் இப்படிப் பற்பல நன்மை பயக்கும் உபயோகத்திற்கான இவரது கண்டு பிடிப்பை மனிதன் தவறான வழிகளிலும் பயன்படுத்தலானான். போர்க்களத்தில் தன்னுடைய எதிரிகளைக் கொன்று குவித்து தான் வெற்றிபெற அதைப்பயன்படுத்தினான். இதன் காரணமாக மனித இனம் தன்னை வெறுக்கும், சபிக்கும் என்பதை எண்ணி அந்தக் கண்டு பிடிப்பாளர் விஞ்ஞானி மனம் நொந்து தவித்தார்.

தான் கண்டு பிடித்த அந்த அழிவுச் சக்தியினால் தனக்கு ஏற்பட்ட களங்கத்தை அவப்பெயரைத் துடைக்கத் தீர்மானித்து தனது கண்டு பிடிப்பால் தனக்குக் கிடைக்கும் மகத்தான செல்வத்தை மனித சமுதாயத்திற்கு நன்மை புரிபவர்களுக்கு அவர்கள் எந்த இனத்தவரானாலும், மதத்தவரானாலும், தேசத்தவரானாலும் சரி அளிக்க 'டிரஸ்ட்' நிறுவினார். ஆண்டு தோறும் ஐந்து நோபல் பரிசுகள் பெருந்தொகையாக அதன் நிதியிலிருந்துதான் வழங்கப்படுகின்றன.

இந்த ஏற்பாட்டுக்கு அவர் விட்டுச் சென்றுள்ள முதல் எவ்வளவு இருக்கும் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள்! மகத்தான மாபெரும் பரிசுகளை நிறுவியது யார்? அப்படி அவர் கண்டுபிடித்தது என்ன? அல்பிரெட் நோபல் என்பவர்தான் அவர். அவர் கண்டு பிடித்தது என்ன? டைனமைட் என்னும் வெடிபொருள் ஆகும். அவரது பெயராலேயேதான் அப்பரிசுகள் - நோபல் பரிசு என்று வழங்கப்படுகின்றது.

தொகுத்தவர் : **ஆர். றஸ்கான்**

**(தரம் – 10A)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாகவும், தீயவனாகவும் அன்னை வளர்ப்பினிலே என்கிறது திரைப்பாடல். பரந்த இந்நிலவுலகில் சிறப்பும் பிறப்பும் சகசம். வாழ்க்கை என்பது சுழல் சக்கரம் போல் உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் ஒரு குழந்தை பிறக்கின்றது. அவன் பிறக்கும் போதே நல்லவனாகவே பிறக்கின்றான். அவன் வளரும் போது பல்வித வடிவங்களிலே வளர்ச்சி பெற்று நல்லவனாகின்றான், அறிஞனாகின்றான், உத்தமனாகின்றான், தலைவனாகின்றான். எனவே அவனது குழந்தைப் பருவத்திலேயே அவனது வளர்ப்பே அவனது உயர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றது. அங்ஙனம் வளர்ச்சி பெறும் ஒருவன் சிறுவனாகி, இளைஞனாகி, தலைவனாக மலர்கின்றான். இக்கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது இன்றைய சிறுவர்கள் அனைவரும் நாளைய தலைவர்கள் என்று கூறிவிட முடியாது.

வளரும் பயிர் அதன் வளர்ச்சிப் பருவத்தில் பூச்சி, புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்று கருகிப் போவதுண்டு. இதே போன்று வளரும் பருவத்திலே சிறுவர்கள் அத்தகைய தாக்கத்தினை அடையாது நல்லவர்களாக, ஒழுக்கம் உடையவர்களாக வளர்க்கப்பட வேண்டும். கல்வியும் ஒழுக்கமுமே இதற்கு அடிப்படை அமைவாகும். நல்ல கல்வியறிவினால் பெறும் சிறுவன் நல்லொழுக்கம் உள்ளவனாகத் திகழ்வான். இங்ஙணம் கல்வியும் ஒழுக்கமும் அமையப்பெறும் சிறுவர்கள் நாளைய தலைவர்களாகத் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய சூழ்நிலையில் சிறுவர்கள் பலர் பல்வேறு தாக்கங்களுக்குள்ளாகிறார்கள். படித்தும் வேலை வாய்பின்மை. தகுந்த தலைமைத்துவம் இன்மை. அரசியல் குழறுபடிகள் என்பவற்றால் விரக்தியின் விளம்பு நிலைக்குத் தள்ளப்படுவதை நாம் நிதர்சனமாகக் காண முடிகிறது. எனினும் வேதனைகளைச் சாதனைகளாக மாற்றி சரித்திரம் படைத்திட்ட சிறுவர்கள் சிலரையும் நாம் காண முடிகிறது.

இளமையிலேயே இலட்சிய நோக்குடன் குறிக்கோளுடன் சிறுவர்கள் வல்லவர்களேயானால் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். நல்ல இலட்சியங்கள் நல்ல வழியைக் காட்டும். அவர்களது இலட்சிய வேட்கையும், விடாமுயற்சியும் அவர்களது குறிக்கோளை எய்துவதற்குத் துணை செய்யும் சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கல்லூரிகளில் கற்கும் காலத்திலேயே தலைமைத்துவப் பண்புகளை கற்றுக் கொள்ளுகின்றார்கள். மாணவமன்ற கூட்டங்களுக்கு தலைமை தாங்கும் போதும், விளையாட்டு மைதானங்களில் விளையாட்டு அணிகளுக்குத் தலைமை தாங்கும் போதும், மாணவத் தலைவராக செயற்படும் போதும் தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்ளுகின்றார்கள்.

சாரணர் இயக்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம், நலன்புரி அமைப்பு சமூக அமைப்பு, செஞ்சிலுவை சங்கம் என்ற சமூக இயக்கங்களில் பங்கு கொள்வதன் மூலமும் சிறுவர்கள் நல்ல பண்புகளைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வரலாற்றிலே ஒளிபடைத்த தலைவர்களாக பின்னிக் கொண்டிருக்கும் தலைவர்கள் பலரை நாமறிவோம். அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பின் அவர்கள் இளமை முதலே கொண்ட குறிக்கோளை எய்துவதற்காக அல்லும் பகலும் அயராது முயன்றுள்ளமையைக் காணலாம். அவர்கள் இளமைப் பருவத்தில் கொண்ட இலட்சிய வேட்கையை இறுதியில் போற்றும் தலைவர்களாக அவர்களை உருவாக்கியதென்பதை உணர்த்திட முடியும். மகாத்மா காந்தியடிகள், ஆபிரகாலிங்கம், வின்சன் நெப்போலியன் போன்றோர் இதற்கு ஏற்ற எடுத்துக் காட்டுகளாகும்.

மனிதராகப் பிறந்தவன் எவர்க்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோள் அற்றவர் மாணவர்களுக்குச் சமனானவர். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ்வோன் என்ற இலட்சியமுடையவர்களே வாழ்வில் வெற்றி காண முடியும். இத்தகைய குறிக்கோள் கொண்ட சிறுவர்கள் வாழ்வில் நன்னிலை பெறுவர். கெட்டவன் என்று பெயர் பெறுவது மிகவும் எளிது. ஒரு சில நிமிடங்களிலே அப்பட்டத்தை பெற்றிடலாம். ஆனால் நல்லவன் என்று பெயர் பெறுவது மிகவும் கடினம். எனவே சிறுவர்கள் வாழ்வில் நல்லவன் என்ற பெயரினைப் பெற முயல வேண்டும். நல்லவன் என மக்கள் போற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழும் இளைஞர்கள் நாளைய தலைவராவது திண்ணம்.

எனவே இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக மிளிரவேண்டுமாயின் அவர்கள் நற்கல்வியும், அறிவும், ஒழுக்கமும், பிறர் நலம் பேணும் பணிவும் உள்ளவர்களாகவும் நல்ல குறிக்கோள் படைத்தவர்களாகவும் திகழ வேண்டியது மிக மிக அவசியமாகும். நாளைய தலைவர் தகுதி அவர்களுடைய வாழ்க்கை நெறியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. என்பதை மறக்கக் கூடாது.

**ஏ.எம்.முபைஸ்**
(உ/த கலைப்பிரிவு)

# சுத்தம் சுகம் தரும்

*தெருவில் குப்பை கொட்டாதீர்*
*தெரிந்தும் தவறு செய்யாதீர்*
*அழுக்கைத் தினமும் சேர்க்காதீர்*
*அவற்றில் நோயைப் பெருக்காதீர்*
*ஈயும், கொசுவும் பெருகுவதால்*
*என்றும் கெடுதி உண்டாகும்.*
*அழுக்கில் அமரும் ஈக்கள்தான்*
*அனேக நோய்களைப் பரப்பிடும்*
*குப்பைத் தொட்டியில் எந்நாளும்*
*கூடும் தெருவும் சுத்தமாய்*
*விளங்கும் நோய்கள் பரவாது*
*சூழல் சுத்தம் பேணிட்டால்*
*சுகமாய் என்றும் வாழ்ந்திடலாம்*
*சுத்தம் தரும் என்பதையே*
*நித்தம் நித்தம் மறவாதே.*



ஆக்கம் : **என்.எப்.றூஹினா** (தரம் - 4A)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனமா அது ஒரு சிறை ஒழிக!

கலைந்து போன
கனவுகளுக்குள்
கண்ணீர்த் துளிகள்
செதுக்கிய
சிற்பங்கள் இவை.....

கன்னிப் பெண்ணவள்
களங்கமில்லாதவள்
கனவுகளும் அவளைக்
காண ஆசைப்படும்
பாவம் - முடிகள் நரைத்தும்
இன்னும்
கன்னியாய்க் காத்திருக்கிறாள்.......

அவள் வாழ்வில்
எத்தனை எத்தனை
திருநாட்கள்
தொலைந்துபோன
ஒரேயொரு
திருமண நாளைத் தவிர
காரணம்
சீதனம்
சீ என்ன
தனது பெண்ணிடம்
வாங்கித் தின்னும்
பிச்சைக்காரத்தனம்

மனிதா!
இன்றுவரை உன்னை
மணமகனாய்தான் - நான்
நினைத்திருந்தேன்
தவறு



நீ
பணமகன்
பணத்திற்காய் பிறந்தவன்
கையெடுத்துக் கேட்கிறேன்
ஆண்மையை
இழிவுபடுத்தாதே!

ரோஜாச் செடிக்கு
வரும் வண்டுகள் கூட
செடியின் முற்களைப் பார்ப்பதில்லை - நீ
மட்டும் ஏன்
பூவுக்குள் முள்
தேடுகிறாய்?

சமுதாயம் சாக்கடைக்குள்
தத்தளிக்கின்றது
சல்லடைகளற்றதாய்
சத்தியத்திலும்
சங்கமிக்கின்றது.

சீதனத்தை நீ சிறை வை
அப்போதுதான் - சமூகம்
தலை நிமிர்ந்து
நடக்கும்!

எஸ்.எம்.இர்சாட்
(லொஜிக் ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெரியுமா?

ஆ.ஐ.மாஹிர் B.B.A, (Hons)
(ஆசிரியர்)

☞ தேன்கூட்டில் சுமார் எத்தனை தேனீக்கள் வரை வசிக்கும் தெரியுமா?
அது சுமார் 50000 தேனீக்கள் வரை வசிக்கும்.

☞ இலங்கை வரலாற்றில் முதன் முதலாக மிருகங்களை "சூ" அமைத்த அரசன் யார் தெரியுமா? தேவ நம்பியதீசன்.

☞ சுதந்திர சிலை பற்றித் தெரியுமா?
இது ஒரு கையில் தீபமும் மறுகையில் சட்டமும் காணப்படுகின்றது. இது அமரிக்காவின் 1924 இல் தேசிய சின்னமாக காணப்பட்டது. லிபேர்ட்டி ஐலன் தீவில் அது காணப்படுகிறது. இதை உருவாக்கியவர் "அகஸ்டி பார்த்தோல்டி"

☞ தோமஸ் அல்வா எடிசன் எத்தனை விடயம் கண்டு பிடித்தார் தெரியுமா? 1093

☞ ஶ்ரீ இலங்காபிமானி ஜனாதிபதி விருது பெற்றவர்கள் யார் தெரியுமா?
1. ஆதர் சி கிளார்க். 2. லக்ஸ்மன் கதிர்காமர் (மறைவு).

☞ "பறவைக்காய்ச்சல் மகாநாடு" பற்றித் தெரியுமா? 21 பசுபிக் நாடுகள் சேர்ந்து பறவைக்காய்ச்சல் மகாநாடு தென்கொரியாவில் பூசான் நகரில் நடைபெற்றது. இந்நாடுகளின் கூட்டமைப்பை "எபெக்" எனக் கூறப்படுகின்றது.

☞ அண்மையில் மிதக்கும் நூலகம் கொழும்பு துறைமுகத்திற்கு வந்தது. அதன் பெயர் தெரியுமா? அது ரூவோஸ்.

☞ உலகின் புகழ் பெற்ற ஓவியரைப்பற்றித் தெரியுமா?
அவர் லியனார்டோ டாவின்ஸ் ஆகும். அவர் ஒரு கையில் ஓவியம் வரைந்தும் மறுகையில் எழுதும் ஆற்றலைப் பெற்றவர்.

☞ றொட்டி நாடு எது என உங்களுக்கு தெரியுமா?
அது ஸ்கொட்லாந்து ஆகும்.

☞ நீரை உறுஞ்சிக்குடிக்கக் கூடிய பறவை தெரியுமா?
புறாவாகும்.

☞ ஆகக்கூடிய பதிப்புரிமை பெற்ற புத்தகம் எது தெரியுமா?
கின்னஸ் புத்தகம்.

☞ தமிழில் தோன்றிய முதலாவது குழந்தைப் பத்திரிகை எது தெரியுமா?
பாலதீபிகை (1840)

☞ உலகின் முதல் தமிழ் புத்தகம் எது தெரியுமா?
அது வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ எல்லாத்தகவல்களையும் உள்ளடக்கிய உலகின் முதல் கலைக் களஞ்சியம் வெளியான மொழி எது தெரியுமா? அது பிரேஞ் மொழியாகும்.

☞ உலகின் முதலாவது கலண்டரை உருவாக்கியவர் யார் தெரியுமா?
அது ஜோர்ஜ் கிரிகிரி.

☞ அச்சிடுவதற்கு மிகக்கடினமான எழுத்துக்கள் உள்ள மொழி எது தெரியுமா?
அது காஸ்மீர் மொழியாகும்.

☞ அதிகமான மொழிகள் பேசப்படும் நாடு எது தெரியுமா?
பாப்புவா நியுகினயா.

☞ ஷேக்ஸ் பியரிடம் காணப்பட்ட ஒரு விசேசம் தெரியுமா?
எந்தவொரு நாடகத்தைப் பற்றிக் கேட்டாலும் அதை அப்படியே முழுவதையும் பிழையின்றிக் கூறுவார்.

☞ 2010 இல் உலகில் உதைப்பந்தாட்டப்போட்டி எங்கு நடைபெறும் தெரியுமா?
தென்னாபிரிக்காவில்.

☞ உலகிலே அதிக விடுமுறை வழங்கியிருக்கும் நாடு எது தெரியுமா?
இலங்கைதான் இதன் படி 167 நாட்கள் விடுமுறையாகும் 198 நாட்கள் வேலைநாட்களாகும்.
யப்பானில் 21 நாட்கள் மட்டுமே விடுமுறையாகும்.

☞ சிங்கள சினிமா உலகில் புகழ் பெற்ற நடிகராக, கதாசிரியராக, பாடாசிரியராக இயக்குனராக இருந்தவர் யார் தெரியுமா?
காமினி பொன்சேகா ஆவார். (மறைவு)

☞ உலகின் மிக உயரமான பாலம் எது தெரியுமா?
மில்லாப்பாலமாகும். (1115 அடி) 340 மீற்றர் இது பிரான்சில் உள்ளது.

☞ கடலால் உலகத்தை வலம் வந்தவர் யார் தெரியுமா?
ஜேம்குக்.

☞ பிரபல உதைப்பந்தாட்ட நட்சத்திரம் யார் தெரியுமா?
டியாரோ மரடோனா (ஆர்ஜன்தீனா)

☞ சிலோன் என்ற பெயர் எந்த ஆண்டில் வந்தது தெரியுமா? 1972

☞ 100,000 மேற்பட்ட தாவரங்கள் காணப்படுகின்ற பூங்கா எது தெரியுமா?
பேராதனை பூங்காவாகும்.

☞ அம்பர்க்கிஸ் என்ன தெரியுமா?
திமிங்கிலத்திலிருந்து எடுக்கப்படும் பதார்த்தமாகும். இது வாசனை தயாரிப்பதற்காக எடுக்கப்படும் பதார்த்தமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ இனிப்பும் புளிப்பும் காணப்படும் இரசாயன மூலப்பொருள் எது தெரியுமா?
கந்தகம்.

☞ முதல் தடவை மூங்கில் தடிகளைக் கொண்டு எண்ணைக் கினறு தோண்டிய நாடு எது தெரியுமா? சீனா.

☞ இலங்கையில் தாள் நாணயம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது தெரியுமா? 1885

☞ பூச்சியத்தை உலகிற்கு வழங்கிய நாடு எது தெரியுமா? இந்தியா.

☞ உலகின் நாலு வரி தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது தெரியுமா?
ஜப்பான்.

☞ மூன்று இதயம் கொண்ட கடல் வாழ் உயிரினம் எது தெரியுமா? ஆக்டோபர்.

☞ குளோனிங் மூலம் உருவாக்கப்பட்ட குரங்கின் பெயர் எது தெரியுமா?
டெட்ற்றா.

☞ இந்தியாவின் ஜனாதிபதி அப்துல் கலாமினால் உருவாக்கப்பட்ட அணுவாயிதங்களின் பெயர் எது தெரியுமா?
அக்கினி, திருசூல், பிரித்வி, ஆக்காஷ், நாக.

☞ 2008 இல் ஒலிம்பிக்கின் தொனிப்பொருள் எது தெரியுமா?
ஒரே உலகம் ஒரே கனவு.

☞ பவளப் பாறைகள் இலங்கையில் அழிந்து கொண்டிருக்கிறது. இவ் அழிவுக்கு காரணமான இயற்கைத் தாவரம் எது தெரியுமா? மேங்றோ பொறஷ்ற்

☞ பவளப் பாறைகள் எவ்வளவு தூரம் நீருக்குள் சூரியனின் சக்தியைப் பெறும் என்று தெரியுமா? 91 மீற்றர் / 300 அடி

☞ ஏசியன் பசுபிக் நாடுகளின் 90 வீதமானோரின் உணவு மீன்களினாலேயே நிறைவு செய்யப்படுகின்றது. ஆனால் உலகின் எத்தனை சதவீதம் மின்கள் விரையமாகின்றது என்று தெரியுமா? 30 வீதம்.

☞ மருதானை சாஹிறா கல்லூரியை நிறுவியவர் யார் தெரியுமா?
அறிஞர் சித்திலெப்பையாகும்.

☞ பூமியின் நுரையீரல் என கருதப்படும் காடு எது தெரியுமா?
பிறேசிலின், அமேசன் காடு.

☞ ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை எப்போது அங்கத்துவம் பெற்றது தெரியுமா?
1955.12.14.

☞ உலகின் சுரங்கப்பாதையில் மிகவும் நீளமானது எது தெரியுமா?
அது ஆல்ப்மலையை குடைந்துசிம்லான் குடைவழிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இது இத்தாலி சுவிட்சிலாந்து நாடுகளுக்கிடையில் இணைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் வசமாகும்.

வாழ்வு என்பது நம்பிக்கைகள், கனவுகள், ஆசைகள், தனிமை, தாகம் என பல பிணைப்புகளால் இணைக்கப்பட்டது. நம்பிக்கை என்னும் கயிற்றை பிடித்தவனாக மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். சில வேளைகளில் நம்பிக்கை ஆயிரம் தோல்விகளைக் கொண்டு வந்து கொடுக்கின்றது. ஆனால் தோல்விகள் வந்தது என்பதற்காக நாம் வாழ்க்கையை தோற்றிவிட்டதாக எண்ணக் கூடாது.

*"ஒருவர் கனவு கண்டால்*
*அதை தினம் முயன்றால்*
*ஒரு நாளில் நிஜமாகும்"*

ஒவ்வொரு தோல்வியும் வெற்றியின் படிக்கற்கள் என்று கூறும் வார்த்தை பொய்யானதல்ல காரணம் நாம் ஒவ்வொரு முறையும் தோல்வியுற்றதற்கான காரணங்களும் அனுபவங்களும் நம் வாழ்வில் முன்னோக்கிச் செல்லும் போது எமக்கு உறுதுணையாக இருந்து நிகழ்காலத்தை வென்றிடச் செய்கிறது. நாம் தோல்வி கண்ட அனுபவங்கள் நிலையானதானாலும் அவை இறந்தகால நினைவுகள் இறந்துவிட்ட நிகழ்வுகள்.

தோல்வி ஒரு புற்றுநோயல்ல. எம்முடன் காலாகாலம் ஒட்டியிருக்கும் கனவுகளையும் கொண்ட ஆசைகளையும் அது மண்ணாக்கி விட்டாலும் இன்னும் புதுப்புது ஆசைகளையும் கனவுகளையும் உண்டாக்கி வாழ்க்கைக்கு ஓர் இலட்சியத்தையும், தைரியத்தையும், முயற்சியையும் தந்து வாழ்விற்கே ஓர் புது அர்த்தத்தையும் தோல்வி நிச்சயமாக ஓர் மனிதனுக்கு உண்டாக்கத்தான் செய்கிறது. நிச்சயமாக இவற்றை ஓர் மனிதன் தோல்வியால் பெற்றுவிட்டால் அதுவே வாழ்க்கையில் முதல் வெற்றி

நேருவும் காந்தியும் அவர்களது சிறு தோல்விகளைக் கண்டு ஒதுங்கியிருந்தால். இன்று உலகமே பாராட்டும் தலைவர்களாக அவர்கள் இருந்திருப்பார்களா? இல்லை சிறிய குருவிக் குஞ்சு பறக்க முயற்சிக்கும் போது விழுந்ததற்காக பறக்கும் முயற்சியை கைவிட்டால் இன்று அது உயிர் தான் வாழுமா?



*"தோல்வி இன்றி வரலாறா*
*துக்கம் என்ன எம் தோழா*
*ஒரு முடிவிருந்தால் அதில் தெளிவிருந்தால்*
*அந்த வானம் வசமாகும்"*

**சிந்தித்துப்பாருங்கள் ஆயிரம் அர்த்தங்கள் புரியும்.**

நன்றியுடன்
**எம். முஸ்தகீமா**
**(தரம் – 8B)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடல் இயக்கக் குறைபாடுகள் உள்ள பிள்ளைகள்.

கே.எல்.எம்.சுல்பிகார்
(ஆசிரியர்).

உடலின் தசைப்பாகங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பல்வேறு தொழிற்பாடுகளைச் செய்யும் திறனை உடல் இயக்கத்திறன் எனலாம். நடத்தல், ஓடுதல், எறிதல், எழுதுதல், வரைதல், ஒரு பிள்ளையைப் பிடித்தல் போன்றவைகள் இத்தொழிற்பாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டுகளாகும். இத்தொழிற்பாடுகளைச் செய்வதற்குத் தசை நார்களினதும் அவற்றின் தொழிற்பாட்டுக்கு அவசியமான கட்டுப்படுத்தும் சக்தியும், இயைபாக்கமும் தேவைப்படுகின்றன.

அதாவது உடலியக்கங்களைச் செய்யும் ஆற்றல் உடலின் பல்வேறு பாகங்களைக் கட்டுப்படுத்திச் செயற்படுத்தும் ஆற்றலிலேயே தங்கியுள்ளது. இது கட்டுப்படுத்தும் ஆற்றல், உடல் உறுப்புக்களினதும் தசை நார்களினதும் விருத்திக்கேற்ப உடலியக்கத்திறனும் விருத்தியடைந்து செல்கின்றது. இவ்வாறு ஒரு பிள்ளையிடம் ஏற்படும் விருத்தியை உடலியக்கத் திறன்களின் விருத்தி எனக் குறிப்பிடலாம்.

உடல் உறுப்புக்கள் தசைநார்களில் ஏற்படும் வளர்ச்சியானது வயது அதிகரிப்புடன் ஏற்பட்டுச் செல்வதால் உடல் இயக்கத்திறன்களும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறைப்படி இவ்வளர்ச்சிக்கேற்ப விருத்தியடைந்து செல்கின்றது. உதாரணமாக இரண்டு மாதக் குழந்தை ஒரு புறத்தில் இருந்து பின்புறமாகப் புரளும். 3 மாதமளவில் குப்புற இருக்கும் போது தலையை நிமிர்த்தும். 3 - 4 மாதமளவில் கண் தசைகளைப் பிரயோகித்து அசையும் பொருட்களைக் காணும் ஆற்றலைப் பெறும். உதட்டின் தசைகளைக் கட்டுப்படுத்திச் சிரிக்கும். வாயினால் ஒலியை எழுப்பும் 9 ஆம் மாதமளவில் தவழும், 10 ஆம் மாதமளவில் ஆள் உதவியுடன் நடக்கும்.

14 ஆம் மாதமளவில் உதவியின்றி நடக்கத் துவங்கும். 18 ஆம் மாதமளவில் நடந்து திரியும், ஓடும், பாயும், புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும், பற்றிப்பிடித்து பென்சிலால் கண்டபடி கீறும், 24 ஆம் மாதமளவில் உரிய முறையில் விரல்களினால் பென்சிலைப் பிடிக்கும். கால் விரல்களினால் நடக்கும். 3 ஆம் வருடமளவில் ஓடுதல், எறிதல், பாய்தல் போன்ற செயற்பாடுகளில் விரும்பிச் செயற்படும். இவ்வாறு வயது அதிகரிக்க உடலியக்கத் திறன்கள் ஒழுங்கு முறையாக வளர்ச்சியடைந்து 9 ஆம் - 12 ஆம் வருடம் வரையுள்ள காலத்தில் உடலை இலகுவாகக் கட்டுப்படுத்தி பல்வேறு திறன்களைப் புரியும் ஆற்றலை பிள்ளை பெறுகின்றது.

சராசரியாக பிள்ளையின் வளர்ச்சிப் போக்கில் இவ்விருத்தி மட்டங்களை நாம் அவதானிக்க முடியும். தரப்பட்ட வயது மட்டங்கள் பிள்ளைக்குப் பிள்ளை மாறுபட்டு அமையவும் முடியும். எனினும் இயக்க விருத்தி ஒழுங்கு முறையாக ஏற்பட்டுச் செல்லும் என்றும் சில பிள்ளைகளிடத்தில் இயக்க விருத்தி ஒழுங்கு முறையாக ஏற்படாமல் போகலாம். இவ்வாறு பொதுவானவிருத்தி மட்டத்துக் கேற்ப உடல் இயக்கத்திறனில் விருத்தி ஏற்படாத அல்லது பலவீனமாக அமைந்த பிள்ளைகளை உடலியக்கக் குறைபாடுள்ள பிள்ளைகள் என அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ 5% - 7% க்குமிடைப்பட்ட பிள்ளைகள் இயக்கக் குறைபாடுள்ள பிள்ளைகளாக உள்ளனர் எனக் கூறப்படுகின்றது. பால் அடிப்படையில் பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளே அதிகமாக இக்குறைபாட்டுக்குள்ளாகின்றனர். இது ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் இடையில் 2 : 1 என்ற விகிதாசாரத்தில் அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இயக்கக் குறைபாடு ஏற்படும் முறையினைப் பொறுத்து மூன்று வகையாகப் பிரித்து நோக்குவதும் உண்டு. அவை,

01. அதிகளவிலான இயக்கக் குறைபாடு.

ஓடுதல், நடத்தல், ஏறுதல் போன்றவற்றுடன் சம்மந்தப்பட்ட தசைவியக்கங்களில் உள்ள இடர்பாட்டினை இது குறிக்கும்.

02. சிறியளவிலான இயக்கக் குறைபாடு
தனிப்பட்ட விரல்களின் இயக்கங்களுடன் சம்பந்தப்பட்ட இடர்பாட்டினை இது குறிக்கும். விரலின் இயைபாக்கத்தில் உள்ள பலவீனத்தினால் இது ஏற்படுகின்றது.

03. கட்புல இயக்கக் குறைபாடு
கட்புல இயக்கத்திறன்களில் உள்ள குறைபாட்டை இது குறிக்கும். இதனால் பந்தை பிடித்தல், எழுதுதல், வரைதல் போன்ற செயற்பாடுகளில் இடர்பாட்டினை எதிர்நோக்குவர். இவ்வாறு மூன்று பெரும் பிரிவாகப் பிரித்து நோக்கினாலும் இப்பிள்ளைகள் பெருமளவு சில நடத்தைகளை வெளிக்காட்டுவர். அவ்வகையான நடத்தைகள் வருமாறு.

01. விருத்தி முறையான திறன்கள் இவர்களிடம் காணப்படும். ஆனால் அவற்றின் தரம் குறைவானதாக இருக்கும். இவர்கள் ஒரு செயலை திட்டமிட்டு ஒழுங்காகச் செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். வேறு வகையாகக் கூறினால் இவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருப்பார்கள். ஆனால் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை திட்டமிட முடியாதவர்களாக இருப்பர்.

02. தங்களுடைய திட்டங்கள், செயற்பாடுகள், பிழையென்பதை அறிந்திருப்பார்கள். ஆனால் அவற்றை எவ்வாறு திருத்துவது என்பதை அறியமாட்டார்கள். இதனால் ஏதாவதொன்றை ஆரம்பிப்பார்கள். ஆனால் அதை பூரணமாக்க முடியாமல் தவிப்பார்கள். இதனால் பிள்ளைகளிடம் ஆத்திரமும் மன முறிவுமே மிஞ்சுகின்றது.

03. சீர் பிரமாணத்திலும் விசையை மதிப்பீடு செய்வதிலும் காணப்படும் அவதானிக்கத் தக்க பலவீனங்களாகும். உதாரணமாக சுவரில் பந்தை எறியும் பிள்ளை சுவரில் பட்டுத்திரும்பிவரும் பந்தினால் தாக்கப்படலாம். தான் பந்தை எறியும் போது பிரயோகித்த விசையை மதிப்பிட முடியாமையே இதற்குக் காரணமாகும். எழுதுதலில் சீர்ப்பிரமாணமும், விசையும் சம்பந்தப்பட்டுள்ளது. பிள்ளை தாளில் கடினமாக அழுத்தி இழுத்து எழுதும்

04. தொடரொழுங்கில் எதையாவது செய்வதில் பிரச்சினையை எதிர்நோக்கும். உடையணிதல், இதற்கு நல்ல உதாரணமாகும். காற்சட்டை அணிந்து சப்பாத்து போட்டுக் கொள்வதற்குப் பதிலாக சப்பாத்தை போட்டுக் கொண்டு காற்சட்டை அணிய முயற்சிப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பிள்ளைக்கு மனத்தாக்கலையும் பெற்றோருக்கு கோபத்தையும் ஏற்படுத்துவதாகவும் அமையும். பெற்றோருக்குப் பிள்ளையின் நுண்ணறிவு தொடர்பாகக் கவலையை உண்டு பண்ணுவதாகவும் அமையும்.

05. சில பிள்ளைகள் சொற்களுடன் தொடர்புபட்ட ஒழுங்கமைப்பை விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருப்பார்கள். உதாரணமாக - "காதுக்குப் பின்னால் உள்ள ஈரத்தைத் துடை" என்று இவர்களிடம் கூறுவது பயனற்றதாக இருக்கும். ஏனெனில் "பின்னால்" என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள்.

## இயக்கக் குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

பிள்ளையின் கையிலோ, விரலிலோ, காலிலோ எந்தவிதமாக குறைபாடுகளும் இருக்க மாட்டாது. பிரச்சினைகளின் பிரதான காரணியாக மூளையும், அதன் ஒழுங்கமைப்பும், தொழிற்பாடுகளுமே அமைகின்றது. இங்கு கை, கால் போன்றவற்றிலிருந்து மூளைக்குச் செல்லும் செய்தியும், பின் மூளையிலிருந்து கை, கால்களுக்கு வரும் செய்தியும் சாதாரண மக்களுக்குக் கடத்தப்படுவது போல் திறமையான முறையில் இயக்கக் குறைபாடுள்ள பிள்ளைகளிடத்தில் நிகழ்வது இல்லை. இதைவிடப் பலவீனமான கட்புலக் காட்சியும் இயக்கக் குறைபாட்டுக்கு ஒரு காரணமாக அமைகின்றது.

பிள்ளையின் நாளாந்த நடவடிக்கைகளில் இயக்கக் குறைபாடு வெளிப்படுமாகையால் பெற்றோர்களே இதனை முதன் முதலில் கண்டு கொள்ளக் கூடிய நிலையில் உள்ளவர்களாவர். சில வேளைகளில் பிள்ளை எழுத ஆரம்பிக்கும் வரை இது அவதானிக்கப்படாமல் போகவும் முடியும். அத்துடன் அநேக சந்தர்ப்பங்களில் இப்பிள்ளை மொழியியல் குறைபாடு கொண்டவர்களாகவும் இருப்பர். இதைவிட கட்புலக் குறைபாடும் இயக்கக் குறைபாடும் ஒன்றுடனொன்று தொடர்பு பட்டதனால் இக்குறைபாடு நீண்ட காலத்திற்கு அவதானிக்கப்படாமலும் போகலாம். ஏனெனில் பிள்ளைகள் தங்கள் பார்வையில் குறைபாட்டை அறியமாட்டார்களாதலால் ஆகும்.

இது பற்றி முறையிடமாட்டார்கள். மேலும் கல்வி அறிவற்ற வறுமையான சூழலில் உள்ள பெற்றோர்கள் இந்நடத்தைகளை அவதானித்தாலும் இது பற்றி அக்கறை எடுத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. இந்நிலையில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் பொறுப்பு முக்கியமாகின்றது. தங்களது வகுப்புக்களில் இவ்வாறான குறைபாடாக உள்ள பிள்ளைகளை அவதானித்தால், இது பற்றி பெற்றோருக்கு அறிவித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிவுறுத்தல் வேண்டும். இவர்கள் விஷேட தேவைகளை உடைய பிள்ளைகள் என்பதையும் இவர்களுக்கு உதவி தேவை என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இப்பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவலாம்? இப்பிள்ளைகள் உதவி தேவைப்பட்ட நிலையில் உள்ளார்கள் என்பதை அங்கீகரிப்பதே உதவுதலின் முதற்படியாகும். இது அக்கறையற்ற பெற்றோர்கள் தெளிவாக உணரக்கூடிய வகையில் வலியுறுத்தப்படல் வேண்டும். அடுத்து இப்பிள்ளைகள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். இதன் மூலம் இயக்கக் குறைபாட்டின் தன்மை, அதன் காரணம் ஆகிய இரண்டும் அறியப்படலாம் Physiotherapist இன் மதிப்பீடும் இங்கு தேவைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை இயக்கக் குறைபாட்டின் தன்மையைக் கண்டறிந்தவுடன் தேவையான செயற்பாடுகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கிக் கொள்ள முடியும். சில பிள்ளைகளைப் பொறுத்தவரை சாதாரண முறையில் செயற்படத் தேவையான இயக்கப் பிரச்சினைகளைக் கட்டியெழுப்புவதற்கு அநேக பயிற்சிகள் கொடுக்க வேண்டி இருக்கும் சிலருக்கு பயிற்சிகள் தீங்கை விளைவிப்பதாகவும் இருக்கலாம்.

பிள்ளையின் குறைபாட்டின் தன்மை கண்டறியப்பட்டவுடன் பல விடயங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

01. பிள்ளை ஒன்றைச் செய்து காட்டும் போது அதனை ஊக்குவித்து, அவனின் தன்னம்பிக்கையையும், சுயகௌரவத்தையும் பேணுவதற்கு உதவுதல் வேண்டும்.

02. பயிற்சி பெறும் நேரம் குறுகியதாக அமைதல் வேண்டும்.

03. பிள்ளைகளின் வேலைகள் அவர்களால் கையாளக்கூடிய அளவுக்குச் சிறுபடிகளாகப் பிரித்துக் கொடுக்கப்படல் வேண்டும்.

04. இப்பிள்ளைகளை அவசரப்படுத்தக் கூடாது. அவர்கள் வேலையைச் செய்வதற்கு அவர்களுக்குத் தேவையான அளவு நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

05. குறித்த பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான வழிவகைகளைக் கற்பித்தல் வேண்டும்.

06. பிள்ளையால் இன்னும் செய்ய முடியாதவைகளைச் செய்யுமாறு கேட்கக்கூடாது. அவ்வாறு செய்யும் படி கேட்டு செய்ய முடியாத போது பிள்ளை மனம் புண்ணாகக் கூடிய முறையில் நடக்கக் கூடாது. இது சாதகமான விளைவை விட எதிரான விளைவையே கொண்டு வரும்.

பிள்ளையின் இயக்கக் குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை வழங்காவிட்டால் கேட்டல் மற்றும் நடத்தைக் குறைபாடுகளைக் கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு உதவுவதன் மூலம் அனேக தீவிரமான பிரச்சினைகளுக்கு அவர்கள் உள்ளாவதிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும்.

இப்பிள்ளைகள் இக்குறைபாடு காரணமாக உடலியக்கச் செயற்பாடுகளில் ஈடுபாடுகாட்ட மாட்டார்களாகயால் இவர்கள் பற்றி சோம்பேறிகள் என்றோ முட்டாள்கள் என்றோ ஒரு மனப்பதிவை ஆசிரியர்களோ அல்லது பிறரோ ஏற்படுத்திக் கொள்ளலாம். இவர்கள் தொடர்பாக ஏற்படுத்தும் இவ்வெண்ணத்தைக் களைந்தெறிதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Growth of Aids in Sri Lanka

**A.Abdul Jabbar**
**Teacher of English**

AIDS which stands for Acquired Immune Deficiency Syndrome is a fatal disease caused by HIV virus (Human Immuno-Deficiency Virus). This incurable disease was identified for the first time in the world in America in 1981 when the doctors examined some youngsters who had been admitted in the Los Angel Town Hospital for treatment. According to the research of April 1998, it was estimated that more than 33 million people were affected by the particular virus all over the world. As per medical reports, the only solution to this problem is to avoid root causes of the infection of this virus through education and awareness programmes.

Although the AIDS was identified in Sri Lanka in 1986, the first Sri Lankan infected with HIV was reported in 1987. The cumulative number of HIV infections reported from 1987 to end 2002 was 455. Of these, 139 persons were diagnosed as having AIDS and 108 were already deceased. In addition, 42 foreigners were also reported as HIV positive during this period. According to UNAIDS estimation, 4800 persons were living with HIV/AIDS by the end 2001. Under-diagnosis, under-reporting and delays in reporting probably account for the difference between the reported number and the estimated number. However, the reported data indicate an increasing trend in HIV infection. Thus Sri Lanka remains a low prevalence but high-risk country for HIV infection.

In Sri Lanka, the National STD/AIDS Control Programme (NSACP) is responsible for the implementation and coordination at central and regional level in terms of activities related to prevention and control of sexually transmitted disease (STDs) or AIDS. Since the first indigenously transmitted HIV infection was reported to the NSACP in 1989, several measures have been taken so as to control the spreading of HIV in the country by adopting some major strategies such as early case detection and management, partner notification, contact tracing, health education, counselling, condom promotion, s urveillance and dissemination of information to the general public. One of the best examples for it was the function of 20 full time STD clinics and 14 branch clinics covering the whole island during the year 2002.

The STD clinic system implemented in the country in 2002 provided much benefit for the overall success of identifying the HIV victims or others affected by Sexually Transmitted Infections (STIs). According to records, a total of 13,277 new persons were registered in the STD clinics during this year from seven provinces, namely Western, Central, Southern, Sabaragamuwa, Uva, North Central and Northern. Of these, 6,550 (49%) were diagnosed as having one or more sexually transmitted infections including six male and two female HIV positive cases.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In addition, a few private medical institutes in Colombo forwarded data on HIV tests carried out by their laboratories to the NSACP. A total of 2, 62, 870 HIV antibody tests were done by the NSACP, National Blood Transfusion Services (NBTS) and some laboratories in the private sector respectively and the reported HIV seropositivity rate was 0.19 percent during 2002. Therefore, the NSACP intended the necessity of making general public awareness and implemented several HIV sentinel surveillance programmes in order to make the people understand the causes of this disease. As a result, an unprecedented improvement in the knowledge of HIV/AIDS could be seen in the country.

However, as responsible teachers, it is our duty to cultivate the habit of ensuring the preventive measures that could protect our student populations from the devastation of HIV dissemination through proper education and awareness programmes. Abstention from sexual relationship until marriage or restricting sexual relations to one partner only after marriage, knowing the root causes that generate the HIV infection, avoiding the use of unsterilised needles or blades to puncture the skin, evading the transition of infected blood to our body, etc., may help us to safeguard from the infection of this lethal disease. Therefore, the growth of AIDS can only be restricted in Sri Lanka if the behaviour of individuals changed positively.



மாணவர்களை கற்கவேண்டுமென்று ஊக்குவிக்காமல் கற்பிக்க எத்தனிப்பவன் ஒரு கடின இரும்பை அடிப்பவர் போலாவான்.

The one who is attempting to teach without inspiring the pupil with a desire to learn is like hammering on a mere iron.

*-Horace Manu*

நாளைய முன்னேற்றத்தை அடக்கியுள்ள 4 சுவர்களைக் கொண்டனவே பாடசாலைகளாகும்.

Schools consist of four walls which extend tomorrow's progress.

*-Lon Watters*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை

| | | |
|---|---|---|
| ❋ இலங்கை குடியரசான | - | 22.05.1972. |
| ❋ இலங்கையை ஆட்சி செய்த கடைசி மன்னன் | - | சிறி விக்ரம ராஜசிங்கன். |
| ❋ சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் | - | D.S. சேனநாயக்கா. |
| ❋ இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகம் செய்தவர். | | C.W.W. கன்னங்கரா. |
| ❋ இலங்கையின் முதல் ஜனாதிபதி | - | சேர் வில்லியம் கோபல்லாவ. |
| ❋ இலவச பாடநூல் விநியோகத்தை அறிமுகம் செய்தவர் | - | J.R.ஜெயவர்த்தன. |
| ❋ இலங்கைக்கு உள்ள புராதன நகரங்கள் | - | சீகிரியா, பொலநறுவை, அநுராதபுரம் |
| ❋ இலங்கையில் அண்மையில் உள்ள நாடு | - | இந்தியா. |
| ❋ இலங்கையில் சுவரோவியங்களுக்கு புகழ்பெற்ற இடம் | - | சிகிரியா |
| ❋ இலங்கையில் இயற்கைத் துறைமுகம் | - | திருகோணமலை. |
| ❋ இலங்கை அமைந்துள்ள கண்டம் | - | ஆசியா |
| ❋ இலங்கை அதி உயர் நீர்வீழ்ச்சி | - | பம்பரகந்த (240 மீற்றர்). |
| ❋ இலங்கையின் அதி உயர்ந்த மலை | - | பேதுருதாலகாலமலை (2.685m) |
| ❋ இலங்கையின் அதி நீளமான நதி | - | மகாவலிகங்கை (330 km). |
| ❋ இலங்கையின் தேசியக் கொடி எந்த மன்னனின் கொடியை வைத்து அமைக்கப்பட்டது. | - | சிறி விக்ரமராஜ சிங்கன். |
| ❋ இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் நூல் | - | மஹா வம்சம். |
| ❋ இலங்கையில் கண்ணைக்கவரும் நீர் வீழ்ச்சிகள் | - | தியலும, துன்கிந்த. |
| ❋ இலங்கையின் பரப்பளவு | - | 65,610 சதுரkm). |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கைக்கு புனித அரச மரத்தைக் கொண்டு வந்தவர் - பிக்குனி சங்கமித்தை.
- "மின்னேரியாவின் தெய்வம்" எனப்போற்றப்படும் மன்னன் - மகாசேனன்.
- இலங்கையில் மிகப் பெரிய தாவரவியற் பூங்கா - பேராதனை
- இலங்கை அரசினது வங்கி - மத்திய வங்கி
- இலங்கையின் தேசிய இலச்சினையை உருவாக்கியவர் - மாபலகம விபுலசாரஹிமி
- தேசிய கீதத்தை இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்.
- இலங்கையில் உள்ள இயற்கை வனம் - சிங்கராஜ வனம்
- சிங்கராஜ வனம் அமைந்துள்ள மாகானம் - சப்ரகமுவ

**தொகுப்பு : எம்.ரி.பர்சியா**
(தரம் - **5A**)

# பிடித்திருக்கிறது உன்னிடத்திலிருந்து.

உன்னிடம் பிடித்ததை
ஒவ்வொன்றாய்
ஒத்தி வைக்கிறேன்....... கேள்.

அவசரமாய் உன்னை
எதிர்பார்த்தாலும்
அலட்டிக் கொள்ளாத
விழிகள் பிடிக்கும்.

அடிக்கடி உனக்குள் வரும்
கோபங்கள் பிடிக்கும்
என்னை சீண்டிப் சீண்டிப்
பார்க்கும் உன்
நகைச் சுவை பிடிக்கும்.

உனது ஆழ்ந்த சிரிப்பை
அணுவணுவாய் இரசிக்கின்றேன்
என் மனது எதிர்பார்த்து
கார்த்திருக்கும்.

உன் குரலோசை பிடிக்கிறது
உனக்குள் மறைந்து கிடக்கும்
உன் திறமைகள் – எனக்கு ஆச்சரியம்
அத்தனையும் சீண்டிவிட்டு
இரசித்துக் கொள்கிறேன்.

உன் கையெழுத்துப் பிடிக்கும்.
என் தலை எழுத்து உன்
கையில் இருப்பதும் பிடிக்கும்.
எனக்குச் சொன்ன அந்த
அறிவுரையும் பிடிக்கும்.

உன் அன்பும் பிடிக்கும்
உன் நட்பும் பிடிக்கும்
நட்பு மீது நீ கொண்டுள்ள
நேசம் பிடிக்கும் – இப்படி

உனக்குள் எனக்குப் பிடித்ததை
ஊமையாய் ரசிக்கிறேன்.
இப்பொழுது பார் ஊமை
உணர்வாய் மாறி விட்டது பார்.

---

ஆக்கம் :- **ஏ.எம்.அஜ்மீர்**
(உ/த கலைப்பிரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செந்நெல் சாஹிறா வித்தியாலய மாணவர்கள் கற்றலில் எதிர் நோக்கும் பிரச்சினைகள்.

எம்.ஐ.அப்துல் மன்னான்
(ஆசிரியர்)

கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேசத்தின் தென்மேற்கு திசையாக அமைந்துள்ளதும் கல்லோயா அபிவிருத்தி திட்டத்தின் குடியேற்ற கிராமங்களின் வரிசையிலும் 1980 ஆம் ஆண்டு கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில் இருந்த கௌரவ.ஆர்.பிரேமதாச அவர்களால் வைபவரீதியாக மக்களிடம் கையழிக்கப்பட்ட கிராமமே செந்நெல் கிராமமாகும்.

இக்கிராமத்தைச் சூழ உடங்கா ஆறு, அம்பாரை பிரதான, வீதி கல்லோயா இடது கரை வாய்க்கால் என்பன இயற்கையாக அமையப் பெற்ற பொக்கிஷங்களுக்கு மத்தியில் பிரமாண்டமான விசாலத்தில் அமையப் பெற்றதே செந்நெல் சாஹிறா வித்தியாலயம் என்றால் மிகையாகாது. இச்செல்வங்களை மேலும் வலுவூட்டும் வகையில் அரசின் பாரிய எதிர்கால மூலவூற்றான இளைஞர் யுவதிகளின் பல்கலை ஆற்றல்களை வெளிப்படுத்தும் தொழிநுட்பக் கல்லூரி, தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம் பெருவிருட்சங்களாக காட்சியளிக்கின்றன.

இதனை மேலும் மெருகூட்டுமாற் போல் மிருகவைத்தியசாலை, நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் என்பனவும் மத கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வண்ணம் அஸ்ஸாலிஹாத் பெண்கள் மத்ரசா, மருந்தகம் சனசமூக நிலையங்கள் என்பன மேலும் இக்கிராமத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

இப்பாரிய பிரதேசத்தில் முழுக்க முழுக்க முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் பிரதேசம் நூறு வீதம் விவசாயத்துக்கே உரித்தானதாகக் காணப்படுகின்றது. இங்கு குடியிருக்கும் மக்களின் தேவைக்கு மிக அத்தியவசியமான நீர்ப் பிரச்சினை எதிர்நோக்கும் பகுதியாகும். அரசு இதனைக் கருத்திற் கொண்டு நீர் வழங்கல் திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது. இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரத் தொழில்களாக விவசாயம், செங்கல் உற்பத்தி, கருங்கல் உடைப்போர், மீன்பிடி, மிருக வளர்ப்பு, சிறு வியாபாரம் என்பவற்றை நடாத்தி வருகின்றனர்.

கல்வியறிவுள்ளோரின் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்பள்ளி பாடசாலைகளை நடாத்தி வருகின்றது. மேலும் ஜும்ஆத் தொழுகை நடாத்தும் பள்ளிவாசலும் அதனை அண்டி மொஸ்குகளும் காணப்படுகின்றன.

இப்பிரதேச மக்களின் வருமானம் குறைந்த மட்டத்தில் உள்ளதால் பாடசாலைக்கு தரம் 1 - 5 வரைக்கும் தம் பிள்ளைகளை அனுப்புவதில் ஓரளவு ஆர்வம் காட்டினாலும் தொடர்ந்து கற்பிக்க பாரிய சவால்களை எதிகொள்கின்றனர். குடும்பத்தில் தந்தை தொழிலுக்குச் சென்றால் பக்கபலமாக தமது பிள்ளைகளை நம்புவதால் பிள்ளையின் கல்வி பாடசாலை மட்டத்தில் மாத்திரம் நிகழ்வதால் வீட்டுக்கு வந்ததும் கல்விச் சூழல் மாறி தொழில் மற்றும் சக மாணவத் தோளர்களுடன் நீராடச் செல்லல், விறகு எடுத்தல் போன்ற பிறகாரணிகளால் தொடர்ச்சியான கற்றலுக்குத் தடையாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தாய் அல்லது தந்தை தொழில் வாய்ப்பின் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்றால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் பல அசௌகரியங்களை பராமரிப்போர் எதிர் கொள்கினர்.

இப்பிரதேசத்தில் மாணவர்களுக்கு கல்வியைப் போதிக்க ஒரேயொரு நிறுவனமாக செந்நெல் சாஹிறா வித்தியாலயமே திகழ்கின்றது. இங்கு தரம் 1 - 13 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சம்மாந்துறையின் ஏனைய பிரதேசங்களைப் போன்று தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வி புகட்டல், கற்றோரின் முன்மாதிரிகள் என்பன இப்பிரதேசத்தில் இல்லை. பாடசாலைக் கல்வியை மாத்திரம் நம்பும் மாணவர்களின் வீட்டுச் சூழல் காரணங்களால் கல்வி மட்டம் பின்னடைவாகவே காணப்படுகின்றது. இருப்பினும் அதிபர் ஆசிரியர்களின் அயராத முயற்சி காரணமாக க.பொ.த (சாதாரணம்), தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கணிசமான மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாணவரிடையே பாடப்புத்தங்களுக்கு மேலதிகமாக கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், நாவல்கள், துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் என்பவற்றை பாடசாலை தவிர்ந்த வேளைகளில் தொடர்ச்சியாக வாசிப்புப் பழக்கத்தை தொடராக வீட்டுச் சூழலில் ஏற்படுத்துவதன் மூலம் வாசிப்புத் திறனை மேம்படுத்தலாம். அத்துடன் வானெலி தொலைக்காட்சி போன்ற ஊடக சாதனங்களில் ஒலி ஒளி பரப்பாகும் கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்டும் பார்த்தும் வருவதனால் மேலும் உயிரூட்டமான கல்வியைப் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

**ஒரு நல்ல ஆசிரியரானவன் தன் மாணாக்கரின் இயற்கையான திறமைகளைக் கண்டுபிடித்து, ஊக்குவித்து அவற்றுக்கு ஒரு வடிகால் அமைத்து வெளிக்கொணர வெப்பான். உண்மையான தலைவனாவான். தன் அடியார்களின் திறமைகளை இரட்டிப்பாக்குவான்.**

A good teacher discovers the natural gift of his pupils and liberates them by stimulating influnce of the inspiration that he can impart. The true leader makes his followers twice the men they were before

*-Stephen Neill.*

**குழந்தைகளுடன் நீர் ஐக்கியமாவதை உணர்ந்துள்ளேன். ஆசிரியத்தொழிலுக்கு இறை அனுமதி உண்டானால் உமக்கு அதனை விடத்திறமையான அழைப்பு இல்லை எனலாம்.**

I have always felt you capture the moment with kids. If you feel called to teaching, it's one of the greatest calls you'll ever have

-Tbo.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லுக்மான் (அலை) அவர்கள் அவரது மகனுக்கு செய்த உபதேசங்கள்.

- என்னருமை மகனே! நீ அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே.
(ஸூரா லுக்மான் , 13வது வசனம்)

- என்னருமை மகனே! நீ தொழுகையை நிறைவேற்றுவாயாக நன்மையைக் கொண்டு (பிறரை) ஏவுவாயாக. பாவமான விடயங்களிலிருந்து மனிதர்களை தடுப்பாயாக. உனக்கு ஏற்படும் கஷ்டங்களை நீ பெருமையுடன் சகித்துக் கொள்வாயாக.
(ஸூரா லுக்மான், 17வது வசனம்).

- என்னருமை மகனே! (பெருமை கொண்டு) உன்முகத்தை திருப்பிக் கொள்ளாதே நிச்சயமாக அல்லாஹ் தற்பெருமைக்காரர் ஒருவரையும் நேசிக்கமாட்டான்.
(ஸூரா லுக்மான், 18வது வசனம்)

- உன் நடையில் மத்திய தரத்தை கடைப்பிடிப்பாயாக உன் சப்தத்தையும் தாழ்த்திக் கொள்வாயாக.
(லுக்மான் 19வது வசனம்).

- என்னருமை மகனே! வயிறு நிரம்பிவிட்டால் சிந்தனை தூங்கிவிடும் உறுப்புக்கள் வணக்கத்தை விட்டும் ஒதுங்கிவிடும்.
(இஹ்யா உலூமுதீன்)

- தெரிந்ததைக் கொண்டு அமல் செய்யும் வரை தெரியாத விடயங்களைக்கற்க வேண்டாம்.
(அத்தீன், வல்அதப்)

- என்னருமை மகனே! ஜனாசாக்களில் நீ கலந்துகொள். திருமண விழாக்களில் கலந்து கொள்ளாதே! ஜனாசாக்களில் கலந்துகொள்வது உனக்கு மறுமையை நினைவூட்டும். திருமண வீடுகளில் கலந்து கொள்வது உனக்கு உலக ஆசைகளை உண்டுபண்ணும்.
(அத்தூன் - வல்அதப்)

- என்ருமை மகனே! அரசர்கள், செல்வந்தர்களின் சபைகளில் கலந்து கொள்ளாதே! அது உன்னை உலக ஆசைகளின் பக்கம் வழிகாட்டும்.
(முனப்பஹாத்)

- என்னருமை மகனே! ஆதரவற்றவர்களையும் ஏழைகளையும் அரவனைத்துக்கொள். அது உனக்கு மறுமையில் சிபாரிசு செய்யும்.

தொகுத்தவர் :
**எஸ்.எல்.முபஷ்ஷிறா**
**(தரம் – 9B)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையை மற

உன்னை அழிப்பதற்காய்
உரு வெடுத்து வந்து
தன்னையே அழித்துக் கொள்ளும்
தற்கொலை தாரிதான் சிகரெட்
உன் எதிரியை அல்லவா நண்பனாக்கினாய்.

சொற்ப மகிழ்ச்சிக்காய்
அற்பக் காசாய் நினைத்தது
அறு தினம் அழிக்கின்றாயே
நீ அளிப்பது பணத்தை மட்டுமல்ல
உன் ஆயுளையும் சேர்த்துத் தான்

நீயோ குடியில் மூழ்க
உன் குடியே பசியில் வாட
நீ தீய வழிகளில் அல்லவா
நுழைய முயல்கிறாய்.

சிக்கனமோ வாழ்வில் பாதி
உன் சேமிப்போ உடலில் நோயே
உனக்கேது உரிமை
உறவினை நினை போதையை மற!



ஹப்ஸா மனாஸிர்
(ஆசிரியை).

# SCHOOL

| | | | | |
|---|---|---|---|---|
| S | - | sincere | - | உண்மையுள்ள |
| C | - | character | - | நடத்தை |
| H | - | health | - | ஆரோக்கியம் |
| O | - | obedient | - | கீழ்ப்படிவு |
| O | - | order | - | ஒழுங்கு |
| L | - | lear | - | அறிவு |



**வாழ்க்கையில் வெற்றி பெற**
**தோல்விகள், கவலைகள், பயம்**
**என்பவற்றைக் களைந்து**
**உற்சாகம், நேர்மை, துணிவு**
**விடாமுயற்சியோடு செயற்படுங்கள்**



**எம்.ஐ.எம்.இன்ஸிப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை நூலகம்

**எம்.ஆர்.எம்.நபீல்**
(ஆசிரியர்) (Bcom, PGDE)

பாடசாலை நூலகம் என்பது கல்வித் திட்டத்தோடு இணைந்து ஆதரவளிக்கும் அமைப்பாக காணப்படுகிறது. மாணவர்களது வாசிக்கும் திறனை மேம்படுத்துவதற்காகவும், ஆசிரியர் தலையீடு இன்றி அறிவை வளர்க்கும் நிலையமாகவும் காணப்படுகின்றது. மற்றும் மாணவர் வாசிக்கும் பழக்கம் அருவி வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. இதை நிவர்த்தி செய்ய நூலகம் பல வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது.

- புதிய நூல்ப்பட்டியலை காட்சிக்கு வைத்தல்.
- புதிய நூல்களின் உறைகளை காட்சிக்கு வைத்தல்.
- புதிய அறிவு சாதனங்களை காட்சிக்கு வைத்தல்.
- பிள்ளைகளின் ஆக்கங்களை காட்சிக்கு வைத்தல்.
- புதினத்தாள் துணுக்குகளை காட்சிக்கு வைத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

பாடசாலை நூலகத்துக்கு நூல்களைத் தெரிவு செய்யும் போது பாடசாலை நூலகத்துக்கு பொருத்தமான நூல்களைத் தெரிவு செய்தல் வேண்டும். நூலகத்துக்கு பல வழிகளிலிருந்தும் நூல்கள் கிடைக்கப் பெறலாம். தனிப்பட்டவர் அன்பளிப்பாக கிடைக்கப் பெறலாம். நிறுவனங்களின் அன்பளிப்பாக கிடைக்கப் பெறலாம். இவை நூல்க் கடையிலிருந்து கொள்வனவு செய்வதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு நுல்களை கொள்வனவு செய்யும் போது நூல்கள், பாடசாலை ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரிகள் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது அவசியமானதாக காணப்படுகின்றது.

நூலகர் பல வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. அவற்றில் பிரதானமானவை வருமாறு.

01. நூலிட்டல்.
நூல்களைத் தெரிவு செய்தபின் நூல் விற்பனையாளரிடமிருந்து நூலை பெற்றுக் கொள்ளல்.

02. நூல் வரவுப்பதிவேடும் நீக்கற்பதிவேடும்.
நூலகத்துக்கு பெறப்படும் ஒவ்வொரு நூலும் ஒரு ஏட்டில் பதிவு செய்யப்படல் வேண்டும். நூல் நீக்கற்பதிவேடு எனும் போது நூல் கையிருப்பிலிருந்து நீக்கப்படும் போது ஒரு பதிவேட்டில் பதிதல்.

03. நூற் பகுப்பாக்கம் (Classification)
நூற்பகுப்பாக்கம் எனும் போது நூலின் ஒற்றுமை கண்டு ஒன்று சேர்த்தலும், வேற்றுமை கண்டு பிரித்தலுமாகும். பல்வேறு நூற்பகுப்பாக்கத் திட்டம் காணப்பட்ட போதும் தூயி என்பவரின் பகுப்பாக்கத் திட்டம் பலராலும் பின்பற்றப்படுகின்றது. இவர் உலகிலுள்ள அறிவு அனைத்தையும் பத்து வகுப்புக்குள் அடக்கியுள்ளார்.

04. நூற்பட்டியலகம்.
நூல் ஒன்றினை குறுகிய நேரத்துக்குள் அதிக சிரமமின்றி நூல் சேர்கையிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கு உதவும் சாதனம் நூற்பட்டியலாகும்.

பட்டியலாக்கம்

பகுப்பாக்கப்பட்ட பட்டியல் | அகரவரிசைப்பட்டியல்.



05. நூல் தயாரிப்பு.
நூலுக்கான விபர அட்டை பூர்த்தியாக்கப்பட்ட பின் அந்நூல் உபயோகத்திற்காக தயாரிக்கப்படல் வேண்டும்.

06. நூல் இரவல் வழங்கும் முறை.
பிள்ளைகளுக்கு நூல் இரவல் வழங்குதல்.

07. புதின ஏடுகளும் பருவ வெளியீடுகளும் வாங்கி வைத்தல்.

08. நூல்களுக்கு மட்டை ஒட்டுதல்.
நூல்களின் நீடித்த உபயோகத்திற்கு மட்டை கட்டுதல் வேண்டும்.

09. நூல்களைப் பாதுகாத்தல்.
நூலகத்தை சுத்தமாக வைப்பதைவிட நூல்களுக்கு சிறந்த பாதுகாப்புக் கிடையாது.

10. நூல்களின் தொகை மதிப்பீடு.
நூல்களின் தொகை மதிப்பீடு வருடத்துக்கு ஒரு முறை செய்தல் வேண்டும்.

நூல்களின் பிரதான பொறுப்புகளில் ஒன்றாக உள்ளது அந்த நூலக சமுதாயத்தை பற்றி அறிந்து கொள்வதாகும். பாடசாலை நூலகத்தை பொறுத்தவரையில் பாடசாலை வகைக்கு ஏற்ப நூல் நிலையங்கள் அமைதல் வேண்டும். வளமான பாடசாலை, கஸ்டப் பாடசாலை, அதிகஸ்டப் பாடசாலை என்பவற்றுக்கு ஏற்ப நூலகம் இயங்குதல் வேண்டும். அதிகஸ்டப் பாடசாலையை பொறுத்தவரையில் மாணவர் வாசிக்கும் திறன் அற்றவர்களாகவே காணப்படுகின்றார்கள். அவர்களுக்கு கதைப்புத்தகம் வாசிக்கும் ஆற்றல் குறைந்தவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்களை ஆர்வப்படுத்தி வாசிக்கும் ஆற்றலை வளர்ப்பது, ஆசிரியர், நூலகர், அதிபர் போன்றோரைச் சார்ந்ததாக காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

இரவின் மழைச் சாரலில் அந்த ஏழைக் கிராமம் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. றில்ஸாத்தின் கண்கள் மட்டும் தூக்கத்தைத் தொலைத்துக் கொண்டிருந்தது. கண்கள் தூங்கினாலும் மனதின் ஓசைகள் எவ்வாறு தூங்கும்? கண்களைக் கொடுத்த இறைவன் பார்வையைக் கொடுக்க மறந்தது போல் படிப்பைக் கொடுத்தவன் பணத்தைக் கொடுக்க மறந்து விட்டான்.

உயர் தரம் வரை கற்ற றில்ஸாத்தால் மேற்கொண்டு படிப்பதற்கு பணமில்லை. பாவம் தாயும் எத்தனைக் காலம்தான் கஷ்டப்படுவார். இப்படி றில்ஸாத்தின் எண்ணப் படகுகள் கடலில் மிதந்து கொண்டிருக்கும்போது இருமிய படியே " றில்ஸாத்...... தண்ணி கொஞ்சம்தாப்பா....." என்று கூறிய தாயின் குரலைக் கேட்ட றில்ஸாத் உடனே எழுந்து தாய்க்கு நீரைக் கொண்டு வந்து கொடுத்தான்.

"என்னப்பா யோசிக்கிறாய் அம்மா தூக்கத்த கலைச்சிட்டனா...." "அம்மா...... அப்படி ஒன்டுமில்லம்மா. தூக்கம் வரல்ல.... அதுதான் " என்று வாழ்கையை வெறுத்தவனாய் கூறினான் றில்ஸாத்.

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்தவள் இன்னும் தன்னைப் 19 வருடங்களாக சுமந்து கொண்டே இருக்கிறாள். சீ........ இதற்கு மேலும் தாயைக் கஷ்டப்படுத்துவதா? வேண்டாம் எனக்கு படிப்பு வேண்டாம் என்றபடி தனக்குள்ளேயே புலம்பிக் கொண்டிருந்தான். நள்ளிரவாகியும் றில்ஸாத் தூங்காததைக்கண்ட தாய் "ஏம்பா றில்ஸாத் இன்னும் தூங்கல்லையா? " என்றாள்.

"இல்லம்மா...... எனக்கு தூக்கம் வரல்லம்மா....." சற்று தாயின் முகத்தைத் தடவியவனாக "அம்மா.. இனிமேல் நான் படிக்கல்ல? இனி நீங்க யார் வீட்டு பாத்திரமும் கழுவ வேண்டாம்" என ஈரம் காயாத கண்களோடு கூறிய றில்ஸாத்தைப் பார்த்தவள் ஆனந்தக் கண்ணீர் பூத்தாள்.

"இந்தா பாரப்பா றில்ஸாத்...... நீ பெரிய டொக்டராகி ஏழைமக்களுக்கெல்லாம் இலவசமா சேவ செய்யனும். அதுதானபப்பா என்னோட ஆசை. இந்த அம்மா கஷ்டப்படுகிறது அதுக்குத்தானப்பா..... சரி...சரி தூங்கு றில்ஸாத்" என்றபடி தன் கண்ணீரால் றில்ஸாத்தைத் தாலாட்டித் தூங்க வைத்தாள். இவ்வாறே தாயினதும் மகனினதும் வாழ்க்கை கழிந்து செல்கின்றது.

ஒரு நாள் திடீரென்று றில்ஸாத்துக்கு பல்கழைக்கழக அழைப்பு வந்தது. றில்ஸாத்துக்கோ மிகுந்த சந்தோசம். ஆனால் சோகமே அவனைச் சூழ்ந்து கொண்டது. செய்தி அறிந்த தாய் "ஏம்பா றில்ஸாத் கண் கலங்குற? அம்மா இருக்கண்டா. சரி நீ இப்பவே பல்கலைக் கழகம் போறதிற்கு ஆயத்தமாகு. அம்மா உனக்கு பணம் அனுப்புவேன்." இவ்வாறாக றில்ஸாத்தின் பல்கலைகழக வாழ்க்கை ஆரம்பமாகிறது.

நான்கு வருடங்கள் கடுகதியில் கடந்தோடுகிறது. தாயின் ஆசைப்படி றில்ஸாத் டாக்டராக வெளியாகின்றான். தன் தாயைக் காண்பதற்கு துடிதுடித்து ஓடி வருகின்றான். எத்தனை எத்தனையோ வகையில் என் தாய் சந்தோசப்படப் போகிறாள் என்றெல்லாம் நினைத்துக் கொண்டு வந்த றில்ஸாத்துக்கு தன்னுடைய கிராமம் பாரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது.

தாய் மருத்தவ மனையில் இருப்பதாக அறிந்தவன் உடனே அங்கு சென்றான். டாக்டர் கூறியதைக் கேட்ட றில்ஸாத் ஒரு கனம் செயலிழந்து போனான். "ஆமா றில்ஸாத் உன்னுடைய படிப்புக்காக உங்கம்மா தன்ட ஒரு கிட்னிய வித்திட்டாங்க. இப்ப இருக்கிற நிலையில் அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்னி அவசியம் தேவைப்படுது. அதுக்கு 2 இலட்சம் ஆகும். இன்னும் 30 நிமிடங்களில் கொண்டாந்தீங்க என்றால் அவவ காப்பாத்திடலாம்." எனக்கூறிய டாக்டரின் வார்த்தைகள் றில்ஸாத்தை கண்ணீரில் ஆழ்த்தியது.

தன் படிப்புக்காக தாய் செய்ததை நினைத்து அழுது தொலைத்தான். தன்னால் என்ன செய்ய முடியும் என்று அவனால் சிந்திக்கவே முடியவில்லை. உடனே டாக்டரிடம் சென்றவன் "டாக்டர் என்ட ஒரு கிட்னிய அம்மாவுக்குத் தாரேன் டாக்டர். எங்க அம்மாவ காப்பாத்துங்க டாக்டர்." என்றான்."தம்பி நீ வாழ வேண்டிய பிள்ளை. டாக்டர அதப்பத்தி கவலயில்ல. என்ட பழய அம்மா எனக்கு வேனும் டாக்டர்." 'சரி' என்றவாறு றில்ஸாத்தை வெளியே அமரும் படி கூறிவிட்டு தாயின் அறைக்குள் சென்றார்.

நீண்ட நேரத்துக்குப் பின்பு வெளியே வந்த டாக்டர் "I am very sorry றில்ஸாத்" என்று தலையைக் குனிந்தவாறே கூறினார். "டாக்டர் என்ன சொல்றீங்க" "அம்மா ...." அதற்கு மேல் டாக்டரால் பேச முடியவில்லை. அம்மாவின் அருகில் சென்ற றில்ஸாத் "அம்மா நான் இருக்கன் நான் இருக்கன் என்று அடிக்கடி கூறுவீங்களே. இப்போ என்னம்மா ஆச்சு" என்று கூறி அழுதான் றில்ஸாத். அருகில் இருந்து "றில்ஸாத் அழுது பிரயேசனமில்லை. அம்மாட பாசம் அதிகம் என்டா மீண்டும் உங்கம்மாவ பெற்றுக் கொள்ளலாம்." என்று புதிர் போட்டார் டாக்டர்.

"எப்படி டாக்டர் எப்படி " றில்ஸாத். "இல்ல றில்ஸாத் நான் கூறுகிறேன் கேள். உங்கம்மாட ஆச என்னண்டு தெரியுமா? அத நிறைவேற்று. உன் அம்மா உனக்கு மீண்டும் கிடைப்பாள்" என்றார். டாக்டர் கூறியபடியே அம்மாவின் ஆசையை நிறைவேற்றினான். அது மட்டுமல்ல வைத்தியசாலை ஒன்றைக் கட்டி "றிம்ஸியா இலவச வைத்தியசாலை" என்று அதற்கு தன்னுடைய தாயின் பெயரையே வைத்தான். அன்று தொடக்கம் இன்று வரை தன்னுடைய தாயான " றிம்ஸியா இலவச வைத்தியசாலை"
உடனே வாழ்ந்து வருகின்றான். அதற்காகவே தன்னை அர்ப்பணித்து பணிபுரிந்து வருகின்றான்.

ஆக்கம்
**எம்.எல்.ஏ.பாத்திமா நுஸ்றியா**
**(தரம் - 11)**

# மனச்சாட்சி

மௌனக் கற்களால் வீடு கட்டி
வாடகைக்கு வாழும்வாயில்லா ஊமைக்கல்!
குற்றமுள்ள நெஞ்சை
நெருப்பில் புதைக்கும் கருப்புச் சூரியன்!

மனித உரிமைக்காக
பஞ்சாயத்தில் வழக்கிடும் வக்கீல்!
இதயம் இடறி விழுந்தால் - இன்று
மனச் சிறையில் மௌனம் காக்கும் கைதி!

உயர்திணையும் அஃறிணையும்
உன் நெஞ்சில் உட்கார்ந்து
நெஞ்சத்தை நேர்படுத்தும்
நெறியாளர்!
மனித நீதி மன்றத்தில்
கண்கட்டி நிற்கும் நீதி தேவதை!

இன்று மனதிற்குப் பெரும்
பாரமாகிப் போனதால் எல்லோரும்!
சுழற்றி வைத்து விட்டு
எடுத்துப் போக மறந்து போயினர்.

ஆக்கம் :
**ஏ.எல்.பஸ்மினா** (தரம் - 11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மாதா சரித நோக்கு.

எஸ்.எல்.எம்.இஸ்மாயில்
(ஆசிரியர்).

*வையம் ஈன்ற தொன் மொழியைக்*
*கையால் கோல் கொண்டெழுதிவ்*
*வையக ருள்ளத்தில் வைத்திடப்*
*பைய நாவசைத்துப் பசுந்தமிழால்*
*பரம் பொருளைப் போற்றி புகழ்கின்றேன்.*

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி உலகின் முதுமொழிகளுள் மூத்த உயர்தனிச் செம்மொழியாகும். உலகில் மொழி என்பது எப்போது பிறந்ததோ அப்போதே தமிழ் மாதாவும் பிறந்து விட்டாள். மக்கள் கற்கால மனிதர்களாய் வாழ்ந்த காலத்தில் அவர்கள் தம்மனக்கருத்தை மற்றவருக்குத் தெரிவிக்க சைகையோடு ஒலிகளையும் எப்போது பயன்படுத்தினார்களோ, அப்போதே நம் தமிழன்னை பிரசவித்துவிட்டாள். ஒரு தனிமனிதனால் எந்த ஒரு மொழியையும் உருவாக்கிவிட முடியாது. மக்கள் சமுதாயமே
மொழியை உருவாக்கியது. நம் தமிழன்னை சிவபெருமானின் உடுக்கையின் ஒரு புறமும், சமஸ்கிருதம் மறுபுறமும் இருந்து பிறந்ததாகவும் ஒரு கதையும் உண்டு.

உலகில் பல்லாயிரம் மொழிகள் தோன்றினாலும், அவைகளின் அநேகமானவை காலவெள்ளத்தால் கலைந்து போயின. ஆனால் சீனம், இலத்தின், சமஸ்கிருதம், கிரேக்கம் போன்ற பல மொழிகள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. இவற்றில் அன்று தொட்டு பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் நம் செந்தமிழ் மாதாவும், சீன மொழியுமே உயர்நிலை பெற்றுச் சிறந்து விளங்குகின்றன. இதற்குக் காரணம், அப்போதே தமிழன்னைக்கு இலக்கண வேலியமைத்து தரம் குன்றாமல் பாதுகாக்கப்பட்டதேயாகும்.

ஏறக்குறைய பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அகத்திய முனிவரின் பேரகத்தியம் ஈராயிரத்தைநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த தொல்காப்பியநாரின் தொல்காப்பியம், வசிஷ்டர் காலத்தில் வாழ்ந்த திருமூலர் போன்றோரின் சித்தரிலக்கியங்கள் போன்றன தமிழ் மாதாவிற்கு அணிவிக்கப்பட்ட பழைமை வாய்ந்த அழகுச் செல்வங்களாகும்.

தமிழன்னை தரம் குன்றாமல் தளைத்தோங்க தமிழ்நாட்டில் பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்து தமிழன்னையை வளர்த்தனர். இச்சங்கத்தில் நம் தமிழ் மாதா ஈன்றெடுத்த புதல்வர்கள் ஒன்று கூடி அரும்பெரும் இலக்கியங்களைப் படைத்தனர். தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கங்கள் இருந்தன. தலைச்சங்க காலத்திலும், இடைச்சங்க காலத்திலும் தோன்றிய நூல்கள் இன்று காணக்கிடைக்காமை நாம் செய்த பாவமே. என்றாலும் கடைச்சங்க நூலாக எட்டுத்தொகை பத்துப்பாட்டு போன்ற நூல்கள் தோன்றின. இது ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாகும். இக்காலத்தில் பல புலவர்கள் பாடிய பாடல்ளை தொகுத்து நூலாக்கித் தொகை என்ற பெயரில் நம் தமிழ் மாதாவிற்கு அணிவிக்கப்பட்டது.

எட்டுத்தொகையில் அகநாநூறு, புறநாநூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகிய எட்டு நூல்களும் அடங்கும். இவ்வாறான தரமிகு நூல்களை இயற்றிய புலவர்களை மன்னரும், மக்களும் தெய்வமாக மதித்துப் போற்றினர்.

அடுத்து தமிழ் மாதாவின் இடையிலே மின்னும் மேகலையான மணிமேகலை என்ற காப்பியச் சரிதம் பற்றி நோக்குவோமாயின் இக்காப்பியத்தை இளங்கோவடிகளின் நண்பரான மதுரைக் கூலவாணிகன் என்ற சீற்றலைச் சாத்தனார் இயற்றினார். இக்காப்பியம் சிலப்பதிகாரத்தின் பின்னர், சிறப்புறப் படைக்கப்பட்டுத் தமிழன்னைக்கு அணிவிக்கப்பட்டு அழகுபார்க்கப்பட்டது.

சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகவே மணிமேகலை அமைந்து காணப்படுகின்றது. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த அழகிய பெண்ணே மணிமேகலையாகும். இவளை மணக்க உதயகுமாரன் விரும்புகின்றான். ஆனால் மணிமேகலையின் தாய் அவளைத் துறவியாக்கி பௌத்த சமயத்தில் சேர்த்து விடுகின்றாள். பின்னர் மணிமேகலையின் தாய் மணிபல்லவத்தீவிற்குச் சென்று அமுதசுரபி ஒன்றைப் பெறுகின்றாள். அந்த அட்சயபாத்திரத்தின் மூலம் சோழநாட்டு மக்களின் பசித்துயர் போக்குன்றாள்.

இது இப்படி இருக்க உதய குமாரனை யாரோ கொல்ல, மணிமேகலை செய்யாத குற்றத்திற்காக சிறைவைக்கப்படுகின்றாள். சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் பல தேசங்களுக்கும் சென்று அறநெறி புகட்டி இறுதியில் காஞ்சிபுரம் போய் அறவணவடிகளிடம் அறப்போதனை பெற்று நால்வகை பௌத்த சமய அறங்களையும் முறையாகக் கற்றவள். இதன்பயனாக மனத்திருள் நீங்கப்பெற்று ஞான ஒளிபெற்றுப் பிறவித்துன்பம் நீங்கும் படியாக காஞ்சிபுரத்திலேயே நோன்பிருந்தாள்.

இக்காப்பியத்தில் பல கிளைக் கதைகள் கூறப்பட்டிருந்தாலும், ஆபுத்திரன் கதையும், ஆதிரையின் கதையும் மிகச் சிறந்தவை. இவ்வாறு மணிமேகலையின் சரிதம் கூறும் இக்காப்பியம் சிலப்பதிகாரம் போன்றே ஆசிரியப்பா வடிவில் வடிக்கப்பட்டுள்ளது. இதில் விழாவறைக் காதை தொடக்கம் பவத்திறம் அறுகெனாப்பாவை நோற்ற காதை வரைக்கும் எல்லாமாக முப்பது காதைகள் உள்ளன. இப்பாடல்கள் அனைத்திற்கும் உரைவடிவில் மு.அருணாசலம் என்ற தமிழ் ஆராய்ச்சியாளர் விளக்கம் எழுதியுள்ளார்.

இவ்வளவு விலைமதிக்க முடியாத ஒப்பற்ற அணிகலனைப் படைத்து தமிழன்னையின் இடுப்பில் ஒளி வீச அணிவித்து உலகுள்ளவரை அழகொளிரும் அன்னை வடிவம் காணக்காண நம்முள்ளம் குளிருமே!. இப்பெருமையனைத்தும் மேகலையின் படைப்பாளி சாத்தனாருக்கே உரித்தாகட்டும்.

அடுத்து தமிழ் மாதாவின் மார்பிலே அணியப்பட்டு அலங்காரமாய் மின்னும் சீவகசிந்தாமணி என்ற பெருங்காப்பியம் பற்றி நோக்கினால்; இந்நூலைத் திருத்தக்கதேவர் என்னும் புலவர் படைத்து தமிழன்னைக்கு அணிவித்து மகிழ்ந்தார். இது விருத்தப்பா வடிவில் எழுதப்பட்ட ஒரு காப்பியமாகும். இக்கதையில் எல்லா வகைச்சுவைகளும் காணப்படுகின்றன. இது சமணசமயம் பற்றிப் பேசும் ஒரு காப்பியமாகும்.

இது சீவகன் என்ற மன்னனின் கதையைக் கூறுகின்றது. ஏமாங்கதம் என்ற நாட்டை ஆண்ட சச்சந்தன் என்ற அரசனுக்கும் விசையை என்ற அவனின் மனைவிக்கும் மகனாகப் பிறந்தவன் சீவகன். சச்சந்த மன்னன் தன் ஆட்சிப் பொறுப்புக்களை அமைச்சருள் ஒருவனான கட்டியங்காரன் என்பவனிடம் ஒப்படைத்து விட்டு கவலையற்றிருந்தான். கட்டியங்காரன் ஆட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றி விட்டான். சச்சந்தன் தன்மனைவியை ஒரு பொறியில் ஏற்றிக் காப்பாற்றி விட்டு கட்டியங்காரனுடன் போரிட்டு மாய்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பவதியான விசையை ஒரு காட்டில் சீவகனைப் பெற்றெடுத்தாள். இக்குழந்தையை ஒரு வணிகன் கொண்டு சென்று வளர்த்தெடுக்கின்றான். காலசக்கரம் சுழலப் பலபெண்களை மணம் செய்த சீவகன் அதேபோல் பல கலைகளையும் கற்று கட்டியங்காரனுடன் போரிட்டு தன் தந்தை பறிகொடுத்த நாட்டையும் மீட்டு பல்லாண்டுகள் ஆட்சிபுரிந்து தன் பிற்காலத்தில் தவம் புரிந்து முக்திப் பேறும் பெற்றுவிடுகின்றான்.

இவ்வாறு விரிந்து செல்லும் இவ்வின்ப ஊற்றுக் காப்பியத்தைப் படைத்த திருத்தக்க தேவர் தமிழன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வர்களில் ஒருவரே. அடுத்துத் தமிழ் மாதாவை அணிசெய்தலங்கரிக்கும் இராமாயணம் என்ற காப்பியம் கம்பரால் இயற்றப்பட்டு தமிழ் மாதாவிற்கு அணிவித்து அழகுபார்க்கப்படுகிறது. இந்நூலில் இராமன், சீதை, இராவணன் போன்றோரின் சரிதம் விரிகின்றது. கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் திருவழுந்தூர் என்ற இடத்தில் கம்பர் பிறந்தார். இவர் படைத்த ஒப்பற்ற கம்பராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது.

இக்காப்பியத்தில் நீதிக் கருத்துக்களையும் ஒழுக்க நெறிகளையும், யுத்த தர்மங்களையும் பொதித்துப் படைத்துத் தமிழ் அன்னைக்கு அணிவித்து அலங்கரித்திருப்பது கம்பர் கல்வியிற் சிறந்தவர் என்பதற்குத் தக்க சான்றாகும்.

அடுத்துக் குண்டலகேசி பற்றிக் கூறப்போனால், இக்காப்பியம் தமிழ் மாதாவின் காதுகளில் தொங்கும் குண்டலமாகவும், தமிழ் மாதாவை அழகு செய்து அலங்கரிக்கும் அரும் பெரும் பொக்கிசமாகவும் திகழ்கின்றது. ஆனால் இக்காப்பியம் இதுவரை முழுமையாகக் கிடைக்கவில்லை என்றாலும் வேறு பல நூல்களில் இக்காப்பியத்திலுள்ள அரிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

இக்காப்பியத்தில் பத்திரை என்ற பெண், காளன் என்ற கள்வனைக் காதலித்து மணக்கின்றாள். காளனின் மனைவி தன்னைக் கள்வன் என்று ஒரு முறை கூறியதற்காக ஒரு மலை உச்சியில் இருந்து தன் மனைவியைக் கீழே தள்ளிவிட்டுக் கொல்ல எத்தனித்த போதும் கடைசியாகத் தன் கணவனை வலம்வந்து வணங்க அனுமதி கேட்கின்றாள் பத்திரை. இதற்குக் காளன் அனுமதி கொடுக்க புத்திசாதுரியமாக கணவனைக் கீழே தள்ளிவிட்டுக் கொன்று விடுகின்றாள் பத்திரை. இறுதியில் பத்திரை பௌத்த துறவியாகிவிடுகின்றாள். இதுதான் குண்டலகேசிக் காப்பியச் சுருக்கம்.

இதனையடுத்து வளையாபதி என்ற காப்பியம் நவகோடி நாராயணன் என்னும் வைர வியாபாரி பற்றிக் கூறுகின்றது. இந்த வணிகனின் மகன் காணியின் துணை கொண்டு தன்னையும் தன் தாயையும் பிரித்து வைத்த தந்தையுடன் மீண்டும் சேர்ந்து வாழ்வது பற்றிக் கூறுகின்றது.

இந்நூலும் இதுவரை முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. என்றாலும் வேறு சில நூல்களில் இக்காப்பியப் பாடல்கள் இடம்பெறுவதைக் காணலாம். இப்பாடல்களைக் காணும் போது இக்காப்பியம் எவ்வளவு சிறப்பு மிக்கது என்பதை அறிய முடியும். இவ்வாறான ஐம்பெருங்காப்பியங்களும் படைக்கப்பட்டு தமிழன்னைக்கு சூட்டப்பட்டு அழகுபார்த்த காலம் சங்ககாலம்தான். இதற்குப் பின் தமிழ் நாட்டைக் களப்பிறர் என்பவர்கள் ஆண்டு வந்தனர். இது தமிழ் வரலாற்றில் இருண்டகாலமாகவே கருதப்படுகின்றது. இக்காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குப்பின்னர் தமிழில் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டும் தோன்றின. அவை வருமாறு, நாலடியார், நாண்மணிக்கடிகை, இனியவை நாற்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம்பது, திணை மாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, கைந்நிலை ஆகிய பதினெட்டுமாகும்.

மேலும் சங்ககாலத்தில் பதினெண் மேல் கணக்கு நூல்கள் என்று வழங்கப்படும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்ற நூல்களும் தோன்றித் தமிழ் மாதாவை அலங்காரம் செய்தன. பிற்காலப் பகுதியில் தமிழ்த் தாய் நலிவுற்றுக் காணப்பட்டாலும் அழியாமற் காத்த பெருமை இந்நூலாசிரியர்களுக்கே சாரும். இவற்றில் எல்லோராலும் புகழப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல் திருக்குறளாகும்.

பின்னர் களப்பிறர்களிடமிருந்து தமிழ் நாட்டை மீட்டுப் பல்லவர்களும், பாண்டியர்களும் ஆண்டனர். இது கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்குள்தான் அடங்குகின்றது. பல்லவர் காலத்திலும் தமிழ்த் தாய் சிறப்புற்று விளங்கவில்லை என்றாலும், அடியவர்கள் சிலர் முன்வந்து ஊர் ஊராகச் சென்று சமயக் கருத்துக்களைப் பரப்பினர். இவர்கள்தான் அப்பர், சம்மந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் போன்ற தமிழன்னை பெற்றெடுத்த நாயன்மார்களாகும்.

இதற்குப் பிறகுதான் தமிழ் மாதாவை அலங்கரித்த ஆழ்வார்களின் காலமாகும். இது கி.பி. ஐந்து தொடக்கம் பத்தாம் நூற்றாண்டு வரையான காலமாகும். இவர்கள் தமிழின் பத்தில் எம்மை ஆழ்த்துபவர்கள் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் போன்ற பலர் அடங்குவர். இவ்வாழ்வார்களின் பாடல்கள் கொண்ட நூல்தான் 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

இதன் பின்னர் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் பெரிய புராணம் என்ற நூலை சேக்கிழார் படைத்து தமிழ் மாதாவிற்கு அணிவித்து அழகுபார்த்தார். இது வைண சமயம் பற்றிக் கூறும் காப்பியமாகும். இதற்கிடையில் 9 ஆம் நூற்றாண்டுக்குப்பின் பரணி கலம்பகம், உலா போன்ற சிற்றிலக்கியங்களும் படைக்கப்பட்டுத் தமிழன்னைக்குப் பரிசளிக்கப்பட்டன. கலம்பகங்களில் நந்திக்கலம்பகம், மதுரைக் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம் என்பன குறிப்பிடத் தக்கவையாகும். இவற்றில் நந்திவர்மன் பற்றிப் பாடப்பட்ட நந்திக் கலம்பகம் சிறப்பு மிக்கது. இந்நந்திக் கலம்பகத்தில் அறம் வைத்துப்பாடப்பட்டது. இதைப் பாடியவர் நந்தி வர்மனின் தம்பி முறையானவராகும்.

அடுத்துப் பரணி என்ற சிற்றிலக்கியம் தோற்றம் பெற்றுத் தமிழ் மாதாவை அலங்கரித்து நின்றது. இதில் கி.பி.பன்னிரெண்டாம் நூற்றாண்டில் செயங்கொண்டாரால் பாடப்பட்ட கலிங்கத்துப் பரணியே சிறப்புக்குரியது. இது சோழ மன்னனான குலோத்துங்க மன்னனின் வெற்றிச் சிறப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பரணிகள் மன்னர்களின் வெற்றிச் சிறப்புக்கள் பற்றியே பாடப்பட்டவைகளாகும்.

இதன் பின்னரே பிள்ளைத் தமிழ் என்ற சிற்றிலக்கியம் தோன்றியது. இவ்விலக்கியம் வணங்கும் கடவுளையும் வாழ்த்தும் தலைவரையும் பற்றி அவர்களைப் பிள்ளையாகக் கருதப்பட்டுப் பாடப்பட்டதாகும். இவற்றில் மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ் என்ற சிற்றிலக்கியத்தைக் குமர குருபரர் என்பவர் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு காலத்தில் அழகுப் பொலிவுறப் படைத்துத் தமிழ்த் தாய்க்கு அணிவித்து அவள் வனப்பு மிகு எழில் கண்டு மகிழ்ந்தார். இது ஒரு சிறந்த நூலாகக் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் உரை நடை இலக்கியம் பற்றி நோக்குவோமாயின், தொல்காப்பியத்திற்கு முன்பிருந்தே நம் தமிழ் மாதா ஈன்ற தவக்குழந்தைகள் உரை நடையில் இலக்கியம் படைத்து தம் அன்னைக்கு அணிவித்து அழகு பார்த்திருக்கிறார்கள். இளங்கோ அடிகள் கூட தனது சிலப்பதிகாரத்தில் உரை நடையைக் கலந்தே எழுதியுள்ளார். கி.பி பதினைந்தாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர், போர்த்துக்கேயர், டச்சுக்காரர் போன்றோரின் ஆட்சிக் காலத்தில் பனை ஓலையில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகளுக்குப் பதிலாக காகிதம் வந்தது. எழுத்தாணிக்குப் பதிலாக எழுது கருவிகள் வந்தன. ஐரோப்பியர்களே உரைநடையில் எழுதும் வழமையைக் காட்டிக் கொடுத்து அதிகமாக அறிமுகப்படுத்தினர்.

கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியிலே தான் கால்டுவல், வீரமாமுனிவர் என்போரும் அதன் பின்னர் ஆறுமுக நாவலர், இராமலிங்க சுவாமிகள் போன்றோர் உரைநடையில் இலக்கியம் படைத்துத் தமிழ் தாய்க்கு அணிவித்து மகிழ்ந்தவர்களில் சிறந்தவர்களாகும். இக்காலப்பகுதியிலேதான் தமிழ் மாதாவின் மடியில் பத்திரிகைகள் தோன்றின. இவற்றில் பெரும்பகுதி உரைவடிவிலேயே காணப்பட்டன. இவற்றோடு நாவல்களும், சிறுகதைகளும் தோன்றி. தமிழ் மாதாவிற்கு முதலில் அணிவிக்கப்பட்ட நாவல் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் நாவலாகும். இதனை மாயூரம் முன்சீப் தேவநாயகம் பிள்ளை அவர்களே எழுதித் தமிழ்த் தாயை அழகொளிரவைத்தார்.

தமிழ் மாதா சரிதையில் இருபதாம் நூற்றாண்டு ஒரு திருப்பு முனையாக விளங்கியது. அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற இக்காலப்பகுதியில் தமிழ் மாதா காலத்துக்குக் காலம் செழிப்புற்றிருக்கின்றாள். சுதந்திரத்திற்கு முன் பல புதிய கலைகளைப் பெற்ற தமிழன்னை விடுதலைக்குப் பின்னரும் இசை, மருத்துவம், வரலாறு, உளவியல், தத்துவம், அறிவியல், சட்டவியல் எனப்பல்துறை நூல்களை அணியப் பெற்றுச் சிறப்புற்றாள். எண்ணற்ற பத்திரிகைகளும் வெளிவந்து மேலும் மெருகூட்டின. அன்னியர் ஆட்சியில் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருந்தது. பின்னர் தமிழ் தாய் பயிற்று மொழியானாள். அதுமட்டுமல்ல நீதிமன்றம், ஆட்சித்துறை, அலுவலகங்கள் போன்ற இடங்களிலெல்லாம் தமிழ்மழை பொழிந்தது.

இக்கால கட்டத்திலேதான் பதிநான்கு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறார்களுக்கான கதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் போன்ற குழந்தை இலக்கியங்களும் படைக்கப்பட்டு தமிழ் மாதா மேலும் மெருகூட்டப்பட்டாள். வானொலி நிகழ்ச்சிகளென்றும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்றும், ஏன் தற்போது தனியான வலைப்பின்னல் தளங்கள் என்றும் பல்துறைகளிலும் இன்பத்தமிழ்த் தாய் தழைத்தோங்கிக் கொண்டிருக்கிறாள். என்றாலும் பொற்காலமாகத் திகழ்ந்த அக்காலத்திற்கு இக்காலத்தை ஒப்பிட்டுக் கூறமுடியாது. இப்போது எவ்வளவுதான் நவீனமும், தொழில் நுட்பமும், அறிவியல் முன்னேற்றமும் வந்திருந்தாலும் தற்போது சில சந்தர்ப்பங்களில் நிகழும் மொழிப் புறக்கணிப்பும், இன ஒதுக்கலும் பற்றி தமிழ் மாதா குறைபட்டுக் கொண்டுதான் இருக்கிறாள்.

இவ்வளவுதானா தமிழ் மாதா சரிதம்? இல்லை. இல்லை. அவள் உலகம் உள்ளவரை உய்வுறுவாள். தமிழன்னை சரிதம் முடியாத சரிதம். தொடரான சரிதம் அல்லவா அது?

**வானமளந்த தனைத்தும் எமக்களந்த தமிழன்னையே!**
**நீ வாழ்க! வளர்க!.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி

இரண்டாயிரத்து நான்கிலே
மார்கழித் திங்களிலே
இருபத்தாறாம் நாள் – அந்த
ஞாயிற்றுக் கிழமை.

வைகறை வந்தது
எங்கள் தூக்கமும்
கலைந்து – எல்லோரும்
தமக்கென இருந்த
கடமைகளை நிறைவேற்றும்
முயற்சியில் ஆழ்ந்திட்டனர்.

நேரமும் எட்டு முப்பதானது
தூரத்தில் ஓர் கூக்குரல்
கடல் வருகுது கடல் வருகுது
கிண்டல் சிரிப்புடன் வெளியே
வந்திடத் திருக்கிட்டேன்
திகைத்தேன் கண்டவே.

என்னைத் தள்ளியவர்களாய்
ஓடினர் தங்கள் உயிரைத்
தக்க வைக்க – அங்கே
பித்தனாய் நின்றேன் ஒரு கணம்.

என்னை அறியாமலேயே – திரும்பி
ஓட்டம் பிடித்தன என் கால்கள்
இருதயமோ செக்கனுக்கு – துடித்தது
நூற்றுப் பத்துத் தடவைகள் ஓயாமல்.

அடிமேல் அடிவைத்து வருகிறது
நான் விரும்பி நேசித்த – அந்தக்
கடல் அய்யகோ! அன்று
நான் அதைத் தேடிப் போனேன்
அதன் அருகே. ஆனால் – இன்று
என்னைத் தேடிக் கடலே வருகிறது
விரண்டு ஓடுகிறேன் அதைக் கண்டு.

நான் தேடிப் போனேன் – அன்று
ஆசையுடன் – ஆனால் அது
என்னைத் தேடி வந்தது – உயிரை
சூறையாடும் ஆசையுடன்.

ஆக்கம் : எஸ்.ஜிப்ரியா
(உ/த - கலைப்பிரிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# How I can contribute to peace and harmony

As Sri Lanka is a multicultural country, it is possible to arise a great deal of diverse contradictions among communities or ethnic groups. These contradictions and racial discordance may increase step by step in the course of time and cause splits and divisions among different ethnicities as happened during the last two decades in the country. This is because of our misunderstanding in doctrines of other religions and the people following such system of beliefs. Although there were some other factors that contributed to this situation, this was the maximum reason that led our country to a 25-year-war prevalence. It is therefore vitally important to weed out false notions and prejudices on norms and values practiced by each and every ethnic group through making incessant awareness and mutual exchanging of views to build up societal ties and relationship. Here communication plays a major role in inculcating these norms and values in minds of people from distinct races to restore everlasting peace and harmony in the country.

Since English is a common language spoken by various people in Sri Lanka, it can be used as one of the best media that links dissimilar communities. Through this magic medium we can freely talk about the significance of peace and harmony to social, cultural and economic development of the nation. We should disseminate this message to all students, the younger generation in schools as they are our future leaders and administrators. We can also use mass media for this peace restoring campaign. Writing articles in simple prose to newspapers or performing TV and radio programmes on peace related subjects may streamline the target.

There is a common opinion that students are as if like raw materials which can be carved as required to produce up-to-date designs. As an Advanced Level student studying at Sennel Zahira College, I can immensely contribute to peace and harmony of our mother Lanka by telling the fellow students both the importance of gaining the knowledge of norms and values of other religious creeds with tolerance and understanding and the significance of bringing the eternal peace to the country for smooth coexistence of all community. This, I think may some what contribute to the emergence of peace and harmony in our motherland.

**I. L. Fasmira**
*Advanced Level Student*
*Sennel Zahira College*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்ச்சியா? மயங்காதே!

நம்மைப் பற்றி நன்மையாக பேசுகின்றவர்களை எல்லாம் நம்முடைய நண்பர்கள் என்று நாம் கருதுவதற்கில்லை. ஏனெனில் நம்முடைய நண்பர்கள் போன்று நம்முடன் கலந்து உறவாடி இன்முகம் காட்டி மென்மையாகப் பேசி தங்களின் காரியத்தை சாதித்துச் செல்லும் சுய நலமிகளும், ஏமாற்று வித்தைக்காரர்களும் இவ்வுலகில் ஏராளமாக இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை நாம் எவ்விதம் அறிவது என்று வினவலாம். அவர்களை அறிவதற்கு ஒரு வழி அவர்கள் நம்மை அதிகமாக புகழ்ந்துரைப்பார்கள். அந்தப் புகழ் மொழி நமக்கே பெரும் அருவருப்பைத்தரக் கூடியதாக இருக்கும்.

உண்மை நண்பர்கள் ஒருவரோடு ஒருவர் பழகும் பொழுது அநாவசியமாக ஒருவர் மற்றொருவரை புகழ்ந்து கொள்ள வேண்டுமென்ற தேவையில்லை. அவ்விதம் அநாவசியம் புகழ்மொழி வருமாயின் அவன் நம்முடைய நண்பனல்ல எதிரி என்பதை நாம் உணர வேண்டும். அதிகமான இலைகள் உள்ள மரங்கள் காய் காய்த்தது போன்று அதிகமாகப் புகழ் மொழிகளை அள்ளிச் சொரியும் ஒருவனிடம் உண்மையான அன்பு இருக்காது. அவர்கள் ஏமாற்று வித்தைக்காரர்கள்தான். இனிமையான புகழ்வார்த்தைகளைப் பயன்படுத்துவார்கள் என்பதை அறிய வேண்டும். உங்களைப் புகழ்ந்துரைத்து உங்களை மனப்பூர்வமாக நேசிக்காத அவர்களுடன் அவர்களின் போலி உருவை நன்கு விளங்கிக் கொண்டு உறவாடுங்கள். ஆனால் அவர்களை ஒரு போதும் நம்பி விடாதீர்கள்.

ஏனெனில் உங்களை மனப்பூர்வமாக நேசிக்காதவர்கள் ஒரு போதும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள். அதற்குமாறாக உங்களைத்தான் அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள். பயன்படுத்திக் கொண்ட பின் சாறு பிழிந்த எலுமிச்சம் பழத்தோலை வெளியே தூக்கி எறிவது போன்று உங்களைத்தூக்கி எறிந்து விடுவார்கள். ஆதலால் அவர்கள் பற்றியவரையில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள் அவர்களில் சிலர் உங்களிடம் உங்களைப் பற்றிப் புகழ்ந்துரைக்கமாட்டார்கள். உங்களுடன் நெருக்கமானவர்களிடம் உங்களைப்பற்றி புகழ்ந்துரைப்பவர்களாக இருப்பார்கள். அப்புகழ் மொழிகள் உங்களின் செவிகளில் நிச்சயப்படுமென்பது அவர்களுக்குத் தெரியும் அதற்காகத்தான் அவர்கள் அப்படிச் செய்கின்றார்கள். அவர்கள் பற்றியும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நன்றியுடன் **எஸ்.சம்சுன்நிசா**
**(தரம் – 8B)**

## இலங்கையின் பிரதான குளங்களும் அதனை அமைத்த மன்னர்களும்.

| | | |
|---|---|---|
| 01. பராக்கிரம சமுத்திரம் | - | பராக்கிரமபாகு மன்னன். |
| 02. நுவரவாவி | - | தேவநம்பியதிஸ்ஸ மன்னன். |
| 03. கலாவாவி | - | தாதுசேன மன்னன். |
| 04. பதவிவாவி | - | மகாசேன மன்னன். |
| 05. திஸ்ஸவாவி | - | தேவநம்பியதிஸ்ஸ மன்னன். |
| 06. மின்னேரியா வாவி | - | மகாசேன மன்னன். |
| 07. கலாபனலுவாவி | - | தாதுசேன மன்னன். |
| 08. ஹீருளு வாவி | - | மகாசேன மன்னன். |
| 09. கந்தளாய்க் குளம் | - | 2 ஆம் அக்போ மன்னன் |
| 10. பேலிவாவி | - | எல்லாள மன்னன். |

**ஏ.உம்மு ஹஸீனா பானு (தரம் - 7B)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டார் பாடலுக்கும் மக்களுடைய வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்பு.

*திருமதி.* **என்.ஐ.முஹமட் இஸ்மாயில்**
*(ஆசிரியை).*

நாகரீகம் சென்றடையாத மக்கள் வாழும் இடங்களே கிராமப்புறம் ஆகும். இக்கிராமப்புற மக்களிடையே உள்ள உணர்வுகளான ஆடல், பாடல் கதை, விடுகதை, பழமொழி, நகைச்சுவை, நொடி போன்றவைகளே நாட்டார் இலக்கியம் எனக் கூறப்படும்.

இந்நாட்டுப்புற இயல் என்ற சொல்லை 1846 ஆம் ஆண்டு வில்லியம் தோமஸ் என்பவரே முதன் முதலில் ஆங்கிலத்தில் (FOLK LORE) எனப் பயன்படுத்தினார். இவரைத் தொடர்ந்தே நாட்டாரியல் ஆய்வாளர்கள் இச்சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

நாட்டாரியல் ஆய்வுகள் இன்று பல நாடுகளில் மிகுந்த ஆர்வத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. ஓர் இன மக்களின் நாகரீக வரலாற்றைச் செவ்வனே விளங்கிக் கொள்ள அவ்வாய்வுகள் பெருமளவுக்கு உதவ வல்லவை என்பது உணரப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் அத்துறையினை உதாசீனம் செய்தவர்களும் இன்று அதன்பால் ஆர்வம் கொண்டு உழைக்கின்றனர்.

நாட்டாரியலில் முக்கிய இடத்தினை வகிப்பவை நாட்டார் பாடல்களாகும். அவை கிராமப்புற மக்களின் சீவனோபாய முறைகளையும் வாழ்க்கை, ஒழுக்கங்களையும், நம்பிக்கைகளையும், அபிலாசைகளையும், விழுமியங்களையும், மதிநுட்பத்தையும், ஆக்கத்திறனையும், கற்பனையாற்றலையும் காட்டுவனவாகும். எளிய வாழ்க்கையில் அவர்கள் கொண்ட திருப்தியும், குதூகலமும் எக்காலத்திலும் அமைதியை விரும்புபவர்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். நவீனகால மாற்றங்களுக்கு மத்தியிலும் கிராமப்புற இயல்புகளையும், விழுமியங்களையும் விடாதவர்களாய் விளங்கும் எங்களை நாட்டார் பாடல்கள் கவர்ந்து இதமும் இன்பமும் அளிக்கின்றன.

இந்நாட்டார் பாடல்கள் தாலாட்டுப் பாடல்களாகவும், குழந்தைப் பாடல்களாகவும், விளையாட்டுப் பாடல்களாகவும், நகைச் சுவைப்பாடல்களாகவும், நையாண்டிப் பாடல்களாகவும், தொழிற்பாடல்களாகவும், காதற் பாடல்களாகவும், தூதுவிடு பாடல்களாகவும், பிரார்த்தனைப் பாடல்களாகவும், சத்தியப் பாடல்களாகவும், தத்துவப் பாடல்களாகவும் பொல்லடிப் பாடல்களாகவும், எம்மத்தியில் அதாவது மக்கள் மத்தியில் பாடப்பட்டு உலாவருகின்றன.

இந்தவகையில் தாலாட்டுப் பாட்டை எடுத்துக் கொண்டால் தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் "தாலாட்டு" என தமிழண்ணல் கூறியுள்ளார். தாலாட்டின் சிறப்பினையும், உயர்வினையும் மிக ஆழமாகவும், அழகாகவும், இரத்தினச் சுருக்கமாகவும், விளக்கிக் காட்டும் தாலாட்டின் இசை இன்பத்திலே, குழந்தை எல்லாவற்றையும் மறந்து கண்ணுறங்கத் தொடங்கி விடுகிறது. "தாய் ஆழங்காண முடியாத அன்புக் கடல். அக்கடலில் விளைந்த வலம்புரிமுத்தே தாலாட்டு" என்று தாலாட்டின் மகிமையைப் புடம் போட்டுக் காட்டுகின்றார் திரு.ஆர்.அழகப்பன் என்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலாட்டுப் பாடல் பிள்ளை மனிதனுக்கு எப்போ பிறந்ததோ அந்தக் காலத்திருந்தே தாலாட்டும் பிறந்தது. அதாவது அந்நாளில் தாய்மார்களுக்கு உவமை, உருவகம் தெரியாது. இலக்கணம், இலக்கியம் தெரியாது இருந்தும் கற்பனையாக தன்வாய்க்கு வந்த இனிமையான சொற்களை வைத்து பிள்ளையின் காதிற்கினிய தாலாட்டைப் பாடியுள்ளனர். இதற்கு சான்றாக.

*ஓராரோ.... ஓரகண்டே – நீ*
*ஓராட்டக் கேளாயோ.......*
*என் கண்ணே... நீயுறங்கு!*
*என் கண்மணியே நீயுறங்கு.*

*பாலுக்கோ... நீயழுதாய்? – என்ரவாப்பா*
*பசிக்கிதென்றோ..... நீயழுதாய்,*
*தேடாத திரவியமே – என்ரவாப்பா*
*தேன் தேடாப் பாலகனே*
*வாடாத பூ வே – என்ரமகனார்*
*வதங்காத மல்லிகையே....*

*மானீன்ற கன்றே – என்றமகனார்*
*மயில் பொரிச்ச நற்குஞ்சே......*
*பூ வே நீ புலம்பாதே – என்ரமகனார்*
*பூ மலரே வாடாதே!*
*சாதிக் குலமே – என்ர மகனார்*
*சந்தணப் பூ மேனியரே.....*
*ஓராரோ ஓரகண்டே – நீ*
*ஓராட்டக் கேளாயோ.......*

இவ்வாறு இலக்கணம், இலக்கியம் அறிந்திடாத தாய்மார்கள் சிறந்த உவமை, உருவகம் முன்னிலைப் பெயர்கள் அனைத்தும் போட்டுப் பாடியிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

அடுத்து குழந்தைகளுடன் மிக நெருங்கிய குழந்தைப் பாடல்களையும் விளையாட்டுப் பாடல்களையும் நோக்கினால். உலகில், மானிட வாழ்வில் பெறத்தக்க செல்வங்கள் அனைத்திலும் மேலான செல்வம் குழந்தைச் செல்வமாகும். இதையே "பெறுமவற்றுள்யாமறிவது இல்லை. அறவறிந்த மக்கட்பேறு அல்ல பிற" என திருவள்ளுவர் கூறியுள்ளார். கோடானகோடிச் செல்வங்கள் குவிந்து கிடந்தாலும், குழந்தைச் செல்வமில்லாத இல்லற வாழ்வில் இனிமையே இருக்காது.

"குழந்தைகளைப் பாடும் பறவைகள், ஆடும் மலர்கள், அசையும் தென்றல் அன்பு வடிவங்கள், ஆசைத் தேர்கள், பாசக் கொடிப்பூக்கள், பௌர்ணமி நிலவுகள் என்று எவ்வாறு புகழினினும், போற்றினும் பொருந்தும். ஏனென்றால் வேறு யாங்கணும் இல்லாத புதுமையும், பொலிவும் குழந்தைகளிடம் உள்ளன. வேறு எதனிடமும் கொள்ள முடியாத இன்பமும், ஈடுபாடும் அதனிடம் உள்ளன என டாக்டர் சண்முக சுந்தரம் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் குழந்தைகள் தனது வாய்க்கு வந்த கற்பனைப் பாடல்களைப் பாடிக் கொண்டு ஆடிப்பாடி விளையாடுகிறார்கள். இக்குழந்தைப் பாடல்கள் களங்கமற்று அமைதியாக ஓடிக் கொண்டிருக்கும் நீரோடை போல் விளங்குகின்றன. குழந்தைப் பாடலுக்கு உதாரணமாக

"எவடம் எவடம்
புளியடி.. புளியடி
எவடம் எவடம்"

"மூசா மூசாப் பள்ளியிலே
முப்பத்திரண்டு தென்னைமரம்
காய்க்கும் பூ க்கும் கலகலக்கும்
காக்கா நிக்காரு கொப்பிலே"

கிள்ளி கிள்ளிப் பிராண்டியாரே
கிள்ளப்பம் திண்டவரே
பாதிப்பிலாக்காய் திண்டவரே
பாவட்டங்காய முடக்கு.
முருங்கப்பூ பூ த்தவரே
முன்னடிக்கஞ்சி குடித்தவரே
பாதிப்பிலாக்காய் திண்டவரே
பாவட்டங்காய முடக்கு"

ஆலாப் பற பற
ஆலாக்குஞ்சுகள் பறபற
கொக்கு பற பற
கொக்குக் குஞ்சு பற பற
குருவி பற பற
குருவிக் குஞ்சு பற பற
மைனாப் பற பற
மைனாக் குஞ்சு பற பற
காகம் பற பற
காகக் குஞ்சு பற பற
புறாப் பற பற
புறாக்குஞ்சு பற பற

மேலும் குழந்தைகள் வினா விடைப் பாடல், கிட்டி விளையாட்டுப் பாடல் போன்ற பாடல்களையும், பாடல்களின் கருத்து பூரணமாகத் தெரியாமலே இனிமையான சொற்களில் தனது வாய்க்கு வந்த மாதிரிப் பாடப்பட்டிருக்கின்றன.

அடுத்து நகைச்சுவைப் பாடல்களை எடுத்து நோக்குவோமேயானால் இறைவனின் படைப்புக்களில் மனிதர்கள் மட்டுமே, நகைத்துச் சிரிக்கும் பண்பைக் கொண்டுள்ளார்கள். இதனாலேயே, மானிட வாழ்வில் நகைச்சுவை முக்கிய இடத்தைப் பெறுகிறது. நகைச் சுவை மனிதனை சிரிக்க வைப்பதோடு மட்டும் நின்று விடாது அவனைச் சிந்திக்கவும் வைக்கிறது. எனவேதான் நகைச் சுவை இல்லாத வாழ்க்கையை உப்பில்லாப் பண்டத்துக்கு ஒப்பாக்கக் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமான வேலைகளைச் செய்து களைப்புற்றுச் சோர்ந்திருக்கும் மனிதன், நகைச்சுவை மூலம் புதுப் பொலிவடைந்து, புத்துணர்வு பெறுகின்றான். இது இயற்கை அவனுக்கு அளித்த கொடையென்றே கூறலாம். பொறுக்க முடியாத கோபத்தோடு இருக்கும் மனிதனொருவன் சிறந்த நகைச் சுவை ஒன்றைக் கேட்கும் போது, தன்னையே மறந்து சிரித்து விடுகின்றார்.

எள்ளல், திறமை, பேதமை, மடம் என்ற நான்கின் வழியே நகைச் சுவை தோன்றும் எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். நகைச் சுவையின் சிறப்பு, முதன்மை கருதியே இவர் மெய்ப்பாடுகளுள் நகைச் சுவைக்கு முதலிடம் கொடுத்துள்ளார்.

ஏட்டு இலக்கியங்களில் நகைச் சுவை மிளிர்வதைப் போன்றே ஏடறியா ஏழைக்கிராமத்து மக்களின் நாட்டார் பாடல்களிலும் நகைச் சுவை இடம்பெற்றுள்ளதைக் காணலாம். களனிகளிலும், காத்து மேடுகளிலும், வேலை செய்து களைப்புற்றிருக்கும் கிராமத்து மக்கள் தங்கள் சோர்வுகளைப் போக்கிக் கொள்ள நகைச்சுவைப் பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர். கள்ளம் கபடமில்லா வெள்ளை உள்ளம் கொண்ட கிராமத்து மக்களின் நகைச் சுவைப்பாடல்கள் கருத்தாழமும், கற்பனை வளமும் கொண்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு சில நகைச் சுவைகளைப் பார்க்கின்ற போது,

*"புத்தியநிஞ்சி*
*பூ லோகத்தில் காத்திருந்து*
*வாண்டேங்கா ராத்தா – ஒரு*
*வகுத்து நசல் காறனுக்கு"*

இப்பாடல் மூலம் தனக்கு எந்தவிதத்திலும் பொருத்தமில்லாதவன் என்பதை" வகுத்து நசக்காறன்" என்ற வார்த்தை மூலம் நகைச் சுவையாகக் கூறுகின்றாள்.

*"ஏழுவன நெல்லும்*
*எருமைகளும் கன்றுகளும்*
*தாறதுதான் ஒங்களுக்கு – இப்ப*
*சம்மதமா சொல்லு பொடியா"*

இப்பாடல் மூலம் சீதனம் கொடுப்பதை நகைச்சுவையாகக் கூறுகின்றாள்.

*"கச்சான் அடிச்ச*
*காட்டில் மரம் ஒய்ந்தது போல்*
*உச்சியிலே நாலுமயிர் – அவர்*
*தரமெல்லாம் தான் வழுக்க"*

இப்பாடல் அவளுக்கு கெட்ட மாப்பிள்ளை வழுக்கை தலையன் என்பதை ஒரு பெண்நகைச் சுவை மூலம் எடுத்துக் கூறுகின்றாள். இவ்வாறாக கிராமத்து மக்கள் நகைச்சுவை ததும்ப பாடல்களைப் பாடியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து நையாண்டிப் பாடல்களை எடுத்துக் கொண்டால் இப்பாடல்கள் நகைச் சுவைப் பாடல்களிலிருந்து வேறுபட்டதாகும். அதாவது நகைச் சுவை மனிதனை சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கிறது. ஆனால் நையாண்டி மனிதனை அழவைத்து அவமானப் படுத்துகிறது. நையாண்டிப் பாடல்கள் ஒருவனின் ஆளுமையை அவமானப்படுத்தி கோபம் கொள்ளச் செய்கிறது. இவ்நையாண்டிப் பாடல்களை "வசைப்பாடல்" என்றும் வாதுகவி என்றும் அழைப்பர். முற்காலச் சான்றோர் இப்பாடலை "அங்கதப் பாடல்கள்" என அழைத்தனர். அங்கதம் 2 வகைப்படும் பொதுவாக புகழ்வது போலப்பழித்தலும், பழித்தலைப் போன்று புகழ்தலும் பாடுகின்ற ஒரு நிலையைச் சுட்டும்.

நையாண்டி செய்யும் பழக்கம் மனித சமுதாயம் தோன்றியதிலிருந்தே இன்று வரை மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் பற்பல காலங்களில் புலவர்கள், சொல்நயமும், சுவை நலமும் கொண்ட நையாண்டிப் பாடல்களைப் பாடியுள்ளனர். இப்புலவர்களில் காளமேகப்புலவர், கம்பர், கடிகை முத்துப் புலவர், ஔவையார், ஒட்டக்கூத்தர், பலபட்டடைச் சொக்க நாதப் புலவர் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

நையாண்டிப் பாடல் சிலதை நோக்குகின்ற போது எச்சில் கையால் கூட காகம் விரட்டாத ஒரு கருமியைப் பற்றி நையாண்டியாக பின்வருமாறு கூறப்படுகின்றது.

*"சாதி குழப்போ*
*தள்ளு குடி வங்கிசமோ*
*மகுலாக் குரங்கண்ட*
*மனசுதவ வாராத்தா"*

காளமேகப் புலவரின் நையாண்டிப் பாடலொன்றைக் கவனிக்கின்ற போது முடிச்சவிழ்ந்த முன் குமிச் சோழியனைப் பற்றிய பாடல்.

*"சுரக்கவிழ்ந்த முன் குடுமிச் சோழியா! சோற்றுப்*
*பொருக்குலர்ந்த வாயா! – திருக்குடத்தைக்*
*கேட்டானே! நாயே! குரங்கே உனையொருத்தி*
*போட்டானே வேலையற்றுப் போய்"*

*இன்னும் ஒருபாடலை நோக்குகின்ற போது,*
*பண்டி குரங்கு தின்னி*
*பச்ச உடும்பு தின்னி*
*எலியாக்கித் தின்னி – எனக்கு*
*என்ன கத சென்னாயடா*

இப்பாடலானது நையாண்டியாக ஒருவன் ஒருவனுக்கு ஏசுவதனை குறித்து நிற்கிறது.

அடுத்து தனது தொழிலை உற்சாகமாகவும், அலுப்பின்றியும் செய்வதற்கு நாட்டார் பாடல்களை கிராமிய மக்கள் பாடியிருக்கின்றனர். அதாவது எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும், எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ஆணும், பெண்ணும் சேர்ந்திருந்தால் ஒரு இன்பம், மகிழ்ச்சி, அலுப்பின்மை ஏற்படுகின்றது. என்பதை பின்வரும் பாடல் எடுத்துரைக்கினறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது – அதில்
ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது"

எனப்பாடி தனது தொழிலை சந்தோசத்துடன் அலுப்பில்லாமல் செய்து முடிக்கின்றான். இது அநேகமாக வயல் நிலங்களில் பாடப்படுகின்ற ஒரு பாடலாகும்.

கிராமிய மக்கள் பல வேலைகளை அலுப்பின்றிச் செய்யக் கூடியவர்கள் அவர்கள் தங்களுக்கு அலுப்பு வராமல் செய்வதற்காகவும், தாங்கள் செய்யும் தொழிலை எடுத்துக் காட்டுவதற்காகவும் தொழில்களின் தன்மைகளுக்கேற்ப ஓசை நயத்தோடு பாடுவார்கள். ஓசைகள் குறுகியும் நீண்டும் பாடலுக்கேற்றவாறு காணப்படும் எனினும் தொழில் பாடல்களில் விவசாயம் செய்யும் போது பாடும் பாடல்கள் அதாவது உழுதும் போதும், பயிர் காவல் காக்கும் போதும், கதிர் அடிக்கும் போதும், அருவி வெட்டும் போதும், சூடு போடும் போதும் இவைகளைக் கருப்பொருளாக வைத்துப் பாடி உள்ளனர்.

உதாரணமாக சூடு போடும் போது பின்வரும் பாடலைப் பாடுகின்றனர்.

"ஓ..... ஓஹோ...... ஓ
கடகத்திக்க மூணுடா
கைப்பெட்டிக்கு ரெண்டுடா
ஆகப் போக அஞ்சிரா

மேலும் நாட்டார் பாடல்கள் ஒவ்வொரு தொழிலுக்கும் ஏற்றாற் போல பாடப் படுகின்றது. அதாவது மீனவர்கள் தனது அலுப்பை நீக்குவதற்காக பின்வரும் பாட்டை பாடிக் கொண்டு தொழிலில் ஈடுபடுகின்றனர்.

ஏலேலோ...... ஏலேலோ......
ஐலேசா...... ஐலேசா

என்ற பாடலைப் பாடுகின்றனர்.

அடுத்து நாட்டார் பாடல்களில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது காதற் பாடலாகும். அதாவது தனக்குப் பிடித்த ஒருவனை அல்லது ஒருவளைப் பற்றிப் பாடுகின்றனர். அதாவது பருவமடைந்த ஆணும், பெண்ணும் தங்கள் அன்புகளை வெளிக்காட்டும் நோக்குடனும், காதலின் சிறப்பினையும், அதன் தன்மையினையும் எடுத்துக் காட்டும் வகையில் இப்பாடல்கள் பாடப்படுகின்றன. காதல் என்பது இறைவனின் எல்லையற்ற அன்பில் ஊற்றே என்று கொள்ளப்படுகின்றது.

பூ சின செம்பே – எந்தன்
புழதிபட வெங்கிலமே
ஆசைக்கிளியே மச்சி ஒன்ன
ஆருவச்சி ஆளுவாரோ?

இவ்வாறாக பெண்ணின் ஒழுக்கத்தையும் அழகையும் தவிர்க்கும் தலைவனின் தாளாத ஆசையின் தாளங்களையும் ராகங்களையும் பற்றிப் பாடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இக்காதல் பாடலானது வாக்குவாத ரீதியாக வினா விடையாகவும் பாடப்படுகின்றது. அதாவது ஒருவனுக்கு மட்டும் ஏற்பட்ட அன்பினை பிரதிபலிப்பனவாக அமைகின்றது.

இதற்கு உதாரணமாக

"ஊரார் தூங்கையிலே,
உற்றாரும் தூங்கையிலே
நல்ல பாம்பு வேடம் பூ ண்டு
நான் வருவேன் சாமத்திலே

அடுத்து கிராமிய வழக்கில் பொல்லடி விளையாட்டும் முக்கிய இடம் பெறுகின்றது. அதாவது இவ்விளையாட்டை விளையாடும் போது நாட்டார் பாடல்களைப் பாடிக் கொண்டே விளையாடுவார்கள். அதவாது அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்த அவன் தனது அலுப்பைப் போக்குவதற்காக இன்ப, சந்தோஷ நிகழ்வுகளில் ஈடுபடுகின்றான். அதுமட்டுமல்லாமல் தமது கவலைகளையும் போக்கிக் கொள்வதற்காக இப்பாடலைப் பாடுகின்றனர். இப்பாடலானது பதங்களாகவும் கீர்த்தனைகளாகவும், சிந்துகளாகவும் பாடப்பட்டுள்ளன. மேலும் வழிநடைச் சிந்துகளாகவும் காணப்படுகின்றது.

தந்தனத் தான தானதனா
தந்தனத் தான தானதனா
தந்தனத் தான தந்தினா

என்ற பாடலைப் பாடிக் கொண்டு பொல்லடியை அடித்து விளையாடுவார்கள்.

மேலும் பிரார்த்தனையை வெளிப்படுத்தும் நாட்டார் பாடல்களை கிராமிய மக்கள் பாடினர். அதாவது தனது தேவையை நிறைவேற்ற இறைவனிடத்தில் வருந்திப் பாடப்படுவதாகும்.

சக்கிராத்து வேளையிலே
சள்ளுப்பட்டு போகாம
மலக்குல் மவுத்த – அல்லாஹ் நீ
மனமிரங்கச் செய்துவிடு.

அடுத்து சத்தியப் பாடல்களும் நாட்டார் பாடல்களில் இடம் பெறுகின்றன. அதாவது முஸ்லிம்கள் மத்தியில் ஏதாவது தீர்க்க முடியாத பிரச்சினை எழுந்தால் அப்பிரச்சினையை யாராவது ஒரு சாரார் சத்தியம் செய்வதன் பேரில் தீர்த்துக் கொள்வார்கள். இது கிராமத்து மக்களில் இடம்பெறுகின்ற வழக்காகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்வரும் சத்தியப் பாடலைப் பாடுவார்கள்.

துள்ளிக் குதித்து
தூ! வென்று துப்புகிறாய்
விளக்கறியக் கள்ள – ஒண்ட
வேரழிப்பேன் – சத்தியண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஊர்களின் சிறப்புக்களையும் மக்களுடைய வாழ்க்கையில் பாடல்களாக பின்னிப்பிணைந்து பாடப்பட்டுள்ளமையைக் காணலாம்.

*"அப்பம் சுடும் காத்தான்குடி*
*அவல் இடிக்கும் காரதீவு*
*முட்டி தூக்கும் சம்மாந்துறை – நாங்க*
*முகப்பழக்கம் நிந்தவூரு*

*அக்கரைப்பத்திலயோ*
*அங்கு கரவாகிலயோ*
*சம்மாந்துறையிலயோ – என்ர*
*தங்கவண்டார் தங்கிறது.*

*அக்கரைப்பத்து*
*அழிஞ்சாலும் குத்தமில்ல – என்ர*
*பாலமுன ஊரு – இப்ப*
*பவுத்திரண்டா ஆண்டவனே*

*அக்கரப்பத்தோ*
*அவரும் கரவாகோ*
*சாய்ந்தமருதூரில் – அவருக்கு*
*சாதி சனம் உண்டாமோ?*

*சீனட்டி நெல்லும்*
*செல்ல இறால் ஆணமும்*
*பொத்துவில் ஊரும் – இப்ப*
*பொருந்தினமோ வள்ளிமைக்கு*

*பட்டியடிப்புட்டி*
*பினல் தயிரு களத்த இடம்*
*நெய்யுருக்கி ஊத்துநாங்க –*
*என்ற*
*நேசக்கிளி போயிருக்கு.*

*போறாருகா வன்னியனார்*
*பொத்துவிலப்பாப்பமெண்டு*
*மாயமருந்தால் – கள்ளி*
*மயக்கிறாளோ நானறியன்*

*அக்கரப்பத்தில்*
*அதிகமழை பேஞ்சி*
*ஊரழிஞ்சி போச்சு – இத*
*உத்துணர்ந்து பார் ராசா*

*பொத்துவில் ஊரான்*
*பொல்தராசுடையாள்*
*திட்டுப்பலிச்சா – நம்முட*
*சிவனுக்கும் தீங்குவரும்*

*இறக்காமத்து அவுலியாவே*
*இரணசிங்கயாகுதுபே*
*கொடிப்பறக்கும் சீமானே – ஒரு*
*கொழந்த தந்தால் ஆகாதோ.*

அடுத்து நாட்டார் பாடல்களில் தத்துவப் பாடல்களும் உள்ளாக்கப்படுகின்றது. வாழ்க்கை நிலையற்றது. இதனை உணர்ந்து தங்கள் வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே வாழ்வின் தத்துவம். இத்தத்துவம் சித்தர் பாடல்களில் நன்கு வலியுறுத்தப் பெறுகின்றது. இக்கருத்து நாட்டுப் புறப் பாடல்களில் இடம்பெற்று விளங்குகிறது என்று கூறியுள்ளார் டாக்டர் அ.ஆறுமுகம். இதற்கு உதாரணமாக.

*பொன்னால் கொடிபறந்து*
*புகழ்வீசி நிண்டாலும்*
*அல்லாட கட்டளைக்கு – என்றும்*
*அழிவு இல்ல நிச்சயங்கா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வழிநடைச் சிந்தும் நாட்டுப்புற பாடலில் அடக்கப்படுகின்றது. கிராமப்புற மக்களின் பிரயாணங்கள் அக்காலத்தில் கால்நடையாகவே இருந்தன. இதனோடு தொடர்புடையதாக இப்பாடல்கள் தோற்றம் பெற்றன.

***இக்கினியாகல்லும் பார்க்க***
***எழுந்து நடந்து வா மானே – கொஞ்சம்.***
***எட்டி நடந்து வா தேனே.***

எனப் பாடப்படுகின்றன. எனவே இவ்வாறெல்லாம் பாடப்படுவதன் நோக்கம்.

- கிராமிய மக்களின் உள்ளத்திற்கு அமைதி அளிப்பது.
- செய்யும் தொழிலை இலகுபடுத்துவது.
- மக்களின் மத்தியில் பரஸ்பர உணர்வை ஏற்படுத்துவது.
- உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது.
- மன உளைச்சல்களை வெளிப்படுத்துவது.
- ஓய்வு நேரங்களை மகிழ்ச்சியாகக் கழிப்பது.
- ஒருவரோடு ஒருவர் ஒத்துழைப்போடு பழகுவது.
- அன்றாட செயற்பாடுகளை வெளிப்படுத்துவது.
- விளையாட்டுக்களில் உற்சாகத்துடன் ஈடுபடுவது.
- தெய்வ வழிபாட்டில் பூரணமாகத் தம்மை இணைத்துக் கொள்வது.

மேலும் இசை என்பது பூர்வீக இசை, நாட்டார் இசை, கீழைத்தேய இசை என்ற மூன்றுமாகும். இதன்படி மேலே குறிப்பிடப்பட்டிருப்பவை எல்லாம் இசையே ஆகும்.

எனவே பொதுவாக நோக்குமிடத்து இசையானது நாட்டார் இசை மட்டுமன்றி அதி உன்னத சக்தி வாய்ந்த ஜனரஞ்சகமுடைய ஓர் இன்பக் கலையாகும்.

**மாணவர்களை கற்க வேண்டும் என்று ஊக்குவிக்காமல் கற்பிக்க எத்தனிப்பவன் ஒரு கடின இரும்பை அடிப்பவர் போலாவான்.**

The teacher who is attempating to teach without inspring the pupil with a desire to learn is hammering on a cold iron.

-Horace Manu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றலைகளின் நாயகன் மார்க்கோனி

காற்றலைகளில் இசையை செய்தியை வீட்டுக்கு சுமந்து வருவதில் முன்னோடியாக விளங்குவது வானொலி. இதன் கண்டுபிடிப்புக் கதை சுவாரசியமானது. வானொலியைக் கண்டு பிடித்தவர் மார்க்கோணி. இத்தாலியில் உள்ள போலாக்னோவில் 24.04.1874 அன்று குக்லியெல்லலோ எனும் கிராமத்தில் பிறந்தார் மார்க்கோணி. இவர் சிறு வயதில் எதையும் ஆராய்ச்சி மனப்பான்மையுடனே பார்ப்பார். பியானோ வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

ஒரு நாள் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது மாணவர்கள் எழுப்பும் சத்தத்தின் எதிரொலியைக் கவனித்தார். இதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தார். காற்றுக்கு ஒலி அலைகளைத் தாங்கிச் செல்லும் தன்மை இருக்கிறது என்று அவருக்குத் தோன்றியது. இதைத் தொடர்ந்து கம்பிகள் இல்லாமல் செய்தி அனுப்பும் முறை பற்றி ஆராய்ச்சி செய்தார். மின் காந்த அலைகளை வானத்தில் பரவ விட்டு மனிதர்களின் பேச்சை ஒலி பரப்பும் கருவியைக் கண்டு பிடித்தவர் மார்க்கோணி. இவர் 1896 ஆம் ஆண்டு இங்கிலாந்தில்தான் கண்டு பிடித்த கருவியை சோதித்துக் காட்டினார். தன் கண்டுபிடிப்புக்கு காப்புரிமை பெற்றார். அதுதான் வானொலி.

1901 ஆம் ஆண்டு அட்லாண்டிக் கடலின் குறுக்கே இங்கிலாந்தில் இருந்து வேறு நாடுகளுக்கு வெற்றிகரமான முறையில் வானொலிச் செய்திகளை அனுப்பினார். 1909 ஆம் ஆண்டு ரிப்பப்ளிக் எனும் கப்பல் கடலில் உடைந்து மூழ்கியது. விபத்தில் சிக்கியவர்களை மீட்க வானொலி மிகவும் பயன்பட்டது. இதன் பின்னர் மார்க்கோனி கண்டுபிடித்த வானொலியைப் பற்றி பல நாடுகளுக்கும் தெரிய ஆரம்பித்தது. இதையடுத்து 1909 ஆம் ஆண்டு வானொலியைக் கண்டுபிடித்ததற்காக மார்க்கோனிக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

மார்க்கோனி தொடர்ந்து சிற்றலைகள் குறித்து ஆராய்ச்சிகளை செய்து கொண்டே இருந்தார். மார்க்கோனி கண்டுபிடித்த கருவியைக் கொண்டு தன் அரன்மனையில் ஒலிபரப்பு நிலயத்தை ஏற்படுத்த தன் விருப்பத்தை விக்டோரியா மகாராணி மார்க்கோனிக்கு தெரியப்படுத்தினார். ராணியின் விருப்பத்தை மார்க்கோணி ஏற்றுக் கொண்டார்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வானொலியை கண்டுபிடித்தர்க்காக 5 ஆம் ஜோர்ஜ் மன்னர் மார்க்கோனிக்கு சேர்ப் பட்டம் கொடுத்து கௌரவித்தார். காற்றையே தன் வசப்படுத்திய மார்க்கோனி 1937 ஆம் ஆண்டு இறந்தார். இருப்பினும் அவரது கண்டு பிடிப்பால் அவர் காற்றலைகளில் இன்றும் வாழ்கிறார்.



M.N.சியானா பானு
தரம் - 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்பார்ப்புகள்.

**வை.பி.முஹமட் இஸ்மாயில்**
**BA,Trained, NCT(Cvil) Eng**

அன்று விடியற்காலை சூரியன் உதிக்கு முன் கண் விழித்தாள் மதுரா. தானே தன் கடமைகளை மேற்கொண்டாள். இளமையிலேயே தன் தாயை இழந்த மதுரா தானே தனக்குத் தாயானாள். தாய் இறந்த பின் தாய் நிறைவேற்றி வைக்க வேண்டிய தேவைகளை தானே நிறைவேற்றிக் கொண்டாள்.

ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் சிறுமியான அவள் பாடசாலை செல்வதற்கு ஆயத்தமான வேளையில் செருப்புப் பட்டி அறுந்து போனதை தந்தையிடம் முறையிட்டாள். தந்தையோ தானும் தன் பாதையுமாக சென்று கொண்டிருப்பவர். 'என்ன செருப்புப் பட்டியும் மண்ணாங்கட்டியும். படிச்சுக் கிழிக்கிற கிழிவைக்கு செருப்பு வேறு கிழியுதோ' எனக் கடிந்தார் மதுரா மீது. மதுராவோ மலர்ந்த தாமரை வாடியது போல முகம் சுருங்கி விழிகள் கண்ணீர் கசிய அருகில் இருந்த பாட்டியை அணுகினாள். செருப்புத் தேய்ந்து உள்ளே புதைந்திருந்த வேறு நிறம் பளிச்சென்று தெரிந்ததைக் கண்ட பாட்டி தன் சட்டையில் இருந்த ஊசைக் கழற்றி செருப்பிலே குத்திவிட்டு ஒருவாறு சமாளித்து மதுராவை பாடசாலைக்கு அனுப்பி வைத்தாள்.

பாடசாலையிலே ஏனைய தனது சகபாடிகளுடன் சமனாகத் தன்னையும் ஒருவளாக்காமல் தனிமையிலேயே உட்கார்ந்து கொண்டு ஏதோ ஒன்றை இழந்ததைப் போல சிந்தனையில் ஆழ்ந்தாள். அச்சிந்தனை உளவியல் ரீதியிலான உளச் சிக்கல் நிறைந்த சிந்தனையாகும். 'எனக்கு என்ன குறை. வசீகரமான முகம். எழிலான கட்டழகு. ஏனையோரை விட சிறப்பாகத்தானே இருக்கின்றேன்' என்று தன்னைத் திருப்திப்படுத்தும் நிலை ஒரு புறம். "வீட்டிலே எனக்கு நோவினை ஏற்படுத்தும் போது 'அம்மா' என்றழைப்பேனே அப்போது ஓடோடி வந்து என்னைக் கட்டி அணைப்பாளே அந்த அரவணைப்பையும் இறைவன் இல்லாமலாக்கி விட்டானே. இனி யாரை அம்மா என்றழைப்பது என் தேவைகளை யாரிடம் முறையிடுவது" என்று தனக்குத் தானே வினாக்களைத் தொடுத்து உருகிக் கொண்டாள்.

பாடசாலை விட்டு வீடு சென்ற மதுரா 'பாட்டி... பாட்டி... அடுத்த வீட்டுத் துஞ்சிதாவுக்கும் அம்மா இல்லை தானே. அவ நன்றாக உடுக்கிறா. தங்க நகை எல்லாம் அணிகிறா. ஏன் பாட்டி எனக்கு அந்த வசதிகளை அம்மா செய்து வைக்கலயா' என்று குமுறினாள். அவ்வேளை அறைக்குள் நுழைந்த தந்தை 'என்ன.... பாட்டியும் பேத்தியும் எந்த நாட்டைப் பிடிக்க இரகசியம் பேசுறிங்க' என்றார். அதற்குப் பாட்டி 'நீ எல்லாம் கிடக்கிறியே ஒரு அப்பன் என்று. நீ எல்லாம் ஒரு அப்பன். நீயும் ஒன்ட பாட்டிலேயே திரிஞ்சா அன்புக்காக ஏங்கும் ஒன்ட தாயில்லாப் பிள்ளையை யார் கவனிப்பாக' என்றாள். தந்தையோ காதில் விழுந்த பாதி விழாத பாதியாகச் செவிடன் காதில் ஊதிய சங்குபோல தன் பாட்டிலேயே சென்று விட்டார். பாட்டியோ மதுராவுக்கு ஆறுதல் வார்த்தை கூறி ஓரளவு சமாளித்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் வகுப்பறையில் டீச்சர், 'இப்ப நிலுஜாவின் மாலையைக் காணவில்லை. ஒருவள்ட கொம்பாஸ் பெட்டியில் இருப்பது எனக்குத் தெரியும். நான் வந்து எடுப்பதற்குள் யாருக்கும் தெரியாமல் என்னிடம் கொண்டு வந்து தந்திருங்க. இல்லன்னா, என்னைத் தெரியும்தானே' என்றபடி பிரம்பையும் எடுத்து ஒரு முறி முறித்துக் காட்டினார். மதுராவோ களவென்றாலே என்னவென்று தெரியாதவள். கள்ளம் கபடம் இல்லாப் பிஞ்சு மனம் உடையவள்.

அவளது மனம் உறுத்தியது. விழிகள் கண்ணீர் கசிய ஆரம்பித்தன. கைகள் செயல் இழந்து நடுக்கம் பிடித்தன. டீச்சருக்கு அருகில் சென்று கொஞ்சம் வெளியே வாங்க டீச்சர் என்று கூறி டீச்சருடன் வகுப்பறையை விட்டு வெளியே வந்தாள் மதுரா.

டீச்சரோ உளவியல் கற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர்தான். மதுராவின் நிலைமையைப் புரிந்து கொண்டார். மதுராவிடம் 'என்ன....... மதுரா' எனக் கேட்க டீச்சர் எனக்கு தங்கம் என்றால் நிறைய ஆசை. அப்பாட்ட வாங்கிக் கேட்டா என்னை ஏசிப் பேசி கொன்றாலும் கொன்றிடுவார். அம்மா இருந்தால் எல்லாம் வாங்கித் தருவார். அம்மாவோ செத்துவிட்டார். அதால நிலுஜாட மாலையை திருடனும் என்பதற்காக எடுக்கல்ல டீச்சர். அவ வெளியே போன நேரம் நான்தான் எடுத்துக் கழுத்தில போட்டுப் பாத்தன். அவ வாரதுக்குள்ள வைக்கனும்னுதான் நினச்சேன். அதற்குள்ள மறந்திட்டன் டீச்சர். இந்தாங்க டீச்சர் அந்த மால. டீச்சர் மற்றவங்கிட்ட என்னைக் காட்டிட வேண்டாம் டீச்சர்' என்றாள்.

'மதுரா நீ ஏன் அழுகிறாய். உன்னை யாரிடமும் காட்டிக் கொடுக்க மாட்டேன். நீ பயப்பட வேண்டாம். நீ திருடல்ல. சும்மாதான் எடுத்தாய். மறந்திட்டாய். அவ்வளவுதான். சரி, நீ ஒன்றும் கவலைப்படாதே. ஸ்கூல் கலைந்து எங்கட வீட்டுக்குப் போய் எனது பிள்ளைகளுடன் விளையாடி விட்டு மாலையானதும் நானே உன்ட வீட்டுக்குக் கூட்டிப் போறன்' என்றார் டீச்சர்.

மதுராவின் அப்பாவை டீச்சர் சந்தித்து 'பிள்ளைகள் எதிர்பார்க்கும் உடலியல், உளவியல் தேவைகளைக் கூறி, அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படாது விட்டால் அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு எதிர்காலத்தில் பிறழ்வான நடத்தை உள்ளவர்களாகவும், நெறி பிறழ்ந்தவர்களாகவும் மாறி பெற்றோர்களின் பெயருக்கே களங்கத்தை ஏற்படுத்துவார்கள்' என்று கூறி மேலும் 'மதுரா அம்மா இல்லாப் பிள்ளை. அவள் அன்புக்காக ஏங்குகிறாள். எனவே மதுராவுடன் அன்பாக ஆதரவாக கனிவாக நடந்து கொள்ளுங்க' என்று பல ஆலோசனைகளைக் கூறி விட்டுச் சென்றார்.

மறுநாள் காலை மதுராவை டீச்சர் அழைத்து 'இப்ப உங்க அப்பா எப்படி. முதல் மாதிரித்தானா' என்று கேட்டார். 'இன்று காலையில ஒரு நாளும் இல்லாத சந்தோசம் டீச்சர். அப்பாதான் என்னை குளிக்க வைத்தார். அவர்தான் சோறும் வைத்துத் தந்தார். காசும் கூட தந்தார் டீச்சர். இப்ப நான் சந்தோசமாய் இருக்கன் டீச்சர். மாலையும் ஒரு சோடிக் காப்பும் கூட வாங்கித் தருவாராம்' என்று மலர்ந்த முகத்துடன் கூறினாள். பின்னர், மதுரா முன்னர் மாதிரி இல்லாமல் பிள்ளைகளுடன் சேர்ந்து நன்றாக விளையாடினாள்.

*ஆசிரியர் - மாணவர் தொடர்பு என்பது வெறுமனே இயந்திரமானதல்ல. சட்டம், விதி போன்றவற்றுக்கு அப்பால் மனிதாபிமானத்துடன் நடக்க வேண்டியதேயாகும். நம்முள் எத்தனை ஆசிரியர்கள் இதனை உணர்கிறார்கள்.?*

*(முற்றும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்புத் திறன்களை வளர்த்தல்

**எம்.எம்.ஏ.றஹீம்**
*(ஆசிரியர்)*

கேட்கும் பேசும் அனுபவங்களுடன் பாடசாலைக்கு வரும் பிள்ளைக்கு மேலதிகமாக வாசிக்கும், எழுதும் திறனை வளர்ச்சி அடையச் செய்வது பாடசாலையில் நடைபெற வேண்டிய செயல் ஒன்றாகும். அறிவைப் பெற்றுக் கொள்ளும் முக்கிய வழி வாசிப்பு ஆகும். ஆரம்பத்திலிருந்தே அதற்குத் தேவையான திறன்களை வளர்க்க வேண்டும். ஆரம்ப சமுதாயத்தில் செவிலி வழியாக நடைபெற்ற இச்செயலை எழுத்தும், வாசிப்பும் கற்றுக் கொண்ட பின்னர் இக்கால சமுதாயத்தின் அனேகமாக நடைபெறுவது புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைகள் ஆகியவற்றினாலே ஆகும். இவ்வறிவுக் களஞ்சியங்களினால் மாத்திரம் பயன் கிடைப்பதில்லை.

அந்த அறிவுக் களஞ்சியத்திற்கு அனுகும் வாயிலாக அமையும் வாசிப்பை நாம் பயிற்ற வேண்டும். இவ்வாசிப்பை சிறுபராயத்திலிருந்தே பயிற்றல் வேண்டும். தாய் மொழியில் மட்டுமல்ல பாடசாலையில் கற்கும் ஏனைய பாடங்களிலும் அறிவைப் பெற்றுக் கொள்ளும் முக்கிய ஊடகம் மொழியாகும். ஒரு மாணவனுக்கு கணிதத் திறன் இருந்தாலும் கணித எண்ணக்கருக்களை விபரிக்கும் மொழியை வாசித்து விளங்கிக் கொள்ள இயலாமல் இருந்தால் அவனுக்குத் தனது திறன்களை வளர்த்துக் கொள்ளச் சிரமமாக இருக்கும். வாசித்தல் குறைபாடு உள்ள மாணவன் அனேகமான கற்றலில் பின்தங்கி இருப்பதைக் காணலாம்.

பிள்ளை வயதிலும் அறிவிலும் முதிர்ச்சி அடையும் போது வாசித்தலின் முக்கியத்துவம் மேலும் காணப்படும். அறிவைப் பெற்றுக் கொள்ளும் ஒரே வழி வாசித்தல் என்று கூறும் அளவுக்கு உயர் கல்வியில் வாசிப்பின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. மாணவர்களின் வாசிப்புத் திறன்களை வளர்க்க பொருத்தமான சூழலை வகுப்பறையில் உண்டாக்குவது ஆசிரியருக்குரிய கடமையாகும். மாணவர்கள் விரும்பக் கூடிய முறையில் வாசிப்பை ஆரம்பித்து நீண்ட காலங்களில் நிலைபெறகூடிய முறையில் வாசிப்பில் ஆர்வத்தை அவர்களிடம் உண்டாக்குவது மிக அவசியம்.

## மாணவர்களுக்கு வாசிப்பில் தாக்கங்களை ஏற்படுத்தும் காரணிகள்

- உடல் காணிகள்.
- உளக் காரணிகள்
- மன எழுச்சிக் காரணிகள் ஆகும்.

உடல் காரணியாக உச்சரிப்பு, கேட்டல், பார்த்தல் தொடர்பான உறுப்புக்களை கருதலாம். கல்வி உறுப்புக்கள் நன்றாகச் செயற்பட்டால் வாசித்தல், கற்பிப்பது இலகுவாக இருக்கும். இவற்றில் ஒன்றிலேனும் குறைபாடு காணப்பட்டால் வாசிப்பு கற்பிக்கும் போது பிரச்சினைகள் உண்டாகலாம். உளக் காரணியாக எடுக்கக் கூடியது நுண்மதியாகும். சொற் களஞ்சியம் பற்றிய திறன் நுண்பதியின் ஒரு காரணியாக உளவியலாளர் ஏற்றுக் கொள்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்மதி குறைந்த பிள்ளை அனேக சந்தர்ப்பங்களில் வாசிப்பிலும் பின்தங்கியிருப்பதை அறிய முடிகிறது மணவெழுச்சிக்குள்ளான சில மாணவர்கள் வாசிப்பில் பின் தங்குவது வீட்டுச் சூழல் பொருத்தமற்ற நிலையிலிருப்பதும் ஆசிரியரினதும் பாடசாலைக்கும் சட்ட திட்டங்களும் பிள்ளையிடம் மனவெளிச்சிக் கோலங்களை உண்டாக்கலாம்.

வகுப்பறையில் சிறந்த சூழல் ஒன்றை அமைப்பதால் குறைபாடுகளை நிரம்பிய சூழலில் வசிக்கும் பிள்ளைக்கும் வாசிப்பில் ஆர்வத்தை உண்டாக்கலாம். வகுப்பறையில் உபயோகிக்கப்படும் படங்கள், வாசிப்புத் தாள்கள், மாதிரி உருவங்கள் ஆகியவற்றைக் கொண்டும் அவைகளை வைத்து தயாரிக்கப்படும் பல விளையாட்டு செயல்களாலும் பிள்ளைகளின் வாசிப்பு ஆர்வத்தை வளர்க்கலாம்.

மாணவர்களின் வாசிப்பில் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன.
இவ்வாசிப்பில்,

1. உரத்து வாசிப்பு
2. மௌன வாசிப்பு என இருவகையாகப் பிரிக்கலாம்.

ஆரம்ப வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கு உரத்து வாசிப்பே காணப்படும். மேல்வகுப்புகளில் மௌன வாசிப்பிற்கு முக்கிய இடம் அளிக்கப்படுகின்றது.

தற்காலத்தில் வாசிப்பின் வேகம் அதிகரிக்க வேண்டும். வாசிக்கும் போது வரிகளுக்கு நேரேயும் இடையேயும் பார்வையைக் கொண்டு போகும் வேகத்தை அதிகரித்துச் செய்தல் வேண்டும்.

## மாணவர்களிடையே வாசிப்பைக் கற்பிக்கும் முறைகள்.

பிள்ளைகளுக்கு ஆரம்பத்தில் வாசிப்பைக் கற்றுக் கொடுப்பதற்கு அநேகமாகப் பயன்படுத்தப்படும் சில முறைகளை கீழே தருகின்றோம்.

01. எழுத்து முறை அரிச்சுவடி முறை.
எழுத்துக்களை வெவ்வேறாக எடுத்துக் கற்பித்தல்.

02. ஒலிமுறை :
பிள்ளை எழுத்தின் ஒலியை மாத்திரம் வாசித்தல்.

03. செயல்முறை :
சொற்களை அடிப்படையாக வைத்து வாசிப்பது.

04. வாக்கிய முறை வாசிப்பு :
ஒரு கருத்தை வெளிப்படுத்தும் விதத்தில் ஒரு சொல்லை அல்லது வாக்கியத்தை ஒரே முறையில் வாசிக்கச் செய்வது.

இவ்வாறு மாணவர்களின் வாசிப்பை பூரணத்துவம் அடையச் செய்தல் அவசியமாகும். ஏனெனில் வாசிப்பு ஒரு மனிதனை பூரணத்துவப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொத (சா/த) பரீட்சைக்கு தோற்றி க.பொ.த (உ/த) க்கு தகுதியானோர்.

**1991**

முகம்மட் அக்பர்
சின்னலெப்பை ஆதம்பாவா

**1992**

முகம்மட் இஸ்மு சுபைர்
முகம்மட் அலி அக்பர்

**1993**

முகம்மட் இஸ்மாயில் முகம்மட் தௌபீக்

**1995**

செல்லத்துரை முகம்மட் ஜலீல்
பீர்முகம்மட் மீராமுகையதீன்

**1996**

இஸ்மாயில் ஜனூத்
முகம்மட் அப்துல் காதர் ஜாஹிறா

**1997**

ஆப்டீன் அமீர் அலி.
கலீலுல் றஹ்மான் றிஸ்வி.
றசீல் முகம்மட் சிப்றா
முகம்மட் இஸ்மாயில் பிர்தௌசியா

**1998**

ஏ.எச்.ஆயிசா
முகம்மட் இஸ்மாயில் பஸ்மி

**1999**

முகம்மட் இஸ்மாயில் பஸ்மி
அப்துல் ஆயிசா

**2000**

எம்.ஏ.சி.உவைஸ்
முகம்மட் அலியார் ஜசீர் முகம்மட்

**2001**

கோசு முகம்மட் இத்ரீஸ்
ஈசா லெவ்வை சர்மிலா
உதுமாலெவ்வை உவைஸ்
அப்துல் காதர் பாத்திமா
செல்லத்துரை சித்தி சாஜிதா

**2002**

சீனி முகம்மட் சம்சார்
அப்துல் ஹமீட் பாத்திமா அறூசா
அசனார் ஜன்னத்துல் ஜாவியா
கே.எம்.எம்.இத்தீரஸ்
ஹசன் பசீட் நஜீம்

**2003**

அப்துல் காதர் உம்மு ஹபீபா
அஹமட்லெவ்வை நௌசினா

**2004**

ஆதம்பாவா ஹம்சாபீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005**

உதுமாலெவ்வை நௌபர்
முகம்மட் இஸ்மாயில் அப்துல் அலி
அன்வர்டீன் நிறோசா
இஸ்மாயில் பாத்திமா ஹனூசா
நூறுஹுல்லாஹ் பஸ்லூனா

**2006**

அமீர் நிஸ்வர்தீன்
இப்றாலெவ்வை பஸ்மிறா
முகம்மட் அன்சார் ஹசீனா பானு
அன்வர்டீன் றிஸ்மியா.
மீராசாஹிபு சபீனா
முகம்மட் தம்பி றாஸ்டீன்

**இவர்களில்**

**G.C.E. A/L படித்து பட்டம் முடித்தவர்கள்.**

01. முகம்மட் இஸ்மாயில் பஸ்மி - Bsc. (Hon)
02. கோசுமுகம்மட் முகம்மட் இத்ரீஸ் - B.BA

**பாடசாலையில் கற்று வேறு தொழில்களில் ஈடுபடுபவர்கள்**

| | | |
|---|---|---|
| முகம்மட் அலியார் அக்பர் | - | கப்பல்துறைமுகம் |
| சின்லெவ்வை ஆதம்பாவா | - | இலிகிதர் |
| ஏ.எச்.அலீசா | - | (NGO) Project Directar. |



**2003ம் ஆண்டு மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் மூன்றாவது ஞாபகார்த்தப் பேச்சுப்போட்டியில் தேசிய மட்டத்தில் விருதுபெற்ற மாணவன் எம்.ரி. றாஸ்தீன் (க.பொ.த உ/த கலைப்பிரிவு) உடன் எஸ்எல்.எம். இஸ்மாயில் ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாகக் குழு

**தலைவர்** : அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர்

**உதவி தலைவர்** : ஜனாப்.எம்.ஏ.செயினுல் ஆப்தீன்

**செயலாளர்** : ஜனாப்.ஏ.பீர்முகம்மட்

**பொருளாளர்** : ஜனாப்.வை.பி.ஹபீபுல்லாஹ்

**உறுப்பினர்கள்** :
01. ஜனாப்.ஏ.எம்.அனிபா
02. ஜனாப்.ஏ.ஏ.மஜீட்
03. ஜனாப்.ஏ.ஆதம்பாவா
04. ஜனாப்.ஏ.சி.எம்.றசூல்
05. ஜனாபா..ஏசித்தி றமீஸா
06. ஜனாபா.ஏ.சக்கீனா
07. ஜனாப்.எம்.எஸ்.ஏ.றசீட்
08. ஜனாப்.ஏ.ஏ.றஹீம்
09. ஜனாப்.எஸ்.எம்.அஸ்வர்

## தேனின் விஷேட குணங்கள்

- நாடி நாளங்களிலும்,குடல்களிலுமுள்ள அசுத்தங்களை நீக்குகின்றது.
- நெஞ்சறையையும், ஈரலையும் சுத்திகரிக்கின்றது.
- சிறு நீர்ப்பாதையை சீராக்குகின்றது.
- தொண்டைக்குழியில் தேங்கி நிற்கும் சளியை அகற்றுகின்றது.
- றோஸ் எண்ணையுடன் தேனை சூடாக்கி குடித்தால் விசக்கடிகளுக்கு நிவாரணம் உண்டு.
- தண்ணீரில் குடித்தால் அது நாய்க்கடி விசத்தை இறக்கி நஞ்சுத் திரவங்களை அகற்றிவிடுகின்றது.
- உலர வைத்து அதன் மூலம் கண்களுக்கு சுறுமா இட்டால் பார்வை தெளிவும் கூர்மையும் பெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அபிவிருத்திக் கண்காட்சிக்காக அதிபரால் நினைவுபடுத்தப்பட்டவர்கள் விபரம்.

❖ சீகிரியமலை:- மாணவர்களிடையே சீகிரிய மலை தொடர்பான ஆதங்கத்தை ஏற்படுத்தி, பிரமாண்டமான உருவை செய்ய துணிவை ஏற்படுத்தியது. A.A.றகீம் ஆசிரியர் என்பதை அடிக்கடி எமது அதிபருர் நினைவுபடுத்துவார்.

❖ அனக் கொன்டா பாம்பு:- இதனை எமது க.பொ.த.உயர்தர 1ம் வருட மாணவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கையும் பாராது மிக சிறந்த முறையில் உருவாக்கிய, அன்புச் செல்வங்களை அதிபர் நினைவுபடுத்துவார்.

❖ ராட்சித ஓணான்:- இதனை தனி ஒரு மனிதன் உருவாக்கினார் என்றால் அது நம்ப முடியாது. ஆனால் எம்.எஸ்.ஏ.றசீட் ஆசிரியர் அவர்கள் தன்னந்தனியாக நின்று எவருடைய உதவியுமின்றி, உரிய நேரத்தில் செய்து முடித்தது. அதிபர் அவர்கள் அவர் மேல் கொண்ட தனி அபார நம்பிக்கை என்றே கூற வேண்டும்.

❖ ராட்சத ஆமை :- இதனை, கே.எல்.எம். சுல்பிகார், வை.பி ஹபீபுல்லாஹ், எம்.ஐ.ஏ.மன்னான், எம்.எம்.ஏ..றகீம் ஆகிய குழு குறுகிய கால இடவெளியில் துரிதமாக இயங்கி தங்களிடமிருந்த ஆற்றலை வெளிப்படுத்திய குழுவை அதிபர் அவர்கள் அடிக்கடி நினைவுபடுத்துவார்.

❖ ராட்சித சிலந்தி :- இதனை எதுவித பொருட் செலவின்றி வேறு ஆசிரியர்கள் உதவியின்றி தன்னந்தனியே நின்று நமது நூலக ஆசிரியர் எம்.ஆர்.எம்.நபீல் அவர்களை அவரது திறமையை 2000 ஆண்டு கண்காட்சியின் பிரதிபலிப்பை அடிக்கடி நினைவுபடுத்துவார்.

❖ க.'.பதுல்லாஹ் :- முஸ்லீம்களின் புனிததலமான க.'.பாவை மிகப் பிரமாண்டமான முறையில் உருவாக்கி, அதனை மாணவ மாணவிகள் பூரண அறிவைப் பெற்று எல்லோருக்கும் விளங்கக் கூடிய முறையில் அலங்கரித்த எமது மௌலவி யூ.எல்.எம்.சலாஹுதீன் அவர்களை அதிபர் அவர்கள் மிகவும் மரியாதையோடு நினைவுபடுத்துவார்.

❖ ஆதிக் குடிவாசிகள் :- இது பற்றிய பூரண விளக்கத்தை கொடுத்து மாணவ மாணவிகள் தங்களின் கற்பனையில் வளர்த்த அத்தனைகாட்சிகளையும் உருவாக்க தைரியத்தை மாணவ மாணவிகளுக்கு அளித்ததுடன், தனக்கு கண்காட்சிக்கான பொருட்களை வழங்கும் பணியை செய்தலுடன் இதனையும் உருவாக்க திட்டம் கொடுத்த வை.பி.எம்.இஸ்மாயில் அவர்களும் அதிபரின் நினைவில் என்றும் இருந்து கொண்டிருக்கிறார்.

❖ இயற்கை கலைபொருட்கள் :- நளிம் லதீபின் ஆக்க வடிவங்களையும், தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப்பீட அரிதான உயிரினங்களையும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு வழங்க உதவியது மட்டுமன்றி, தொழில் நுட்பக் கல்லூரி உபகரணங்கள் பெறுவதற்கும் இரவு பகல் பாராது தனக்கென எது தடை வந்தாலும் செய்ய வேண்டும் என மன உறுதியுடன் செயல்பட்ட எம்.ஐ.மாஹிர், ஏ.எல். அன்வர் அலி ஆசிரியர்களையும் என்றும் நினைவு கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்ப பிரிவு பொருட்கள்

- ❖ இப்பிரிவின் பகுதித் தலைவராக இருந்து பலரது சேவைகளைப் பெற்று தனது பிரிவு ஆசிரியைகளயும் இணைத்து ஆரம்ப பிரிவு பொருட் கூடத்தை அழகுபடுத்தி தனக்கு ஏற்பட்ட எந்த செலவையும் கண்காட்சிக் குழுவிடம் கேட்காது. தனிப் பொறுப்பிலே முழுவதையும் மாணவர்களுக்காக செயற்படுத்திய ஜனாப்.ஏ.பி.கோசுமுகைதீன் அவர்களை கல்வி சமூகம், ஒரு போதும் மறக்க முடியாது என்பதை அதிபரால் நினைவு கூறப்படுகிறது.

## மலர் வெளியீடும் ஆரம்ப பிரிவு அலங்கரித்தலும்

- ❖ செங்கதிர் வெளியீட்டுக்காக தனது குடும்ப பொறுப்பையும் கவனிக்காது தனது வகுப்பறையை முதன் முதலில் வெற்று சீ.டி (CD) மூலம் அழகுபடுத்தி A/L வகுப்பிற்கு தமிழ் பாடத்தைக் குறையின்றி கற்பித்து மலருக்கான சகல செயற்பாடுகளையும் முழுமூச்சாக செயற்பட்ட திருமதி. நூறுல் இனாபா இஸ்மாயிலையும் உடன் நினைவுபடுத்துவதில் அதிபர் அவர்கள் தவறுவதில்லை.

- ❖ விழாவின் வரவேற்பினை முன்னிறுத்தி தனது பணி சரியாக செய்ய வேண்டும் என்பதற்காக வழிகாட்டல் பெயர்பலகையும் தயாரித்தது மட்டுமன்றி அதனைப் பொருத்தி பிரதம அதிதிகளை வரவேற்க மாதிரி குதிரைகள் தயார் செய்ய தனது மனைவி குழந்தைகளை கூட்டி வந்து செயற்பட்ட ஏ.எல்.எம்.நியாஸ் ஆசிரியரையும் அதிபரால் நினைவு கூற தவறவில்லை.

## வரவேற்பு பதாகை

- ❖ தனது எவ்வளவோ பணிகளுக்கு மத்தியில் அதிதிகளை வரவேற்க பாடசாலை முகப்பில் வரவேற்பு பதாகை நிலை நிறுத்திய ஜனாப் எம்.ஐ.தௌபீக் அதிபரால் நினைவு கூறப்படுகிறார்.

## பெயின்ட் வேலைகள்.

- ❖ காரியாலயம், சிறுவர் பூங்கா போன்றவற்றிக்கு மக்கள் வங்கியில் உதவியுடன் மை பூசி மாணவர்களைத் தயார் படுத்தி ஒழுங்கு செய்த யு.இப்றாலெப்பை ஆசிரியர் அவர்களையும் நினைவுபடுத்துவதில் தவறியதில்லை.

- ❖ மாணவ நலன்புரிச் சேவை மாணவர்களின் அன்றாடத் தேவையும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சடுதியாக தேவைப்படும் பொருட்களுக்கு எவ்வளவு செலவு வந்தாலும் செய்தே தீர வேண்டும் என்ற முழு நம்பிக்கை வைத்து அதிபர் அவர்களுக்கு துணையாக இருந்து இரவு பகல் எனப் பாராது நேரத்தை பாடசாலைக்கே செலவிட்டு பண உதவிகளையும் வழங்கிய அல்-ஹாஜ் எஸ்.எம்.அஸ்வர் ஆசிரியர் நீரவசதி, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி கண்காட்சி நடைபெற்ற காலத்தில் எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படாது ஆலோசனை வழிகாட்டல் செய்ததையும் அதிபர் அவர்கள் நினைவுபடுத்த தவறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுச் சேவைகள்.**

❖ இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக எம். உவைஸ் தலைமையின் பழைய மாணவர் குழுவுக்கும் காடுவெட்ட உதவிய பெற்றார்க்கும் பழைய புராதன பொருட்கள் வழங்கிய தாய்மாருக்கும் அதிபர் அவர்கள் நினைவுபடுத்தத் தவறவில்லை.

❖ இவை அனைத்துக்கும் மேலாக முக்கிய பங்காற்றிய பிறை FM. வானொலி ஒலிபரப்புக் குழுவுக்கும், கடிதங்களும் அதனை கணணிமயப்படுத்தும் கணணி உபயோகமும், கண்காட்சி தொடர்பான சகல கடிதங்களும், கண்காட்சிகூடத்தின் கணணி முறையை தெளிவாக மாணவர்களுக்கு பயன்படுத்திய ஏ.ஏ. ஜப்பார் ஆசிரியர் மிகவும் ஈடுபட்டதையும் என்றும் நினைவு கூற கடமைப்பட்டுள்ளார்.

❖ விஞ்ஞான ஆய்வுகூட பிரிவுக்காக அயராது பாடுபட்ட விஞ்ஞான ஆசிரியர் கே.ஐ.எம். அலியார் அவர்களும், ஏ.எஸ்.எம்.முபீன் ஜே.எம்.எம்.நியாஸ் அவர்களும், அதிபரின் மனதில் மறக்காத ஆசிரியர்கள்தான்.

❖ ஆரம்பப் பிரிவின் இன்னொரு பகுதியைத் திறந்து உண்மைப் பொருட்களையும், வினோதமான ஆக்கங்களையும் படைத்தது மட்டுமல்லாமல் பாடசாலையின் சகல விடயங்களிலும் முன்னின்று உழைத்த ஆசிரியைகளான திருமதி.எஸ்.யு.எம்.சுல்பிக்கார், திருமதி என்.எம்.இஸ்மாயில், திருமதி எம்.ரி.ஹப்சா திருமதி எம்.வை.ஹபீபா ஆகிய ஆசிரியர்களையும் என்றும் நினைவு கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றார்.

❖ கண்காட்சியில் மாணவர்களை ஒழுங்கமைத்து அவர்களுக்கான கடமைகளைத் திட்டமிட்டு அதனைச் செயற்படுத்தி தமிழ் தொடர்பான பெரியார்களின் படங்களை வேறு பாடசாலைகளிலிலிருந்து கொண்டு வந்து காட்சிப்படுத்திய தமிழ் பாடஆசிரியர் எஸ்.எல்.எம். இஸ்மாயில் அவர்களை அதிபர் அடிக்கடி நினைவுபடுத்துவார்.

❖ கண்காட்சியின் வரவேற்பு உபசார ஒழுங்கை சரிவரச் செய்த S.A.C.முகம்மட் தம்பி ஆசிரியர் அவர்களும் தேவைப்படும் நெரங்களில் அவ்வப்போது உதவிகளைச் செய்த A.மீராசாஹிப் ஆசிரியர் அவர்களும் தன்னுடைய வாகனத்தை கண்காட்சியின் அனைத்து விடயங்களையும் செய்வதற்காக தந்துதவிய எம்.ரி..சுலைமாலெப்பை ஆசிரியர் அவர்களும் அதிபர் மனதில் என்றும் நிலைத்திருக்கிறார்கள்.

**உன் நடையில் பெருமையும் கர்வமும் இன்றி மத்திய தரத்தை விரும்பு. உன் குரலையும் தாழ்த்திக் கொள். ஏனென்றால் நிச்சயமாக குரல்களிலெல்லாம் மிக்க வெறுக்கத்தக்கது கழுதையின் குரலாகும்.**
**(அல்-குர்ஆன் 31 : 19)**

**திட்டமிடல் என்பது முன்னோக்கிப் பார்க்கும் பணியும் எதிர்காலத்துக்கு ஆயத்தம் செய்தலுமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் என்றென்றும் எமது நன்றிக்குரியவர்கள்.

- ❖ முதற்கண் இம்மலர் நூலுருப் பெறுவதற்கு வேண்டிய கல்வி சார், கல்வி சாரா, நிதி, பௌதீக, மனிதவளங்களை ஒருங்கமைத்து வழங்கி, வழிநடத்திய எமது பெருமதிப்புக்குரிய அதிபர் அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர் அவர்கள்.

- ❖ மெய்வருத்தம் பாராது, கண்தூங்காது மலர் வெளியிட உழைத்த மலர்க்குழுவின் உறுப்பினர்கள்.

- ❖ மலர் வெளியீட்டுக்கான ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்களுடன் மாணவச் செல்வங்கள்.

- ❖ மலரினை திறனாய்வு செய்து எம்மை ஊக்குவித்து, எமது வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகளையும், ஆசி உரைகளையும் வழங்கிய பெரும் மகான்கள்.

- ❖ மலரின் அட்டைப்பட நிதி உதவியை வழங்கிய சிங்கர் பணிப்பாளர்.

- ❖ இம்மலர் உருவாக்கம் பெற மனமுவந்து விளம்பரங்களைத் தந்துதவிய விளம்பரதாரர்கள்.

- ❖ இதைச் கணணி தட்டச்சுசெய்தவருக்கும், மற்றும் சிறப்பான முறையில் கணணி வடிவமைப்புச் செய்து மலரை முழுமைப்படுத்திய றோஸ் பிறின்டர் உரிமையாளருக்கும், மலரிற்கான புகைப்படங்களை சிறப்பான முறையில் வடிவமைத்துத்தந்த ஹில்டன் ஸ்டுடியோ உரிமையாளருக்கும்.

- ❖ நாம் சோரும் போதெல்லாம் உற்சாகத்தை வழங்கி அயராது பாடுபட்ட பெற்றார், ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

## நன்றிக்குரிய நிறுவனங்கள்

**பௌதீக வளங்கள், சேவைகள், உதவிகள் வழங்கிய நிறுவனங்கள்.**

- ❖ கோல் நிறுவனம் (Goal) :தண்ணீர், ஆழ்கிணறு, பாடசாலை உபகரணங்கள், கணணி, ஒலிபெருக்கி வசதிகள், பாடசாலை திருத்தம்.

- ❖ மேளின் நிறுவனம்(Merlin) :சுகாதார வசதி, முதலுதவிப்பொருட்கள், பற்சிகிச்சை முகாம், மரக்கன்றுகள், விவசாய உபகரணங்கள்.

- ❖ பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், அக்கரைப்பற்று Save the Children : விளையாட்டு முற்றம்.

- ❖ நெக்கோட் நிறுவனம் : கட்டிட வசதி.

- ❖ உலக வங்கி நிறுவனம் : கட்டிட வசதி.

- ❖ அல் அமீன் நிறுவனம் சாய்ந்தமருது : மாணவர்களுக்கு பொருட்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சிகளில் சில.......











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சிகளில் சில...................

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் நினைவுத் துளிகள்.....

### பத்திரிகைச் செய்தித் தொகுப்பு



க.பொ.த உ/த மாணவர்கள் 29.08.2007ல் அதிமேதகு ஜனாதிபதிமகிந்த ராஜபக்ச அவர்களை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்

கண்டி பேராதனையைப் பார்வையிட வருகை தந்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நான்கு பாடசாலைகளின் மாணவர்கள் நேற்றுக் காலை கண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது பிடித்த படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறை செந்நெல் சாஹிறாக் கல்லூரிக்குப் திகாமடுள்ள பாராளுமன்ற உறுப்பினர் யூ. எல். எம். முகைதீனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பேண்ட் வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டன. அவற்றை பாராளுமன்ற உறுப்பினர் வழங்குவதையும், மாணவ, மாணவிகள் மத்தியில் பேண்ட் வாத்தியக் கருவிகள் வைக்கப்பட்டிருப்பதையும் படத்தில் காணலாம். (ந) (படம்:- கல்முனை மத்திய விசேட நிருபர்) 27/1/99

தினகரன் 2000ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி வியாழக்கிழமை



கலாநிதி மர்ஹூம் அல்ஹாஜ் பதியுதீன் மஃமூதின் 3வது சிரார்த்த தினத்தை முன்னிட்டு செந்நெல் சாஹிரா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஏற்பாடு செய்த கத்தமுல் குர்ஆன் வைபவத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீன், மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் ரீ. ஏ. தௌபீக், அதிபர் எஸ். அபூபக்கர் உட்பட பலர் அன்னதானம் வழங்குவதையும் பிரார்த்தனையில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படம்:- காரைதீவு குறூப் நிருபர்)



அண்மையில் சம்மாந்துறை செந்நெல் சாஹிரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் யூ. எல். எம். முகைதீன் உரையாற்றுவதையே படத்தில் காண்கிறீர்கள்.
(படம்: கல்முனை மத்திய விசேட நிருபர்) 6/6/..

## மாணவியின் உருக்கமான உரைக்கு கிடைத்த பரிசு

காரைதீவு,

மாணவியொருவரின் உருக்கமான உரையால் பாடசாலையொன்று 7 லட்சம் ரூபா பெறுமதியான விஞ்ஞான ஆய்வுகூடமொன்றைப் பெற்றுக் கொண்டது. சம்மாந்துறை செந்நெல் சாஹிறாக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஏ.எச். ஆயிஷா பர்வீன் என்பவரே இவ்வாறு உருக்கமான உரையை வழங்கியவர்.

வட கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சின் நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூடம் சம்மாந்துறை மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற வேளை நிறைவுநாள் வைபவத்தில் மாணவர்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கப்பட்டது. அவ்வேளை பிரஸ்தாப மாணவி பாடசாலை விஞ்ஞானப்பாட செய்முறைக்காக படும் கஷ்டத்தை மிகவும் உருக்கமாக எடுத்து கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த கல்விச் செயலாளர் திருமலை சென்றதும், விஞ்ஞான ஆய்வுகூடம் அமைப்பதற்காக ரூ 7 லட்சத்து 13 ஆயிரத்து 300 ரூபாவை ஒதுக்கினார். அதற்குரிய வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறை செந்நெல் சாஹிரா கல்லூரிக்கு அம்பாறைமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல். எம்.மொகைதீன் தனது வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கிய 1 லட்ச ரூபாவிற்குரிய "பாண்ட்" வாத்திய இசைக்கருவிகளை இசைக்குழுத் தலைவியிடம் கையளிப்பதையும் அருகில் அதிபர் எஸ்.அபூபக்கரையும் படத்தில் காணலாம். 24/1/55 (படங்கள்:-காரைதீவு நிருபர்)

## சாரணர் சமாதான பாத யாத்திரை

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

சாரணர்களின் சமாதான பாத யாத்திரை ஒன்று கடந்த வாரம் சம்மாந்துறையில் இடம்பெற்றது. செந்நெல் கிராமத்திலிருந்து ஆரம்பமான இப்பாதை யாத்திரை [illegible] பாடசாலைகளிலிருந்து 180 இற்கு மேற்பட்ட சாரணர்கள் பங்கு பற்றினர். 10 [illegible] தூரம் [illegible] இப்பாதை யாத்திரை [illegible] பெற்றது. பொது மக்கள் சாரணர்களுக்கு பல இடங்களிலும் குளிர் பானம் வழங்கி உற்சாகம் அளித்தனர். செந்நெல் கிராம சாஹிரா வித்தியாலய அதிபர் எஸ். அபூபக்கர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பாதை யாத்திரையில் உதவி மாவட்ட சாரணிய ஆணையாளர்களான எம். ஐ. எம். முஸ்தபா, எம். வேலாயுதம், ஐ.எல். ஏ. மஜீட், சாரணிய தலைவர்களான ஐ.எல். ஜெலீல், கே. எம். தமீம், எம். பிரேமானந்தம் [illegible] பங்கு பற்றி சிறப்பித்தனர். தமிழ், முஸ்லிம் இளைஞர்களைச் சேர்ந்த சாரணர்கள் மிகவும் உற்சாகமாக இந்த பாதை யாத்திரையில் பங்கு பற்றி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

மைப் பரிசில்



அண்மையில் மலேசியா மற்றும் சிங்கப்பூரில் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்ட சம்மாந்துறை செந்நெல் சாஹிரா அதிபர் அல்ஹாஜ் எஸ். அபூபக்கர் மலேசிய திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி முகாமைத்துவப் பயிற்சியினைப் பெற்றதற்கான சான்றிதழை பல்கலைக்கழக அபிவிருத்திப் பிரிவின் தலைவர் யூ. நிப்பின் இப்ராஹிமிடமிருந்து பெற்றுக்கொள்வதனைப் படத்தில் காணலாம்.

(சம்மாந்துறை தினகரன் நிருபர்: அ-ய)

# புலமைப் பரிசில்

## செல்வி எஸ். ஹைனலுபா

சம்மாந்துறை குடியேற்றக் கிராமமான சம்புமடு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த செந்நெல் கிராமம் ஸாஹிராவில் இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முதன் முறையாக எஸ். ஹைனலுபா என்பவர் 132 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



இவர் இக்கிராமத்தைச் சேர்ந்த செல்லத்துரை தம்பதிகளின் புதல்வியாவார்.

## செல்வி பாத்திமா ஹனூஸா

சம்மாந்துறையின் குடியேற்றக் கிராமமான சம்புமடு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த செந்நெல் கிராமம் ஸாஹிராவில் இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாவது முறையாக பாத்திமா ஹனூஸா, 142 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



இவர் இக் கிராமத்தைச் சேர்ந்த அப்துல் ஹமீத் தம்பதிகளின் புதல்வியாவார்.



அண்மையில் சம்மாந்துறை செந்நெல் சாஹிரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் யூ. எல். எம். முகைதீன் வெற்றி பெற்ற மாணவருக்கு சான்றிதழ் வழங்குவதையே படத்தில் காண்கிறீர்கள்.

(படம்: கல்முனை மத்திய விசேட நிருபர்) 24/3/98

(ம)

# செந்நெல் கிராமத்தில் சாரணர் பாசறை

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

சம்மாந்துறை செந்நெல் கிராமத்தில் சாரணர்களின், பயிற்சிப்பாசறை நிகழ்வு ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றது. சாரணியப்பயிற்சிக்குப் பொறுப்பான உதவிமாவட்ட ஆணையாளர் எம். ஐ. எம். முஸ்தபா அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பாசறையில் கல்முனை சாகிறாக்கல்லூரி, கார்மேல் பாத்திமாக்கல்லூரி ஆகிய பாடசாலைகளிலிருந்து அறுபது சாரணர்கள் பங்குபற்றினர். செந்நெல்கிராம மலையடிவாரத்தில் முகாமைத்துவ சாரணர்கள் பயிற்சி பெற்றனர். செந்நெல்கிராம சாகிறாவித்தியாலயத்தின் அதிபர் எஸ். அபூபக்கர், உதவிமாவட்ட ஆணையாளர் எம். வேலாயுதம், சாரணிய தலைவர்களான கே. பிரேமானந், எம். வை. எம். யூசுப் ஆகியோர்களும் இப்பாசறையில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறை கல்வி வலயத்தின் செந்நெல் சாஹிரா கல்லூரியில் மில்லேனிய அறுவடை ... அண்மையில் நடைபெற்றது. கல்லூரித் தோட்டத்தின் அறுவடையை அம்பாறை மாவட்ட ... எம்.பி. யூ.எல்.எம்.மொகைதீன் அங்குரார்ப்பணம் செய்து வைப்பதையும், அருகில் அதிபர் ...அபூபக்கர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் யூ.எல்.கலீல் உட்பட பலர் ...டனிருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

# "புதிய கல்விச் சீர்திருத்தம் பலன் தர ஆரம்பித்துள்ளது"

## கல்விக் கண்காட்சியில் பீடாதிபதி

காரைதீவு,

புதியகல்விச் சீர்திருத்தம் நல்ல பல பலன்களைத் தர ஆரம்பித்துள்ளது. அதன் பிரதிபலிப்பே இந்தக் கண்காட்சியாகும். என தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட பீடாதிபதி வி... சந்தானம் சம்மாந்துறை செந்நெல் சாஹிரா கல்லூரியின் கல்விக் கண்காட்சியில் கணனிப் பிரிவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் எஸ்.அபூபக்கர் தலைமையில் அங்குரார்ப்பணவைபவம் செவ்வாயன்று நடைபெற்றது.

தொடர்ந்து 3 நாள்கள் நடைபெற்ற இப்பாட மேம்பாட்டுத்... கல்விக்கண்காட்சியை சம்மாந்துறை ... வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.தௌபீக் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

பீடாதிபதி வி.சந்தானம் அங்கு மேலும் பேசுகையில் "பாடமேம்பாடு என்பது பாடசாலை மட்டத்தில் மேம்பாடடைவதால் பல்கலைக்கழக் கல்வி இலகுவாக்கப்படும்" என்றார்.

இங்கு நடைபெற்ற கண்காட்சி விஷேட ... சாதனம் மூலம் 2 கி.மீற்றர் விஸ்தீரணத்துக்கு ஒளிபரப்பப்பட்டது.

தினகரன் 2000ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை



மறைந்த கல்வி அமைச்சர், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களின் நினைவாக செந்நெல் கிராம சாஹிரா வித்தியாலயத்தில் பாட மேம்பாட்டில் ஆர்வம் காட்டிய ஆசிரியர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். அதன் போது சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன் ஆசிரியர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குகின்றார். அருகில் அதிபர் எஸ்.அபூபக்கரும், பிரதிக் கல்விப் பணிப்பாளர், எம்.ரீ.ஏ.தௌபீக்கும் காணப்படுகின்றனர். (படம்-சாய்ந்தமருது குறூப் நிருபர்)

# பதியுத்தீன் நினைவாக கத்தமுல் குர்ஆன்

(சாய்ந்தமருது குறூப் நிருபர்)

முன்னாள் கல்வி அமைச்சர் காயதே மில்லத் பதியுத்தீன் மஹ்மூத்தின் மூன்றாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு கதமுல்குர்ஆன் வைபவமும், கந்தூரி வைபவமும் இன்றும் (27.06.2000) நாளையும் சம்மாந்துறை செந்நெல் கிராமம் ஸாஹிரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீனும், மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. தௌபீக்கும் கலந்து கொள்ள உள்ளதாக வித்தியாலய அதிபர் எஸ்.அபூபக்கர் தினகரனுக்குத் தெரிவித்தார்.

# விளையாட்டு விழா

(ஒலுவில் நிருபர்)

சம்மாந்துறை செந்நெல் கிராம சாஹிரா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் எஸ். அபூபக்கர் தலைமையில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சாரணீய இயக்கத்திலுள்ள மூவினங்களையும் கொண்ட சாரணர் படை ஒன்றிணைந்து சமாதான பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்வதை இப்படத்திற் காண்க. தொடர்ந்து சாரணீயப் பாசறையில் பங்கு கொண்ட சாரணீய மாதிரிக் கிராமத்தை திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் யூ. எல். எம். முகைதீன் திறந்து வைத்து குறிப்பேட்டில் பதிவு செய்வதை இரண்டாம் படத்திலும் காண்க.

(படம்: சம்மாந்துறை தினகரன் நிருபர்)



சம்மாந்துறை செந்நெல் ஸாஹிரா வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.முஹைதீனை பெற்றோர்கள், ஆசிரியர்கள் மாலை அணிவித்து அழைத்து வருவதையும் மாணவர்களின் தேகாப்பியாசக் காட்சி ஒன்றையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கல்முனை நிருபர்)



சம்மாந்துறை செந்நெல் ஸாஹிரா கல்லூரியின் சாரணர் பாசறை அண்மையில் அதிபர் ஏ.அபூபக்கர் தலைமையில் நடைபெற்றபோது சாரணர்கள் சமாதான பாதயாத்திரையை மேற்கொள்வதையும் அம்பாறை மாவட்ட எம்.பி.யூ.எல்.எம்.மொகைதீன் குறிப்பேட்டில் பதிவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: காரைதீவு நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SGH

நவ உலக நங்கையரின்
நகைத் தெரிவுகளுக்கு
அழகிய தங்க நகைகளின் அரங்கம்

# ஸ்விஸ் கோல்ட் ஹவுஸ்

470B, அமீர் அலி வீதி,
சம்மாந்துறை.

நேர்த்தியான டிசைன்களில் பளிச்சிடும் அழகிய 22கரட்
தங்க, வைர நகைகளை உங்கள்
எண்ணம்போல் தெரிவு செய்ய நம்பிக்கையுடன் நாடுங்கள்

## SWISS GOLD HOUSE
47B, AMEER ALI ROAD, SAMMANTHURAI.

அனுசரணை

## Cengathir

M.Y.M. NAZAR (நாசர்) (S.L.P.A)
219, HAJIYAR LANE
SAMMANTHURAI - 09
Tel. 067 2260164, 077 3668874

## RAHEEM HOTEL & BAKERY
Specialist in Hot & Gool Drinks
with the Bakery Foot Items

காலை, பகல் இரவுச்சாப்பாடுகள், சகலவிதமான பேக்கரி உணவுகள்
திருமண, பிறந்தநாள் வைபவங்களுக்குத் தேவையான
கேக், சம்சா, றோல்ஸ், பெற்டிஸ், கொத்துரொட்டி போன்றவைகளுக்கு நாடுங்கள்

வெள்ளிக்கிழமைகளில் புரியாணி சாப்பாடு கிடைக்கும்.
( ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும் )

Props: M.T.A. Raheem
M.T. Nasar

Amparai Road, Sam...
Tel. 067 2260963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rose Printers

# ரோஸ் பிறிண்டர்ஸ்

**Screen / Offset Printings & Photo Copy Service & Communication**

No. 16, Seylan Bank Road, Sammanthurai
Tel. 067 2260997, Mob. 077 6160710
Fax. 067 2260997, E-mail rose@yahoo.com




**Digital, Textiles Printing, Invitation Cards,**
**Computer Type Setting & Scaning, Polymer Stamp**
**Fax, Laminating Book Binding, Plastic Board Works & Writing**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து நிகழ்வுகளையும் காலம் காலமாய் பார்த்து பூரித்து மகிழ்ந்திட..

ஹில்டன்

டிஜிடல் ஸ்ரூடியோ வீடியோ

திருமண அல்பம், வீடியோ படப்பிடிப்பு
CD, DVD களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

நுவீன தொழில்நுட்ப கருவிகளைக்
கொண்டு இன்றைய நாகரீகத்திற்கு
ஏற்ற வகையில் உங்கள்
நிகழ்வுகளை புகைப்படம்,
வீடியோவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.




HILTON

Digital Studio & Video

Vilinayady Juction, Sammanthurai.
Tel : 067 2261301 Hot Line : 077 3245759
E-mail : hiltanstudio@yahoo.com

3 நிமிடத்தில் சகல புகைப்படங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செந்நெல் கிராமம் சாஹிறா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க**
**01.01.2007 தொடக்கம் 31.10.2007 வரை பெறுவனவு கொடுப்பனவு கணக்கு**

| விபரம் - வரவுகள் | தொகை | விபரம் - செலவுகள் | தொகை |
|---|---|---|---|
| நுளைவாயில் உதவு தொகைகள் | 143200.00 | ஆசிரியர்கள் செலவு செய்தவர்கள் | 46128.00 |
| சம்மாந்துறை பாடசாலைகள் | 70740.00 | றோஸ் பிறின்ட் செலவு | 87000.00 |
| கல்முனை வலயப் பாடசாலைகள் | 40000.00 | உபசாரம் (முகம்மட் தம்பி) | 7000.00 |
| அக்கரைப்பற்றுப் பாடசாலைகள் | 18320.00 | சிகிரியா உருவாக்க கொடுத்த | |
| கொன்டின் வாடகை | 6500.00 | ஏ.றஹீம் ஆசிரியர் (4000) | 9000.00 |
| ஐஸ்வேன் வாடகை | 5000.00 | தரம் 10 வகுப்பு மாணவர்கள் (5000) | |
| | | டீசல் சுலைமாலெவ்வை வாடகை | 3500.00 |
| | | க.்.பா சலாவுதீன் மௌலவி | 2511.00 |
| | | சபீயா, தரம் 1 திருத்தம் | 2506.00 |
| | | ராட்சித டைனோசர் றசீட் ஆசிரியர் | 1695.00 |
| | | போக்குவரத்து முபீன் ஆசிரியர் | 1580.00 |
| | | ராட்சித ஆமை சுல்பிக்கார் ஆசிரியர் | 1195.00 |
| | | அமீர் தேனீர்க்காக வாங்கியது | 610.00 |
| | | பிறை FM ஓட்டோ | 500.00 |
| | | வரவேற்புக் குதிரை நியாஸ் ஆசிரியர் | 168.00 |
| | | ராட்சத சிலந்தி நபீல் ஆசிரியர் | 110.00 |
| | | A/L வகுப்புச் சித்திரம் | 490.00 |
| | | ஆதிவாசி குடில் தரம் 9 உருவாக்கியது | 450.00 |
| | | பேய்க்கூடு உவைஸ் பழையமாண 5535<br>உவைஸ் சாப்பாடு 4900 | 10435.00 |
| | | இரவுக் காவலாளி கூலி | 8000.00 |
| | | கண்காட்சி ஏனையோர் சாப்பாடு | 5950.00 |
| | | கென்டீன் செலவு | 6356.00 |
| | | கணணி காப்பேட் | 11850.00 |
| | | அதிபர் மேசை கதிரை | 19500.00 |
| | | காரியாலய காபேட் | 4620.00 |
| | | காரியால மேலை சீலை | 300.00 |
| | | அனாகொண்டாப் பாம்பு ராஸ்தீன் | 268.00 |
| | | நௌபான் ஆட்டிஸ்ட் | 1500.00 |
| | | கோட்டக் கல்விப் பணிமனை | 850.00 |
| | | நளீம் லத்தீப் காலைபொருள் வாடகை | 11000.00 |
| | | செங்கதிர் தட்டச்சுக் கூலி | 3500.00 |
| | | முபாறக் பிளாசாவுக்கு கொடுத்தது | 24512.00 |
| | | இஸ்மாயில் ஹாட்வெயார் கொடுத்தது | 9620.00 |
| | | தேனீர் செலவு | 900.00 |
| | | முத்திரை | 100.00 |
| | | மீதி கீழ் கொண்டு சென்றது | 56.00 |
| | 283760.00 | | 283760.00 |

மீதி கீழ் கொண்டு வந்தது 56.00

தயாரித்தவர்.
எம்.ஐ.மாஹிர்

சரிபார்த்தவர்.
ஏ.எல்.அன்வர்அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்நெல் கிராமம் சாஹிறா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க 01.01.2007 ஆரம்ப நிலைமைக் கூற்று

| சொத்து | தொகை | சொத்து | தொகை |
|---|---|---|---|
| திரண்டநிதி | 11384.97 | வங்கி மீதி | 11384.97 |
| | 11384.97 | | 11384.97 |

## செந்நெல் கிராமம் சாஹிறா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க 31.10.2007 முடியவுள்ள வருமான செலவுக் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| சாரணியச் செலவு | 5000.00 | உதவுத் தொகைக்காக | |
| உபகரணம் பிறிஸ்டபோட் | 2000.00 | பெற்றுக் கொண்டது | 283760 |
| பொக்ஸ்போட் | 2500.00 | | |
| பேப்பர் | 500.00 | | |
| வங்கி வரி | 64.27 | | |
| கண்காட்சி அச்சிடுதல் | 17000.00 | | |
| உபசரணை | 7000.00 | | |
| வாகன டீசல் வாடகை | 3500.00 | | |
| க.்.பா கட்டியசெலவு | 2511.00 | | |
| தரம் 1 வகுப்பறை திருத்தம் | 2506.00 | | |
| டைனோசர் உருவாக்கியது | 1695.00 | | |
| போக்குவரத்து | 1580.00 | | |
| ராட்சத ஆமை உருவாக்கியது | 1195.00 | | |
| அமீர் தேனீர்க்காக வாங்கியது | 610.00 | | |
| பிறை FM ஓட்டோ | 500.00 | | |
| வரவேற்புக் குதிரை | 168.00 | | |
| ராட்சத சிலந்தி | 110.00 | | |
| சிகிரியா உருவாக்கிய செலவு | 9000.00 | | |
| A/L வகுப்புச் சித்திரம் | 490.00 | | |
| ஆதிவாசி குடில் உருவாக்கியது | 450.00 | | |
| அனாகொண்டாப் பாம்பு | 2668.00 | | |
| பேய்க் கூடு உருவாக்கியது | 5535.00 | | |
| கோ.க.அ கொடுத்தது | 1350.00 | | |
| சாப்பாட்டுச் செலவு | 10850.00 | | |
| காவலாளி கூலி | 8000.00 | | |
| கென்டீன் செலவு | 6356.00 | | |
| ஆட்டிஸ் கொடுத்தது. | 1500.00 | | |
| கலைப்பொருட்கள் வாடகை | 11000.00 | | |
| அழிபொருட்கள் | 24512.00 | | |
| பெயின்ட் ஓயில்வகை | 9620.00 | | |
| முத்திரை | 100.00 | | |
| ஊழியர் செலவு | 900.00 | | |
| ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட செலவு | 46128.00 | | |
| செலவிலும் கூடிய வரவு | 96861.73 | | |
| மொத்தம் | 283760.00 | | 283760.00 |

தயாரித்தவர்.
எம்.ஐ.மாஹிர்

சரிபார்த்தவர்.
ஏ.அன்வர்அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்நெல் கிராமம் சாஹிறா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க 31.10.2007 உள்ளபடி ஐந்தொகை

| பொறுப்புக்கள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| திரண்டநிதி | 11384.97 | காரியாலய அதிபர் மேசை, கதிரை | 22000.00 |
| நன்கொடை | 5318.00 | கணணி அறை காபட் | 11850.00 |
| செலவிலும் கூடியவரவு | 96861.73 | காரியாலய காபட் | 4920.00 |
| அதிபருக்குக் கொடுக்க | | செங்கதிர் மலர் | 73500.00 |
| வேண்டியது | 5400.00 | வங்கிமீதி | 6638.70 |
| | | காசு மீதி | 56.00 |
| | 118964.70 | | 118964.70 |

## செந்நெல் கிராமம் சாஹிறா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க பெறுவனவு கொடுப்பனவு கணக்கு (வங்கி)

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 01.01.2007 | மீதி | 11384.97 | 08.03.2007 | சாரணி | 5000.00 |
| 27.03.2007 | நன்கொடை | 5318.00 | | உபகரணப் பயன்பாட்டுக்கு | 5000.00 |
| 02.08.207 | வைப்பு | 64267.50 | | வங்கிவரி | 64.27 |
| | உணவுக்கு | | | | |
| 12.09.2007 | வைப்பு | 34485.00 | 02.08.2007 | உணவுக்கு கொடுத்தது | 64267.50 |
| | உணவுக்கு | | | | |
| 04.10.2007 | வைப்பு | 25080.00 | 12.09.2007 | உணவுக்கு கொடுத்தது | 34485.00 |
| | உணவுக்கு | | | உணவுக்கு கொடுத்தது | 25080.00 |
| | | | 31.10.2007 | மீதி கீழ் கொ.சென்றது | 6638.70 |
| | | 140535.47 | | | 140535.47 |

மீதி கீழ் கொ.வந்தது 6638.70

தலைவர்.
எஸ்.அபூபக்கர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

பொருளாளர்.
வை.பி.ஹபீபுல்லாஹ்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy Kids

## Sabna Islamic Pre School

இளசுகளின் இதயங்களின் இஸ்லாமிய வழிகளைப் பதிய வைக்கும் நோக்குடன்
இயங்கும் இப்பாடசாலை சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் ஹூதாப் பள்ளிவாசல் முன் அமைந்துள்ளது.
பாலர் கல்வியில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியைகளால் பயிற்றப்படும் இப்பாடசாலையில்
உடல் கல்வி குர்ஆன் வழிகாட்டல் என்பன பயிற்றுவிக்கப்படும் இப்பாடசாலைக்கு தங்கள்
3வயது தொடக்கம் 5வயது வரையிலான பிள்ளைகளை சேர்க்க விரும்புவோர்
பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

*ஹாஜியானி M.H. இஸ்ஸத் முபைறா*
*பொறுப்பாசிரியை*
*மல், 09ம் வீதி, சம்மாந்துறை.*
தொ. பே. 077 9028782, 067 2260630

மூன்று வயதில் முன்பள்ளிக்கு அனுப்புவோம்
முந்துவோம் முன்னேற்றம் காண்போம்....

குறிப்பு: பிள்ளைகளின் போக்குவரத்துக்கான வாகன வசதி செய்யப்பட்டுள்ளது.

# FRIENDSHIP EMPORIUM

சம்மாந்துறை செந்நெல் சாஹிறாக் கல்லூரியின்
கல்வி அபிவிருத்திக் கண்காட்சி சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

ஆடைகளின் அரங்கம்

Friendship Emporium
18, Hijra Junction,
Sammanthurai.
Tel. 067 2260183

# Babujees

THE IDEAL COOL SPOT

*Dealers in*
- Ice Cream
- Cake Ingredients
- Essence Items
- Groceries etc.

Main Street, Kalmunai
Tel. 067 2229342, 067 2220262


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org